C. J. Daniel

SUDAMANI NIKANDU. Part I
(www.thamizham.net)

உ

கணபதி துணை.

# சூடாமணி நிகண்டு.

## மூலமும் உரையும்

ஸ்ரீலஸ்ரீ

## ஆறுமுகநாவலரவர்கள்

மாணுக்கரின் மாணுக்கரும்,

மதுரைத் தமிழ்ச் சங்கப்புலவரும்,

அத்துவித சித்தாந்த மதோத்தாரணரும் ஆகிய

(யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி)

மகாவித்வான்

**நா. கதிரைவேற்பிள்ளை அவர்களால்**

பரிசோதித்த பிரதிக்கிணங்க,

சென்னை:

திருமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1938.

# சூசிபத்திரம்.


| பக்கம். | தொகுதிப்பெயர். | விருத்தத் தொகை. |
|---|---|---|
| ௧ | சிறப்புப்பாயிரம். | ௮ |
| ௬ | முதலாவது தேவப்பெயர்த்தொகுதி. | ௯௩ |
| ௩௦ | இரண்டாவது மக்கட்பெயர்தொகுதி. | ௧௦௬ |
| ௫௮ | மூன்றாவது விலங்கின்பெயர்த்தொகுதி. | ௭௮ |
| ௭௮ | நான்காவது மரப்பெயர்த்தொகுதி. | ௬௮ |
| ௯௬ | ஐந்தாவது இடப்பெயர்த்தொகுதி. | ௬௮ |
| ௧௧௪ | ஆறாவது பல்பொருட்பெயர்த்தொகுதி. | ௩௫ |
| ௧௨௪ | ஏழாவது செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி. | ௭௬ |
| ௧௪௯ | எட்டாவது பண்புபற்றியபெயர்த்தொகுதி. | ௮௨ |
| ௧௬௬ | ஒன்பதாவதுசெயல்பற்றியபெயர்த்தொகுதி. | ௬௭ |
| ௧௮௨ | பத்தாவது ஒலிபற்றிய பெயர்த்தொகுதி. | ௫௨ |
| | ஆக தொகுதி ௧௦-க்கு விருத்தம் - ௭௩௩. | |

உ

கணபதி துணை.

# சூடாமணி நிகண்டு.

## சிறப்புப்பாயிரம்.

பொன்னுநன்மணியுமுத்தும்புனைந்தமுக்குடைநிழற்ற
மின்னுபூம்பிண்டிநீழல்வீற்றிருந்தவனைவாழ்த்தி
மன்னியநிகண்டுசூடாமணியெனவொன்றுசொல்வன்
இந்நிலந்தன்னின்மிக்கோர்யாவருமினிதுகேண்மின்.

இதன்பொருள். பொன்னும் நன் மணியும் முத்தும் புனைந்த முக்குடை நிழற்ற - பொன்னினாலும் நல்ல இரத்தினத்தினாலும் முத்தினாலும் அலங்கரிக்கப்பட்ட மூன்று குடைகளும் நிழலைச் செய்ய,—மின்னு பூம் பிண்டி நீழல் வீற்றிருந்தவனை வாழ்த்தி - விளங்குகின்ற மலர்களையுடைய அசோகமரத்தினது நிழலின் கண்ணே வீற்றிருந்த அருகக்கடவுளைத் துதிசெய்து,—சூடாமணி என மன்னிய நிகண்டு ஒன்று சொல்வன் - சூடாமணியென்று சொல்லும்படி பொருந்திய ஒரு நிகண்டை (யான்) கூறுவேன்,—இந்நிலந்தன்னின் மிக்கோர் யாவரும் இனிது கேண்மின் - இந்தத் தமிழ்நாட்டின்கண்ணே (கல்வியறிவில்) மிக்கவர் சகலரும் நன்றாக இதனைக் கேளுங்கள் என்றவாறு.

யான் என்னுமெழுவாய் வருவிக்கப்பட்டது. முக்குடைகளாவன சந்திராதித்தியம், நித்தியவினோதம், சகலபாசனம் என்பவைகளாம். மன்னிய நிகண்டு சூடாமணியெனவொன்று என்பது சூடாமணியென மன்னிய நிகண்டொன்று என மாற்றியுரைக்கப்பட்டது. துதிசெய்து கூறுவேனெனக் கூட்டுக. நிலமெனப் பொதுப்படக் கூறினாரேனும், இந்நூல் தமிழ்நூலாதல்பற்றித் தமிழ்வழங்கு நிலமொன்றற்கே உரித்தாய்நிற்றலால், தமிழ்நாடென்

ரும். எல்லாம்வல்ல கடவுளைத் துதிசெய்து கூறுதலின், நன்கு முடியுமாதலான், இது கடவுளது கிருபாசாமர்த்தியத்தினாலன்றி இவனது வித்தியாசாமர்த்தியத்தினால் கூறப்பட்ட தன்றென்று துணிந்து பொருமையையொழித்துக் கேளுங்களென்பார் இனிது கேண்மினென்றார். (௧)

பூமலியசோகினீழற்பொலிந்தவெம்மடிகண்முன்னாள்
ஏமமாமுதனூல்சொல்லக்கணதரரியன்றபாவாற்
றாமொருவழிநூல்சொல்லச்சார்புநூல்பிறருஞ்சொல்லத்
தோமிலாமூன்றுநூலுந்துவமெனவுதித்தவன்றே.

இ - ள். பூமலி அசோகின் நீழல் பொலிந்த எம்மடிகள் - பூக்கள் மிகுந்த அசோகமரத்தினது நிழலின்கண்ணே வீற்றிருந்த நமது அருகக்கடவுள்,—முன்னாள் ஏமம் ஆம் முதனூல் சொல்ல - ஆதிகாலத்தில் இன்பத்திற்குக் காரணமாகின்ற முதனூலைக்கூற- கணதரர் இயன்ற பாவால் தாம் ஒரு வழிநூல் சொல்ல - கணதரரென்பவர் இயல்பு பொருந்திய செய்யுளினால் தாம் ஒரு வழிநூலைக் கூற,—பிறர் சார்புநூல் சொல்ல - பிறர் சார்புநூலைக் கூற,—தோம் இலா மூன்று நூலும் துவம் என உதித்த-குற்றமில்லாத இம்மூன்று நூல்களும் நிலைபெறும் நூல்களாக (இப்படியே) உண்டாயின, எ - று. உ - ம், அன்று, ஏ அசைகள். (௨)

அங்கதுபோயபின்றையலகினூல்பிறந்தமற்றுஞ்
செங்கதிர்வரத்திற்றோன்றுந்திவாகரர்சிறப்பின்மிக்க
பிங்கலருரைநூற்பாவிற்பேணினர்செய்தார்சேர
இங்கிவையிரண்டுங்கற்கவெளிதலவென்றுசூழ்ந்து.

இ - ள். அங்கு அது போய பின்றை - அவ்விடத்து அது நிகழ்ந்தபின்பு,—அலகு இல் நூல் பிறந்த - எண்ணிறந்த நூல்கள் உண்டாயின,—மற்றும் - இன்னும்,—செங்கதிர் வரத்தில் தோன்றும் திவாகரர் - சூரியனது வரத்தினால் உதித்த திவாகரரும்,—சிறப்பின் மிக்க பிங்கலர்-(கல்விச்) சிறப்பின்மிகுந்த பிங்கலரும்,—உரை நூற் பாவில் பேணினர் செய்தார் - சொல்லப்படுகின்ற சூத்திரத்தினால் விரும்பித் (திவாகரம் பிங்கலந்தையென்னும் நூல்களைச்) செய்தனர்,—இங்கு இவை இரண்டும் சேரக்கற்க எளிது அல என்று சூழ்ந்து - இவ்விடத்து இவ்விரண்டு நூல்களும் அந்நூல்களோடு கூடக் கற்கப்படுதற்கு எளியவைகளல்லவென்று நினைந்து, எ - று. (௩)



சொல்லொடுபொருளுணர்ந்தோன்சோதிடநீதிவல்லோன்
நல்லறிவாளனெங்கணறுங்குன்றைஞானமூர்த்தி
பல்லுயிர்க்கொருதாயாகும்பரமன்மாமுனிவன்மெய்ந்நூல்
வல்லுநர்வல்லார்க்கெல்லாம்வரையறத்தரையில்வந்து.

இ - ள். சொல்லொடு பொருள் உணர்ந்தோன் - சொற்களோடு அவ்வவற்றின் பொருள்களை அறிந்தவரும்,—சோதிடம் நீதி வல்லோன் - சோதிடநூலிலும் நீதிநூலிலும் வல்லவரும்,—நல்லறிவாளன் - நல்ல அறிவினையுடையவரும்,—நறுங்குன்றை எங்கள் ஞானமூர்த்தி - நல்ல குன்றையூரிலிருக்கின்ற எங்களுடைய ஞானமே வடிவமாகக் கொண்டவரும்,—பல் உயிர்க்கு ஒரு தாய் ஆகும் பரமன் - பல ஆன்மாக்களுக்கு ஒப்பில்லாத மாதாவாயுள்ள சிரேஷ்டரும்,—மா முனிவன் - பெரிய முனிவருமாகி,—வரை அற மெய்ந்நூல் வல்லுநர் வல்லார்க்கு எல்லாம் தரையில் வந்து - வரைவின்றி மெய்ம்மையாகிய நூல்களிலே வல்லவர் வல்லவரல்லாதவராகிய யாவர்நிமித்தமும் பூமியின்கண்ணே அவதரித்து, எ - று. (௪)

பரிதியொன்றுதயஞ்செய்திபங்கயமநேககோடி
முருகெழமலர்வித்தென்னமுகமுடனகமலர்த்தி
மருவுமுத்தமிழைமுன்னாள்வளர்த்தபாண்டியனைபோலக்
கருதியவெல்லாந்தந்துகவிமணிமாலைசூடி.

இ - ள். பரிதி ஒன்று உதயம் செய்து பங்கயம் அநேக கோடி முருகு எழ மலர்வித்து என்ன முகமுடன் அகம் மலர்த்தி- ஒரு சூரியன் உதித்து அநேககோடி தாமரைமலர்களை மணமெழும்படியாக அலரச்செய்தாற்போல முகத்தோடு நெஞ்சத்தை அலரச்செய்து,—மருவும் முத்தமிழை முன்னாள் வளர்த்த பாண்டியன்போல - பொருந்திய (இயல் இசை நாடகமென்னும்) மூன்று தமிழ்களையும் முற்காலத்தில் வளர்த்த பாண்டியராசனைப் போல,—கருதிய எல்லாம் தந்து - நினைத்தவைகள் யாவையும் தந்து, மணிக் கவி மாலை சூடி - அழகினையுடைய பாமாலையைச் சூடி, எ - று. ஏ அசை. (௫)

செகமெனும்பளிங்குமாடத்திகிரிவேந்தரையேபோலப்
புகழெனும்பஞ்சிசேர்த்திப்பொலிவுறுபேரத்தாணி
மகிழ்குணபத்திரனெங்கள்வழித்தெய்வம்போல்வான்சொல்ல
இகபரமிரண்டும்வேண்டியியலிசைவல்லோர்கேட்ப.

இ - ள். செகம் எனும் பளிங்கு மாடம் திகிரி வேந்தரைப் போல - பூமண்டலமாகிய பளிங்குமண்டபத்தின்கண்ணே ஆஞ்ஞாசக்கரத்தையுடைய அரசரைப்போல,—புகழ் எனும் பஞ்சி சேர்த்திப் பொலிவு உறு பேர் அத்தாணி மகிழ் குணபத்திரன் - கீர்த்தியாகிய பஞ்சணையை வைக்கப்பெற்றுப் பொலியாநின்ற பெரிய அத்தாணியின்மீது மகிழ்ந்து வீற்றிருக்கின்ற குணபத்திரனென்னும் பெயரையுடைய,—எங்கள் வழித்தெய்வம்போல்வான் சொல்ல - எங்கள் குலதெய்வம் போல்பவர் கூற,—இகம் பரம் இரண்டும் வேண்டி இயல் இசை வல்லோர் கேட்ப - இம்மைப் பயனும் மறுமைப்பயனுமாகிய இவ்விரண்டையும் விரும்பி இயற்றமிழிலும் இசைத்தமிழிலும் வல்லவர்கள் கேட்க, எ - று. (௬)

விரவியதேவர்மக்கள்விலங்கொடுமரமிடம்பல்
பொருள்செயும்வடிவுபண்புபோற்றியசெயலொலிப்பேர்
ஒருசொற்பல்பொருளினோடுமுரைத்தபல்பெயர்க்கூட்டந்தான்
வருமுறைதிவாகரம்போல்வைத்துப்பிங்கலந்தைதன்னில்.

இ - ள். விரவிய தேவர் - பொருந்திய தேவப்பெயர்த் தொகுதியும்,—மக்கள் - மக்கட்பெயர்த் தொகுதியும்,—விலங்கு - விலங்கின்பெயர்த் தொகுதியும்,—மரம் - மரப்பெயர்த் தொகுதியும்,—இடம் - இடப்பெயர்த்தொகுதியும்,—பல்பொருள் - பல்பொருட் பெயர்த்தொகுதியும்,—செயும்வடிவு - செயற்கைவடிவப் பெயர்த்தொகுதியும்,—பண்பு - பண்புபற்றிய பெயர்த்தொகுதியும்,—போற்றிய செயல் - பேணப்பட்ட செயல்பற்றிய பெயர்த் தொகுதியும்,—ஒலிப்பேர் - ஒலிபற்றிய பெயர்த்தொகுதியும்,—ஒருசொற் பல்பொருள் - ஒருசொற் பல்பொருட் பெயர்த்தொகுதியும்,—உரைத்த பல்பெயர்க்கூட்டம் - சொல்லப்பட்ட பல்பெயர்க் கூட்டத் தொருபெயர்த்தொகுதியும்,—திவாகரம் வருமுறைபோல் வைத்து - திவாகரத்திலே வரும் முறைமைபோல வைத்து,—பிங்கலந்தைதன்னில் - பிங்கலந்தையிலே, எ - று. ஒடு, ஒடும் இசைநிறை. இன் சாரியை. தான் அசை. ஒலிப்பேரென்பதில் பேரென்பதைத் தேவரென்பது முதலிய மற்றவைகளோடும் கூட்டுக. (௭)

ஒருங்குளபொருளுமோர்ந்திட்டுரைத்தனன்விருத்தந்தன்னில்
இருந்தவைநல்லோர்குற்றமியம்பிடாரென்பதெண்ணித்
திருந்தியகமலவூர்திதிருப்புகழ்புராணஞ்செய்தோன்
பரந்தசீர்க்குணபத்திரன்றாள்பணிந்தமண்டலவன்றானே.



இ - ள். ஒருங்கு உள பொருளும் ஓர்ந்திட்டு - உள்ள பொருள்களெல்லாவற்றையும் அறிந்து,—அவை இருந்த நல்லோர் குற்றம் இயம்பிடார் என்பது எண்ணி - சபையின்கண்ணே இருந்த நல்லோர்கள் குற்றஞ்சொல்லார்களென்பதை நினைந்து,—விருத்தந்தன்னில் உரைத்தனன் - விருத்தமென்னுஞ் செய்யுளாற் பாடினார்,—திருந்திய கமலவூர்தி திருப்புகழ் புராணம் செய்தோன் - திருந்தின அருகக்கடவுளினது சிறப்பாகிய கீர்த்தியைப் புராணமாகப் பாடினவர்,—பரந்த சீர்க் குணபத்திரன் தாள் பணிந்த மண்டலவன் - பரம்பிய புகழையுடைய குணபத்திரரென்பவரது பாதங்களை வணங்கிய மண்டலவர், எ - று. தான், ஏ அசை. மேலைச்செய்யுளிறுதியிற் பிங்கலந்தைதன்னில் என்பதை இச் செய்யுளின் முதலில் வைத்துப் பிங்கலந்தையிலே உள்ள பொருள்களெல்லாவற்றையுமெனக் கூட்டுக. (௮)

சிறப்புப்பாயிர முற்றிற்று.

முதலாவது

## தேவப்பெயர்த்தொகுதி.

அருகனெண்குணனிச்சிந்தனறவாழிவேந்தன்வாமன்
சினன்வரனுறவன்சாந்தன்சினேந்திரனீதிநூலின்
முனைவன்மாசேனன்றேவன்மூவுலகுணர்ந்தமூர்த்தி
புனிதன்வென்றோன்விராகன்பூமிசைநடந்தோன்போதன். (க)

பண்ணவன்கமலவூர்திபரமேட்டிகாதிவென்றோன்
புண்ணியன்புலவன்புத்தன்பூரணன்பொன்னெயிற்கோன்
விண்ணவன்விமலன்வீரன்விநாயகன்வீதசோகன்
அண்ணல்வின்மதனைவென்றோனருட்கொடிவேந்தனாசான். (உ)

முத்தன்மாமுனிகருத்தன்முக்குடைச்செல்வன்முன்னோன்
சித்தனெண்சிறப்புமுள்ளோன்றிகம்பரன்கொல்லாவேதன்
நித்தனின்மலனின்னுமனிராயுதனேமிநாதன்
அத்தனனந்தன்சோதியரியணைச்செல்வனாதி. (ங)

ஆத்தன்குற்றங்களில்லானசோகமர்கடவுளாதன்
சாத்தன்வேதாந்தனாதன்சமியநாமயன்சுயம்பு
நீத்தவன்பிதாவிதாதாநிரம்பரனனந்தஞானி
தீர்த்தன்மால்பகவன்சாமிசீபதிசீமான்செய்யோன். (ச)

நிருமலன்வரதன்சாதுநிரஞ்சனன்விறலோன்யோகி
தருமராசன்யுகாதிசதுர்முகன்சாதரூபி
திருமறுமார்பனீடுசிவகதிக்கிறைதொண்ணூறே
அருகன்பேராகுமற்றுமபிதான * மநந்தமாமே. (ரு)

சங்கரனிறையோன்சம்புசதாசிவன்பேயொடாடி
பொங்கரவணிந்தமூர்த்திபுராந்தகன்பூதநாதன்
கங்கைவேணியன்கங்காளன்கடுக்கையங்கண்ணிசூடி
மங்கையோர்பாகன்முன்னோன்மகேச்சுரன்வாமதேவன். (சு)

நீலகண்டன்மாதேவனிருமலன்குன்றவில்லி
சூலபாணியனீசானன்பசுபதிசுடலையாடி
காலகாலன்கபாலியுருத்திரன்கைலையாளி
ஆலமர்கடவுணித்தனைம்முகன்பரசுபாணி. (எ)

* அபிதானம் - பெயர்.

## பெயர்ப்பிரிவு.

அருகன்பெயர் = அருகன், எண்குணன், நிச்சிந்தன், அறவாழி வேந்தன், வாமன்; சினன், வரன், உறவன், சாந்தன், சினேந்திரன், முனைவன், மாசேனன், தேவன், மூவுலகுணர்ந்த மூர்த்தி, புனிதன், வென்றோன், விராகன், பூமிசைநடந்தோன், போதன். ககூ.

பண்ணவன், கமலவூர்தி, பரமேட்டி, காதிவென்றோன், புண்ணியன், புலவன், புத்தன், பூரணன், பொன்னெயிற்கோன், விண்ணவன், விமலன், வீரன், விநாயகன், வீதசோகன், அண்ணல், மதனைவென்றோன், அருட்கொடிவேந்தன், ஆசான். கஅ.

முத்தன், மாமுனி, கருத்தன், முக்குடைச்செல்வன், முன்னோன், சித்தன், எண்சிறப்புமுள்ளோன், திகம்பரன், கொல்லாவேதன், நித்தன், நின்மலன், நின்னுமன், நிராயுதன், நேமிநாதன், அத்தன், அனந்தன், சோதி, அரியணைச்செல்வன், ஆதி. ககூ.

ஆத்தன், குற்றங்களில்லான், அசோகமர்கடவுள், ஆதன், சாத்தன், வேதாந்தன், நாதன், சமி, அநாமயன், சுயம்பு, நீத்தவன், பிதா, விதாதா, நிரம்பரன், அனந்தஞானி, தீர்த்தன், மால், பகவன், சாமி, சீபதி, சீமான், செய்யோன். உஉ.

நிருமலன், வரதன், சாது, நிரஞ்சனன், விறலோன், யோகி, தருமராசன், யுகாதி, சதுர்முகன், சாதரூபி, திருமறுமார்பன், சிவகதிக்கிறை. கஉ. (ஆக கூ௰.)

சிவன்பெயர் = சங்கரன், இறையோன், சம்பு, சதாசிவன், பேயொடாடி, அரவணிந்தமூர்த்தி, புராந்தகன், பூதநாதன், கங்கைவேணியன், கங்காளன், கடுக்கையங்கண்ணிசூடி, மங்கையோர்பாகன், முன்னோன், மகேச்சுரன், வாமதேவன். கரு.

நீலகண்டன், மாதேவன், நிருமலன், குன்றவில்லி, சூலபாணியன், ஈசானன், பசுபதி, சுடலையாடி, காலகாலன், கபாலி, உருத்திரன், கைலையாளி, ஆலமர்கடவுள், நித்தன், ஐம்முகன், பரசுபாணி. கசு.

அந்திவண்ணன்முக்கண்ணனழலாடிபாண்டரங்கன்
சந்திரசேகரனானந்தன்சடைமுடியனந்தனாதி
தந்தியீருரியோனம்பன்றற்பரனீறணிந்தோன்
நந்தியீச்சுரனேறூர்ந்தோனக்கன்மாஞானமூர்த்தி. (௮)

வரன்மறைமுதலியீசன்மானிடமேந்திசோதி
பிரமன்மார்கரியோன்றாணுபிஞ்சகன்பினாகபாணி
பரமனெண்டோளன்பர்க்கன்பவன்யோகிபகவானேகன்
அரனுமாபதிசிவன்பேராறுபத்தாறநந்தமற்றும். (௯)

இலகுமோர்குண்டலன்மற்றிரேவதிகொண்கன்முற்றும்
நிலவியமுசலிவெள்ளைநிகழ்நீலாம்பரனநந்தன்
அலமுறுபடையாக்கொண்டோனச்சுதன்முன்னர்வந்தோன்
பலபத்திரன்காமபாலன்பனந்தாமன்பலதேவன்பேர். (௧௦)

மாதவன்மாயன்செய்யவாமனன்வாசுதேவன்
சீதரனந்தகோபன்றிருமகனுவணமேற்ற
கேதனன்பதுமநாபன்கேசவன்பஞ்சவர்க்குத்
தூதனேசார்ங்கபாணிசுரிமுகச்சங்கமேந்தி. (௧௧)

கொண்டல்வண்ணன்காகுத்தன்கோவிந்தனச்சுதன்மால்
விண்டுவேலையிற்றுயின்றோன்விரகினானுந்திபூத்தோன்
வண்டுழாய்மவுலியாதிவராகன்வைகுண்டநாதன்
முண்டகாசனைகேள்வன்றாமோதரன்முராரிநேமி. (௧௨)

வலவன்றேவகிதன்மைந்தன்வனமாலிபடியிடந்தோன்
சலசலோசனனனந்தசயனன்பீதாம்பரன்பேர்
உலகளந்தருள்வோன்பஞ்சாயுதனுலகுண்டபெம்மான்
அலகைதன்முலையோடாவியருந்தினோனாரசிங்கன். (௧௩)

அரவணைச்செல்வன்கண்ணனறிதுயிலமர்ந்தமூர்த்தி
பிரமனைப்பெற்றதாதைபின்னைகேள்வன்முகுந்தன்
கரியவனெடியோன்காவற்கடவுணாரணனேழேழ
அரியின்பேராகுமற்றுமபிதானமனந்தமாமே. (௧௪)

பிரமன்மேதினிபடைத்தோன்பிதாமகன்பிதாவிதாதா
வரனயன்மலரோனிந்தமண்பொதுத்தந்தைவேதா
இரணியகருப்பன்போதனினியமாலுந்திவந்தோன்
குரவனோதிமமுயர்த்தகொடியினனன்னவூர்தி. (௧௫)



அந்திவண்ணன், முக்கண்ணன், அழலாடி, பாண்டரங்கன், சந்திரசேகரன், ஆனந்தன், அனந்தன், ஆதி, தந்தியுரியோன், நம்பன், தற்பரன், நீறணிந்தோன், நந்தி, ஈச்சுரன், ஏறூர்ந்தோன், நக்கன், ஞானமூர்த்தி. ௧௭.

வரன், மறைமுதலி, ஈசன், மானிடமேந்தி, சோதி, பிரமன் மாற்கரியோன், தாணு, பிஞ்சகன், பினாகபாணி, பரமன், எண்டோளன், பர்க்கன், பவன், யோகி, பகவான், ஏகன், அரன், உமாபதி. ௧௮. (ஆ௨ ௯௯.)

பலதேவன்பெயர் = ஓர்குண்டலன், இரேவதிகொண்கன், முசலி, வெள்ளை, நீலாம்பரன், அநந்தன், அலப்படைகொண்டோன், அச்சுதன்முன்னர்வந்தோன், பலபத்திரன், காமபாலன், பனந்தாமன். ௧௧.

அரியின்பெயர் = மாதவன், மாயன், வாமனன், வாசுதேவன், சீதரன், நந்தகோபன்மகன், உவணகேதனன், பதுமநாபன், கேசவன், பஞ்சவர்க்குத்தூதன், சார்ங்கபாணி, சங்கமேந்தி. ௧௨.

கொண்டல்வண்ணன், காகுத்தன், கோவிந்தன், அச்சுதன், மால், விண்டு, வேலையிற்றுயின்றோன், உந்திபூத்தோன், துழாய்மௌலி, ஆதிவராகன், வைகுண்டநாதன், முண்டகாசனைகேள்வன், தாமோதரன், முராரி, நேமி. ௧௫.

வலவன், தேவகிமைந்தன், வனமாலி, படியிடந்தோன், சலசலோசனன், அனந்தசயனன், பீதாம்பரன், உலகளந்தருள்வோன், பஞ்சாயுதன், உலகுண்டபெம்மான், அலகைமுலையோடாவியருந்தினோன், நாரசிங்கன். ௧௨.

அரவணைச்செல்வன், கண்ணன், அறிதுயிலமர்ந்தமூர்த்தி, பிரமனைப் பெற்றதாதை, பின்னைகேள்வன், முகுந்தன், கரியவன், நெடியோன், காவற்கடவுள், நாரணன். ௧௦. (ஆ௨ ௪௯.)

பிரமன்பெயர் = மேதினி படைத்தோன், பிதாமகன், பிதா, விதாதா, வரன், அயன், மலரோன், மண்பொதுத்தந்தை, வேதா, இரணியகருப்பன், போதன், மாலுந்திவந்தோன், குரவன், ஓதிமமுயர்த்த கொடியினன், அன்னவூர்தி. ௧௫.

இறைசதானந்தனீண்டவெண்கணன் விதிசுயம்பு
மறையவனநந்தன்ஞானிமான்மகன் வாணிகேள்வன்
முறைதெரிபகவன்வானோர்முதல்வனான்முகன்விரிஞ்சன்
நறைமலிகமலயோனிநாமமாறைந்துமாமே. (கசா)

தருமராசன்முனீந்திரன்சினன்பஞ்சதாரைவிட்டே
அருள்சுரந்தவுணர்க்கூட்டுந்ததாகதனாதிதேவன்
விரவுசாக்கியனேசைனன் விநாயகன்சினந்தவிர்ந்தோன்
அரசுநீழலிலிருந்தோனறிவரன்பகவன்செல்வன். (கஎ)

அண்ணலேமாயாதேவிசுதன்களங்கமூர்த்தி
நண்ணியகலைகட்கெல்லாநாதன்முக்குற்றமில்லோன்
எண்ணில்கண்ணுடையோன்வாமனேற்றபுண்ணியத்தின்மூர்த்தி
புண்ணியமுதல்வன்சாந்தன்பூமிசைநடந்தோன்புத்தன். (கஅ)

மேகவாகனன்வேள்விக்குவேந்தன்விண்முழுதுமாளி
பாகசாதனனேவச்சிரபாணிகோபதிசிறப்பாம்
நாகநீணகர்க்குநாதனான்மருப்பியானையூர்தி
போகிவாசவனேவேந்தன் புரந்தரன்புலவன்சக்கிரன். (ககூ)

மருதநன்னிலத்துவேந்தன்மருத்துவன்வானோர்கோமான்
புருகூதன்சசிமணாளன்புரோகிதன்கௌசிகன்னே
கரியவன்சுனாசீரனாகண்டலனுடன் வலாரி
அரிசதக்கிரதுநீண்டவாயிரங்கண்ணனிந்திரன். (உ0)

அங்குசபாசமேந்தியம்பிகை தனயன்முன்னோன்
ஐங்கரன்மூத்தோனொற்றையணிமருப்பினனேரம்பன்
கங்கைபெற்றோன்முக்கண்ணன்கணபதியீசன்மைந்தன்
வெங்கயமுகனேயாகுவாகனன் விநாயகன்பேர். (உக)

உக்கிரனழற்கண்வந்தோனுமைமகன்சிம்புளானோன்
முக்கணன்சடையோன்யானைமுகவனுக்கிளையோன்வில்லி
செக்கர்வானிறத்தன்குரோதன்சிறுவிதிமகஞ்சிதைத்தோன்
மிக்கபத்திரைக்குக்கேள்வன்வீரபத்திரன்பேராமே. (உஉ)

முருகன்வேள்சாமியாறுமுகன்குகன்குழகன்மாயோன்
மருகன்சேய்கார்த்திகேயன்வரைபகவெறிந்தோன்செட்டி
அரன்மகன்கங்கைமைந்தனாண்டலைக்கொடியுயர்த்தோன்
சரவணபவன்கடம்பன்றாரகற்செற்றோனாசான். (உங)



இறை, சதானந்தன், எண்கணன், விதி, சுயம்பு, மறையவன், அநந்தன், ஞானி, மான்மகன், வாணிகேள்வன், பகவன், வானோர் முதல்வன், நான்முகன், விரிஞ்சன், கமலயோனி. கரு. (ஆ ங0.)

புத்தன்பெயர் = தருமராசன், முனீந்திரன், சினன், ததாகதன், ஆதிதேவன், சாக்கியன், சைனன், விநாயகன், சினந்தவிர்ந்தோன், அரசுநீழலிலிருந்தோன், வரன், பகவன், செல்வன். கங.

அண்ணல், மாயாதேவிசுதன், அகளங்கமூர்த்தி, கலைகட்கெல்லாநாதன், முக்குற்றமில்லோன், எண்ணில்கண்ணுடையோன், வாமன், புண்ணியத்தின்மூர்த்தி, புண்ணியமுதல்வன், சாந்தன், பூமிசை நடந்தோன். கக. (ஆ உசா.)

இந்திரன்பெயர் = மேகவாகனன், வேள்விக்குவேந்தன், விண்முழுதுமாளி, பாகசாதனன், வச்சிரபாணி, கோபதி, நாகநகர்க்குநாதன், நான்மருப்பியானையூர்தி, போகி, வாசவன், வேந்தன், புரந்தரன், புலவன், சக்கிரன். கசா.

மருதநிலத்துவேந்தன், மருத்துவன், வானோர்கோமான், புருகூதன், சசிமணாளன், புரோகிதன், கௌசிகன், கரியவன், சுனாசீரன், ஆகண்டலன், வலாரி, அரி, சதக்கிரது, ஆயிரங்கண்ணன். கசா. (ஆ உஅ.)

விநாயகன்பெயர் = அங்குசபாசமேந்தி, அம்பிகைதனயன், முன்னோன், ஐங்கரன், மூத்தோன், ஒற்றைமருப்பினன், ஏரம்பன், கங்கைபெற்றோன், முக்கண்ணன், கணபதி, ஈசன்மைந்தன், கயமுகன், ஆகுவாகனன், கங.

வீரபத்திரன்பெயர் = உக்கிரன், அழற்கண்வந்தோன், உமைமகன், சிம்புளானோன், முக்கணன், சடையோன், யானைமுகவனுக்கிளையோன், வில்லி, செக்கர்வானிறத்தன், குரோதன், சிறுவிதி மகஞ்சிதைத்தோன், பத்திரைக்குக்கேள்வன். கஉ.

கந்தன்பெயர் = முருகன், வேள், சாமி, ஆறுமுகன், குகன், குழகன், மாயோன்மருகன், சேய், கார்த்திகேயன், வரைபகவெறிந்தோன், செட்டி, அரன்மகன், கங்கைமைந்தன், ஆண்டலைக்கொடியுயர்த்தோன், சரவணபவன், கடம்பன், தாரகற்செற்றோன், ஆசான். கஅ.

வேய்ந்தபூங்குறிஞ்சிவேந்தன்வேலினுக்கிறைவிசாகன்
சேந்தன்காங்கேயன்செவ்வேள்சிலம்பன்மாமஞ்ஞையூர்தி
வாய்ந்தசூர்ப்பகைவன்வள்ளிமணவாளன்றெய்வயானை
காந்தனேகுமரன்கந்தன்கலையுணர்புலவனும்பேர். (௨௪)

திருமகண்மைந்தன்மாரன்சித்தசன்சம்பராரி
உருவிலிமன்மதன்மீனுறுகொடியுயர்த்ததோன்றல்
இரதிகாதலன்வசந்தனெழில்பெறுவேனிலாளி
கருதியகருப்புவில்லிகந்தர்ப்பன்மதன்பூவாளி. (௨௫)

திங்கள்வெண்குடையோன்றென்றற்றேரினன்வில்லிமோகன்
ஐங்கணைக்கிழவனெய்புமலர்க்கணைவேளநங்கன்
செங்கண்மான்மைந்தன்மிக்கதிறன்மனோபவன்மனோசன்
அங்கசன்மனோபுவேநீராழிவெம்முரசோன்காமன் (௨௬)

முத்தனேகுமரன்பிள்ளைமுடுவல்வெம்படையோன்காரி
சித்தன்கேத்திரபாலனேசெந்தொடைக்குரியகோமான்
வித்தகன்ஞாளியூர்திவிறற்கருங்குதிரையாளி
வைத்தசீர்வடுகனின்னவைரவனுமமாமே. (௨௭)

காரியேபுறத்தவன்பூங்கடல்வண்ணனெடியசாத்தாப்
பூரணைகேள்வன்யோகிபுட்கலைதன்மணாளன்
ஒருமாசாத்தன்செண்டாயுதன்வெள்ளையானையூர்தி
ஆரியனறத்தைக்காப்போனரிகரகுமரனையன். (௨௮)

அரனதுதோழனேகின்னரர்பிரானளகையாளி
புருடவாகனனேசோமன்புட்பகவிமானமுள்ளோன்
இருநிதிக்கிழவனேகபிங்கலனியக்கர்கோமான்
மரகதன்றனதன்மந்திரிவைச்சிரவணன்குபேரன். (௨௯)

சமன்செங்கோற்கடவுள்கூற்றுத்தருமனந்தகனேசண்டன்
நமன்வைவச்சுதனேமற்றைநடுவனேதென்றிசைக்கோன்
யமனரிமறலியேமற்றெருமையூர்தியுமாயிப்பாற்
கமையில்கான்மறன்மடங்கல்காலன்பாசத்தனும்பேர். (௩௦)

மரகதவல்லிபூகமாநிழலுற்றவஞ்சி
பரமசுந்தரியியக்கிபகவதியம்மையெங்கள்
அருகனைமுடிதரித்தாளம்பிகையறத்தின்செல்வி
தருமதேவதைபோம்பாலிகையென்றுஞ்சாற்றலாமே. (௩௧)



குறிஞ்சிவேந்தன், வேலினுக்கிறை, விசாகன், சேந்தன், காங்கேயன், செவ்வேள், சிலம்பன், மஞ்ஞையூர்தி, சூர்ப்பகைவன், வள்ளிமணவாளன், தெய்வயானைகாந்தன், குமரன், புலவன். ௧௩.
(ஆ ௩௧.)

காமன்பெயர் = திருமகண்மைந்தன், மாரன், சித்தசன், சம்பராரி, உருவிலி, மன்மதன், மீன்கொடியுயர்த்ததோன்றல், இரதிகாதலன், வசந்தன், வேனிலாளி, கருப்புவில்லி, கந்தர்ப்பன், மதன், பூவாளி. ௧௪.

திங்கள்வெண்குடையோன், தென்றற்றேரினன், வில்லி, மோகன், ஐங்கணைக்கிழவன், வேள், அநங்கன், மான்மைந்தன், மனோபவன், மனோசன், அங்கசன், மனோபு, ஆழிமுரசோன். ௧௩.
(ஆ ௨௭.)

வைரவன்பெயர் = முத்தன், குமரன், பிள்ளை, முடுவற்படையோன், காரி, சித்தன், கேத்திரபாலன், செந்தொடைக்குரியகோமான், வித்தகன், ஞாளியூர்தி, கருங்குதிரையாளி, வடுகன். ௧௨.

ஐயன்பெயர் = காரி, புறத்தவன், கடல்வண்ணன், சாத்தா, பூரணைகேள்வன், யோகி, புட்கலைமணாளன், மாசாத்தன், செண்டாயுதன், வெள்ளையானையூர்தி, ஆரியன், அறத்தைக்காப்போன், அரிகரகுமரன். ௧௩.

குபேரன்பெயர் = அரனதுதோழன், கின்னரர்பிரான், அளகையாளி, புருடவாகனன், சோமன், புட்பகவிமானமுள்ளோன், இருநிதிக்கிழவன், ஏகபிங்கலன், இயக்கர்கோமான், மரகதன், தனதன், மந்திரி, வைச்சிரவணன். ௧௩.

யமன்பெயர் = சமன், செங்கோற்கடவுள், கூற்று, தருமன், அந்தகன், சண்டன், நமன், வைவச்சுதன், நடுவன், தென்றிசைக்கோன், அரி, மறலி, எருமையூர்தி. ௧௩.

காலன்பெயர் = கால், மறல், மடங்கல், பாசத்தன். ௪.

தருமதேவதையின்பெயர் = மரகதவல்லி, பூகநிழலுற்றவஞ்சி, பரமசுந்தரி, இயக்கி, பகவதி, அம்மை, அருகனைமுடிதரித்தாள், அம்பிகை, அறத்தின்செல்வி, அம்பாலிகை. ௧௦.

அரனிடத்தவள்காமக்கோட்டத்தியம்பிகையேமாதாத்
தருமத்தின்செல்விதேவிசாம்பவிமலைமடந்தை
பரைசிவைகௌரிமுக்கட்பார்ப்பதியொடுபவானி
உரைகெழுசத்திநாரியுமைபெயர்மூவைந்தாமே. (௩௨)

வரநதிநீடுமந்தாகினிதிரிபதகைமற்றைச்
சுரநதிகங்கைபேர்சானவிபகீரதியுஞ்சொல்லும்
பெருகுமூதணங்குமோடிபேசியகொற்றிசூரி
மருவியவடுகிமாரிவடுகன்றாய்காடுகாள்பேர். (௩௩)

மாக்கடற்பிறந்தகோதைமாவரிப்பிரியைசெய்யாள்
ஆக்கம்பொன்பொறிசீதேவியலர்மகள்பொருளின்செல்வி
தாக்கணங்கிளையாள்பூமினிலக்குமிசலசைசெல்வந்
தேக்குமிந்திரையீரெட்டுந்திருமகளுமமாமே. (௩௪)

கலைமகள்பனுவலாட்டிகாயத்திரிஞானமூர்த்தி
உலகமாதாப்பிராமியொள்ளியவெள்ளைமெய்யாள்
இலகுவெண்சலசமுற்றாள்பாரதியிசைமடந்தை
மலரயன்மனைவிவாக்காள்வாணிநாமகள்பேராமே. (௩௫)

சேட்டையிந்திரைக்குமூத்தாள்சீர்கேடிசிறப்பிலாதாள்
நீட்டியவேகவேணிநெடுங்காகத்துவசமுற்றாள்
கேட்டையேகெடலணங்குகழுதைவாகனிகேடெல்லா
மூட்டியகலதிதௌவைமுகடிமூதேவியாமே. (௩௬)

பொருவிலிந்திராணிசெய்யபுலோமசைசசிபேரின்பந்
தருமயிராணியிந்திரன்மனைவிபேர்சயந்தன்மைந்தன்
அரமகளரம்பையென்பவமரர்தம்மாதின்பேரே
விரவுசூரணங்குதெய்வமெல்லியர்பொதுப்பேர்சொல்லும். (௩௭)

சூரிமாலினியெண்டோளிசூலிசண்டிகையேதேவி
வீரிமாதரிகங்காளிவேதாளியொடுமாதங்கி
தாரகற்செற்றதையல்பைரவிசிவைசாமுண்டி
ஆரணிவல்லணங்கோடையையாமளைமுக்கண்ணி. (௩௮)

அலகைவெங்கொடியுயர்த்தாண்மதுபதியாளியூர்தி
உலவியமாயையுற்றயோகினிகாளிநாமம்
வலவைசூர்மகடேனுமாயவளிடாகினிப்பேர்
இலகுசன்மினிவஞ்சப்பெண்காளிதன்னேவல்செய்வாள். (௩௯)



உமையின்பெயர் = அரனிடத்தவள், காமக்கோட்டத்தி, அம்பிகை, மாதா, தருமத்தின்செல்வி, தேவி, சாம்பவி, மலைமடந்தை, பரை, சிவை, கௌரி, பார்ப்பதி, பவானி, சத்தி, நாரி. ௧௫.

கங்கையின்பெயர் = வரநதி, மந்தாகினி. திரிபதகை, சுரநதி, சானவி, பகீரதி. ௬.

காடுகாள்பெயர் = மூதணங்கு, மோடி, கொற்றி, சூரி, வடுகி, மாரி, வடுகன்றாய். ௭.

திருமகள்பெயர் = கடற்பிறந்தகோதை, மா, அரிப்பிரியை, செய்யாள், ஆக்கம், பொன், பொறி, சீதேவி, அலர்மகள், பொருளின் செல்வி, தாக்கணங்கு, இளையாள், பூமின், இலக்குமி, சலசை, இந்திரை. ௧௬.

நாமகள்பெயர் = கலைமகள், பனுவலாட்டி, காயத்திரி, ஞானமூர்த்தி, உலகமாதா, பிராமி, வெள்ளைமெய்யாள், வெண்சலசமுற்றாள், பாரதி, இசைமடந்தை, அயன்மனைவி, வாக்காள், வாணி. ௧௩.

மூதேவியின்பெயர் = சேட்டை, இந்திரைக்குமூத்தாள், சீர்கேடி, சிறப்பிலாதாள், ஏகவேணி, காகத்துவசமுற்றாள், கேட்டை, கெடலணங்கு, கழுதைவாகனி, கலதி, தௌவை, முகடி. ௧௨.

இந்திரன்மனைவிபெயர் = இந்திராணி, புலோமசை, சசி, அயிராணி. ௪.

இந்திரன்மைந்தன்பெயர் = சயந்தன். ௧.

அமரர்மாதின்பெயர் = அரமகள், அரம்பை. ௨.

தெய்வமெல்லியர்பொதுப்பெயர் = சூர், அணங்கு. ௨.

காளியின்பெயர் = சூரி, மாலினி, எண்டோளி, சூலி, சண்டிகை, தேவி, வீரி, மாதரி, கங்காளி, வேதாளி, மாதங்கி, தாரகற்செற்ற தையல், பைரவி, சிவை, சாமுண்டி, ஆரணி, வல்லணங்கு, ஐயை, யாமளை, முக்கண்ணி. ௨௦.

அலகைக்கொடியுயர்த்தாள், மதுபதி, ஆளியூர்தி, மாயை, யோகினி. ௫. (ஆக ௨௫.)

இடாகினியின்பெயர் = வலவை, சூர்மகள், மாயவள். ௩.

காளியேவல்செய்மகளின்பெயர் = சன்மினி, வஞ்சப்பெண். ௨.

அமரியெண்டோளிவெற்றியந்தரியம்பணத்தி
சமரிபாலைக்கிழத்திசயமகள்வீரச்செல்வி
குமரிமாமகிடற்செற்றாள்கொற்றவைசக்கிரபாணி
விமலைவண்கலையானத்திவிசையைநாரணியேவிந்தை. (௬௦)

நீலியேநெடியகாத்தியாயனிமேதிச்சென்னி
மேலிடருறமிதித்தமெல்லியல்கௌரியையை
மாலினுக்கிளையநங்கைபகவதிவாள்கைக்கொண்டாள்
சூலிசண்டிகையேகன்னிசுந்தரிதுர்க்கைநாமம். (௬௧)

அமரர்பண்ணவர்புத்தேளிர்கடவுளரண்டரும்பர்
இமையவர்விபுதர்வானோரிலேகரேபுலவர்விண்ணோர்
அமுதராதித்தர்மேலோரையரேசுரரேதீர்த்தர்
உமிழ்சுடர்மௌலிசூட்டுமுயர்நிலத்தவருந்தேவர். (௬௨)

ஈனமிலணங்குபுத்தேளேற்றசூர்கடவுடேவே
ஆனதெய்வதமேதெய்வமாமெனவுரைப்பர்நூலோர்
தானவரவுணரோடுதைத்தியர்திதியின்மைந்தர்
ஏனையவசுரராகுநிசாசரரென்றுமேற்கும். (௬௩)

நிருதரேபிசிதவூணர்நிசாசரராரக்கர்தீமை
தருமிராக்கதர்பேர்சாலகடங்கடர்தானுமாகும்
விரவுவிஞ்சையர்பேர்வித்தியாதரரேகேசருமாங்கந்
தருவர்யாழ்வல்லோரேகாந்தருவர்கின்னரருமாமே. (௬௪)

குறள்கிருத்திமமேகூளிபாரிடஞ்சாதகஞ்செந்
நெறியில்பூதப்பேரைந்தாநீள்பிரேதம்வேதாளம்
வெறிமயல்பிசாசம்பாசம்வியந்தரமண்ணைசோகோ
டறிவழிகழுதுகூளியலகைபேய்கடிசாவும்பேர். (௬௫)

அண்டம்வானுலகுமங்குலந்தரமம்பரங்கோக்
குண்டலங்ககனங்காயங்குடிலம்புட்கரமநந்தம்
கண்டிடாவெளியேமீமாகத்தொடாசினிநபங்கம்
விண்டலம்விசும்புவேணிவியோமமாகாயமாமே. (௬௬)

வாதங்கால்வளிமருத்துவாடையேபவனம்வாயுக்
கூதிர்மாருதமால்கோதைகொண்டலேயுலவைகோடை
ஊதைவங்கூழ்சிறந்தவொலிசதாகதியுயிர்ப்புக்
காதரிகந்தவாகன்பிரபஞ்சனன்சலனன்காற்றே. (௬௭)



துர்க்கையின்பெயர்=அமரி, எண்டோளி, வெற்றி அந்தரி, அம்பணத்தி, சமரி, பாலைக்கிழத்தி, சயமகள், வீரச்செல்வி, குமரி, மகிடற்செற்றாள், கொற்றவை, சக்கிரபாணி, விமலை, கலையானத்தி, விசையை, நாரணி, விந்தை. ௧௮.

நீலி, காத்தியாயனி, மேதிச்சென்னிமிதித்தமெல்லியல், கௌரி, ஐயை, மாலினுக்கிளையநங்கை, பகவதி, வாள்கைக்கொண்டாள், சூலி, சண்டிகை, கன்னி, சுந்தரி. ௧௨. (ஆ ௩௦)

தேவர்பெயர்=அமரர், பண்ணவர், புத்தேளிர், கடவுளர், அண்டர், உம்பர், இமையவர், விபுதர், வானோர், இலேகர், புலவர், விண்ணோர், அமுதர், ஆதித்தர், மேலோர், ஐயர், சுரர், தீர்த்தர், உயர் நிலத்தவர். ௧௯.

தெய்வத்தின்பெயர்=அணங்கு, புத்தேள், சூர், கடவுள், தே, தெய்வதம். ௬.

அசுரர்பெயர்=தானவர், அவுணர், தைத்தியர், திதியின்மைந்தர், நிசாசரர். ௫.

இராக்கதர்பெயர்=நிருதர், பிசிதவூணர், நிசாசரர், அரக்கர், சாலகடங்கடர். ௫.

விஞ்சையர்பெயர்=வித்தியாதரர், கேசரர். ௨.

கந்தருவர்பெயர்=யாழ்வல்லோர், காந்தருவர், கின்னரர். ௩.

பூதத்தின்பெயர்=குறள், கிருத்திமம், கூளி, பாரிடம், சாதகம். ௫.

பேயின்பெயர்=பிரேதம், வேதாளம், வெறி, மயல், பிசாசம், பாசம், வியந்தரம், மண்ணை, சோகு, கழுது, கூளி, அலகை, கடி, சாவு. ௧௪.

ஆகாயத்தின்பெயர்=அண்டம், வான், உலகு, மங்குல், அந்தரம், அம்பரம், கோ, குண்டலம், ககனம், காயம், குடிலம், புட்கரம், அநந்தம், வெளி, மீ, மாகம், ஆசினி, நபம், கம், விண்டலம், விசும்பு, வேணி, வியோமம். ௨௩.

காற்றின்பெயர்=வாதம், கால், வளி, மருத்து, வாடை, பவனம், வாயு, கூதிர், மாருதம், மால், கோதை, கொண்டல், உலவை, கோடை, ஊதை, வங்கூழ், ஒலி, சதாகதி, உயிர்ப்பு, அரி, கந்தவாகன், பிரபஞ்சனன், சலனன், ௨௩.

கோடைமேல்காற்றினுமங்கொண்டல்கீழ்காற்றிற்கேற்கும்
வாடையினுமம்வீசும்வடகாற்றுவடந்தையென்ப
கூடியகூதிரூதைகுளிர்பனிக்காற்றினுமம்
ஊடியசுழல்காற்றின்பேர்சாரிகைசூறையாமே. (சஅ)

வருதென்கால்சிறுகாறென்றிமலயக்கால்வசந்தன்றென்றல்
அரிவசுத்தகனனங்கியனலயவாகனன்றீ
எரிசுசிசிகியேயாரலியங்குகாற்றின்சகாயன்
கருநெறிகனலியேயங்காரகன்சித்திரபானு. (சகூ)

தழலுதாசனன்சிறந்ததனஞ்சயன்சாதவேதாச்
செழுமையமுளரிதென்கீழ்த்திசையிறைசேர்ந்தார்க்கொல்லி
எழுவிதநாவேவன்னியேற்றபாவகனேதேயு
அழல்சுடர்ஞெகிழியின்னநெருப்பின்பேராறைந்தாமே. (ருo)

வடவைதீத்திரண்மடங்கல்வருவடவாமுகஞ்சூழ்
கடையனலூழித்தீயாங்கனலொழுங்கதுசுவாலை
அடைவில்விண்வீழுங்கொள்ளியுற்கையென்றறையலாமே
வெடிநறைகுய்யிம்மூன்றுமிகுநறும்புகையினுமம். (ருக)

தாவங்காட்டழலத்தீயைத்தருகோலேஞெலிகோலென்ப
தீவிகைதீபமற்றைத்திகழ்சுடரொளிவிளக்கே
ஆவிதூபந்தூமத்தோடரிபுகைபொறிபுலிங்கம்
பாவகனத்தீத்தெய்வம்பாரியேசுவாகாதேவி. (ருஉ)

வாரியாலங்கீலாலமழையலர்கமலங்காண்டம்
நீரம்புட்கரமேசிந்துநெடும்புனல்சலிலம்பாணி
காரறல்புவனநாரங்கனவிரதங்கவந்தம்
மாரியம்புதமேயப்புவருணஞ்சீவனம்வனம்வார். (ருங)

பயமழையுதகந்தோயம்பயசுசம்பரம்பானீயம்
வயமொடுசீவனீயம்வருதீர்த்தங்கீரஞ்சீதம்
அயமளகத்தோடாமமமுதங்கஞ்சலநீராகும்
நயனுறுவருணனிந்தநற்புனல்வேந்தனுமம். (ருச)

பரிதிபாற்கரனாதித்தன்பனிப்பகைசுடர்பதங்கன்
இருள்வலிசவிதாச்சூரனெல்லுமார்த்தாண்டனென்றூழ்
அருணனாதவனேமித்திரனாயிரஞ்சோதியுள்ளோன்
தரணிசெங்கதிரோன்சண்டன்றபனனேயொளியேசான்றோன். ()



மேல்காற்றின்பெயர் = கோடை. க.

கீழ்காற்றின்பெயர் = கொண்டல். க.

வாடையின்பெயர் = வடகாற்று, வடந்தை. உ.

பனிக்காற்றின்பெயர் = கூதிர், ஊதை. உ.

சுழல்காற்றின்பெயர் = சாரிகை, சூறை. உ.

தென்றலின்பெயர் = தென்கால், சிறுகால், தென்றி, மலயக்கால், வசந்தன். ரு.

நெருப்பின்பெயர் = அரி, வசு, தகனன், அங்கி, அனல், அயவாகனன், தீ, எரி, சுசி, சிகி, ஆரல், காற்றின்சகாயன், கருநெறி, கனலி, அங்காரகன், சித்திரபானு. கசு.

தழல், உதாசனன், தனஞ்சயன், சாதவேதா, முளரி, தென்கீழ்த்திசையிறை, சேர்ந்தார்க்கொல்லி, எழுநா, வன்னி, பாவகன், தேயு, அழல், சுடர், ஞெகிழி. கச. (ஆ ௩o.)

ஊழித்தீயின்பெயர் = வடவை, தீத்திரள், மடங்கல், வடவாமுகம், கடையனல். ரு. கனலொழுங்கின்பெயர் = சுவாலை. க.

விண்வீழ்கொள்ளியின்பெயர் = உற்கை. க.

நறும்புகையின்பெயர் = வெடி, நறை, குய். ௩.

காட்டழலின்பெயர் = தாவம். க. தீக்கடைகோலின்பெயர் = ஞெலிகோல். க. விளக்கின்பெயர் = தீவிகை, தீபம், சுடர், ஒளி. ச.

புகையின்பெயர் = ஆவி, தூபம், தூமம், அரி. ச.

தீப்பொறியின்பெயர் = புலிங்கம். க. தீத்தெய்வத்தின்பெயர் = பாவகன். க. தீத்தெய்வத்தின்பாரியின்பெயர் = சுவாகாதேவி. க.

நீரின்பெயர் = வாரி, ஆலம், கீலாலம், மழையலர், கமலம், காண்டம், நீரம், புட்கரம், சிந்து, புனல், சலிலம், பாணி, கார், அறல், புவனம், நாரம், கனவிரதம், கவந்தம், மாரி, அம்பு, உதம், அப்பு, வருணம், சீவனம், வனம், வார். உசு.

பயம், மழை, உதகம், தோயம், பயசு, சம்பரம், பானீயம், வயம், சீவனீயம், தீர்த்தம், கீரம், சீதம், அயம், அளகம், ஆம், அம், அமுதம், கம், சலம். கக. (ஆ சரு.)

வருணன்பெயர் = புனல்வேந்தன். க.

சூரியன்பெயர் = பரிதி, பாற்கரன், ஆதித்தன், பனிப்பகை, சுடர், பதங்கன், இருள்வலி, சவிதா, சூரன், எல், மார்த்தாண்டன், என்றூழ், அருணன், ஆதவன், மித்திரன், ஆயிரஞ்சோதியுள்ளோன், தரணி, செங்கதிரோன், சண்டன், தபனன், ஒளி, சான்றோன். உஉ.

அனலியேயரியேபானுவலரியேயண்டயோனி
கனலியேவிகர்த்தனன்வெங்கதிரவன்பகலோன்வெய்யோன்
தினகரன்பகலேசோதிதிவாகரனரியமாவே
இனனுடனுதயன்ஞாயிறெல்லையேகிரணமாலி. (௫௬)

விரவுமேழ்பரியோன்வேந்தன்விரிச்சிகன்விரோசனன்பேர்
இரவிவிண்மணியருக்கனேழுஞ்சூரியன்பேர்
பரிதியின்வட்டந்தானேவிசயமாம்பரிதிவீசுங்
கிரணமேகரமுமற்றைக்கிளர்ந்ததீவிரமுமாகும். (௫௭)

நிலவுசோமன்களங்கனிசாபதிபிறைகுளிர்ந்த
கலையினனுடுவின்வேந்தன்கலாநிதியொடுகுபேரன்
அலவனேசசியேதிங்களம்புலிநிசாகரன்வான்
உலவிமகிரணன்சாந்தமுற்றதண்ணவன்குரங்கி. (௫௮)

மதியிராக்கதிரேயிந்துமருவுதானவனேயல்லோன்
விதுவொடுகுமுதநண்பன்சுதாகரன்வேந்தனாலோன்
சிதைவிலாமுயலின்கூடுபசுங்கதிர்த்தேவென்றெல்லாம்
புதியசந்திரன்பேரேழுமெட்டுமேபுகன்றநாமம். (௫௯)

கருதியசெந்தீவண்ணன்காட்டுமங்காரகன்சேய்
குருதிவக்கிரனேபௌமன்குசனிலமகனாரத்தன்
மருவியவழலோன்மற்றைமங்கலனுடனேயாரல்
விரவியவுதிரனின்னமேவுசெவ்வாயினாமம். (௬௦)

சிந்தைகூரியன்கணக்கன்றேர்ப்பாகனருணன்சாமன்
வந்ததூதுவனேமாலேமதிமகனறிஞன்பாகன்
அந்தமாம்புலவன்மற்றையனுவழிமேதைபச்சை
புந்திபண்டிதனீரெட்டும்புதன்பெயராகுமன்றே. (௬௧)

தீதிலாத்தெய்வமந்திரிசிகண்டிசனமைச்சன்சீவன்
வேதனாண்டளப்பானாசான்வேந்தன்பொன்வியாழன்பேராம்
ஓதியவசுரமந்திரியுசனன்பார்க்கவனேசுங்கன்
கோதில்சுக்கிரன்பளிங்குபுகர்கவிமழைக்கோள்வெள்ளி. (௬௨)

கதிர்மகன்மந்தன்காரிகரியவன்சௌரிமேற்கோள்
முதுமகன்பங்குநீலன்முடவனேநோய்முகன்சனிப்பேர்
மதியுணுமிராகுநாமமற்றதுதமங்கறுப்பாம்
அதிகமாங்கேதுச்செம்மைசிகிகதிர்ப்பகையுமாமே. (௬௩)



அனலி, அரி, பானு, அலரி, அண்டயோனி, கனலி, விகர்த்தனன், கதிரவன், பகலோன், வெய்யோன், தினகரன், பகல், சோதி, திவாகரன், அரியமா, இனன், உதயன், ஞாயிறு, எல்லை, கிரணமாலி. ௨௦.

ஏழ்பரியோன், வேந்தன், விரிச்சிகன், விரோசனன், இரவி, விண்மணி, அருக்கன். ௭. (ஆ௳ ௪௧.)

பரிதியின்வட்டத்தின்பெயர்=விசயம். ௧.

பரிதியின்கிரணத்தின்பெயர்=கரம், தீவிரம். ௨.

சந்திரன்பெயர்=நிலவு, சோமன், களங்கன், நிசாபதி, பிறை, கலையினன், உடுவின்வேந்தன், கலாநிதி, குபேரன், அலவன், சசி, திங்கள், அம்புலி, நிசாகரன், இமகிரணன், தண்ணவன், குரங்கி. ௧௭.

மதி, இராக்கதிர், இந்து, தானவன், அல்லோன், விது, குமுதநண்பன், சுதாகரன், வேந்தன், ஆலோன், முயலின்கூடு, பசுங்கதிர்த்தே. ௧௨. (ஆ௳ ௨௧.)

செவ்வாயின்பெயர்=செந்தீவண்ணன், அங்காரகன், சேய், குருதி, வக்கிரன், பௌமன், குசன், நிலமகன், ஆரத்தன், அழலோன், மங்கலன், ஆரல், உதிரன். ௧௩.

புதன்பெயர்=சிந்தைகூரியன், கணக்கன், தேர்ப்பாகன், அருணன், சாமன், தூதுவன், மால், மதிமகன், அறிஞன், பாகன், புலவன், அனுவழி, மேதை, பச்சை, புந்தி, பண்டிதன். ௧௬.

வியாழன்பெயர்=தெய்வமந்திரி, சிகண்டிசன், அமைச்சன், சீவன், வேதன், ஆண்டளப்பான், ஆசான், வேந்தன், பொன். ௯.

வெள்ளியின்பெயர்=அசுரமந்திரி, உசனன், பார்க்கவன், சுங்கன், சுக்கிரன், பளிங்கு, புகர், கவி, மழைக்கோள். ௯.

சனியின்பெயர்=கதிர்மகன், மந்தன், காரி, கரியவன், சௌரி, மேற்கோள், முதுமகன், பங்கு, நீலன், முடவன், நோய்முகன். ௧௧.

இராகுவின்பெயர்=தமம், கறுப்பு. ௨.

கேதுவின்பெயர்=செம்மை, சிகி, கதிர்ப்பகை. ௩.

கொண்டமைவருடையாடுகொறிமறிமேடமென்ப
குண்டைசேமூரிபுல்லங்கோவிடையிடபமாகும்
தண்டியாழ்விழவிரட்டைசவைமகண்மிதுனந்தானே
நண்டுஞெண்டலவன்சேக்கைநள்ளிகர்க்கடகமாமே. (௬௪)

கொலையரியாளிமாவேகொடும்புலிசிங்கமென்ப
முலைமடந்தையர்பேரெல்லாமொழிந்திடுங்கன்னிதானே
துலைநிறைநிறுப்பான்சீர்கோறூக்குவாணிகன்றுலாப்பேர்
உலைவுறுதெறுக்காறேளேயோதியவிருச்சிகப்பேர். (௬௫)

கொடுமரந்துரோணஞ்சாபங்கொடுஞ்சிலைதனுநாற்பேரே
வடிவின்மான்கலைசுறாவேமகரராசிக்குமுப்பேர்
குடமொடுகரீரஞ்சாடிகுடங்கரேகும்பமென்ப
நெடியமீன்மயிலைமற்சஞ்சலசரநேருமீனம். (௬௬)

பரிமருத்துவநாள்வாசிபரவுமைப்பசியாழேறே
டிரலையேமுதனாள்சென்னியென்பதச்சுவினியின்பேர்
பரணியேகிழவன்சோறுபகலவன்றராசுதாழி
தருமனாளடுப்புப்பூதந்தாசிமுக்கூட்டுத்தானே. (௬௭)

எரிபிறந்திடுநாளாரலிறாலறுவாயளக்கர்
கருதுநாவிதனேயங்கிகார்த்திகையளகுமேற்கும்
பிரமனாள்சகடுபண்டிபேசியசதியேவையம்
உருள்விமானந்தேரூற்றாலுரோணியேயுரோகிணிப்பேர். (௬௮)

திங்கணாண்மதிபேராளன்சேர்ந்தமான்றலையேமாழ்கு
பொங்குமார்கழியேமும்மீன்புகழ்நரிப்புறமேபாலை
இங்கிவையொன்பதென்பமிருகசீரிடத்தினாமம்
செங்கைமூதிரையாழீசன்றினமிவையாதிரைப்பேர். (௬௯)

கருதியவதிதிநாளேகழைபுனர்தங்கரும்பு
பொருவிலாப்புனிதம்பிண்டியாவணம்புனர்பூசப்பேர்
குருவினாள்கொடிறுவண்டுகுறித்தகாற்குளமேபூசம்
அரவினாள்கவ்வைபாம்பேயாயிலாயிலியநாற்பேர். (௭௦)

கொடுநுகம்வேள்விவாய்க்கால்குறித்தவேட்டுவனேமாசி
வடுவறமுதலிற்றோன்றிவருஞ்சனிமகநாளென்ப
இடையெழுஞ்சனியேதூர்க்கையெலிபகவதிநாளோடு
கடியநாவிதனையெய்யுங்கணையிருமுப்பேர்பூரம். (௭௧)



மேடத்தின்பெயர்=மை, வருடை, ஆடு, கொறி, மறி. ௫.

இடபத்தின்பெயர்=குண்டை, சே, மூரி, புல்லம், கோ, விடை. ௬.

மிதுனத்தின்பெயர்=தண்டு, யாழ், விழவு, இரட்டை, சவைமகள். ௫.

கர்க்கடகத்தின்பெயர்=நண்டு, ஞெண்டு, அலவன், சேக்கை, நள்ளி. ௫.

சிங்கத்தின்பெயர்=அரி, யாளி, மா, கொடும்புலி. ௪.

கன்னியின்பெயராக=மடந்தையர்பேரெல்லாங்கொள்ளப்படும்.

துலாத்தின்பெயர்=துலை, நிறை, நிறுப்பான், சீர், கோல், தூக்கு, வாணிகன். ௭.

விருச்சிகத்தின்பெயர்=தெறுக்கால், தேள். ௨.

தனுவின்பெயர்=கொடுமரம், துரோணம், சாபம், சிலை, ௪.

மகரத்தின்பெயர்=மான், கலை, சுறா. ௩.

கும்பத்தின்பெயர்=குடம், கரீரம், சாடி, குடங்கர். ௪.

மீனத்தின்பெயர்=மீன், மயிலை, மற்சம், சலசரம். ௪.

அச்சுவினியின்பெயர்=பரி, மருத்துவநாள், வாசி, ஐப்பசி, யாழ், ஏறு, இரலை, முதனாள், சென்னி. ௯.

பரணியின்பெயர்=கிழவன், சோறு, பகலவன், தராசு, தாழி, தருமனாள், அடுப்பு, பூதம், தாசி, முக்கூட்டு. ௧௦.

கார்த்திகையின்பெயர்=எரிநாள், ஆரல், இறால், அறுவாய், அளக்கர், நாவிதன், அங்கி, அளகு. ௮.

உரோகிணியின்பெயர்=பிரமனாள், சகடு, பண்டி, சதி, வையம், உருள், விமானம், தேர், ஊற்றால், உரோணி. ௧௦.

மிருகசீரிடத்தின்பெயர்=திங்கணாள், மதி, பேராளன், மான்றலை, மாழ்கு, மார்கழி, மும்மீன், நரிப்புறம், பாலை. ௯.

திருவாதிரையின்பெயர்=செங்கை, மூதிரை, யாழ், ஈசன்றினம். ௪.

புனர்பூசத்தின்பெயர்=அதிதிநாள், கழை, புனர்தம், கரும்பு, புனிதம், பிண்டி, ஆவணம். ௭.

பூசத்தின்பெயர்=குருவினாள், கொடிறு, வண்டு, காற்குளம். ௪.

ஆயிலியத்தின்பெயர்=அரவினாள், கௌவை, பாம்பு, ஆயில். ௪.

மகத்தின்பெயர்=கொடுநுகம், வேள்வி, வாய்க்கால், வேட்டுவன், மாசி, முதலில் வருஞ்சனி. ௬.

பூரத்தின்பெயர்=இடையெழுஞ்சனி, தூர்க்கை, எலி, பகவதிநாள், நாவிதன், கணை. ௬.

பங்குனிகடையில்வந்துபற்றியசனியினோடு
செங்கதிர்பிறந்தநாளுஞ்சிறந்தவுத்தரமென்றாகும்
தங்குகாமரமேயங்கிசார்ந்தநாள்கௌத்துவத்தோ
டங்கைமீன்களிறுநவ்வியைவிரலத்தமேழ்பேர். (௭௨)

அளக்குநெய்பயறுமீனேயறுவையேயாடைதூசு
துளக்கிலாநடுநாடச்சன்றுவட்டாநாள்சித்திரைப்பேர்
விளக்கொடுமரக்கால்வீழ்க்கைவெறுநுகங்காற்றினாளே
கிளத்தியகாற்றுத்தீபங்கேடிலாச்சோதியேழ்பேர். (௭௩)

முற்றில்வைகாசிகாற்றுமுந்தநாண்முறத்தினோடு
வெற்றிசேர்சுளகுசேட்டைவிசாகநாளிருமுப்பேரே
புற்றாளிபெண்ணைதேளேபோந்தைமித்திரநாளாறும்
சொற்றனரனுடமென்றுசோர்விலாநூலோர்தாமே. (௭௪)

சேட்டையிந்திரனாள்வேதிசெந்தழலெரியிவ்வைந்தும்
கேட்டைவல்லாரையென்றுங்கிளத்துபவளத்தநூலோர்
தேட்கடைகுருகுகொக்குச்சிலையுடனன்றிலானி
ஈட்டியவசுரநாளிவ்வேழ்பெயர்மூலமென்ப. (௭௫)

உடைகுளமுற்குளநீருதித்தநாள்பூராடப்பேர்
கடையினிற்குளமேயானிகருதுவிச்சுவநாளாடி
மிடையிலுத்தராடமென்பமேவியவோணமாயோன்
அடையுநாளுலக்கைமுக்கோல்சிரவணஞ்சோணையாமே. (௭௬)

மருவியகாகப்புள்ளுவசுக்கணாள்பறவைபுள்ளு
வீரவுமாவணியவிட்டம்விளம்பியநாமமைந்தாம்
பெருகியசெக்குச்சுண்டன்பேசியபோரேகுன்று
வருணனாள்சதயமைந்தும்வகுத்தபேர்தொகுத்ததாமே. (௭௭)

பொருவின்முற்கொழுங்கானாழிபுரட்டையேபூரட்டாதி
முரசுபிற்கொழுங்கான்மன்னனுத்தரட்டாதிமுப்பேர்
இரவிநாள்கலமேதோணியேற்றமாந்தொழுவேநாவாய்
பெருகியகடைநாள்சூலம்பெருநாளெட்டிரேவதிப்பேர். (௭௮)

வடமீனேசாலியென்பமற்றருந்ததியின்பேரே
உடுவேதாரகையேபம்மேயுற்கையேசுக்கைவிண்மீன்
கடிகைநாழிகையாங்கன்னலிரித்தையுமதுவேகாட்டுந்
துடிகலைவிகலைமுப்பேர்சொல்லியகாலநுட்பம். (௭௯)



உத்தரத்தின்பெயர்=பங்குனி, கடையெழுஞ்சனி, செங்கதிர்நாள். ௩.

அத்தத்தின்பெயர்=காமரம், அங்கிநாள், கௌத்துவம், கைம்மீன், களிறு, நவ்வி, ஐவிரல். ௭.

சித்திரையின்பெயர்=நெய், பயறு, மீன், அறுவை, ஆடை, தூசு, நடுநாள், தச்சன், துவட்டாநாள். ௯.

சோதியின்பெயர்=விளக்கு, மரக்கால், வீழ்க்கை, வெறுநுகம், காற்றினாள், காற்று, தீபம். ௭.

விசாகத்தின்பெயர்=முற்றில், வைகாசி, காற்றுநாள், முறம், சுளகு, சேட்டை. ௬.

அனுடத்தின்பெயர்=புல், தாளி, பெண்ணை, தேள், போந்தை, மித்திரநாள். ௬.

கேட்டையின்பெயர்=சேட்டை, இந்திரனாள், வேதி, தழல், எரி, வல்லாரை. ௬.

மூலத்தின்பெயர்=தேட்கடை, குருகு, கொக்கு, சிலை, அன்றில், ஆனி, அசுரநாள். ௭.

பூராடத்தின்பெயர்=உடைகுளம், முற்குளம், நீர்நாள். ௩.

உத்தராடத்தின்பெயர்=கடைக்குளம், ஆனி, விச்சுவநாள், ஆடி. ௪.

திருவோணத்தின்பெயர்=மாயோனாள், உலக்கை, முக்கோல், சிரவணம், சோணை. ௫.

அவிட்டத்தின்பெயர்=காகப்புள், வசுக்கணாள், பறவை, புள், ஆவணி. ௫.

சதயத்தின்பெயர்=செக்கு, சுண்டன், போர், குன்று, வருணனாள். ௫.

பூரட்டாதியின்பெயர்=முற்கொழுங்கால், நாழி, புரட்டை. ௩.

உத்தரட்டாதியின்பெயர்=முரசு, பிற்கொழுங்கால், மன்னன். ௩.

இரேவதியின்பெயர்=இரவிநாள், கலம், தோணி, தொழு, நாவாய், கடைநாள், சூலம், பெருநாள். ௮.

அருந்ததியின்பெயர்=வடமீன், சாலி. ௨.

விண்மீனின்பெயர்=உடு, தாரகை, பம், உற்கை, சுக்கை. ௫.

நாழிகையின்பெயர்=கடிகை, கன்னல், இரித்தை. ௩.

காலநுட்பத்தின்பெயர்=துடி, கலை, விகலை. ௩.

வேலையேயமையஞ்செவ்வியேல்லையேபொழுதுபாணி
காலைகொன்பதமேபோழ்துகாலப்பேரீரைந்தாகும்
சாலநீட்டித்தலோடுசார்ந்தபாணித்தலூனும்
நீலவுண்கண்ணாய்மற்றுநெடித்தலுநெடும்போழ்தென்ப. (௮௦)

ஒல்லையேயிறையேயுற்றசிறுவரையுடனிலேசம்
வல்லைமாத்திரைகள்காலவிரைவின்பேர்வகுக்கிலாறும்
நல்லநண்பகலேயுச்சிநடுப்பகன்மத்தியானம்
இல்லுடன்பவனமோரையிராசியின்பெயராமென்ப. (௮௧)

அல்விபாவரியேகங்குலல்கல்யாமினியேநத்தம்
எல்லியோடியாமமாலையிரசனிநிசியிராவாம்
எல்லொடுதிவாப்பகற்பேரேல்லையேதிவசம்வைகல்
அல்கலேதினமேயெல்லையாணியம்பகலேநாளாம். (௮௨)

சருவரியந்தகாரங்கச்சளந்தமந்துவாந்தம்
இருளென்பதிமிரமோடுதுணங்கறலென்றுமேற்கும்
நெருநலுநென்னலுந்தானிகழ்த்துபமுன்னைநாளைப்
பெருகியபின்றைபிற்றைபின்னையென்றியம்பலாமே. (௮௩)

புலரிவைகறையினும்விடியலும்போற்றுமப்பேர்
நிலவுசந்திரிகைவெய்யினிகழ்ந்தவாதபமேயென்றாழ்
இலகியமாலைசாயஞ்சந்தியாம்யாமஞ்சாமம்
அலைவறுபருவந்தானேயாணியமிருதுவாகும். (௮௪)

திதியொடுபக்கந்தானேயொருகலைதெரிக்குமென்ப
மதியொடுதிங்கள்சொல்லின்மாதமேபேதமில்லை
மதிதெரிகலையிராப்பேர்வருஞ்சினீவாலியாகும்
மதிமறைகலையிராவின்வரும்பெயர்குகுவென்றுமே. (௮௫)

அந்தமாமுவாவேபவ்வம்பூரணையிருபேராகும்
இந்துவோடிரவிகூட்டமமாவாசையமையுமென்ப
நந்தைபத்திரையினோடுநாட்டியசயையிரித்தை
முந்துபூரணையாம்பக்கமுதற்றொட்டுமூன்றுவட்டம். (௮௬)

பரவியகாரேகூதிர்முன்பினிற்பனிகளோடு
விரவியவிளையவேனில்விரைந்திடுமுதிர்ந்தவேனில்
மருவுமாவணியேயாதிமற்றிரண்டிரண்டுமாதம்
பருவமூவிரண்டாய்ந்துபார்த்திடின்வாய்த்தபேராம். (௮௭)



காலத்தின்பெயர்=வேலை, அமையம், செவ்வி, எல்லை, பொழுது, பாணி, காலை, கொன், பதம், போழ்து. ௧௦.

நெடும்போழ்தின்பெயர்=நீட்டித்தல், பாணித்தல், நெடித்தல். ௩.

காலவிரைவின்பெயர்=ஒல்லை, இறை, சிறுவரை, இலேசம், வல்லை, மாத்திரை. ௬.

மத்தியானத்தின்பெயர்=நண்பகல், உச்சி, நடுப்பகல். ௩.

இராசியின்பெயர்=இல், பவனம், ஓரை. ௩.

இராவின்பெயர்=அல், விபாவரி, கங்குல், அல்கல், யாமினி, நத்தம், எல்லி, யாமம், மாலை, இரசனி, நிசி. ௧௧.

பகலின்பெயர்=எல், திவா. ௨. நாளின்பெயர்=எல்லை, திவசம், வைகல், அல்கல், தினம், எல்லை, ஆனியம், பகல். ௮.

இருளின்பெயர்=சருவரி, அந்தகாரம், கச்சளம், தமம், துவாந்தம், திமிரம், துணங்கறல். ௭.

முன்னைநாளின்பெயர்=நெருநல், நென்னல். ௨.

பின்னைநாளின்பெயர்=பின்றை, பிற்றை. ௨.

வைகறையின்பெயர்=புலரி, விடியல். ௨. நிலவின்பெயர்=சந்திரிகை. ௧. வெய்யிலின்பெயர்=ஆதபம், என்றாழ். ௨.

மாலையின்பெயர்=சாயம், சந்தி. ௨. சாமத்தின்பெயர்=யாமம். ௧.

பருவத்தின்பெயர்=ஆனியம், இருது. ௨.

ஒருகலையின்பெயர்=திதி, பக்கம். ௨.

மாதத்தின்பெயர்=மதி, திங்கள். ௨.

மதிதெரிகலையிராவின்பெயர்=சினீவாலி. ௧.

மதிமறைகலையிராவின்பெயர்=குகு. ௧.

பூரணையின்பெயர்=உவா, பவ்வம். ௨.

அமாவாசையின்பெயர்=இந்துவோடிரவிகூட்டம், அமை. ௨.

முதற்பக்கந்தொடங்கி மூன்றுவட்டமாக வருகிற ஐந்து பக்கங்களின்பெயர்=நந்தை, பத்திரை, சயை, இரித்தை, பூரணை. * ௫.

ஆவணி முதலிரண்டிரண்டு மாதமாகிய வறுவகைப் பருவத்தின் பெயர்=கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். ஆவணி புரட்டாதி கார். ஐப்பசி கார்த்திகை கூதிர், மார்கழி தை முன்பனி, மாசி பங்குனி பின்பனி, சித்திரை வைகாசி இளவேனில், ஆனி ஆடி முதுவேனில்.

---

* அவை. ௧, ௬, ௧௧, நந்தை. ௨, ௭, ௧௨, பத்திரை, | ௩, ௮, ௧௩, சயை. ௪, ௯, ௧௪, இரித்தை. | ௫, ௧௦, ௧௫, பூரணை.

இகழ்வில்வற்சரமேயாண்டேசமைமுப்பேர்வருடமென்ப
பகரிலாயனமுமப்பேரயனமேயாண்டிற்பாதி
உகமுடிவுடன்மடங்கலூழியாமாயுள்வாழ்நாள்
யிகழ்வுறுகற்பந்தானேமலரயன்வாழ்நாளென்ப. (௮௮)

சொரிதுளிதிவலைதூவல்சீகரந்தூறன்மாரி
வருடமோடுறையேயாலிவானமுமழைப்பேர்பத்தாம்
பெருமழையென்பதானேபேசிலாசாரமாகும்
விரவியபனித்தல்சோனைவிடாமழையிருபேராமே. (௮௯)

வாலியதிவலைதூவல்வண்சிதர்சீகரத்தோ
டாலியேதளியேமிக்கவுறைதுளியாகவேழ்பேர்
ஆலியேகரகமற்றைக்கனோபலமாலங்கட்டி
மேலினுமந்தானும்பர்மேக்குமாங்கிழக்குக்கீழே. (௯௦)

பயனுறுமங்குல்சீதம்பயோதரந்தாராதாரம்
குயின்மழையெழிலிமஞ்சுகொண்டல்சீமூதங்கொண்மூ
வியன்முகில்விண்விசும்புவிளையுமால்சலதரஞ்செல்
புயல்கனங்கந்தரங்கார்போற்றுமைமாரிமேகம். (௯௧)

வெடியொலியசனிசெல்லுவிண்ணேறுமடங்கலாறே
இடியின்பேருருமுமற்றையனலேறுமிதன்பேரென்ப
நெடுவித்துத்துத்தடித்துநீள்சம்பைசபலையோடு
கடியசஞ்சலையேமின்னல்கனருசிமின்னினேழ்பேர். (௯௨)

பனியிமந்துகினமும்பேர்பரிவேடமூர்கோள்வட்டம்
தனியிடுவானவில்லேயிந்திரதனுவென்றாகும்
இனையவைதேவரீட்டச்செய்யனூற்றொன்றிசைத்தான்
பனைகுணபத்திரன்றாள்போற்றுமண்டலவன்றானே. (௯௩)

தேவப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம்—௧௦௧.



வருடத்தின்பெயர்=வற்சரம், ஆண்டு, சமை, ஆயனம். ௪.

ஆண்டிற்பாதியின்பெயர்=அயனம். ௧.

ஊழிகாலத்தின்பெயர்=உகமுடிவு, மடங்கல். ௨.

வாழ்நாளின்பெயர்=ஆயுள். ௧.

அயன்வாழ்நாளின்பெயர்=கற்பம். ௧.

மழையின்பெயர்=துளி, திவலை, தூவல், சீகரம், தூறல், மாரி, வருடம், உறை, ஆலி, வானம். ௧௦.

பெருமழையின்பெயர்=ஆசாரம். ௧.

விடாமழையின்பெயர்=பனித்தல், சோனை. ௨.

துளியின்பெயர்=திவலை, தூவல், சிதர், சீகரம், ஆலி, தளி, உறை. ௭.

ஆலங்கட்டியின்பெயர்=ஆலி, கரகம், கனோபலம். ௩.

மேலின்பெயர்=உம்பர், மேக்கு. ௨.

கீழின்பெயர்=கிழக்கு. ௧.

மேகத்தின்பெயர்=மங்குல், சீதம், பயோதரம், தாராதாரம், குயின், மழை, எழிலி, மஞ்சு, கொண்டல், சீமூதம், கொண்மூ, முகில், விண், விசும்பு, மால், சலதரம், செல், புயல், கனம், கந்தரம், கார், மை, மாரி. ௨௩.

இடியின்பெயர்=வெடி, ஒலி, அசனி, செல், விண்ணேறு, மடங்கல், உரும், அனலேறு. ௮.

மின்னின்பெயர்=வித்துத்து, தடித்து, சம்பை, சபலை, சஞ்சலை, மின்னல், கனருசி. ௭.

பனியின்பெயர்=இமம், துகினம். ௨.

பரிவேடத்தின்பெயர்=ஊர்கோள், வட்டம். ௨.

வானவில்லின்பெயர்=இந்திரதனு. ௧.

இரண்டாவது

# மக்கட்பெயர்த்தொகுதி.

## காப்பு.

தேனவிழ்த்தளிகளெல்லாஞ்செவ்வழிபாடாநின்ற
பூநகைத்திலங்குகஞ்சப்பொகுட்டின்மீதேயொதுங்கு
நான்முகக்கடவுள்பாதநாவினுனவிற்றியேத்தி
மானவர்க்கியன்றபேரைவகுத்திடுந்தொகுதிசொல்வாம். (க)

துறவர்சார்பில்லோர்நீத்தோர்தூய்த்தவர்முனிவர்மெய்யர்
அறவர்மாதவர்கடிந்தோரந்தணரடிகளையர்
உறுவர்தாபதர்விளங்குமிருடிகளுயர்ந்தோர்யோகர்
அறிஞர்பண்ணவர்சிறந்தவருந்தவர்முனிவராமே. (உ)

தாவில்சௌமியரேயோகர்திகம்பரர்சமணநீத்தோர்
மாவிரதியரேபாசுபதர்காளாமுகர்சைவத்தோர்
மேவுமால்சமயத்தோர்பேர்மிக்கபாகவதராகும்
சீவகர்பௌத்தரோடுதேரர்சாக்கியரேபுத்தர். (௩)

நீரினிற்பூவில்வானினினைத்துழியொதுங்குகின்ற
சாரணரெண்மராவார்சமணரிலிருத்தி * பெற்றோர்
பாரியசடைமுடித்தபடிவர்தாபதரேயென்ப
கூரியகும்பயோனிகுறுமுனியகத்தியன்பேர். (௪)

ஐயர்வேதியரேநூலோரறுதொழிலாளராய்ந்தோர்
மையில்பூசுரரேசெந்தீவளர்ப்பவர்தொழுகுலத்தோர்
பொய்யிலந்தணரேயாதிவருணர்முப்புரிநூன்மார்பர்
மெய்யர்விப்பிரரேவேதபாரகர்வேள்வியாளர். (௫)

இருபிறப்பாளர்பார்ப்பாரேற்றமேற்குலருயர்ந்தோர்
வருமறையவர்தம்பேராம்வன்னியேபிரமசாரி
அருமறைக்கொடியோன்வின்னூலாளன்பாரத்துவாசன்
தருநெறிவழாத்துரோணாசாரியன்பேர்மூன்றுமே. (௬)

* இருத்தி - சித்தி.

## பெயர்ப்பிரிவு.

இ - ள். அளிகள் எல்லாம் தேன் அவிழ்த்துச் செல்வழி பாடா நின்ற - வண்டுகளெல்லாம் தேனின்பொருட்டு அலர்த்திச் செவ்வழிப்பண்ணைப் பாடுகின்ற,—பூ நகைத்து இலங்கு கஞ்சப் பொகுட்டின் மீது ஒதுங்கு - மற்ற மலர்களெல்லாவற்றையும் இகழ்ந்து விளங்காநின்ற தாமரையினது கொட்டையின்மேல் நடந்த,—நான்முகக் கடவுள் பாதம் நாவினுல் நவிற்றி ஏத்தி - நான்கு முகங்களையுடைய அருகக்கடவுளது திருவடிகளை நாக்கினுற் சொல்லித் துதிசெய்து,—மானவர்க்கு இயன்ற பேரை வகுத்திடும் தொகுதி சொல்வாம் - மக்கட்பெயர்த்தொகுதியை (யாம்) கூறுவாம், எ - று.

முனிவர்பெயர் = துறவர், சார்பில்லோர், நீத்தோர், தவர், முனிவர், மெய்யர், அறவர், மாதவர், கடிந்தோர், அந்தணர், அடிகள், ஐயர், உறுவர், தாபதர், இருடிகள், உயர்ந்தோர், யோகர், அறிஞர், பண்ணவர், அருந்தவர். உ०.

சமணநீத்தோர்பெயர் = சௌமியர், யோகர், திகம்பரர். ௩.

சைவர்பெயர் = மாவிரதியர், பாசுபதர், காளாமுகர். ௩.

மால்சமயத்தோர்பெயர் = பாகவதர். க.

புத்தர்பெயர் = சீவகர், பௌத்தர், தேரர், சாக்கியர். ௪.

சமணரிற்சித்திபெற்றோராவார் = நீரிலும் பூதலத்திலும் வானிலும் இனைத்தவிடங்களிற் சஞ்சரிக்கின்ற சாரணரெண்மர்.

சடைமுடித்தபடிவர்பெயர் = தாபதர். க.

அகத்தியன்பெயர் = கும்பயோனி, குறுமுனி. உ.

மறையவர்பெயர் = ஐயர், வேதியர், நூலோர், அறுதொழிலாளர், ஆய்ந்தோர், பூசுரர், தீவளர்ப்பவர், தொழுகுலத்தோர், அந்தணர், ஆதிவருணர், முப்புரிநூன்மார்பர், மெய்யர், விப்பிரர், வேதபாரகர், வேள்வியாளர். க௫.

இருபிறப்பாளர், பார்ப்பார், மேற்குலர், உயர்ந்தோர். ௪. (ஆ கக.)

பிரமசாரியின்பெயர்—வன்னி. க.

துரோணாசாரியன்பெயர் = மறைக்கொடியோன், வின்னூலாளன், பாரத்துவாசன். ௩.

சான்றவர்மிக்கோர்நல்லோர்தகுதியோர்மேலோராய்ந்தோர்
ஆன்றவருலகமேதாவியறிஞர்கள்பேராசான்
ஊன்றுதேசிகனேயோசனுபாத்தியாயன்பணிக்கன்
என்றவாசாரியன்பேரேற்றமாணாக்கன்கற்போன். (௭)

கலைஞர்மேதையரேமூத்தோர்கற்றவரவைவிற்பன்னர்
தலைமையாங்கவிஞர்சங்கஞ்சாரதிசூரிசாடு
புலவர்பண்டிதர்பேர்போற்றிலறிஞரும்புதருமாகும்
கலைஞரேகவிவல்லோராங்கணக்காயரோத்துரைப்போர். (௮)

குரவனையன்சுவாமிகோமானேயடிகளத்தன்
பரவியவுரவோனீசன்பதியிறைமூத்தோன்பேராம்
குரிசிலோடண்ணலேந்தல்கூறியதோன்றல்செம்மல்
பெருமையிற்சிறந்தோனென்றுபேசினர்மாசினூலோர். (௯)

நாதனேகொழுநன்காந்தனுட்டியபதிகோனீசன்
ஆதிபனதிபன்செம்மலரன்பிரானாதிமன்னன்
எதிலெப்பொருட்குந்தானேயிறைபெயரிவைபன்மூன்றும்
ஓதுசீருலகமென்பதுயர்ந்தவர்க்கியம்புநாமம். (௧௦)

சவைசமவாயஞ்சங்கஞ்சமுதாயஞ்சமூகங்கோட்டி
அவைகுழாங்குழூவேகூட்டமடர்திரள்கணங்களீரா
றிவைதிரண்டோர்பேர்பண்ணையெய்தியவோரைபொய்தல்
அவைபெண்கள்கூட்டமாயங்கெடவரலதுவுமாமே. (௧௧)

புரவலன்பெருமானேந்தல்பூபாலன்வேந்தன்மன்னன்
நரபதிபொருநன்சக்கிரிநகைமுடிநிருபனோடு
குரிசில்பார்த்திவனேகோவேகொற்றவனிறைவனண்ணல்
அரசன்பேரிவையீரெட்டாந்தலைவன்காவலனுமாமே. (௧௨)

தருதெய்வவிரதன்கங்கைதனயன்சந்தனுமுன்பெற்றோன்
கருதியபிரமசாரிகாங்கேயன்வீட்டுமன்பேர்
பரவுபாரதரேமற்றைப்பௌரவரென்னுநாமங்
குருகுலவேந்தர்க்காகுங்கௌரவரென்றுங்கூறும். (௧௩)

தரமிகுகுவளைத்தாரான்யுதிட்டிரன்பொறையன்சாற்றும்
முரசுயர்கொடியோனீதிமொழியுநல்லறத்தின்சேயே
குருகுலப்பாண்டுமைந்தன்குந்திதன்புதல்வன்மெய்ம்மை
விரதமாக்கொள்வோன்மேன்மைத்தருமன்பேரெட்டுமாமே. (௧௪)



அறிஞர்பெயர்=சான்றவர், மிக்கோர், நல்லோர், தகுதியோர், மேலோர், ஆய்ந்தோர், ஆன்றவர், உலகம், மேதாவியர். ௯.
ஆசாரியன்பெயர்=ஆசான், தேசிகன், ஓசன், உபாத்தியாயன், பணிக்கன். ௫.
மாணாக்கன்பெயர்=கற்போன். ௧.

பண்டிதர்பெயர்=கலைஞர், மேதையர், மூத்தோர், கற்றவர், அவை, விற்பன்னர், கவிஞர், சங்கம், சாரதி, சூரி, சாடு, புலவர், அறிஞர், புதர். ௧௪.
கலைஞர்பெயர்=கவிவல்லோர். ௧.
ஓத்துரைப்போர்பெயர்=கணக்காயர். ௧.

மூத்தோன்பெயர்=குரவன், ஐயன், சுவாமி, கோமான், அடிகள், அத்தன், உரவோன், ஈசன், பதி, இறை. ௧௦.
பெருமையிற்சிறந்தோன்பெயர்=குரிசில், அண்ணல், ஏந்தல், தோன்றல், செம்மல். ௫.

எப்பொருட்குமிறையின்பெயர்=நாதன், கொழுநன், காந்தன், பதி, கோன், ஈசன், ஆதிபன், அதிபன், செம்மல், அரன், பிரான், ஆதி, மன்னன். ௧௩.
உயர்ந்தவர்பெயர்=உலகம். ௧.

திரண்டோர்பெயர்=சவை, சமவாயம், சங்கம், சமுதாயம், சமூகம், கோட்டி, அவை, குழாம், குழூ, கூட்டம், திரள், கணம். ௧௨.
பெண்கள் கூட்டத்தின்பெயர்=பண்ணை, ஓரை, பொய்தல், ஆயம், கெடவரல். ௫.

அரசன்பெயர்=புரவலன், பெருமான், ஏந்தல், பூபாலன், வேந்தன், மன்னன், நரபதி, பொருநன், சக்கிரி, நிருபன், குரிசில், பார்த்திவன், கோ, கொற்றவன், இறைவன், அண்ணல், தலைவன், காவலன். ௧௮.

வீட்டுமன்பெயர்=தெய்வவிரதன், கங்கைதனயன், சந்தனுமுன் பெற்றோன், பிரமசாரி, காங்கேயன். ௫.
குருகுலவேந்தர்பெயர்=பாரதர், பௌரவர், கௌரவர். ௩.

தருமன்பெயர்=குவளைத்தாரான், யுதிட்டிரன், பொறையன், முரசக்கொடியோன், அறத்தின்சேய், பாண்டுமைந்தன், குந்திபுதல்வன், மெய்ம்மைவிரதமாக்கொள்வோன். ௮.

மருவுகாந்தாரிமைந்தனந்தியாவர்த்தத்தாமன்
அரவுயர்த்தவன் வணங்காமுடியினரசர்மன்னன்
உரைகெழுசுயோதனன் கண்ணென் றுயில்லாதோனை
திருதராட்டிரன் றன்செல்வன்சீர்த் துரியோதனன்பேர். (கரு)

கடுங்கதிர்மதலைவீசுங்கவசகுண்டலனேகச்சை
நெடுங்கொடியினன் கானீனனீளங்கர்கோமான் கன்னன்
மடங்கலின்கொடியோன்வெய்யமாருதிவாயுமைந்தன்
இடிம்பைதன்கொழுநன்வீமன் கதாயுதனென் றுமேற்கும். (கசா)

குற்றமில்கிருட்டினன்பற்குனன் றனஞ்சயன்காண்டீவன்
வெற்றிசேர்சவ்வியசாசிவீபற்சுவிசயன்பார்த்தன்
சொற்றகேசவற்குத்தோழன்சுவேதவாகனன்கிரீடி
அற்றமிலருச்சுனற்கேயமைந்தபேர்பன்னொன்றாமே. (கஎ)

வில்லவன்கொங்கன் வஞ்சிவேந்தனேபோந்தின்றாரோன்
கொல்லிவெற்பன்குடக்கோக்குட்டுவன்குடகன்கோதை
மல்லல்சேருதியன்வானவரம்பனேமலயமானே
செல்லநீர்பொருநையாற்றோன்சேரலன்சேரன்பேரே. (கஅ)

நேரியன்சென்னிபொன்னித் துறைவனேநேரிவெற்பன்
ஆரின்மாலையனேகிள்ளியபயனேகோழிவேந்தன்
சீரியவளவன்மிக்கசெம்பியன்புலியுயர்த்தோன்
சூரியன்புனனாடன்கோச்சோழன்மாலென் றுஞ்சொல்லும். (ககூ)

செழியனேகூடற்கோமான்றென்னவன்வேம்பின்றாரோன்
வழுதியேகுமரிச்சேர்ப்பன்வைகையந்துறைவன்மாறன்
விழைவுறுபொதியவெற்பன்மீனவன்கைதவன்சொற்
பழையபஞ்சவனேவெய்யகௌரியன்பாண்டியன்பேர். (உ௦)

குறும்பரேயரட்டர்வேளிர்குறுநிலமன்னராகுஞ்
செறிந்திடும்புரோசரும்பேர்தேர்ச்சியிற்றுணைவரெண்ணர்
உறைந்திடுநூலோர்சூழ்வோருழையர்மந்திரரேநீதி
அறிந்திடுமுதுவர்முன்னோரமாத்தியரமைச்சர்நாமம். (உக)

பெருகியபொருநன்சேனாபதிபடைத்தலைவன்பேரே
வருநிமித்திகன்பேர்சாக்கைவள்ளுவனென் றுமாகுங்
கருதுகாவிதியரென்பகணக்கர்தம்வழியினுள்ளார்
பரவியபரிவாரப்பேர்பரியாளமென்னலாமே. (உஉ)



துரியோதனன்பெயர்=காந்தாரி மைந்தன், நந்தியாவர்த்தத்தாமன், அரவுயர்த்தவன், வணங்காமுடியினன், அரசர்மன்னன், சுயோதனன், திருதராட்டிரன் றன்செல்வன். எ.

கன்னன்பெயர்=கதிர்மதலை, கவசகுண்டலன், கச்சைக்கொடியினன், கானீனன், அங்கர்கோமான். ரு.

வீமன்பெயர்=மடங்கற்கொடியோன், மாருதி, வாயுமைந்தன், இடிம்பைகொழுநன், கதாயுதன். ரு.

அருச்சுனன்பெயர்=கிருட்டினன், பற்குனன், தனஞ்சயன், காண்டீவன், சவ்வியசாசி, வீபற்சு, விசயன், பார்த்தன், கேசவற்குத் தோழன், சுவேதவாகனன், கிரீடி. கக.

**சேரன்**பெயர்=வில்லவன், கொங்கன், வஞ்சிவேந்தன், போந்தின்றாரோன், கொல்லிவெற்பன், குடக்கோ, குட்டுவன், குடகன், கோதை, உதியன், வானவரம்பன், மலயமான், பொருநையாற்றோன், சேரலன். கச.

சோழன்பெயர்=நேரியன், சென்னி, பொன்னித்துறைவன், நேரிவெற்பன், ஆரின்மாலையன், கிள்ளி, அபயன், கோழிவேந்தன், வளவன், செம்பியன், புலியுயர்த்தோன், சூரியன், புனனாடன், மால். கச.

பாண்டியன்பெயர்=செழியன், கூடற்கோமான், தென்னவன், வேம்பின்றாரோன், வழுதி, குமரிச்சேர்ப்பன், வைகையந்துறைவன், மாறன், பொதியவெற்பன், மீனவன், கைதவன், பஞ்சவன், கௌரியன். கங.

குறுநிலமன்னர்பெயர்=குறும்பர், அரட்டர், வேளிர், புரோசர். ச.

அமைச்சர்பெயர்=தேர்ச்சித்துணைவர், எண்ணர், நூலோர், சூழ்வோர், உழையர், மந்திரர், முதுவர், முன்னோர், அமாத்தியர். கூ.

படைத்தலைவன்பெயர்=பொருநன், சேனாபதி. உ.

நிமித்திகன் * பெயர்=சாக்கை, வள்ளுவன். உ.

கணக்கர்வழியினுள்ளார்பெயர்=காவிதியர். க.

பரிவாரத்தின்பெயர்=பரியாளம். க.

* நிமித்திகன் - வருங்காரியஞ் சொல்வோன்.

மிக்கசெம்பியனேகாரிவிராடனேநிருதிதானும்
தக்கதுந்துமாரிதானுஞ்சகரனுநளனுந்தாமுன்
அக்குரன்சந்திமானோடந்திமான்சிசுபாலன்னே
வக்கிரன்கன்னன்சந்தனிடைவள்ளல்வகுத்தவாறே. (௨௩)

பாரியாயெழிலிநள்ளிபசுந்தொடைமலயன்பேகன்
ஓரியேகடையிலுற்றோருறுபொருடண்டாதீர்ந்தும்
வாரியிலிரந்தோர்க்கிட்டும்வளர்புகழ்துதிக்கவீந்தும்
பேரியல்வையமெண்ணப்பெற்றனர்முப்பாலாகும். (௨௪)

இளங்கோக்கண்மன்னர்பின் னரிப்பரெட்டியரேநாய்கர்
வளம்பெறுவணிகர்நல்லான்காவலருழவர்மற்றும்
விளங்கியபரதர்மேயவினைஞர்செட்டியர்பன்னொன்றும்
உளங்கெழுவைசியர்பேராமுறுசிரேட்டிகளுமாகும். (௨௫)

மண்மகள்புதல்வர்வாய்ந்தவளமையர்களமரென்றும்
உண்மைசால்சதுர்த்தர்மாறுவுழவர்மேழியர்வேளாளர்
திண்மைகொளேரின்வாழ்நர்காராளர்வினைஞர்செம்மை
நண்ணுபின்னவர்பன்னொன்றுநவின்றசூத்திரர்தம்பேரே. (௨௬)

வெம்பியபிடகராயுள்வேதியர்மருத்துவர்க்காம்
அம்புவிமற்றுமாமாத்திரரென்றுமவர்க்கேகூறும்
கும்பகாரன்குலாலன்குறித்தவேட்கோவன்சக்கிரி
நம்புமட்பகைவனெந்துநாட்டியகுயவனுமம். (௨௭)

சிற்பரோவியரேமோகர்சித்திரகாரர்நாமஞ்
சிற்பியர்துவட்டாவோவர்தபதியர்சிறப்பின்மிக்க
அற்புதர்யவனர்கொல்லரக்கசாலையர்புனைந்தோர்
கற்பில்கம்மியரேகண்ணுள்வினைஞர்கண்ணாளர்நாமம். (௨௮)

கருமரேமனுவர்கொல்லர்காட்டியநாமமாகும்
மரவினையாளன்மற்றைமயனொடுதபதிதச்சன்
புரியும்பொன்செய்யுங்கொல்லர்பொன்வினைமாக்கட்டட்டார்
உரைகெழுசொன்னகாரரக்கசாலையருமோதும். (௨௯)

தருமுறைதெரிந்தசிற்பாசாரியர்மண்ணீட்டாளர்
பொருளினையுருக்குந்தட்டார்பொன்செய்யும்புலவரென்ப
பெருகியபணித்தட்டார்தம்பேர்கலந்தருநர்தாமே
வருமுறைமுத்தங்கோப்பார்மணிகுயிற்றுநரென்றூமே. (௩௦)



வரைவின்றி யாவர்க்குங்கொடுக்கு முதல்வள்ளலெழுவர்பெயர்= செம்பியன், காரி, விராடன், நிருதி, துந்துமாரி, சகரன், நளன். ௭.

இரப்போர்க்குக் கொடுக்கு மிடைவள்ளலெழுவர்பெயர்=அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், வக்கிரன், கன்னன், சந்தன். ௭.

புகழ்வோர்க்குக் கொடுக்குங் கடைவள்ளலெழுவர்பெயர்=பாரி, ஆய், எழிலி, நள்ளி, மலயன், பேகன், ஓரி. ௭.

வைசியர்பெயர்=இளங்கோக்கள், மன்னர்பின்னர், இப்பர், எட்டியர், நாய்கர், வணிகர், ஆன்காவலர், உழவர், பரதர், வினைஞர், செட்டியர், சிரேட்டிகள். ௧௨.

சூத்திரர்பெயர்=மண்மகள்புதல்வர், வளமையர், களமர், சதுர்த்தர், உழவர், மேழியர், வேளாளர், ஏரின்வாழ்நர், காராளர், வினைஞர், பின்னவர். ௧௧.

மருத்துவர் * பெயர்=பிடகர், ஆயுள்வேதியர், மாமாத்திரர். ௩.
குயவன்பெயர்=கும்பகாரன், குலாலன், வேட்கோவன், சக்கிரி, மட்பகைவன். ௫.

சித்திரகாரர்பெயர்=சிற்பர், ஓவியர், மோகர். ௩.
கண்ணாளர்பெயர்=சிற்பியர், துவட்டா, ஓவர், தபதியர், அற்புதர், யவனர், கொல்லர், அக்கசாலையர், புனைந்தோர், கம்மியர், கண்ணுள்வினைஞர். ௧௧.

கொல்லர்பெயர்=கருமர், மனுவர். ௨.
தச்சன்பெயர்=மரவினையாளன், மயன், தபதி. ௩.
தட்டார்பெயர்=பொன்செய்யுங்கொல்லர், பொன்வினைமாக்கள், சொன்னகாரர், அக்கசாலையர். ௪.

சிற்பாசாரியர்பெயர்=மண்ணீட்டாளர். ௧.
பொருளினையுருக்குந்தட்டார்பெயர்=பொன்செய்யும்புலவர். ௧.
பணித்தட்டார்பெயர்=கலந்தருநர். ௧.
முத்தங்கோப்பார்பெயர்=மணிகுயிற்றுநர் ௧.

* மருத்துவர் - வைத்தியர்.

கலத்தைச்செய்கஞ்சகாரர்கன்னுவர்கன்னாராகும்
மிலைச்சரேயநாரியர்க்காமிலேச்சரும்விதித்தபேரே
துலைப்படும்யவனரென்பசோனகருவச்சரும்பேர்
மலைப்பிலாவுமணருப்புவாணிகர்காணுங்காலே. (௩௧)

இருந்தகாழியரேதூசரீரங்கோலியரேவண்ணார்
வரும்பெருமஞ்சிகன்சீமங்கலிமாசுதீர்த்துத்
திருந்துமேனாதிமூன்றுஞ்சிறந்தநாவிதன்பேராகும்
பொருந்தரேவேதகாரர்போற்றுங்காருகர்நெய்வார்பேர். (௩௨)

பொல்லரேதுன்னரென்பபுகன்றதோற்றுன்னர்செம்மார்
உல்லியர்கூவனூலோரொளிவளைபோழ்நர்தாமே
மெல்லியசங்கறுப்போர்சூனரூன்விற்போரென்ப
சொல்லியபறம்பர்தாமேதோல்வினைமாக்கணாமம். (௩௩)

கொலைஞரேகளைஞர்வங்கர்குணுங்கர்மாதங்கரோடு
புலைஞரேயிழிஞரேழ்பேர்பொருந்துசண்டாளர்நாமம்
உலவுசென்னியரேபண்டரோவர்வந்தித்துநிற்போர்
பலர்புகழ்மதங்கர்சூதர்பண்ணவர்பாணராமே. (௩௪)

சக்கிரிநந்திசெக்கான்றன்பெயராகுமென்ப
தொக்ககள்விற்போர்நாமஞ்சௌண்டிகர்துவசரோடு
தக்கதோர்பிழியர்மற்றும்படுவருஞ்சாற்றுமன்றே
மிக்கமீகாமனாமமீகான்மாலுமிநீகானும். (௩௫)

மாவலர்வதுவரோடுவாதுவர்பண்ணுவார்பேர்
சோர்விலாப்பாகரோடாதோரணர்யானைப்பாகர்
காவலர்மெய்காப்பாளர்கஞ்சுகியென்றுங்காட்டும்
மேவுகாரோடரென்பவுறைகாரர்விதித்தபேரே. (௩௬)

தூயதேர்ப்பாகன்சூதன்வலவன்சாரதியுஞ்சொல்லும்
வேயர்சாரணரேயொற்றர்விதித்தபேர்மடையர்நாமம்
ஏயவாலுவரேமிக்ககூலியரென்றுநூலை
ஆயும்பானசிகரென்றும்பாசகரென்றுமாமே. (௩௭)

நாடகர்கண்ணுளாளர்நடர்வயிரியர்நிருத்தர்
கோடியர்பொருநர்கூத்தரவிநயரென்றுங்கூறும்
நீடியவாயிலோரேநெடுந்தமிழ்க்கூத்தரென்பர்
ஆடும்வேழம்பரென்பகழாயருக்கடைத்தநாமம். (௩௮)



கன்னார்பெயர்=கஞ்சகாரர், கன்னுவர். ௨.
அநாரியர்பெயர்=மிலைச்சர், மிலேச்சர். ௨.
சோனகர்பெயர்=யவனர், உவச்சர். ௨.
உப்புவாணிகர்பெயர்=உமணர். ௧.

வண்ணார்பெயர்=காழியர், தூசர், ஈரங்கோலியர். ௩.
நாவிதன்பெயர்=பெருமஞ்சிகன், சீமங்கலி, ஏனாதி. ௩.
வேதகாரர்பெயர் *=பொருந்தர். ௧.
நெய்வார்பெயர்=காருகர். ௧.

துன்னர்†பெயர்=பொல்லர். ௧.
தோற்றுன்னர்பெயர்=செம்மார். ௧.
கூவனூலோர்‡பெயர்=உல்லியர். ௧. சங்கறுப்போர்பெயர்=வளைபோழ்நர். ௧. ஊன்விற்போர்பெயர்=சூனர். ௧.
தோல்வினைமாக்கள்பெயர்=பறம்பர். ௧.

சண்டாளர்பெயர்=கொலைஞர், களைஞர், வங்கர், குணுங்கர், மாதங்கர், புலைஞர், இழிஞர். ௭.
பாணர்பெயர்=சென்னியர், பண்டர், ஓவர், வந்தித்துநிற்போர், மதங்கர், சூதர், பண்ணவர். ௭.

செக்கான்பெயர்=சக்கிரி, நந்தி. ௨.
கள்விற்போர்பெயர்=சௌண்டிகர், துவசர், பிழியர், படுவர். ௪.
மீகாமன்பெயர்=மீகான், மாலுமி, நீகான். ௩.

பண்ணுவார் § பெயர்=மாவலர், வதுவர், வாதுவர். ௩.
யானைப்பாகர்பெயர்=பாகர், ஆதோரணர். ௨.
மெய்காப்பாளர்பெயர்=காவலர், கஞ்சுகி. ௨.
உறைகாரர்பெயர்=காரோடர். ௧.

தேர்ப்பாகன்பெயர்=சூதன், வலவன், சாரதி. ௩.
ஒற்றர்பெயர்=வேயர், சாரணர். ௨.
மடையர்பெயர்=வாலுவர் [வல்லவர்,] கூவியர், பானசிகர், பாசகர். ௪.

கூத்தர்பெயர்=நாடகர், கண்ணுளாளர், நடர், வயிரியர், நிருத்தர், கோடியர், பொருநர், அவிநயர். ௮.
தமிழ்க்கூத்தர்பெயர்=வாயிலோர். ௧.
கழாயர் $ பெயர்=வேழம்பர். ௧.

---

* வேதகாரர் - கூடைமுதலியவைபின்னுவோர்.
† துன்னர் - தையற்காரர். ‡ கூவனூல் - கீழ்நீர்க்குறியறிசாத்திரம்.
§ பண்ணுவார் - குதிரைப்பாகர். $ கழாயர் - கழைக்கூத்தர்.

குயிலுவர்நரம்பிணையகருவியைக்கொளுத்துமாக்கள்
இயலுந்தோற்கருவியாளரியவராம்வெறியாட்டாளன்
சயமுறுதேவராளன்சாலினிதேவராட்டி
அயலவர்நொதுமலாளர்வம்பலரென்றுமாமே. (௩௯)

புதியவர்விருந்தோரென்பவதிதிவம்பலரும்போற்றும்
பதிகனேவழிச்செல்வோனும்வியவனேயேவுவான்பேர்
முதுவர்மூதுணர்ந்தோர்நாமங்கிழவரேயுரியோர்பேராம்
அதிகமாங்குறிக்கொள்வோர்பாராயணரென்பதாமே. (௪௰)

வித்தகர்வினையுரைப்போர்விதியுளிவழியுரைப்போர்
உத்தமமானபண்புற்றுரைப்பவர்தூதராகும்
தொத்தொடுகிணைகர்தாசர்தொழும்பொடுதொறுவிருத்தி
அத்தகுதொண்டுசேடராளிவையடிமையாமே. (௪௧)

சிலதனேநண்பன்பாங்கன்சேடனேதுணைவன்றோழன்
எலுவனுமாமிவன்முன்னிலைப்பெயரேடாவென்ப
சிலதியேசகியேபாங்கிசேடியேயிகுளைதோழி
நலமுறுமுன்னிலைப்பேர்நாடின்மற்றேடியெல்லா. (௪௨)

அந்தகன்சிதடனென்பகுருடனுங்கோணல்கூன்பேர்
சிந்துவாமனமேகுஞ்சங்குறள்வதிர்செவிடென்றாகும்
முந்தியமுடமேபங்குகுணியூமைமூகைமூங்கை
தந்தபெண்டகனேபேடிநபுஞ்சகனலியேசண்டன். (௪௩)

காதகன்சாருகன்றான்கடுங்கொலையாளிநாமம்
வேதனைசெய்வோன்பேரேயருந்துதன்விளம்பலாகும்
பீதனேசகிதனோடுபீருவுமச்சமுள்ளோன்
ஓதியசவனன்வேகியுற்றவஞ்சகனிசாதன். (௪௪)

படிறர்பல்லவர்பரத்தர்பகரிடங்கழியரோடு
விடருங்காமுகருந்தூர்த்தர்மிக்கநாகரிகரென்ப
கடிநகர்ப்பதிவாழ்கின்றசதுரர்காமுகரென்றும்பேர்
அடைவுளகிராமமுற்றோன்கிராமியனாகுமன்றே. (௪௫)



நரப்புக்கருவியாளர்பெயர்=குயிலுவர். ௧.
தோற்கருவியாளர்பெயர்=இயவர். ௧.
வெறியாட்டாளன்பெயர்=தேவராளன். ௧.
தேவராட்டியின்பெயர்=சாலினி. ௧.
அயலவர்பெயர்=நொதுமலாளர், வம்பலர். ௨.

புதியவர்பெயர்=விருந்தோர், அதிதி, வம்பலர். ௩.
வழிச்செல்வோன்பெயர்=பதிகன். ௧.
ஏவுவான்பெயர்=வியவன். ௧.
மூதுணர்ந்தோர்பெயர்=முதுவர். ௧.
உரியோர்பெயர்=கிழவர். ௧.
குறிக்கொள்வோர்பெயர்=பாராயணர். ௧.

தூதர்பெயர்=வித்தகர், வினையுரைப்போர், வழியுரைப்போர், பண்புரைப்பவர். ௪.
அடிமையின்பெயர்=தொத்து, கிணைகர், தாசர், தொழும்பு, தொறு, விருத்தி, தொண்டு, சேடர், ஆள். ௯.

தோழன்பெயர்=சிலதன், நண்பன், பாங்கன், சேடன், துணைவன், எலுவன். ௬.
தோழன்முன்னிலைப்பெயர்=ஏடா. ௧.
தோழிபெயர்=சிலதி, சகி, பாங்கி, சேடி, இகுளை. ௫.
தோழிமுன்னிலைப்பெயர்=ஏடி, எல்லா. ௨.

குருடன்பெயர்=அந்தகன், சிதடன். ௨.
கூனின்பெயர்=கோணல். ௧.
குறளின்பெயர்=சிந்து, வாமனம், குஞ்சம். ௩.
செவிட்டின்பெயர்=வதிர். ௧. முடத்தின்பெயர்=பங்கு, குணி. ௨.
ஊமையின்பெயர்=மூகை, மூங்கை. ௨.
அலியின்பெயர்=பெண்டகன், பேடி, நபுஞ்சகன், சண்டன். ௪.

கொலையாளியின்பெயர்=காதகன், சாருகன். ௨.
வேதனைசெய்வோன்பெயர்=அருந்துதன். ௧.
அச்சமுள்ளோன்பெயர்=பீதன், சகிதன், பீரு. ௩.
வேகியின்பெயர்=சவனன். ௧. வஞ்சகன்பெயர்=நிசாதன். ௧.

தூர்த்தர்பெயர்=படிறர், பல்லவர், பரத்தர், இடங்கழியர், விடர், காமுகர். ௭.
நாகரிகர்பெயர்=சதுரர், காமுகர். ௨.
கிராமமுற்றோன்பெயர்=கிராமியன். ௧.

வலவைவல்லுநனேவல்லோன்மாட்டார்பேர்வல்லாரென்ப
குலமுளோன்குலீனனாகுங்கரியவன்குறித்தகள்வன்
உலவுநோயுற்றொழிந்தோனுல்லாகன்பதாதிகாலாள்
அலைவில்சந்தத்தனென்பதாயத்தமானேன்பேரே. (௪௬)

மந்தனேகூர்மையில்லோனக்கனிர்வாணிநாமம்
வெந்திறலியவுளென்பமிகுபுகழாளன்பேரே
உந்தியவருளோனேகாருண்ணியனென்பரெட்டர்
வந்திகள்கவிகள்கற்றோர்வண்டரேகடிகைமாக்கள். (௪௭)

புரவலனீகையாளன்போற்றும்வேளாளன்றியாகி
உரைகெழுவேள்வியாளனுபகாரிகொடையுளோனும்
வரைவறக்கொடுத்தளிப்போன்வள்ளியோனென்றுகூறும்
இரவலன்பரிசிலாளன்யாசகன்றீனனேற்போன். (௪௮)

கரவடர்சோரர்தேனர்பட்டிகர்புரையோர்கள்வர்
திருடராந்தரித்திரன்பேரகிஞ்சனன்றீனன்பேதை
மருவுநல்கூர்ந்தோனில்லோன்வறியனாதுலனேயேழை
விரவியவுறுகணாளனிலம்பாட்டோன்மிடியனாமே. (௪௯)

வயவனேதிறலோன்மற்றைவண்டனேமிண்டன்மள்ளன்
வியவனேவிறலோன்மீளிவீரனேதிண்ணியன்பேர்
நயமில்கூளியரேருளர்நாட்டும்வாளுழவர்மள்ளர்
சயமிகுமறவர்தானைத்தலைவராம்படருமாமே. (௫௦)

அரிகளேசெறுநர்சேராரமாருள்ளாரேநள்ளார்
மருவலர்தெவ்வர்மாணார்மாற்றலர்மன்னாரொன்னார்
தரியலரொட்டார்வட்கார்சார்பிலார்பற்றார்செற்றார்
பரரொடுகேளாரொல்லார்பகைவர்பேரெழுமூன்றாமே. (௫௧)

ஒல்லுநர்தொடர்ந்தார்சேர்ந்தாரொட்டுநர்பெட்டார்வேட்டார்
புல்லுநர்பசைந்தார்மித்திரர்புரிந்தாரார்வலர்விழைந்தார்
நல்லவர்காதலித்தார்நள்ளுநர்நயந்தார்கூட்டம்
மெல்லவொன்றுநர்மூவாறுமேவினர்நாமமாமே. (௫௨)

உற்றவரிகுளைநட்டோருறவொக்கல்கிளையேசார்ந்தோர்
பற்றினர்சிறந்தோர்நட்புப்பந்தமேபரிசனங்கேள்
குற்றமினண்புகூளிகுடும்பமேகடும்புநள்ளி
சுற்றமூவாறுபேருஞ்சூழ்ந்தபாசனமுஞ்சொல்லும். (௫௩)



வல்லோன்பெயர் = வலுவை, வல்லுநன். உ.
மாட்டார்பெயர் = வல்லார். க.
குலமுளோன்பெயர் = குலீனன். க. கரியவன்பெயர் = கள்வன். க.
நோயுற்றொழிந்தோன்பெயர் = உல்லாகன். க.
காலாளின்பெயர் = பதாதி. க.
ஆயத்தமானோன்பெயர் = சந்நத்தன். க.

கூர்மையில்லோன்பெயர் = மந்தன். க.
நிர்வாணியின்பெயர் = நக்கன். க.
மிகுபுகழாளன்பெயர் = இயவுள். க.
அருளோன் பெயர் = காருண்ணியன். க. கடிகைமாக்கள் * பெயர் = எட்டர், வந்திகள், கவிகள், கற்றோர், வண்டர். ரு.

கொடையுளோன்பெயர் = புரவலன், ஈகையாளன், வேளாளன், தியாகி, வேள்வியாளன், உபகாரி. ௬.
வரைவறக்கொடுத்தளிப்போன்பெயர் = வள்ளியோன். க.
ஏற்போன்பெயர் = இரவலன், பரிசிலாளன், யாசகன், தீனன். ச.

திருடர்பெயர் = கரவடர், சோரர், தேனர், பட்டிகர், புரையோர் கள்வர். ௬. தரித்திரன்பெயர் = அகிஞ்சனன், தீனன், பேதை, நல்கூர்ந்தோன், இல்லோன், வறியன், ஆதுலன், ஏழை, உறுகணாளன், இலம்பாட்டோன், மிடியன். கக.

திண்ணியன்பெயர் = வயவன், திறலோன், வண்டன், மிண்டன், மள்ளன், வியவன், விறலோன், மீளி, வீரன். கூ.
தானைத்தலைவர்பெயர் = கூளியர், ஏருளர், வாளுழவர், மள்ளர், மறவர், படர். ௬.

பகைவர்பெயர் = அரிகள், செறுநர், சேரார், அமரார், உள்ளார், நள்ளார், மருவலர், தெவ்வர், மாணார், மாற்றலர், மன்னார், ஒன்னார், தரியலர், ஒட்டார், வட்கார், சார்பிலார், பற்றார், செற்றார், பரர், கேளார், ஒல்லார். உக.

மேவினர்பெயர் = ஒல்லுநர், தொடர்ந்தார், சேர்ந்தார், ஒட்டுநர், பெட்டார், வேட்டார், புல்லுநர், பசைந்தார், மித்திரர். புரிந்தார், ஆர்வலர், விழைந்தார், நல்லவர், காதலித்தார், நள்ளுநர், நயந்தார், கூட்டம், ஒன்றுநர். கஅ.

சுற்றத்தின்பெயர் = உற்றவர், இகுளை, நட்டோர், உறவு, ஒக்கல், கிளை, சார்ந்தோர், பற்றினர், சிறந்தோர், நட்பு, பந்தம், பரிசனம், கேள், நண்பு, கூளி, குடும்பம், கடும்பு, நள்ளி, பாசனம். ககூ.

* கடிகைமாக்கள் - மங்கலபாடகர்.

பொறியிலார்கயவர்நீசர்புள்ளுவர்புல்லர்தீயோர்
சிறியசிந்தையர்கனிட்டர்தீக்குணர்தீம்பர்தேரார்
முறையிலார்முசுண்டர்மூர்க்கர்முசுடர்பல்லவரேகையர்
மறைவிலாக்கலர்மூவாறுமன்னுபூரியருங்கீழோர். (௫௪)

முழுமகன்சிதடன்பேதைமூடனேமண்ணையஞ்ஞை
இழுதையேமடனேயாதனேழையேயறிவிலான்பேர்
தொழுவர்கம்மியரேமற்றைத்தொழில்செய்வோர்நாமமாகும்
வழுவிலாவாயிலாளர்வாயில்காப்போர்தம்பேரே. (௫௫)

அரிவையங்கனைமடந்தையாடவளாட்டி.மாயோள்
சுரிகுழன்மகடூஉக்காந்தைசுந்தரிவனிதைமாது
தெரிவைமானினியேநல்லாள்சிறுமியேதையனாரி
பிரியைகாரிகையணங்குபிணாப்பெண்டுபேதைபெண்பேர். (௫௬)

ஆடவன்மைந்தன்காளையாடூஉவேமகன்புமானே
நீடியகுமரனேமுனிருமித்தபுருடனுமம்
நாடியநம்பியோடுநங்கையென்றிரண்டாண்பெண்ணைத்
தேடியகவிகளெல்லாஞ்சிறப்பிக்குநாமமாமே. (௫௭)

பேதையேபெதும்பைமங்கைபெருகியமடந்தையோடு
தீதிலாவரிவைமற்றைத்தெரிவைபேரிளம்பெண்ணென்ப
ஏதமில்பருவமாண்டேழெய்துபன்னொன்றுபன்மூன்
றேழுபத்தொன்பானையைந்துடன்முப்பத்தொன்றெண்ணைந்தே.

முன்னியகைம்மைபெற்றோன்மொழிந்தகோளகனேயாகும்
பின்னைவேற்றோற்குப்பெற்றபிள்ளைகுண்டகனேயென்ப
பன்னிவாழ்க்கைப்படாமுன்படர்ந்தொருகளவினாலே
கன்னியேபெற்றபிள்ளைகானீனனென்றேயோதும். (௫௯)

உயர்ந்தநாற்குலத்திலாண்பெண்ணுயர்பிழிவிரண்டுங்கூடி
இயங்கியபிள்ளைப்பேரேயநுலோமனென்றுகூறும்
நயந்தவப்பெண்ணுமாணுநண்ணியவுயர்வுதாழ்வில்
வியந்திடும்பிள்ளைப்பேரேவிறற்பிரதிலோமனாமே. (௬௦)

பெருத்தவவ்வநுலோமன்னேபிரதிலோமனென்றபேரில்
உரைத்தவாண்பெண்ணில்வந்தேயுற்றவனந்தராளன்
நிரைத்தவர்மாறிக்கூடிப்பிறந்தவனீண்டபேரே
விரித்ததுவினவிக்கேட்கில்விராத்தியனென்னுநூலே. (௬௧)



கீழோர்பெயர் = பொறியிலார், கயவர், நீசர், புள்ளுவர், புல்லர், தீயோர், சிறியசிந்தையர், கனிட்டர், தீக்குணர், தீம்பர், தேரார், முறையிலார், முசுண்டர், மூர்க்கர், முசுடர், பல்லவர், கையர், கலர், பூரியர். ௧௯.

அறிவிலான்பெயர் = முழுமகன், சிதடன், பேதை, மூடன், மண்ணை, அஞ்ஞை, இழுதை, மடன், ஆதன், ஏழை. ௧௦.
தொழில்செய்வோர்பெயர் = தொழுவர், கம்மியர். ௨.
வாயில்காப்போர்பெயர் = வாயிலாளர். ௧.

பெண்பெயர் = அரிவை, அங்கனை, மடந்தை, ஆடவள், ஆட்டி, மாயோள், சுரிகுழல், மகடூஉ, காந்தை, சுந்தரி, வனிதை, மாது, தெரிவை, மானினி, நல்லாள், சிறுமி, தையல், நாரி, பிரியை, காரிகை, அணங்கு, பிணா, பெண்டு, பேதை. ௨௪.

புருடன்பெயர் = ஆடவன், மைந்தன், காளை, ஆடூஉ, மகன், புமான், குமரன். ௭.
ஆணைச்சிறப்பிக்கும்பெயர் = நம்பி. ௧.
பெண்ணைச்சிறப்பிக்கும்பெயர் = நங்கை. ௧.

பெண்பாற்குரியபருவமாவன = பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண், முறையே, இவற்றினாண்டாவன, ௭, ௧௧, ௧௩, ௧௯, ௨௫, ௩௧, ௪௦.

கைம்மைபெற்றோன்பெயர் = கோளகன். ௧.
வேற்றோற்குப்பெற்றபிள்ளையின்பெயர் = குண்டகன். ௧.
கன்னிபெற்றபிள்ளையின்பெயர் = கானீனன். ௧.

நாற்குலத்துள் உயர்குலத்தாணுமிழிகுலப்பெண்ணுங்கூடிப்பெற்ற பிள்ளையின் பெயர் = அநுலோமன். ௧.
உயர்குலப்பெண்ணு மிழிகுலத்தாணுங் கூடிப்பெற்றபிள்ளையின் பெயர் = பிரதிலோமன். ௧.

அநுலோமத்தாணும்பிரதிலோமப்பெண்ணுங் கூடிப்பெற்றபிள்ளையின்பெயர் = அந்தராளன். ௧.
அநுலோமப்பெண்ணும்பிரதிலோமத்தாணுங் கூடிப்பெற்ற பிள்ளையின்பெயர் = விரா[illegible]தியன். ௧.

முந்தியகுரத்தியத்தைமுதல்விகோமாட்டியாசாள்
தந்திடுமிறைவியையைசாமியேதலைவிநாமம்
நந்தியபிண்டிவாமனன்னெறிவழாதுநோற்பாள்
நந்தியேயவ்வையம்மைகன்னியேகௌந்தியென்ப. (கூஉ)

கைம்மையேகைனிபூண்டகலன்கழிமடந்தையேங்கி
விம்மியவிதவைநான்கேயமங்கலைவிளங்குநாமம்
மைம்மையேவந்தியென்பமலடிக்குவகுததபேராம்
செம்மையாங்கோலஞ்செய்வாடிகழ்வண்ணமகளேயென்ப. (கூ௩)

பரத்தையேகணிகைசூளைபயனிலாள்வரைவின்மாது
பொருட்பெண்டுபெறுவகொள்வாள்விலைமகள்போற்றும்வேசை
விருத்தையேமூத்தாளென்பமின்னிடைக்குமரிகன்னி
நிருத்தஞ்செய்மாதுகூத்திநாடகக்கணிகைநீள்பேர். (கூச)

குட்டினிதொழுத்தைகூளிகுறளியேபடுவிகுண்டம்
துட்டையேயசதியாகுஞ்சூழ்ந்திடும்யுவதியேயீ
ரெட்டாண்டிற்பெண்மதங்கியெய்ந்தியவிறலியென்ப
திட்டமாம்பாடுவிச்சிதம்பதியிரட்டையாண்பெண். (கூரு)

குறவர்கானவரேமள்ளர்குன்றவர்புனவரோடும்
இறவுளர்குறிஞ்சிதன்னிலின்புறுமாக்கள்பேரே
குறியறிகுறத்திமற்றைக்கொடிச்சிபெண்ணிறைவன்றானே
திறன்மிகுமலையன்வெற்பன்சிலம்பன்கானகநாடன்பேர். (கூசு)

கோளுறுமறவரோடுமெயினரேகுறித்தபாலை
யாளர்புள்ளுவரிறுக்கரனைத்துமாமவரோடாடும்
வாள்விழியெயிற்றிவன்கட்பிணாவொடுமறத்திபெண்பேர்
மீளியேகாளையென்பவிடலையுந்தலைவனுமம். (கூஎ)

குறவர்மாகுலவர்வெய்யகுன்றவர்கிராதர்மற்றை
மறவர்கானவரேதீயவனசரர்சவரர்சொல்லும்
முறையழிகொலைஞர்பாவமூர்த்திகண்முருடர்சற்றும்
பொறையிலாரெயினர்வேடர்புளிஞரேழ்பொதுப்பேர். (கூஅ)

முல்லையர்பொதுவரண்டர்முந்துகோவிந்தரேயான்
வல்லவர்குடவர்பாலர்மதித்தகோவலர்கோபாலர்
சொல்லியவமுதராயர்தொறுவரேயிடையரென்ப
முல்லையின்மாக்கள்பேர்தாமுந்நான்குமொன்றுமாமே. (கூகூ)



தலைவியின்பெயர்=குரத்தி, அத்தை, முதல்வி, கோமாட்டி, ஆசாள், இறைவி, ஐயை, சாமி. அ.
நோற்பாள்பெயர்=நந்தி, ஔவை, அம்மை, கன்னி, கௌந்தி. ரு.

அமங்கலையின்பெயர்=கைம்மை, கைனி, கலன்கழிமடந்தை, விதவை. ச.
மலடியின்பெயர்=மைம்மை, வந்தி. உ.
கோலஞ்செய்வாள்பெயர்=வண்ணமகள். க.

வேசையின்பெயர்=பரத்தை, கணிகை, சூளை, பயனிலாள், வரைவின்மாது, பொருட்பெண்டு, பெறுவகொள்வாள், விலைமகள். அ.
மூத்தாள்பெயர்=விருத்தை. க. குமரியின்பெயர்—கன்னி. க.
நாடகக்கணிகைபெயர்=நிருத்தமாது, கூத்தி. உ.

அசதியின்பெயர்=குட்டினி, தொழுத்தை, கூளி, குறளி, படுவி, குண்டம், துட்டை. எ.
பதினாறாண்டிற்பெண்பெயர்=யுவதி. க.
பாடுவிச்சிபெயர்=மதங்கி, விறலி. உ.
தம்பதியின்பெயர்=இரட்டை, ஆண்பெண். உ.

குறிஞ்சிநிலமாக்கள்பெயர்=குறவர், கானவர், மள்ளர், குன்றவர், புனவர், இறவுளர். சு.
குறிஞ்சிநிலப்பெண்பெயர்=குறத்தி, கொடிச்சி. உ.
குறிஞ்சிநிலத்திறைவன்பெயர்=மலையன், வெற்பன், சிலம்பன், கானகநாடன். ச.

பாலைநிலமாக்கள்பெயர்=மறவர், எயினர், புள்ளுவர், இறுக்கர். ச.
பாலைநிலப்பெண்பெயர்=எயிற்றி, வன்கட்பிணா, மறத்தி. ௩.
பாலைநிலத்தலைவன்பெயர்=மீளி, காளை, விடலை. ௩.

புளிஞர்பொதுப்பெயர்=குறவர், மாகுலவர், குன்றவர், கிராதர், மறவர், கானவர், வனசரர், சவரர், கொலைஞர், பாவமூர்த்திகள், முருடர், பொறையிலார், எயினர், வேடர். கச.

முல்லைநிலமாக்கள்பெயர்=முல்லையர், பொதுவர், அண்டர், கோவிந்தர், ஆன்வல்லவர், குடவர், பாலர், கோவலர், கோபாலர், அமுதர், ஆயர், தொறுவர், இடையர். க௩.

தொறுவியேபொதுவியாய்ச்சிசூழ்ந்திடுங்குடத்திமற்றை
நிறைபுணரிடைச்சிமுல்லைநிலத்திற்பெண்ணுமமைந்தாம்
குறைவறுகானநாடன்குறும்பொறைநாடனோடு
முறைசெயுமண்ணறோன்றன்முல்லையிற்றலைவனுமம். (௭௦)

களமரேதொழுவர்மள்ளர்கம்பளருழவரோடு
விளைஞரேகடைஞரேழ்பேர்விளைவுறுமருதமாக்கள்
அளவறுகடைச்சிமற்றையாற்றுக்காலாட்டிபெண்பேர்
உளமகிழ்மகிழ்நனூரன்கிழவனுந்தலைவனுமே. (௭௧)

பரதவர்நுளையரோடுபஃறியர்திமிலர்சாலர்
கருதியகடலர்கோலக்கழியரேநெய்தன்மாக்கள்
விரவியபரத்திமேவுநுளைச்சியேயளத்திநீண்டு
பெருகியகடற்பிணாவேநெய்தலிற்பெண்ணினுமம். (௭௨)

கொண்கனேதுறைவனோடுகுறித்தமெல்லம்புலம்பன்
தண்கடற்சேர்ப்பனெய்தற்றலைவனைச்சாற்றுநாமம்
பண்படுமளவர்தாமேபகர்ந்திடுமந்நிலத்தில்
உண்படுமுப்பமைப்போருமணரும்விதித்தபேரே. (௭௩)

அணியினிற்பண்பினுற்றவுவமையின்மகடூஉவாடூஉத்
தணிவின்முன்னிலைப்பேர்வேறுசாற்றியதோற்றமாக
உணருமைந்திணைப்பாற்பட்டகருப்பொருளுரைத்தாமிப்பாற்
கணிதமின்முறைப்பேர்காட்டிக்காயத்தின்பேருஞ்சொல்வாம். ()

தாதைதன்றாதையேமூதாதையேபாட்டனுமம்
பேதமொன்றில்லாமற்றும்பிதாமகனென்றுமாகும்
தாதையேயப்பனையன்றந்தையேயம்மானத்தன்
ஏதமில்பிதாவென்றேழுமீன்றவனுமமாமே. (௭௫)

அவ்வையம்மனைபயந்தாளம்மையேயாயேயன்னை
எவ்வமிலாயிமோய்தாயீன்றவளுமமொன்பான்
செவ்விதின்வளர்த்ததாதிசெவிலிகோடாய்கைத்தாயாம்
தவ்வைமுன்பிறந்தாள்சேட்டைதங்கையேபின்னைதானே. (௭௬)

ஞாதியர்தாயத்தாரேநாட்டுந்தங்குடியிற்சுற்றம்
மாதுலனம்மான்மாமன்சகலனோர்குடியிற்கொண்டோன்
மூதுணர்சேட்டன்றம்முன்முன்னவனண்ணன்மூத்தோன்
பேதமிலிளவல்பின்னேயநுசனேகனிட்டன்பின்னோன் (௭௭)



முல்லைநிலப்பெண்பெயர்=தொறுவி, பொதுவி, ஆய்ச்சி, குடத்தி, இடைச்சி. ௫.

முல்லைநிலத்தலைவன்பெயர்=கானநாடன், குறும்பொறைநாடன், அண்ணல், தோன்றல். ௪.

மருதநிலமாக்கள்பெயர்=களமர், தொழுவர், மள்ளர், கம்பளர், உழவர், விளைஞர், கடைஞர். ௭.

மருதநிலப்பெண்பெயர்=கடைச்சி, ஆற்றுக்காலாட்டி. ௨.

மருதநிலத்தலைவன்பெயர்=மகிழ்நன், ஊரன், கிழவன். ௩.

நெய்தனிலமாக்கள்பெயர்=பரதவர், நுளையர், பஃறியர், திமிலர், சாலர், கடலர், கழியர். ௭.

நெய்தனிலப்பெண்பெயர்=பரத்தி, நுளைச்சி, அளத்தி, கடற்பிணா. ௪.

நெய்தனிலத்தலைவன்பெயர்=கொண்கன், துறைவன், மெல்லம்புலம்பன், கடற்சேர்ப்பன். ௪.

உப்பமைப்போர்பெயர்=அளவர், உமணர். ௨.

அணியும் பண்பும் உவமையும், அடுத்து வந்த ஆடூஉ மகடூஉப் பெயர்களும், முன்னிலைப்பெயர்களும் ஐந்திணைக்கருப்பொருட் பெயர்களுஞ் சொன்னோம், இனி முறைப்பெயர்களும் காயத்தின் பெயர்களுஞ் சொல்வாம்.

பாட்டன்பெயர்=தாதைதன்றாதை, மூதாதை, பிதாமகன். ௩.

ஈன்றவன்பெயர்=தாதை, அப்பன், ஐயன், தந்தை, அம்மான், அத்தன், பிதா. ௭.

ஈன்றவள்பெயர்=அவ்வை, அம்மனை, பயந்தாள், அம்மை, யாய், அன்னை, ஆயி, மோய், தாய். ௯.

வளர்த்ததாதியின்பெயர்=செவிலி, கோடாய், கைத்தாய். ௩.

முன்பிறந்தாள்பெயர்=தவ்வை, சேட்டை. ௨.

தங்கையின்பெயர்=பின்னை. ௧.

தங்குடிச்சுற்றத்தின்பெயர்=ஞாதியர், தாயத்தார். ௨.

மாமன்பெயர்=மாதுலன், அம்மான். ௨.

ஓர்குடியிற்கொண்டோன்பெயர்=சகலன். ௧.

மூத்தோன்பெயர்=சேட்டன், தம்முன், முன்னவன், அண்ணன். ௪.

பின்னோன்பெயர்=இளவல், பின், அநுசன், கனிட்டன். ௪.

கணவனேகொழுநன்வேட்டோன்கண்டன்வல்லவனேபத்தாத்
துணைவனேதலைவன்கொண்கன்சூழ்ந்திடுந்தவனேகாந்தன்
மணமகனுரியோனன்பன்மணவாளன்பதியேகேள்வன்
அணையுங்காதலன்பேர்பன்னேழன்றிநாயகனுமாமே. (எஅ)

இல்லவளுரிமைபன்னிகுடும்பினியில்லையில்லாள்
வல்லவைகளமேதாரமனையாட்டிமனைவிருந்தம்
சொல்லியபாரிவாழ்க்கைத்துணைகளத்திரமேகாந்தை
நல்லகாதலிவிரும்புநாயகிதேவிநாமம். (எ௯)

சந்ததிமதலைசூனுத்தனயன்காதலனேமெய்யன்
நந்தனன்சிறுவன்றோன்றல்குட்டனேநாட்டுஞ்செம்மல்
முந்தியமருமான்பிள்ளைமுளைசுதன்புதல்வன்புத்திரன்
மைந்தன்கால்பொருள்சேயெச்சம்வழிபிறங்கடைமகன்பேர். (அ௦)

சிறுவிபுத்திரியினோடுசிறந்திடுந்தனயையையை
மறுவில்பந்தனைமதிப்பாமகள்சுதைபுதல்வியேழ்பேர்
இறையாகுமெச்சந்தானிவ்விருபாற்குமேற்குமென்ப
குறுமக்கண்மகார்சிறாரைக்கூறுபவிவர்தம்பன்மை. (அக)

தானையேபதாதிவெய்யதந்திரந்தளமேதண்டம்
வாணியேககனம்யூகம்வாகினியனீகம்பாடி
சேனையேகவனங்கூடிச்செறிபலம்பரிகலந்தான்
ஊனமில்படைமூவைந்தாமுறுபதாகினியுமப்பேர். (அஉ)

அணியுண்டையொட்டேயூகமாயவைபடைவகுப்பாம்
அணிநெற்றிகையேதூசியடுபடையுறுப்பின்பேராம்
அணிபின்னிற்கூழையாந்தார்கொடிப்படையாகுமென்ப
பணியக்கீழறுதலோடேயறைபோதல்படையறற்பேர். (அங)

மக்களேநரரேமாக்கண்மானவர்மாந்தர்மண்ணோர்
தக்கவாண்டையரேமைந்தர்சாற்றியமனுடரின்பம்
தொக்கமானுடரீரைந்துஞ்சொல்லியமனிதர்பேராம்
மக்கடம்பரப்பிற்குப்பேர்மன்பதைபைஞ்ஞீலென்ப. (அச)

உடலுறுப்பங்கம்யாக்கையுயிர்நிலைதேகங்காயம்
சடலமேமூர்த்தமெய்யேதாவரந்தனுவாதாரம்
கடமொடுபுதைபுணர்ப்புக்காத்திரம்பூட்சியாகம்
புடைகொள்பூதிகஞ்சரீரம்புற்கலமுடம்பின்பேரே. (அரு)



காதலன்பெயர் = கணவன், கொழுநன், வேட்டோன், கண்டன், வல்லவன், பத்தா, துணைவன், தலைவன், கொண்கன், தவன், காந்தன், மணமகன், உரியோன், அன்பன், மணவாளன், பதி, கேள்வன், நாயகன், கஅ.

தேவிபெயர் = இல்லவள், உரிமை, பன்னி, குடும்பினி, இல், இல்லாள், வல்லவை, களம், தாரம், மனையாட்டி, மனை, விருந்தம், பாரி, வாழ்க்கைத்துணை, களத்திரம், காந்தை, காதலி, நாயகி. கஅ.

மகன்பெயர் = சந்ததி, மதலை, சூனு, தனயன், காதலன், மெய்யன், நந்தனன், சிறுவன், தோன்றல், குட்டன், செம்மல், மருமான், பிள்ளை, முளை, சுதன், புதல்வன், புத்திரன், மைந்தன், கால், பொருள், சேய், எச்சம், வழி, பிறங்கடை. உச.

புதல்விபெயர் = சிறுவி, புத்திரி, தனயை, ஐயை, பந்தனை, மகள், சுதை. எ.
மகன் மகள் என்னுமிருபாற்கும் பொதுபெயர் = எச்சம். க.
பிள்ளைப்பன்மையின்பெயர் = குறுமக்கள், மகார், சிறார். ங.

படையின்பெயர் = தானை, பதாதி, தந்திரம், தளம், தண்டம், வாணி, ககனம், யூகம், வாகினி, அனீகம், பாடி, சேனை, கவனம், பலம், பரிகலம், பதாகினி. கசு.

படைவகுப்பின்பெயர் = அணி, உண்டை, ஒட்டு, யூகம். ச.
படையுறுப்பின்பெயர் = அணி, நெற்றி, கை, தூசி. ச.
பின்னணியின்பெயர் = கூழை. க.
கொடிப்படையின்பெயர் = தார். க.
படையறற்பெயர் = கீழறுதல், அறைபோதல். உ.

மனிதர்பெயர் = மக்கள், நரர், மாக்கள், மானவர், மாந்தர், மண்ணோர், ஆண்டையர், மைந்தர், மனுடர், மானுடர். க௦.
மக்கட்பரப்பிற்குப்பெயர் = மன்பதை, பைஞ்ஞீல். உ.

உடம்பின்பெயர் = உடல், உறுப்பு, அங்கம், யாக்கை, உயிர்நிலை, தேகம், காயம், சடலம், மூர்த்தம், மெய், தாவரம், தனு, ஆதாரம், கடம், புதை, புணர்ப்பு, காத்திரம், பூட்சி, ஆகம், பூதிகம், சரீரம், புற்கலம். உஉ.

வடிவமோருவமேனிசட்டகம்வடிவின்பேராம்
கடியுநீள்பிரேதம்வேறுகாட்டியசவம்பிணப்பேர்
அடையுமற்றப்பேர்தானேகளேவரமழனமென்றும்
உடலினிற்குறைகவந்தமட்டையூபமுமுரைக்கும். (அசு)

சரணமேபதமேமற்றைத்தாளொடங்கிரியேபாதம்
கருதியசலனமற்றைக்கழலுடனடியுங்காலாம்
பரடென்பகரட்டினுமம்பற்றியகணைக்கால்சங்கம்
தருமுழந்தாண்முழந்துசானுவுமதன்பேர்தானே. (அஎ)

நெடியவூருக்குறங்குநீள்வாமங்கவான்றொடைப்பேர்
கடிதடநிதம்பமென்பகவின்றிகழல்குலின்பேர்
நடுநுசுப்பொடுமருங்குநாட்டுமத்திமமேயுக்கம்
இடையின்பேர்மருங்கின்பக்கமொக்கலையென்பதாமே. (அஅ)

உதரமோடகடுகுக்கியுடன்பண்டிவயிற்றின்பேராம்
திதலையேபொறியேதுத்திதேமலாஞ்சுணங்குமாமே
இதலையேயுந்திநாபியிலஞ்சியேபோகில்கொப்பூழ்
புதியவாண்குறியேகோசம்பூப்பகம்பெண்ணின்சின்னம். (அகூ)

அகலமேமருமநெஞ்சேயாகமேயுரமேமார்பாம்
நகிலமேகொம்மைகொங்கைநறுங்குயந்தனங்குருக்கண்
பகர்பயோதரஞ்சுவர்க்கம்பறம்பிவைமுலையின்பல்பேர்
திகழ்முலைக்கண்ணினுமஞ்சிலீமுகஞ்சூசுகங்கள். (கூ0)

கரமத்தம்பாணிதோளேகைத்தலநாற்பேராங்கூர்ப்
பரமுழங்கைகிலுத்தம்பணித்திடுமணிக்கட்டென்ப
உரவியவகங்கையங்கைகுடங்கையேயுள்ளங்கைப்பேர்
விரல்களங்குலியென்றாகுமிகுமுகிர்நகமதாமே. (கூக)

விறன்மிகுபுயமுமொய்ம்புமேவியவாகுவுந்தோள்
கறையில்கந்தரங்கிரீவங்களங்கண்டங்கழுத்தினுமம்
புறம்வெரிநபரம்வென்னேபோற்றியமுதுகுநாற்பேர்
சிறுபுறங்கயிலெருத்தஞ்சுவல்பிடர்நிகலந்தோண்மேல். (கூஉ)

வதனமானனமேதுண்டம்வத்திரமுகமென்றாகும்
இதழுதடதரமேபாலிகைமுத்தமென்றும்பேர்மே
லுதடேயோட்டமாங்கீழுதட்டின்பேரதரமென்றும்
விதமுறுமெயிறுதந்தமேவியதசனம்பல்லே. (கூங)



வடிவின்பெயர் = வடிவம், உருவம், மேனி, சட்டகம். ச.
பிணத்தின்பெயர் = பிரேதம், சவம், களேவரம், அழனம். ச.
உடற்குறையின்பெயர் = கவந்தம், மட்டை, யூபம். ங.

காலின்பெயர் = சரணம், பதம், தாள், அங்கிரி, பாதம், சலனம், கழல், அடி. அ.
கரட்டின்பெயர் = பரடு. க. கணைக்காலின்பெயர் = சங்கம். க.
முழந்தாளின்பெயர் = முழந்து, சானு. உ.

தொடையின்பெயர் = ஊரு, குறங்கு, வாமம், கவான். ச.
அல்குலின்பெயர் = கடிதடம், நிதம்பம். உ.
இடையின்பெயர் = நடு, நுசுப்பு, மருங்கு, மத்திமம், உக்கம். ரு.
மருங்கின்பக்கத்தின்பெயர் = ஒக்கலை. க.

வயிற்றின்பெயர் = உதரம், மோடு, அகடு, குக்கி, பண்டி. ரு.
தேமலின்பெயர் = திதலை, பொறி, துத்தி, சுணங்கு. ச.
கொப்பூழின்பெயர் = இதலை, உந்தி, நாபி, இலஞ்சி, போகில். ரு.
ஆண்குறியின்பெயர் = கோசம். க.
பெண்குறியின்பெயர் = பகம். க.

மார்பின்பெயர் = அகலம், மருமம், நெஞ்சு, ஆகம், உரம். ரு.
முலையின்பெயர் = நகிலம், கொம்மை, கொங்கை, குயம், தனம், குருக்கண், பயோதரம், சுவர்க்கம், பறம்பு. கூ.
முலைக்கண்ணின்பெயர் = சிலீமுகம், சூசுகம். உ.

கைத்தலத்தின்பெயர் = கரம், அத்தம், பாணி, தோள். ச.
முழங்கையின்பெயர் = கூர்ப்பரம். க.
மணிக்கட்டின்பெயர் = கிலுத்தம். க.
உள்ளங்கையின்பெயர் = அகங்கை, அங்கை, குடங்கை. ங.
விரலின்பெயர் = அங்குலி. க. நகத்தின்பெயர் = உகிர். க.

தோளின்பெயர் = புயம், மொய்ம்பு, வாகு. ங.
கழுத்தின்பெயர் = கந்தரம், கிரீவம், களம், கண்டம். ச.
முதுகின்பெயர் = புறம், வெரிந், அபரம், வென். ச.
பிடரின்பெயர் = சிறுபுறம், கயில், எருத்தம், சுவல். ச.
தோண்மேலின்பெயர் = நிகலம். க.

முகத்தின்பெயர் = வதனம், ஆனனம், துண்டம், வத்திரம். ச.
உதட்டின்பெயர் = இதழ், அதரம், பாலிகை, முத்தம். ச.
மேலுதட்டின்பெயர் = ஓட்டம். க. கீழுதட்டின்பெயர் = அதரம். க.
பல்லின்பெயர் = எயிறு, தந்தம், தசனம். ங.

பன்னியமுறுவன்மூரல்பல்லுமாநகையுமாகும்
முன்னியதாடிகட்டஞ்சுவுகமோவாயின்பேராம்
மன்னுநாச்சிகுவைதாரைமற்றைத்தாலுவுநாக்காகும்
கன்னமேயள்ளுக்கேள்விகாதின்பேர்செவியுமாமே. (௯௪)

அணன்மிடறுகுமற்றையண்ணமேயுண்ணாக்கின்பேர்
அணரியேயணலேயண்ணமானமேல்வாய்ப்புறப்பேர்
குணமுறுகவுள்கபோலங்கொடிறனுகதுப்பின்கூற்றும்
துணைசெயாக்கிராணங்கோணந்துண்டமேநாசிமூக்காம். (௯௫)

நயனநேத்திரமேயக்கநாட்டங்கோநோக்கஞ்சக்கு
வியனுறும்பார்வைதாரைவிலோசனம்விழியேயக்கி
செயமுறுதிருக்குத்திட்டிதிருட்டியம்பகமேகண்ணும்
மயமுறுதாரைகண்ணின்மணிவிளிம்பிமையினமம். (௯௬)

பிருகுடிநுதலேநீண்டபீருவேபுரூரம்பூருப்
புருவமாம்புகுடியும்பேர்புடைபடுநிடலத்தோடு
திருநுதல்குளமிலாடஞ்சேர்ந்தமத்தகமேநெற்றி
மருவியபாலமுண்டமளிகமும்வகுக்கலாமே. (௯௭)

உரவியதலையேமூர்த்தமுவ்வியோடுத்தமாங்கம்
சிரமுடிசென்னிமுண்டஞ்சிகரமத்தகமுமாகும்
திருமுடிசிமிலிசிக்கஞ்சிகையிவைகுடுமிநாற்பேர்
விரவியசுடிகைசூழிமேவியநவிரமுச்சி. (௯௮)

உளைநவிர்குடுமிபித்தையோரியேகுழல்கார்குஞ்சி
தளைசிகைதொங்கல்பங்கிதானீராறுண்மயிர்ப்பேர்
வளர்குழல்கதுப்புக்கேசமருவியசுரியனான்கும்
இளையமைந்தர்க்குமற்றையிளங்கொடியார்க்குமேற்கும். (௯௯)

குருள்குழல்விலோதமோதிகூழைகுந்தளமராட்டம்
குரலைம்பாலளகம்பத்தும்பெண்மயிர்கூந்தலும்பேர்
பெருகியகொப்புமுச்சிபின்னகங்கொண்டைபந்தம்
திருமிகுதம்மில்லம்பொற்சிகழிகைமயிர்முடிப்பேர். (௧௦௦)

ஓரியேகேசம்பங்கியுளையுரோமம்மராட்டம்
நேருமிப்பேர்களாறும்பிறமயிர்நிகழ்த்துமென்ப
சேருமவ்வுரோமமற்றைச்சிரோந்தமுஞ்செறிமயிர்ப்பேர்
வாருங்குந்தளம்விலோதமயிர்க்குழற்சிப்பேர்வைக்கும். (௧௦௧)



பல்லுக்கும் நகைக்கும் பொதுப்பெயர்=முறுவல், மூரல். ௨.
மோவாயின்பெயர்=தாடி, கட்டம், சுவுகம். ௩.
நாக்கின்பெயர்=நா, சிகுவை, தாரை, தாலு. ௪.
காதின்பெயர்=கன்னம், அள், கேள்வி, செவி. ௪.

மிடற்றின்பெயர்=அணல்.௧. உண்ணாக்கின்பெயர்=அண்ணம்.௧.
மேல்வாய்ப்புறத்தின்பெயர்=அணரி, அணல், அண்ணம். ௩.
கதுப்பின்பெயர்=கவுள், கபோலம், கொடிறு, அனு. ௪.
மூக்கின்பெயர்=ஆக்கிராணம், கோணம், துண்டம், நாசி. ௪.

கண்ணின்பெயர்=நயனம், நேத்திரம், அக்கம், நாட்டம், கோ, நோக்கம், சக்கு, பார்வை, தாரை, விலோசனம், விழி, அக்கி, திருக்கு, திட்டி, திருட்டி, அம்பகம். ௧௬.
கண்மணியின்பெயர்=தாரை. ௧.
கண்ணிமையின்பெயர்=விளிம்பு. ௧.

புருவத்தின்பெயர்=பிருகுடி, நுதல், பீரு, புரூரம், பூரு, புகுடி. ௬.
நெற்றியின்பெயர்=நிடலம், நுதல், குளம், இலாடம், மத்தகம், பாலம், முண்டம், அளிகம். ௮.

தலையின்பெயர்=மூர்த்தம், உவ்வி, உத்தமாங்கம், சிரம், முடி, சென்னி, முண்டம், சிகரம், மத்தகம். ௯.
குடுமியின்பெயர்=முடி, சிமிலி, சிக்கம், சிகை. ௪.
உச்சியின்பெயர்=சுடிகை, சூழி, நவிரம். ௩.

ஆண்மயிரின்பெயர்=உளை, நவிர், குடுமி, பித்தை, ஓரி, குழல், கார், குஞ்சி, தளை, சிகை, தொங்கல், பங்கி. ௧௨.
ஆண்மயிர்க்கும் பெண்மயிர்க்கும் பொதுப்பெயர்=குழல், கதுப்பு, கேசம், சுரியல். ௪.

பெண்மயிரின்பெயர்=குருள், குழல், விலோதம், ஓதி, கூழை, குந்தளம், மராட்டம், குரல், ஐம்பால், அளகம், கூந்தல். ௧௧.
மயிர்முடியின்பெயர்=கொப்பு, முச்சி, பின்னகம், கொண்டை, பந்தம், தம்மில்லம், சிகழிகை. ௭.

பிறமயிரின்பெயர்=ஓரி, கேசம், பங்கி, உளை, உரோமம், மராட்டம். ௬.
செறிமயிரின்பெயர்=உரோமம், சிரோந்தம். ௨.
மயிர்க்குழற்சியின்பெயர்=குந்தளம், விலோதம். ௨.

குடிலமேவேணிநீண்டகோடீரம்பின்னலோடு
சடிலமென்றைந்துபேருஞ்சடையெனவடைவேறாற்றும்
நெடியகாத்திரமுறுப்புநீளங்கமவயவப்பேர்
கடியமூட்டுங்கொளுத்துங்கந்துஞ்சந்தாகுமன்றே. (௧௦௨)

சிரையேசங்கனனநாடிதிருந்தியநரம்புமுப்பேர்
அரலையேகழலைகோழையையொடுகாசமாகும்
மருவுமங்கிதமேசேக்கைவசிவடுவுடற்றழும்பாம்
தருபொறிவரையிறைப்பேர்சரைநரைபலிதமும்பேர். (௧௦௩)

அழிதலையோட்டினாமங்கபாலமேயத்தியென்பு
கழிவுறுமெலும்பினாமங்களேவரமென்றுங்காட்டும்
கழியுடன்முழுவெலும்புகங்காளமென்பர்நூலோர்
விழைபொறிகரணங்கந்தமேவுமிந்திரியமுப்பேர். (௧௦௪)

தருசுவையொளியூறோசைசாற்றியநாற்றமோருங்
கருவிநாக்கண்ணைமெய்யேகாதொடுமூக்குமாகும்
தெரிதருமுயிரேயாதன்சேதனன்பசுவேசீவன்
அரியபுற்கலனேகூத்தனணுவியமானனான்மா. (௧௦௫)

இருபதோடிருபான்முப்பானிருபானீரைந்துமேலும்
மருவியவாறுசெய்யுண்மக்கடம்பெயர்க்குச்செய்தான்
குறுநறுங்குன்றைவேந்தன்குணபத்திரன்றந்தநோன்மை
தருநெறிநோற்கும்வீரைதழைத்தமண்டலவன்றானே. (௧௦௬)

மக்கட்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம்—௨௦௭.



சடையின்பெயர்=குடிலம், வேணி, கோடீரம், பின்னல், சடிலம். ௫.
அவயவத்தின்பெயர்=காத்திரம், உறுப்பு, அங்கம். ௩.
சந்தின்பெயர்=மூட்டு, கொளுத்து, கந்து. ௩.

நரம்பின்பெயர்=சிரை, சங்கனனம், நாடி. ௩.
கழலையின்பெயர்=அரலை. ௧. கோழையின்பெயர்=ஐ, காசம். ௨.
உடற்றழும்பின்பெயர்=அங்கிதம், சேக்கை, வசி, வடு. ௪.
இறையின்பெயர்=பொறி, வரை. ௨.
நரையின்பெயர்=சரை, பலிதம். ௨.

தலையோட்டின்பெயர்=கபாலம். ௧.
எலும்பின்பெயர்=அத்தி, என்பு, களேவரம். ௩.
கழியுடலின்முழுவெலும்பின்பெயர்=கங்காளம். ௧.
இந்திரியத்தின்பெயர்=பொறி, கரணம், கந்தம். ௩.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றை முறையே அறியுங் கருவியாவன: நா, கண், மெய், காது, மூக்கு.
உயிரின்பெயர்=ஆதன், சேதனன், பசு, சீவன், புற்கலன், கூத்தன், அணு, இயமானன், ஆன்மா. ௯.

மூன்றவது

## விலங்கின்பெயர்த்தொகுதி.

### காப்பு.

துலங்குமுக்குடைநிழற்றத்துந்துபிமுழங்கத்தேவர்
நலம்பெறுகவரிவீசநன்மலர்மாரிதூவ
அலங்குளையரியணைக்கீழமர்ந்தநான்முகனைப்போற்றி
விலங்கின்பேர்த்தொகுதிதன்னைமேதினிவியப்பச்சொல்வாம். (க)

அரிவயப்போத்துச்சீயமறுகுகேசரியேபூட்கை
மருவியமிருகராசன்வயமாவேமடங்கலோடு
பரவுகண்டீரவம்பஞ்சானனஞ்சிங்கப்பல்பேர்
பெருகியயானையாளிப்பேர்யாளியறுகுபூட்கை. (உ)

வல்லியம்வயமாவோடுசித்திரகாயமற்றும்
வெல்லுமாவுழுவைபாய்மாவியாக்கிரந்தரக்குவேங்கை
கொல்லவேயெழுந்துசீறுங்குயவரிகொடுஞ்சார்த்தூலம்
புல்லொடுபுண்டரீகங்கொடுவரிபுலியினமம். (ங)

தும்பிமாதங்கந்தூங்கறோல்கறையடியெறும்பி
உம்பல்வாரணம்புழைக்கையொருத்தல்வல்விலங்குநாகம்
கும்பிநால்வாயேபூட்கைகுஞ்சரங்கரேணுவத்தி
கம்பவேழம்முவாவேகரிகயங்களிறுகைம்மா. (ச)

சிந்துரம்வயமாவேகஞ்செறியிபம்புகர்முகங்கள்
தந்தியேமதாவளந்தந்தாவளம்வழுவையாம்பல்
மந்தமாமருண்மாமற்றைமதகயம்போதகத்தோ
டுந்துமேழைந்துமேலுமிரண்டுமெற்றுயர்ந்தயானை. (ரு)

உதவிசெய்இனத்தைக்காக்குமும்பலேயூதநாதன்
மதகயமதோற்கடம்பின்வாலின்பேர்தாலவட்டம்
அதனுனிவேசகந்தானுமுதுகின்பேர்மஞ்சாம்
மதகமுங்கும்பந்தானுமத்தகமென்றுகூறும். (சு)

## பெயர்ப்பிரிவு.

இ-ள். துலங்கும் முக்குடை நிழற்ற-விளங்காநின்ற மூன்று குடைகளும் நிழலைச் செய்யவும்,—துந்துபி முழங்க - துந்துபி யானது ஒலிக்கவும்,—தேவர் நலம் பெறு கவரி வீசு - தேவர்கள் நன்மைபெற்ற சாமரத்தை வீசவும்,—நல் மலர் மாரி தூவ - நல்ல புட்பமழையைச் சொரியவும்,—அலங்கு உளை அரி அணைக்கீழ் அமர்ந்த நான்முகனைப் போற்றி - பிரகாசிக்கின்ற பிடர்மயிரை யுடைய சிங்கத்தினாலே தாங்கப்படுகின்ற ஆசனத்தின்கண்ணே யீற்றிருந்த அருகக் கடவுளைத் துதித்து,—விலங்கின்பேர்த் தொகுதி தன்னை மேதினி வியப்பச் சொல்வாம் - விலங்கின் பெயர்தொகுதியைப் பூமியிலுள்ளோர் அதிசயிக்கும்படியாக (யாம்) கூறுவாம், எ - று.

சிங்கத்தின்பெயர்=அரி, வயப்போத்து, சீயம், அறுகு, கேசரி, பூட்கை, மிருகராசன், வயமா, மடங்கல், கண்டீரவம், பஞ்சானனம். கக.
யானையாளியின்பெயர்=யாளி, அறுகு, பூட்கை. ங.

புலியின்பெயர்=வல்லியம், வயமா, சித்திரகாயம், வெல்லுமா, உழுவை, பாய்மா, வியாக்கிரம், தரக்கு, வேங்கை, குயவரி, சார்த்தூலம், புல், புண்டரீகம், கொடுவரி. கச.

யானையின்பெயர்=தும்பி, மாதங்கம், தூங்கல், தோல், கறையடி, எறும்பி, உம்பல், வாரணம், புழைக்கை, ஒருத்தல், வல்விலங்கு, நாகம், கும்பி, நால்வாய், பூட்கை, குஞ்சரம், கரேணு, அத்தி, வேழம், உவா, கரி, கயம், களிறு, கைம்மா. உச.

சிந்துரம், வயமா, இபம், புகர்முகம், தந்தி, மதாவளம், தந்தாவளம், வழுவை, ஆம்பல், மந்தமா, மருண்மா, மதகயம், போதகம். கரு. (ஆ ங௭.)

யானைக்கூட்டத்துத்தலையானையின்பெயர்=யூதநாதன். க.
மதகயத்தின்பெயர்=மதோற்கடம். க.
யானைவாலின்பெயர்=தாலவட்டம். க.
யானைவாலுனியின்பெயர்=வேசகம். க.
யானைமுதுகின்பெயர்=மஞ்சு. க.
யானைமத்தகத்தின்பெயர்=மதகம், கும்பம். உ.

கரடமேமதம்பாய்கின்றசுவடுகைந்நுதிகளேபுட்
கரமதாமதத்தினுமங்கடங்கடாந்தானமாகும்
பெருகியபிரதிமானம்பேசுகொம்பினடுப்பேர்
கருதுகோடெயிறுதந்தநிரியாணங்கடைக்கணுமே. (௭)

கண்டிடுஞ்செவியடிப்பேர்சூளிகைகவுள்கதுப்பாம்
விண்டகையுமிழுநீரேவிலாழிபல்லடிகரீரம்
கொண்டகாத்திரமேமுன்கால்கூறியவபரம்பின்கால்
தொண்டைதொண்டலந்துதிக்கைசுண்டையுமப்பேராமே. (௮)

வடவையத்தினியிரண்டும்பிடிகளாங்கரிணியும்பேர்
கடகம்யானைத்திரட்பேர்கயந்தலைபோதகங்கள்
துடியடிகளபமோடுகயமுனியானைக்கன்றாம்
படுகுழிபயம்பாமென்பபாகலம்யானைநோயே. (௯)

பரிதுரகஞ்சிறந்தபாடலங்கிள்ளைபாய்மாத்
துரகதம்வாசியுன்னிதூசிகந்தருவங்கற்கி
அரியயமிவுளிமாவேயச்சுவம்புரவிகோரம்
குரகதங்கோணங்கொக்குக்கொய்யுளைசடிலங்கோடை. (௧௦)

கந்துகங்கனவட்டம்போர்காட்டும்பத்திரிதுரங்கம்
குந்தமத்திரியாறைந்துங்குதிரையினுமமாகும்
வந்தமேசகத்தினோடுசுவல்குசைமயிர்குளம்பு
வந்தபேர்குரங்குரச்சைமாதிகமதுபோமார்க்கம். (௧௧)

குலவியபசுப்பேர்கூலங்கோக்குடஞ்சுரபியாவே
இலகியநிரையேதேனுப்பெற்றமிவ்வெட்டுமாகும்
பலமுறுகபிலைதேனுப்பரவுதெய்வப்பசுப்பேர்
மலடுதான்வசையாமீற்றாவற்சலைகன்றுவற்சம். (௧௨)

பரவுமோரீற்றாக்கிட்டிபத்திரைநற்பசுப்பேர்
சுரைமுலையாகுமற்றைச்சுதையுதைகாற்பசுப்பேர்
திருமுலைமடியினுமஞ்செருத்தலாபீனமென்ப
நிரைதொறுக்காலிகோட்டநீண்டகாலேயங்கூட்டம். (௧௩)

பாறல்சேப்பெற்றம்பூணிபாண்டில்கொட்டியமிறாலே
ஏறொடுமூரிபுல்லமெருத்தின்பேரிமின்முரிப்பாம்
பாறல்பேரெருத்தினுமம்பகடுந்தூர்வகமுமாகும்
ஏறுக்கநரையேநந்தியிடபமாங்கூளியும்பேர். (௧௪)



யானைமதம்பாய்சுவட்டின்பெயர்=கரடம். ௧.
யானைக்கைந்நுதியின்பெயர்=புட்கரம். ௧.
யானைமதத்தின்பெயர்=கடம், கடாம், தானம். ௩.
யானைக்கொம்பினடுவின்பெயர்=பிரதிமானம். ௧.
யானைத்தந்தத்தின்பெயர்=கோடு, எயிறு. ௨.
யானைக்கடைக்கண்ணின்பெயர்=நிரியாணம். ௧.
யானைச்செவியடியின்பெயர்=சூளிகை. ௧. யானைக்கவுளின்பெயர்=கதுப்பு. ௧. யானைத்துதிக்கையுமிழ்நீரின்பெயர்=விலாழி. ௧. யானைப்பல்லடியின்பெயர்=கரீரம். ௧. யானைமுன்காலின்பெயர்=காத்திரம் ௧. யானைப்பின்காலின்பெயர்=அபரம். ௧. யானைத்துதிக்கையின்பெயர்=தொண்டை, தொண்டலம், சுண்டை. ௩.
யானைப்பிடியின்பெயர்=வடவை, அத்தினி, கரிணி. ௩.
யானைத்திரளின்பெயர்=கடகம். ௧. யானைக்கன்றின்பெயர்=கயந்தலை, போதகம், துடியடி, களபம், கயமுனி. ௫.
யானைபடுகுழியின்பெயர்=பயம்பு. ௧.
யானைநோயின்பெயர்=பாகலம். ௧.
குதிரையின்பெயர்=பரி, துரகம், பாடலம், கிள்ளை, பாய்மா, துரகதம், வாசி, உன்னி, தூசி, கந்தருவம், கற்கி, அரி, அயம், இவுளி, மா, அச்சுவம், புரவி, கோரம், குரகதம், கோணம், கொக்கு, கொய்யுளை, சடிலம், கோடை. ௨௪.
கந்துகம், கனவட்டம், பத்திரி, துரங்கம், குந்தம், அத்திரி. ௬.
(ஆக ௩௦.)
குதிரைமயிரின்பெயர்=மேசகம், சுவல், குசை. ௩.
குதிரைக்குளம்பின்பெயர்=குரம், குரச்சை. ௨.
குதிரைபோமார்க்கத்தின்பெயர்=மாதிகம். ௧.
பசுவின்பெயர்=கூலம், கோ, குடம், சுரபி, ஆ, நிரை, தேனு, பெற்றம். ௮.
தெய்வப்பசுவின்பெயர்=கபிலை, தேனு. ௨.
மலட்டுப்பசுவின்பெயர்=வசை ௧.
ஈன்றபசுவின்பெயர்=வற்சலை. ௧.
பசுவின்கன்றின்பெயர்=வற்சம். ௧.
ஓரீற்றுப்பசுவின்பெயர்=கிட்டி. ௧. நற்பசுவின்பெயர்=பத்திரை ௧.
பசுவின்முலைப்பெயர்=சுரை. ௧.
உதைகாற்பசுவின்பெயர்=சுதை. ௧.
முலைமடியின்பெயர்=செருத்தல், ஆபீனம். ௨.
பசுக்கூட்டத்தின்பெயர்=நிரை, தொறு, காலி, கோட்டம், காலேயம். ௫.
எருத்தின்பெயர்=பாலல், சே, பெற்றம், பூணி, பாண்டில், கொட்டியம், இறால், ஏறு, மூரி, புல்லம். ௧௦.
எருத்தின்முரிப்பின்பெயர்=இமில். ௧.
பேரெருத்தின்பெயர்=பாறல், பகடு, ஆர்வகம். ௩.
இடத்தின்பெயர்=ஏறு, உக்கம், நரை, கந்தி, கூளி. ௫.

தூர்வகந்தூரியமென்பபொதியெருதெருமையின்பேர்
காரானேவடவைமேதிசைரிபங்கவரிகாரா
மூரியேமகிடமெட்டுமொழியுமற்றாண்பொதுப்பேர்
பாரியகடாவிஞேடுபகடாமைமலட்டிஞமம். (௧௫)

அருணஞ்செம்மறியேமோத்தையசமுதளுடுவேகொச்சை
துருவையேழகம்வற்காலிதுள்ளலேபல்லைவெள்ளை
வருடைமேடங்கடாமைமறிவெறிகொறியேசாகம்
புருவையேதகர்மூவேழுமிரண்டுமொட்டின்பொதுப்பேர். (௧௬)

துருவைமைகொறிமுப்பேருந்தோற்றுஞ்செம்மறியாட்டின்பேர்
செருமலிதகர்கடாவேதிண்ணகமேழகங்கள்
பரவுகம்பளமென்றைந்தும்பற்றுமவ்வாணின்பல்பேர்
மருவியகுட்டன்சோரன்மறிபறழ்குட்டியாமே. (௧௭)

வெள்ளைவற்காலிகொச்சைவெள்ளாட்டிஞமமாகும்
வெள்ளையேயதன்மறிப்பேர்மேவியசெச்சைசாகம்
தள்ளியேமோத்தைமுப்பேர்சாற்றுமேயிவற்றிஞண்பேர்
வள்ளியசரபத்தோடுவருடையும்வரையாடாமே. (௧௮)

கேழலேயரிகுரோடங்கிரிகிடிகிருட்டியேனம்
மோழலேயிருளிமுந்துவல்லுளிகளிறுமைம்மா
போழ்முகக்கோட்டுமாவேபோத்திரிவராகங்கோலம்
சூழுமீரெட்டும்பன்றிசூகரமெறுழியும்பேர். (௧௯)

சல்லியமுளவுமாவெய்சல்லகமுட்பன்றிப்பேர்
சொல்லுமிப்பன்றிமுள்ளுச்சூழ்சலஞ்சலலமென்ப
பல்லுகமுளியமெண்குபல்லூகமெலுவிஞேடு
பல்லமேகரடிநாமம்பகர்குடாவடியுமாமே. (௨௦)

சவரிசீகரமேவீசுஞ்சாமரங்கவரியும்பேர்
கவரிமாபடகம்பட்டமானமாவெகினுங்காட்டும்
கவயமாவாமாகாட்டாகாத்திரிநகுலமென்று
இவையிருபேருமன்றித்தீர்வையுங்கீரியாமே. (௨௧)

அருணஞ்சாரங்கநவ்வியடலுழைபிணையேசூனம்
மிருகமேமறிகுரங்கமேவுமானேணமும்பேர்
இரலைவச்சயமேபுல்வாய்கலைகருமானுமேற்கும்
இரலைபுல்வாய்க்கும்பேராமென்றனர்குன்றாநூலோர். (௨௨)



பொதியெருத்தின்பெயர்=தூர்வகம், தூரியம். ௨.
எருமையின்பெயர்=காரான், வடவை, மேதி, சைரிபம், கவரி, காரா, மூரி, மகிடம். அ. எருமையாண்பெயர்=கடா, பகடு. ௨.
மலட்டெருமையின்பெயர்=மை. ௧.

ஆட்டின்பொதுப்பெயர்=அருணம், செம்மறி, மோத்தை, அசம், உதள், உடு, கொச்சை, துருவை, ஏழகம், வற்காலி, துள்ளல், பள்ளை, வெள்ளை, வருடை, மேடம், கடா, மை, மறி, வெறி, கொறி, சாகம், பருவை, தகர். ௨௩.

செம்மறியாட்டின்பெயர்=துருவை, மை, கொறி. ௩.
செம்மறியாட்டாணின்பெயர்=தகர், கடா, திண்ணகம், ஏழகம், கம்பளம். ௫.
ஆட்டுக்குட்டியின்பெயர்=குட்டன், சோரன், மறி, பறழ். ௪.

வெள்ளாட்டின்பெயர்=வெள்ளை, வற்காலி, கொச்சை. ௩.
வெள்ளாட்டுக்குட்டியின்பெயர்=வெள்ளை. ௧.
வெள்ளாட்டாணின்பெயர்=செச்சை, சாகம், மோத்தை. ௩.
வரையாட்டின்பெயர்=சரபம், வருடை. ௨.

பன்றியின்பெயர்=கேழல், அரி, குரோடம், கிரி, கிடி, கிருட்டி, ஏனம், மோழல், இருளி, வல்லுளி, களிறு, மைம்மா, கோட்டுமா, போத்திரி, வராகம், கோலம், சூகரம், எறுழி. ௧௮.

முட்பன்றியின்பெயர்=சல்லியம், முளவுமா, எய், சல்லகம். ௪.
முட்பன்றிமுள்ளின்பெயர்=சலம், சலலம். ௨.
கரடியின்பெயர்=பல்லுகம், உளியம், எண்கு, பல்லூகம், எலு, பல்லம், குடாவடி. ௭.

சாமரத்தின்பெயர்=சவரி, சீகரம், கவரி. ௩.
கவரிமாவின்பெயர்=படகம், பட்டம், மானமா, எகின். ௪.
காட்டாவின்பெயர்=கவயமா, ஆமா. ௨.
கீரியின்பெயர்=காத்திரி, நகுலம், தீர்வை. ௩.

மானின்பெயர்=அரிணம், சாரங்கம், நவ்வி, உழை, பிணை, சூனம், மிருகம், மறி, குரங்கம், ஏணம். ௧௦.
கலையின்பெயர்=இரலை, வச்சயம், புல்வாய், கருமான். ௪.
புல்வாயின்பெயர்=இரலை. ௧.

கழுதையின்பேர்வாலேயங்கர்த்தபங்காளவாயே
அழகிலத்திரியேகோகுவேசரிகரமுமாகும்
குழைவுறுவேசரிப்பேர்கோவேறுகழுதைக்கூற்றும்
அழிவிலொட்டகந்தாசேரமத்திரிநெடுங்கழுத்தல். (௨௩)

ஓரிகோமாயுவூளனொண்டனேயிகலன்சம்பு
பூரிமாயன்குரோட்டாச்சிருகாலனரியேபோற்றும்
ஓரியேகோலாங்கூலமுற்றமைம்முகனேகள்வன்
சீரியகலையோடைந்துமுசுவெனச்செப்பலாமே. (௨௪)

சூரனேமுடுவல்பாசிபுரோகதிசுனகன்குக்கல்
கூரனேயெகினனக்கன்குரைமுகன்ஞமலிஞாளி
சாரமேயன்சுணங்கன்சுவாவேநாய்தானேம்முப்பேர்
வீரியமுடுவல்பெண்ணாய்விருகங்கொக்கிரண்டுஞ்செந்நாய். (௨௫)

வெருகுடனலவனோதிவிடாரகம்விலாளம்பூசை
பொருதுமார்ச்சாலம்பாக்கனிற்புலிபூனையொன்பான்
மருமிகுதுருக்கநானமான்மதநரந்தநான்கும்
கருதுகத்தூரியின்பேர்காட்டியமறுவிநாவி. (௨௬)

வலிமுகங்கடுவன்பாயும்வானரமரியேமந்தி
பிலவங்கங்கோகிலங்கான்பெயர்ந்தகோடரமேயூகம்
கலகமர்க்கடமேநாகங்கவிகுரங்கிவையீராறும்
குலவுகாருகமேயூகங்கூறியகருங்குரங்கே. (௨௭)

சாய்ந்தசாயானதங்கள்சரடமேகாமரூபி
ஏய்ந்ததண்டோமானோதியிசைகோம்பிமுசலியொத்தி
ஓந்தியாஞ்சுவவுசுண்டனுறுசுசுந்தரிமூஞ்சூறே
ஆய்ந்திடுசிகரியாகோடிரும்பனுமகழெலிப்பேர். (௨௮)

கருப்பைகாரெலியினாமங்களதந்துந்துளமேயாகுப்
பெருச்சாளிமூடிகத்தோடுந்துருவென்றும்பேராம்
வரிப்புறம்வெளிலணிற்பேர்வருந்தடிமுசலிகோதாத்
தரித்தெழுமுடும்பினாமஞ்சசமுயலென்னலாமே. (௨௯)

## விலங்கினாண்மரபு.

கடுவன்மாவொருத்தல்போத்துக்கலைதகர்களிறுசேவி
னொடுபகடும்பலேறேடோரியீராறுமாண்பேர்
வடுவறுகுரங்குபூனைமற்றிவைகடுவனாமே
அடுதிறல்யானைபன்றியாடல்வெம்புரவிமாவாம். (௩௰)



கழுதையின்பெயர் = வாலேயம், கர்த்தபம், காளவாய், அத்திரி, கோகு, வேசரி, கரம். ௭.
கோவேறுகழுதையின்பெயர் = வேசரி. ௧.
ஒட்டகத்தின்பெயர் = தாசேரம், அத்திரி, நெடுங்கழுத்தல். ௩.

நரியின்பெயர் = ஓரி, கோமாயு, ஊளன், ஒண்டன், இகலன், சம்பு, [சம்புகம்.] பூரிமாயன், குரோட்டா, சிருகாலன். ௯.
முசுவின்பெயர் = ஓரி, கோலாங்கூலம், மைம்முகன், கள்வன், கலை. ௫.

நாயின்பெயர் = சூரன், முடுவல், பாசி, புரோகதி, சுனகன், குக்கல், கூரன், எகினன், அக்கன், குரைமுகன், ஞமலி, ஞாளி, சாரமேயன், சுணங்கன், சுவா. ௧௫. பெண்ணாயின்பெயர் = முடுவல். ௧.
செந்நாயின்பெயர் = விருகம், கொக்கு. ௨.

பூனையின்பெயர் = வெருகு, அலவன், ஓதி, [ஒது] விடாரகம், விலாளம், பூசை, மார்ச்சாலம், பாக்கன், இற்புலி. ௯.
கத்தூரியின்பெயர் = துருக்கம், நானம், மான்மதம், நரந்தம். ௪.
நாவியின்பெயர் = மறுவி. ௧.

குரங்கின்பெயர் = வலிமுகம், கடுவன், வானரம், அரி, மந்தி, பிலவங்கம், கோகிலம், கோடரம், யூகம், மர்க்கடம், நாகம், கவி. ௧௨.
கருங்குரங்கின்பெயர் = காருகம், யூகம். ௨.

ஓந்தியின்பெயர் = சாயானதம், சரடம், காமரூபி, தண்டு, ஓமான், ஓதி, கோம்பி, முசலி, ஒத்தி. ௯.
மூஞ்சூற்றின்பெயர் = சுவவு, சுண்டன், சுசுந்தரி. ௩.
எலியின்பெயர் = சிகரி, ஆகு, இரும்பன். ௩.

காரெலியின்பெயர் = கருப்பை. ௧. பெருச்சாளியின்பெயர் = களதம், துந்துளம், ஆகு, மூடிகம், உந்துரு. ௫.
அணிலின்பெயர் = வரிப்புறம், வெளில். ௨.
உடும்பின்பெயர் = தடி, முசலி, கோதா. ௩.
முயலின்பெயர் = சசம். ௧.

## விலங்கினாண்மரபு.

விலங்கினாண்பெயர் = கடுவன், மா, ஒருத்தல், போத்து, கலை, தகர், களிறு, சே, பகடு, உம்பல், ஏறு, ஓரி. ௧௨.
கடுவனென்னும்பெயர் = குரங்கு, பூனை, இரண்டுக்குமாம்.
மாவென்னும்பெயர் = யானை, பன்றி, புரவி. ௩ம்.

கராடிபுல்வாய்மான்யானைகவரியோடெருமைபன்றி
பொருபுலிமரையென்றோன்பான்புகன்றிடுமொருத்தலாகும்
மரைபசுப்புலியேபூனைமற்றைப்புல்வாயும்போத்தாம்
கருதியமுசவுமானுங்கலையெனக்காட்டலாமே. (௩௧)

திருவாடுவேழம்யாளிசுறாத்தகரென்றேசொல்லும்
கரியொடுசுறவுபன்றிகளிறெனக்காட்டலாமே
செருமலிகுதிரைபெற்றம்புல்வாயேசேவென்றாகும்
எருமையோடியானைபெற்றம்பகடிபமும்பலாமே. (௩௨)

ஆனுடனெருமைபன்றியாய்மயிர்க்கவரிசங்கு
மானொடுமரைபுல்வாயுமாறுகொள்சுறவுமேறும்
ஊனுகர்நரியினோடுமுசுவிவையோரியாகும்
மானநூல்விலங்கினுணின்மரபெனவடைத்தவாறே. (௩௩)

## விலங்கின்பெண்மரபு.

பிடிபிணைபெட்டைமந்திபிணாவோடாநாகுபாட்டி
கொடுவிலங்கின்பெண்பாலாங்குஞ்சரங்கவரியோடு
நெடியவொட்டகமிம்மூன்றுநெடும்பிடிநிகழ்த்துநாமம்
வடிவுளவுழைபுல்வாய்நாய்வராகமேபிணையின்வைக்கும். (௩௪)

ஒட்டகங்கழுதைவாசியுறுசிங்கமரையில்வைந்தும்
பெட்டையாமுசுவோடுகேம்பேசியகுரங்குமந்தி
பட்டபுல்வாய்நாய்பன்றிபகர்ந்திடும்பிணாவெனும்பேர்
கட்டியவெருமைபெற்றங்காட்டுளமரையேயாவாம். (௩௫)

எருமையேமரையேபெற்றமேற்றநீர்ச்சாதிநாகாம்
நரிபன்றிநாயிம்மூன்றுநாட்டியபாட்டியாகும்
பெருகுபெண்பால்பிணாப்பெண்பேணுமாணவையுமாணும்
பொருவினாலுணர்ந்துசொன்னபுலவர்தம்வாக்குத்தானே. (௩௬)

## விலங்கின்பிள்ளைமரபு.

பறழ்பிள்ளைகுழவிகுட்டிபார்ப்பொடுகுருளைகன்று
மறியேபோதகமிவ்வொன்பான்வல்விலங்கின்பிள்ளைப்பேர்
பறழொடுகுருளைகுட்டிபற்றியமூன்றுபேரும்
உறுபுலிமுயல்வராகமோதியநரிநாயாமே. (௩௭)

முறுகுநாயன்றிமற்றைமொழிந்திடும்பிள்ளையென்ப
மறியென்பதாடழுங்குமானொடுகுதிரைவைக்கும்
பறம்பிள்ளைகுழவிகுட்டிபார்ப்பெனவைந்துபேரும்
குறியுளகுரங்கேயாதிகோட்டில்வாழ்விலங்கின்பிள்ளை. (௩௮)



ஒருத்தலென்னும்பெயர் = கராடி, புல்வாய், மான், யானை, கவரி, எருமை, பன்றி, புலி, மரை. ௯ ம்.
போத்தென்னும்பெயர் = மரை, பசு, புலி, பூனை, புல்வாய். ௫ ம்.
கலையென்னும்பெயர் = முசு, மான். ௨ ம்.

தகரென்னும்பெயர் = திருவாடு, வேழம், யாளி, சுறா. ௪ ம்.
களிறென்னும்பெயர் = கரி, சுறவு, பன்றி. ௩ ம்.
சேவென்னும்பெயர் = குதிரை, பெற்றம், புல்வாய். ௩ ம்.
பகடென்னும்பெயர் = எருமை, யானை, பெற்றம். ௩ ம்.
உம்பலென்னும்பெயர் = இபம். ௧ ம்.

ஏறென்னும்பெயர் = ஆன், எருமை, பன்றி, கவரி, சங்கு, மான், மரை, புல்வாய், சுறவு. ௯ ம்.
ஓரியென்னும்பெயர் = நரி, முசு. ௨ ம்.

## விலங்கின்பெண்மரபு.

விலங்கின்பெண்பாற்பெயர் = பிடி, பிணை, பெட்டை, மந்தி, பிணா, ஆ, நாகு, பாட்டி. ௮.
பிடியென்னும்பெயர் = குஞ்சரம், கவரி, ஒட்டகம். ௩ ம்.
பிணையென்னும்பெயர் = உழை, புல்வாய், நாய், வராகம். ௪ ம்.

பெட்டையென்னும்பெயர் = ஒட்டகம், கழுதை, வாசி, சிங்கம், மரை. ௫ ம். மந்தியென்னும்பெயர் = முசு, ஊகம், குரங்கு. ௩ ம்.
பிணாவென்னும்பெயர் = புல்வாய், நாய், பன்றி. ௩ ம்.
ஆவென்னும்பெயர் = எருமை, பெற்றம், மரை. ௩ ம்.

நாகென்னும்பெயர் = எருமை, மரை, பெற்றம், நீர்ச்சாதி. ௪ ம்.
பாட்டியென்னும்பெயர் = நரி, பன்றி, நாய். ௩ ம்.
பிணாப்பெண்ணென்னும்பெயர்கள் = பெண்பாலெவற்றிற்குமாம்.
ஆணென்னும்பெயர் = ஆண்பாலெவற்றிற்குமாம்.

## விலங்கின்பிள்ளைமரபு.

விலங்கின்பிள்ளைப்பெயர் = பறழ், பிள்ளை, குழவி, குட்டி, பார்ப்பு, குருளை, கன்று, மறி, போதகம். ௯.
பறழ்குருளைகுட்டியென்னும்பெயர்கள் = புலி, முயல், வராகம், நரி, நாய். ௫ ம்.

பிள்ளையென்னும்பெயர் = நாயொழிந்தவற்றிற்காம்.
மறியென்னும்பெயர் = ஆடு, அழுங்கு, மான், குதிரை. ௪ ம்.
பறழ் பிள்ளை குழவி குட்டி பார்ப்பென்னும்பெயர்கள் = குரங்கு முதன் மரக்கோட்டில்வாழ் விலங்கின்பிள்ளைக்காம்.

கடமைமானெருமைபெற்றங்கவயமொட்டகமேயானை
விடுபரிமரைகராமேமேவியகவரிகன்றாம்
கடமைமானெருமையானைகாட்டியகுழவியாகும்
அடுபுலிசிங்கம்யானையானபோதகமென்றாமே. (௩௯)

முறுகியகீரிபூனைமுயலணிலென்பநான்கும்
பறழொடுகுட்டிபிள்ளைபன்னியமூன்றுமாகும்
பறழொடுகுட்டிதானேபாக்கனுமணிலுமென்ப
பறழ்பிள்ளையிரண்டுஞ்சொல்லிற்பார்ப்பொடுதவழ்சாதிப்பேர். ()

குருளையுங்கன்றுமானிற்கொள்ளுபகுழவியோடு
குருளையும்யாளிகொள்ளுங்குழவியேமுசுவினுக்கும்
குருளையுமுசுவின்கூற்றுங்கூறியமாவேமானே
மிருகமேகுரங்கேநான்கும்விலங்கினிற்பொதுப்பேராமே. (௪௧)

சாலமேவியூகம்யூதஞ்சாற்றியகுலம்விருந்தம்
கோலமார்கணம்விலங்கின்கூட்டமாம்பிறவுமேற்கும்
கூலம்வேசகமேதோகைகுறித்திடுமிலாங்கூலம்வால்
வாலதியென்றும்பேராம்வாலின்கீழ்வெருகமாமே. (௪௨)

மருப்பொடுசிருங்கங்கோடுமற்றையவுலவைகொம்பாம்
குருத்திடும்விடாணமும்பேர்குமரங்கொம்பிலாவிலங்காம்
கிருத்தியேபுறணிபோர்வைகிளரதளொலியறொக்குத்
துருத்தியேசருமம்பச்சைதுவக்குரிவடகந்தோலாம். (௪௩)

தசைபுலால்புலவுபுண்ணேதடியொடுபுளிதந்தூவே
பிசிதம்வள்ளூரம்விடக்குப்பேசிலூனின்பேர்பத்தாம்
பொசிதருமுடையேயூழ்த்தல்பூதியேதசைபுலாலாம்
பசுவினதிறைச்சிதானேபகர்ந்தவள்ளூரமதானே. (௪௪)

எருவையேநெய்த்தோர்சோரியியம்பிடுமுதிரம்புண்ணீர்
குருதிசெம்பால்புலானீர்குறித்தசோணிதமேசெந்நீர்
கருதியசுடுவன்மற்றைக்கறையீராறிரத்தத்தின்பேர்
விரவியநிணங்கொழுப்புவிளரொடுவிழுக்குமாமே. (௪௫)

கருவொடுசினைபீள்சூலேகருப்பமேவயாவுமாகும்
மருவியவழும்பிணுமம்வழுக்கென்பவீருளீரல்
கருதியமுடையினுமங்காட்டியபுலவோடூத்தை
உருவியமலமேமாசேயுபமலமுள்ளின்மாசாம். (௪௬)



கன்றென்னும்பெயர் = கடமை, மான், எருமை, பெற்றம், கவயம், ஒட்டகம், யானை, பரி, மரை, கராம், கவரி. ௧௧ ம்.
குழவியென்னும்பெயர் = கடமை, மான், எருமை, யானை. ௪ ம்.
போதகமென்னும்பெயர் = புலி, சிங்கம், யானை. ௩ ம்.

பறழ்குட்டிபிள்ளையென்னும் பெயர்கள் = கீரி, பூனை, முயல், அணில். ௪ ம்.
பறழ்குட்டியென்னும்பெயர்கள் = பாக்கன், அணில். ௨ ம்.
பறழ்பிள்ளையென்னும்பெயர்கள் = பார்ப்பு, தவழ்சாதி. ௨ ம்.

குருளைகன்றென்னும்பெயர்கள் = மான். ௧ ம்.
குழவிகுருளையென்னும்பெயர்கள் = யாளி. ௧ ம்.
குழவிகுருளையென்னும்பெயர்கள் = முசு ௧ ம்.

மரபு முற்றிற்று.

விலங்கின்பொதுப்பெயர் = மா, மான், மிருகம், குரங்கு. ௪.

விலங்கின்கூட்டத்தின்பெயர் = சாலம், வியூகம், யூதம், குலம், விருந்தம், கணம். ௬.
விலங்கின்வாலின்பெயர் = கூலம், வேசகம், தோகை, இலாங்கூலம், வாலதி. ௫. விலங்கின்வாற்கீழிடத்தின்பெயர் = வெருகம். ௧.

விலங்கின்கொம்பின்பெயர் = மருப்பு, சிருங்கம், கோடு, உலவை, விடாணம். ௫. கொம்பிலாவிலங்கின்பெயர் = குமரம். ௧.
தோலின்பெயர் = கிருத்தி, புறணி, போர்வை, அதள், ஒலியல், தொக்கு, துருத்தி, சருமம், பச்சை, துவக்கு, உரி, வடகம். ௧௨.

ஊனின்பெயர் = தசை, புலால், புலவு, புண், தடி, புளிதம், தூ, பிசிதம், வள்ளூரம், விடக்கு. ௰.
புலாலின்பெயர் = முடை, ஊழ்த்தல், பூதி, தசை. ௪.
பசுவினிறைச்சியின்பெயர் = வள்ளூரம். ௧.

இரத்தத்தின்பெயர் = எருவை, நெய்த்தோர், சோரி, உதிரம், புண்ணீர், குருதி, செம்பால், பலானீர், சோணிதம், செந்நீர், சுடுவன், கறை. ௧௨.
கொழுப்பின்பெயர் = நிணம், விளர், விழுக்கு. ௩.

கருப்பத்தின்பெயர் = கரு, சினை, பீள், சூல், வயாவு. ௫.
வழும்பின்பெயர் = வழுக்கு. ௧. ஈரலின்பெயர் = ஈருள். ௧
முடையின்பெயர் = புலவு, ஊத்தை. ௨. மாசின்பெயர் = மலம். ௧.
உண்மாசின்பெயர் = உபமலம். ௧.

அரவுகட்செவியேபோகியகியரிவியாளஞ்சர்ப்பம்
உரகம்பன்னகமேநாகமுற்றமாசுணமேசக்கிரி
பரவியபுயங்கம்பாந்தளங்கதம்பணிபாம்பின்பேர்
இரைகொளுந்துண்டஞ்சாரையிராசிலமென்பதும்பேர். (சஎ)

விடமுமிழ்மண்டலிக்குமேவுகோளகமேநாமம்
கொடியமாலுதானனேகண்குத்திப்பாம்பென்றுகூறும்
நெடியமாசுணமேபாந்தணீள்பெரும்பாம்பினுமம்
முடியவேயெழுந்துசீறுமூர்க்கனேநாகமென்ப. (சஅ)

வருகருவழலையின்பேரிராசமாநாகமாகும்
குரவியபறவைநாகங்குக்குடசர்ப்பமென்ப
பரவியபடம்பணம்பைபடப்பொறியுத்திதுத்தி
கருதியதட்டநஞ்சுகாலும்பல்லதட்டங்காற்றும். (சகூ)

எகினமோதிமமராளம்விகங்கம்வக்கிராங்கமன்னம்
சிகியொடுஞமலிதோகைசிகாவளஞ்சிகண்டிமஞ்ஞை
ஒகரமேமயூரமற்றுமுறுபிணிமுகங்கலாபி
மகிழ்வுறுநவிரம்பீலிகேகயமயில்பன்மூப்பேர். (ரு0)

சரணமேசிகண்டங்கூந்தல்சந்திரகங்கலாபங்கூழை
பெருகியதோகைதொங்கல்பீலியாந்தூவியும்பேர்
மருவியவகவலாலன்மயிற்குரலேங்கலும்பேர்
வருமுருந்திறகின்முள்ளாமற்றன்னச்சிறகுதூவி. (ருக)

மன்னியகலுழன்மற்றைவைனனேவைனதேயன்
பன்னகவைரியோடுதார்க்கியன்பறவைவேந்தன்
உன்னியகருடனுமமுவணமுமதற்கேகூறும்
சொன்னசாதகப்புட்டானேசூழ்ந்தசாரங்கமென்ப. (ருஉ)

சிம்புள்வாருண்டமற்றைச்செப்பியவருடையோடு
சம்பரந்துரோணம்வெய்யசரபமெண்காற்புட்பேராம்
வெம்பியநேமிப்புள்ளுவிரும்புசக்கரவாகப்புட்
கொம்பியகோகம்யானைக்குருகென்றுகூறலாமே. (ருங)

இருந்தபுண்டரமேகங்கமெருவையேபவணையோடு
கருஞ்சிறையுவணமைந்துங்கழுகென்பசகுந்தமும்பேர்
திருந்தியசேனம்பாரசிகைபாறுசேருங்கங்கம்
பருந்தின்பேரசுணமாவேபகரிற்கேகயமென்றோதும். (ருச)



பாம்பின்பெயர் = அரவு, கட்செவி, போகி, அகி, அரி, வியாளம், சர்ப்பம், உரகம், பன்னகம், நாகம், மாசுணம், சக்கிரி, புயங்கம், பாந்தள், அங்கதம், பணி. கசு.
சாரைப்பாம்பின்பெயர் = துண்டம், இராசிலம். உ.

மண்டலிப்பாம்பின்பெயர் = கோளகம். க.
கண்குத்திப்பாம்பின்பெயர் = மாலுதானன். க.
பெரும்பாம்பின்பெயர் = மாசுணம், பாந்தள். உ.
நாகத்தின்பெயர் = மூர்க்கன். க.

கருவழலைப்பாம்பின்பெயர் = இராசமாநாகம். க.
பறவைநாகத்தின்பெயர் = குக்குடசர்ப்பம். க.
பாம்பின்படத்தின்பெயர் = பணம், பை. உ. படப்பொறியின் பெயர் = உத்தி, துத்தி. உ. பாம்பினச்சுப்பல்லின்பெயர் = தட்டம். க. பாம்புயிர்ப்பின்பெயர் = அதட்டம். க.

அன்னத்தின்பெயர் = எகினம், ஓதிமம், மராளம், விகங்கம், வக்கிராங்கம். ரு.
மயிலின்பெயர் = சிகி, ஞமலி, தோகை, சிகாவளம், சிகண்டி, மஞ்ஞை, ஒகரம், மயூரம், பிணிமுகம், கலாபி, நவிரம், பீலி, கேகயம். கங.

மயிற்பீலியின்பெயர் = சரணம், சிகண்டம், கூந்தல், சந்திரகம், கலாபம், கூழை, தோகை, தொங்கல், தூவி. கூ.
மயிற்குரலின்பெயர் = அகவல், ஆலல், ஏங்கல். ங.
இறகின்முள்ளின்பெயர் = முருந்து. க.
அன்னச்சிறகின்பெயர் = தூவி. க.

கருடன்பெயர் = கலுழன், வைனன், வைனதேயன், பன்னகவைரி, தார்க்கியன், பறவைவேந்தன், உவணம். எ.
சாதகப்புள்ளின்பெயர் = சாரங்கம். க.

எண்காற்புள்ளின்பெயர் = சிம்புள், வாருண்டம், வருடை, சம்பரம், துரோணம், சரபம். சு.
சக்கரவாகப்புள்ளின்பெயர் = நேமிப்புள், கோகம், யானைக்குருகு. ங.

கழுகின்பெயர் = புண்டரம், கங்கம், எருவை, பவணை, உவணம், சகுந்தம். சு.
பருந்தின்பெயர் = சேனம், பாரசிகை, பாறு, கங்கம். ச.
அசுணமாவின்பெயர் = கேகயம். க.

சாருவேயரியேவன்னிதத்தையேசுகமேகிள்ளை
கீரமேசுவாகதந்தான்கிளியவந்திகையுமாகும்
கீரமுங்கிள்ளைதானுங்கிளர்கருங்கிளியினமம்
சாரமாநிலாமுகிப்பேர்சகோரஞ்செம்போத்துக்குக்கில். (௫௫)

கோகிலங்களகண்டம்மேகோரகைகுயிலின்பேர்தான்
ஆகுமேபிகத்தினோடுபரபுட்டந்தானுமப்பேர்
கூகையுமுலூகமும்போர்க்குடிஞையுங்குராலுங்கோட்டான்
நாகணவாய்ப்புட்பூவைநவிற்றுஞ்சாரிகையுமாமே. (௫௬)

கஞ்சனங்கிகிணியோடுவயவனேகஞ்சரீடம்
விஞ்சுபாரத்துவாசம்வலியனைவிதித்தபேரே
வஞ்சுளன்வயவன்மற்றைவயானெனன்பகாரிப்பிள்ளை
கஞ்சனங்கயவாயென்பகரிக்குருவிப்பேர்தானே. (௫௭)

சிரல்கவுதம்பொன்வாய்ப்புட்டித்திரிசிச்சிலிப்பேர்
கருதியபெரும்புள்ளோடுகௌசிகமூமன்கூகை
குருகுகாலாயுதம்போர்க்குக்குடமாண்டலைப்புட்
பெருகுவாரணமென்றைந்தும்பேசியகோழியாமே. (௫௮)

குலிங்கமேசடகமேயூர்க்குருவியாம்புலிங்கமும்பேர்
நிலங்குபூழாங்காதம்பநெடியகானங்கோழிப்பேர்
கலிங்கமேகம்புள்வானம்பாடியாங்குறும்பூழ்காடை
இலங்குகோரசமேபுல்லோடிதல்சிவலிவைமுப்பேரே. (௫௯)

சிரவமேகௌதாரிப்பேர்சில்லையேபகண்டையாகும்
மருவியசலாங்குதானேவாய்த்தபொய்யாப்புள்ளாமே
கரடம்வாயசமரிட்டங்கரும்பிள்ளைகொடியேகாகம்
இருடிபிங்கலையேயாந்தைகின்னரமென்பதும்பேர். (௬௰)

கரும்புறாவின்பேர்பாராவதமென்பகபோதமும்பேர்
பொருந்துதூதுணங்கபோதங்களரவம்புறாப்பொதுப்பேர்
பரிந்துகன்மேய்வுகாளபதமேமாடப்புறாவாம்
திருந்தியவுள்ளலுள்ளான்சிதகந்தூக்கணங்குரீஇயே. (௬௧)



கிளியின்பெயர்=சாரு, அரி, வன்னி, தத்தை, சுகம், கிள்ளை, கீரம், சுவாகதம், அவந்திகை. ௯.
கருங்கிளியின்பெயர்=கீரம், கிள்ளை. ௨.
நிலாமுகியின்பெயர்=சகோரம். ௧.
செம்போத்தின்பெயர்=குக்கில். ௧.

குயிலின்பெயர்=கோகிலம், களகண்டம், கோரகை, பிகம், பரபுட்டம். ௫.
கோட்டான்பெயர்=கூகை, உலூகம், குடிஞை, குரால். ௪.
நாகணவாய்ப்புள்ளின்பெயர்=பூவை, சாரிகை. ௨.

வலியன்பெயர்=கஞ்சனம், கிகிணி, வயவன், கஞ்சரீடம், பாரத்துவாசம். ௫.
காரிப்பிள்ளையின்பெயர்=வஞ்சுளன், வயவன், வயான். ௩.
கரிக்குருவியின்பெயர்=கஞ்சனம், கயவாய். ௨.

சிச்சிலியின்பெயர்=சிரல், கவுதம், பொன்வாய்ப்புள், தித்திரி. ௪.
கூகையின்பெயர்=பெரும்புள், கௌசிகம், ஊமன். ௩.
கோழியின்பெயர்=குருகு, காலாயுதம், குக்குடம், ஆண்டலைப்புள், வாரணம். ௫.

ஊர்க்குருவியின்பெயர்=குலிங்கம், சடகம், புலிங்கம். ௩.
நிலங்கின்பெயர்=பூழ். ௧.
கானங்கோழியின்பெயர்—காதம்பம். ௧.
வானம்பாடியின்பெயர்=கலிங்கம், கம்புள். ௨.
காடையின்பெயர்=குறும்பூழ். ௧.
சிவலின்பெயர்=கோரசம், புல், இதல். ௩.

கவுதாரியின்பெயர்=சிரவம். ௧. பகண்டையின்பெயர்=சில்லை. ௧.
பொய்யாப்புள்ளியின்பெயர்=சலாங்கு. ௧.
காகத்தின்பெயர்=கரடம், வாயசம், அரிட்டம், கரும்பிள்ளை, கொடி. ௫. ஆந்தையின்பெயர்=இருடி, பிங்கலை, கின்னரம். ௩.

கரும்புறாவின்பெயர்=பாராவதம், கபோதம். ௨.
புறாப்பொதுவின்பெயர்=தூதுணம், கபோதம், களரவம். ௩.
மாடப்புறாவின்பெயர்=கன்மேய்வு, காளபதம். ௨.
உள்ளான்பெயர்=உள்ளல். ௧.
தூக்கணங்குருவியின்பெயர்=சிதகம். ௧.

கருதியகம்புள்சம்பங்கோழியாங்கவுஞ்சமன்றில்
குருகுவண்டானமென்பகொய்யடிநாரையின்பேர்
பெருகியபிதாவேபோதாப்பெருநாரைசிகரியொன்றே
கருநிறநாரைவெள்ளைநாரைசாரசமென்றாமே. (௯௨)

மன்னுநீர்க்காக்கையர்க்கமற்றுங்காரண்டமும்பேர்
பன்னியகுரண்டங்கொக்காம்வலாகமும்பகமும்பேர்
உன்னமேகிராமமற்றையுற்குரோசத்தினோடு
கின்னரமின்னநீரிற்கிளர்ந்தெழுபறவையாமே. (௯௩)

அரியளிஞிமிறுமந்தியறுபதஞ்சிலீமுகஞ்சஞ்
சரிகமேசரகமேசஞ்சாளிகஞ்சுரும்புகீடம்
பிரமரமாவேகீதம்பிருங்கமேபிரசம்புள்ளு
வரிகொள்புண்டரீகந்தும்பிமதுபனாலைந்தும்வண்டாம். (௯௪)

கரும்புளேகேசவந்தேன்கண்டபெண்வண்டினுமம்
சுரும்பொடுமதுகரங்கள்சொற்றிடுந்தும்பியாண்பேர்
துருஞ்சிலாலாலமென்பசோர்விலஞ்சலிகைவாவல்
தருங்கோபமீயன்மூதாச்சரகமேபிரசந்தேனீ. (௯௫)

சிதடிசில்லிகையேசில்லைசிள்வீடுசிமிலியும்பேர்
பதமுறுசலபம்விட்டிற்பறவையாம்பதங்கமும்பேர்
விதமுறுநுளம்புதானேநிலத்திமின்மினிகச்சோதம்
கொதுகின்பேர்மசகந்துள்ளல்கூறின்மற்றசவலும்பேர். (௯௬)

## பறவையாண் பெண்மரபு.

மயிலெழாலல்லாப்புள்ளின்வகுத்தவாண்சேவலென்ப
மயிலெழாலெனுமிரண்டில்வாய்த்தவாண்போத்ததாகும்
ஆயர்வுறுகோழிகூகையல்லாப்பெண்ணளகென் * றோதார்
பெயர்பெறுமெல்லாப்புள்ளின்பெண்பெடைபெட்டைபேடை. ()

விகங்கமாசுகியேவீயேவிகிரமேகுடிஞைபக்கி
சகுந்தம்பத்திரிபதங்கந்தாழ்பிணிமுகத்தினோடு
பகர்ந்திடுங்ககமேகோலப்பறவையேபதகம்போகில்
புகழ்ந்திடுகுரீஇமூவைந்தும்புட்பொதுவயானமும்பேர். (௯௮)

* "கோழிகூகையல்லாப் பெண்ணளகென்றோதும்" என்று பாடஞ்சொல்வாருமுளர். அது தொல்காப்பியப் பொருளதிகாரத்து மரபியலில், "கோழிகூகையாயிரண்டல்லவை சூழுங் காலையளகெனலமையா" என்னும், ௫௫-ஞ் சூத்திரத்திற்கு மாறுபடுதலிற் பொருந்தாதென்க. மயிலின்பெண்ணும் அளகெனப்படும். அது, "அப்பெயர்க்கிளவி மயிற்குமுரித்தே" என்னும், ௫௬-ஞ் சூத்திரத்தா லறிக.



சம்பங்கோழியின்பெயர் = கம்புள். ௧.
அன்றிலின்பெயர் = கவுஞ்சம். ௧.
கொய்யடிநாரையின்பெயர் = குருகு, வண்டானம். ௨.
பெருநாரையின்பெயர் = பிதா, போதா. ௨.
கருநாரையின்பெயர் = சிகரி. ௧.
வெள்ளைநாரையின்பெயர் = சாரசம். ௧.

நீர்க்காக்கையின்பெயர் = அர்க்கம், காரண்டம், ௨.
கொக்கின்பெயர் = குரண்டம், வலாகம், பகம். ௩.
நீர்வாழ்பறவையின்பெயர் = உன்னம், கிராமம், உற்குரோசம், கின்னரம். ௪.

வண்டின்பெயர் = அரி, அளி, ஞிமிறு, மந்தி, அறுபதம், சிலீமுகம், சஞ்சரிகம், சரகம், சஞ்சாளிகம், சுரும்பு, கீடம், பிரமரம், மா, கீதம், பிருங்கம், பிரசம், புள், புண்டரீகம், தும்பி, மதுபம். ௨௦.

பெண்வண்டின்பெயர் = கரும்புள், கேசவம், தேன். ௩.
ஆண்வண்டின்பெயர் = சுரும்பு, மதுகரம், தும்பி. ௩.
துருஞ்சிலின்பெயர் = ஆலாலம். ௧.
வாவலின்பெயர் = அஞ்சலிகை. ௧.
இந்திரகோபத்தின்பெயர் = ஈயல், மூதா. * ௨.
தேனீயின்பெயர் = சரகம், பிரசம். ௨.

சிள்வீட்டின்பெயர் = சிதடி, சில்லிகை, சில்லை, சிமிலி. ௪.
விட்டிற்பறவையின்பெயர் = சலபம், பதங்கம். ௨.
நுளம்பின்பெயர் = நிலத்தி. ௧.
மின்மினியின்பெயர் = கச்சோதம். ௧.
கொதுகின்பெயர் = மசகம், துள்ளல், அசவல். ௩.

## பறவையாண் பெண்மரபு.

மயிலும் எழாலுமல்லனவாகிய புள்ளினாண்பெயர் = சேவல். ௧.
மயில்எழாலென்னுமிரண்டினாண்பெயர் = போத்து. ௧.
கோழிகூகைகளின்பெண்பெயர் = அளகு. ௧.
பறவைப்பெண்ணின்பெயர் = பெடை, பெட்டை, பேடை. ௩.

புட்பொதுவின்பெயர் = விகங்கம், ஆசுகி, வீ, விகிரம், குடிஞை, பக்கி, சகுந்தம், பத்திரி, பதங்கம், பிணிமுகம், ககம், பறவை, பதகம், போகில், குரீஇ, வயானம். ௧௬.

* ஈயன்மூதா என ஒருபெயராகக் கொள்வாருமுளர்.

சிறகொடுசதனம்வாசஞ்சிறைபிஞ்சங்கூரல்பக்கம்
பறைசதந்தூவிதோகைபத்திரங்குரலேகூழை
இறையெனவுரைத்தமூவைந்தேற்றதுமிறகின்பேரே
அறைதருமரிட்டங்கோசமண்டமேசினையேமுட்டை. (௬௯)

பிள்ளையும்பார்ப்புங்குஞ்சின்பேர்சுச்சுச்சுவவுதுண்டம்
ஒள்ளியவலகுமூக்காமோசனிக்கின்றதென்ப
புள்ளெழச்சிறகடித்துப்புடைத்தலினாமமாகும்
துள்ளுபுள்ளீட்டத்தோசைதுழனியாந்தொழுதிகூட்டம். (௭௦)

கலைசுறாமீனேறென்பகாட்டியமகரமாகும்
செலமுறுயானைமீனேதிமிபெருமீனினாமம்
அலைவுறுதிமிங்கிலப்பேரானையைவிழுங்குமீனும்
மலைதிமிங்கிலகிலந்தான்மற்றதைவிழுங்குமீனே. (௭௧)

நலந்தருநந்துசுத்திநாகொடுவளைகம்புக்கோ
டிலங்கியவாரணம்வண்டிடம்புரிவெள்ளைசங்காம்
வலம்புரிநாமந்தானேவைத்தகொக்கரையென்றோதும்
சலஞ்சலம்பணிலமென்றுசாற்றினரேற்றநூலோர். (௭௨)

இப்பியாயிரமேசூழ்ந்ததிடம்புரியென்றகூறும்
ஒப்பில்சங்காயிரஞ்சூழுறுவலம்புரியென்றோதும்
அப்படியதுவுஞ்சூழ்ந்தசலஞ்சலமாகுமற்றைத்
தப்பிலாச்சலஞ்சலங்கள்சார்ந்ததுபாஞ்சசன்னியம். (௭௩)

இடங்கர்சிஞ்சுமாரம்வன்மீனெழிற்கராமுதலையின்பேர்
கொடுந்திறற்கராமற்றாண்பேர்கூர்மமேயுறப்படக்கி
ஒடுங்குகச்சபமேயாமைகமடமுமுரைக்கற்பாற்றாம்
மடங்கியதுளிபெண்ணாமைமலங்கின்பேர்நாறையென்ப. (௭௪)

ஏரலோடெருந்தேயூரல்கிளிஞ்சிலாமிறவிறான்மீன்
ஆரலேயாராலின்பேர்கெண்டைமீன்சபரஞ்சேலாம்
ஊர்கருநந்தாநத்தைநாகுமாமுருவேயட்டை
நீருறுமயிலைமற்சநெடும்புழன்மீன்பொதுப்பேர். (௭௫)



இறகின்பெயர்=சிறகு, சதனம், வாசம், சிறை, பிஞ்சம், கூரல், பக்கம், பறை, சதம், தூவி, தோகை, பத்திரம், குரல், கூழை, இறை. ௧௫.
முட்டையின்பெயர்=அரிட்டம், கோசம், அண்டம், சினை. ௪.
பறவைக்குஞ்சின்பெயர்=பிள்ளை, பார்ப்பு. ௨.

பறவைமூக்கின்பெயர்=சுச்சு, சுவவு, துண்டம், அலகு. ௪.
புட்சிறகடித்துப்புடைத்தலின்பெயர்=ஓசனித்தல். ௧.
புள்ளீட்டத்தினோசையின்பெயர்=துழனி. ௧.
பறவைக்கூட்டத்தின்பெயர்=தொழுதி. ௧.

மகரமீனின்பெயர்=கலை, சுறா, மீனேறு. ௩.
பெருமீனின்பெயர்=யானைமீன், திமி. ௨.
யானைமீனைவிழுங்குமீனின்பெயர்=திமிங்கிலம். ௧.
திமிங்கிலத்தைவிழுங்குமீனின்பெயர்=திமிங்கிலகிலம். ௧.

சங்கின்பெயர்=நந்து, சுத்தி, நாகு, வளை, கம்பு, கோடு, வாரணம், வண்டு, இடம்புரி, வெள்ளை. ௧௦.
வலம்புரிச்சங்கின்பெயர்=கொக்கரை. ௧.
சலஞ்சலத்தின்பெயர்=பணிலம். ௧.

இடம்புரி=இப்பியாயிரஞ்சூழ்ந்தது.
வலம்புரி=இடம்புரிச்சங்காயிரஞ்சூழ்ந்தது.
சலஞ்சலம்=வலம்புரியாயிரஞ்சூழ்ந்தது.
பாஞ்சசன்னியம்=சலஞ்சலங்களாயிரஞ்சூழ்ந்தது.

முதலையின்பெயர்=இடங்கர், சிஞ்சுமாரம், வன்மீன், கராம். ௪.
ஆண்முதலையின்பெயர்=கராம். ௧.
ஆமையின்பெயர்=கூர்மம், உறுப்படக்கி, கச்சபம், கமடம். ௪.
பெண்ணாமையின்பெயர்=துளி. ௧.
மலங்கின்பெயர்=நாறை. ௧.

கிளிஞ்சிலின்பெயர்=ஏரல், எருந்து, ஊரல். ௩.
இறான்மீனின்பெயர்=இறவு. ௧.
ஆரான்மீனின்பெயர்=ஆரல். ௧.
கெண்டைமீனின்பெயர்=சபரம், சேல். ௨.
நத்தையின்பெயர்=கருநந்து, நாகு. ௨. அட்டையின்பெயர்=உரு. ௧.
மீன்பொதுப்பெயர்=மயிலை, மற்சம், புழல். ௩.

புள்ளியேகெவுளிபல்லிபோற்றுங்கோகிலமுமப்பேர்
கொள்ளைநாகரவண்டின்பேருலூதையேநோன்சிலம்பி
ஒள்ளியபிலஞ்சுலோபம்பிபீலிகையூரெறும்பாம்
தெள்ளுநாங்கூழ்பூநாகஞ்சிதலையேகறையான்செல்லே. (௭௬)

நளிவிடந்தெறுக்காறுட்டனாட்டியவிருச்சிகந்தேள்
களவனேகுளிரநள்ளிகவைத்தாள்கர்க்கடகஞெண்டே
உளுவுசுவாகுமென்பவுற்றமண்டூகந்தேரை
தளரரிநுணலைநீகந்தவளையாம்பேகமும்பேர். (௭௭)

கிருமியேபுழுப்பொட்டும்பேர்கீடங்கோற்புழுவுலண்டாம்
பிரசங்கோற்றேனிறாலேபேசியதேனின்கூடாம்
விரவியவிலங்கினீட்டம்விருத்தமோரெழுபத்தெட்டும்
வருமுறையுரைத்தான்வீரைமன்னன்மண்டலவன்றானே. (௭௮)

விலங்கின்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம்—௨௮௫.

நான்காவது

## மரப்பெயர்த்தொகுதி.

### காப்பு.

திருக்கிளர்தேவர்கோமானேவலிற்குபேரன்செய்த
விருப்புறுபொன்னெயிற்குள்விளங்கவெண்ணெழுத்திரண்டும்
பரப்பியவாதிமூர்த்திபங்கயப்பாதம்போற்றி
மரப்பெயர்த்தொகுதிதன்னைவருமுறைகூறலுற்றாம். (௧)

சந்தானம்வேண்டிற்றெல்லாந்தருமரிசந்தனம்பூ
மந்தாரம்பாரிசாதங்கற்பகமற்றோரைந்தாம்
சந்தாரஞ்சாந்துசாந்தஞ்சந்திரதிலகத்தோடு
வந்தேறுபடீரம்பூசுமலயசஞ்சந்தனப்பேர். (௨)



பல்லியின்பெயர் = புள்ளி, கெவுளி, கோகிலம். ௩.
நாகரவண்டின்பெயர் = கொள்ளை. ௧.
சிலம்பியின்பெயர் = உலூதை. ௧.
எறும்பின்பெயர் = பிலஞ்சுலோபம், பிபீலிகை. ௨.
பாங்கூழின்பெயர் = பூநாகம். ௧.
செல்லின்பெயர் = சிதலை, கறையான். ௨.

தேளின்பெயர் = நளிவிடம், * தெறுக்கால், துட்டன், விருச்சிகம். ௪.
ஞெண்டின்பெயர் = களவன், குளிரம், நள்ளி, கவைத்தாள், கர்க்கடகம். ௫. உளுவின்பெயர் = உசு. ௧.
தவளையின்பெயர் = மண்டூகம், தேரை, அரி, நுணலை, நீகம், பேகம். ௬.

புழுவின்பெயர் = கிருமி, பொட்டு. ௨.
உலண்டின்பெயர் = கீடம், கோற்புழு. ௨.
கோற்றேனின்பெயர் = பிரசம். ௧.
தேன்கூட்டின்பெயர் = இறால். ௧.

## பெயர்ப்பிரிவு.

இ - ள். திருக் கிளர் தேவர் கோமான் ஏவலில் குபேரன் செய்த விருப்பு உறு பொன் எயிற்குள் - அழகு நிறைந்த தேவர்க்கரசனாகிய இந்திரனது ஏவலினாலே குபேரன் இயற்றிய விருப்பம் பொருந்திய பொன்மதிற்குள் (எழுந்தருளியிருந்துகொண்டு), — எண் எழுத்து இரண்டும் விளங்கப் பரப்பிய - கணிதமும் இலக்கணமுமாகிய இரண்டையும் விளங்கும்படி பரப்பிய,— ஆதிமூர்த்தி பங்கயப் பாதம் போற்றி - அருகக்கடவுளுடைய செந்தாமரை மலர்போலும் திருவடிகளைத் துதித்து,— மரப்பெயர்த் தொகுதி தன்னை வரும் முறை கூறலுற்றாம் - மரப்பெயர்த்தொகுதியை வருமுறையே (யாம்) சொல்லலுற்றாம், எ - று.

ஐந்தருவாவன = சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம். ௫.

சந்தனமரத்தின்பெயர் = சந்து, ஆரம், சாந்து, சாந்தம், சந்திரதிலகம், படீரம், மலயசம். ௭.

* நளி, விடம் என இருபெயராகக் கொள்வாருமுளர்.

மகிழுமக்கற்பகத்தில்வளர்கொடிகாமவல்லி
அகருவேகாகதுண்டமகிலென்பபூழிலும்பேர்
பகரும்புன்காலியோடுபாடலம்பாதிரிப்பேர்
வகுளமேயிலஞ்சியென்பமகிழாங்கேசரமுமாமே. (௩)

மன்னியகோங்கினும்வருந்துருமோற்பலம்பூங்
கன்னிகாரமுமாமென்பசம்பகஞ்சண்பகப்பேர்
புன்னைபுன்னாகநாகம்வழைசுரபுன்னைப்பேரே
நன்னிறநரந்தநாரநாரங்கநாரத்தைப்பேர். (௪)

குருகுநாகரிவாசந்திமாதவிகுருக்கத்திப்பேர்
தருசிறுசண்பகப்பேர்சாதிமாலதியுமாகும்
கருமுகைபித்திகைப்பேர்திலகமஞ்சாடிகாட்டும்
மருகுதான்மகரவாழைவனமல்லிகைப்பேர்மௌவல். (௫)

மல்லிகையேபூருண்டிமாலதியனங்கமும்பேர்
அல்லிபுன்காலிகாசையஞ்சனிபூவைகாயாக்
குல்லையேசெச்சைவெட்சிகொந்தார்சிந்தூரமும்பேர்
குல்லைபூந்துளவினோடுதுழாய்வனந்துளசிகூறும். (௬)

செங்கோடுபஞ்சரந்தான்செருந்தியேபொருந்திநிற்கும்
அங்கோலஞ்சேவழிஞ்சில்சேமரமென்றுமாகும்
கொங்காருந்துருக்கமென்பகுங்குமமரவமும்பேர்
அங்கானவனிச்சந்தானேயருப்பலநறவஞ்சுள்ளி. (௭)

கரவீரங்கவீரமற்றைக்கணவீரமலரியின்பேர்
விரைமேவுதமனகந்தான்மேவியமருக்கொழுந்தே
இருவேலிமூலகந்தம்வேரிபீதகமுமேற்கும்
மருமேவுமிருவாட்சிக்குமயிலையுமனங்கமும்பேர். (௮)

முண்டகமுடங்கல்கைதைமுசலியேமடியேதாழை
கண்டல்கேதகையுமப்பேர்பறிவைபட்டிகையேகாட்டும்
வண்டுளர்வலம்புரிப்பேர்நந்தியாவர்த்தமென்ப
விண்டபூஞ்செவ்வரத்தமேவுமந்தாரமாமே. (௯)

தாலமேபெண்ணைபுல்லுத்தாளிபுற்பதிபனைப்பேர்
தாலமேகூந்தற்பூகந்தருகந்திபூகம்பூக்கம்
சாலநீள்கமுகுமுப்பேர்சாற்றிடுந்துவர்க்காய்பாகு
கோலமென்றிந்தமூன்றுங்குறித்தபாக்கிற்குநாமம். (௧௦)



கற்பகதருவிற்படர்கொடியின்பெயர்=காமவல்லி. ௧
அகிலின்பெயர்=அகரு, காகதுண்டம், பூழில். ௩
பாதிரிமரத்தின்பெயர்=புன்காலி, பாடலம். ௨
மகிழமரத்தின்பெயர்=வகுளம், இலஞ்சி, கேசரம். ௩
கோங்குமரத்தின்பெயர்=துருமோற்பலம், கன்னிகாரம், ௨
சண்பகமரத்தின்பெயர்=சம்பகம். ௧
புன்னைமரத்தின்பெயர்=புன்னாகம், நாகம். ௨
சுரபுன்னையின்பெயர்=வழை. ௧
நாரத்தையின்பெயர்=நரந்தம், நாரம், நாரங்கம். ௩

குருக்கத்தியின்பெயர்=குருகு, நாகரி, வாசந்தி, மாதவி. ௪
சிறுசண்பகத்தின்பெயர்=சாதி, மாலதி. ௨
பித்திகையின்பெயர்=கருமுகை. ௧
மஞ்சாடியின்பெயர்=திலகம். ௧
மகரவாழையின்பெயர்=மருகு. ௧
வனமல்லிகையின்பெயர்=மௌவல். ௧

மல்லிகையின்பெயர்=பூருண்டி, மாலதி, அனங்கம். ௩
காயாவின்பெயர்=அல்லி, புன்காலி, காசை, அஞ்சனி, பூவை. ௫
வெட்சியின்பெயர்=குல்லை, செச்சை, சிந்தூரம். ௩
துளசியின்பெயர்=குல்லை, துளவு, துழாய், வனம். ௪

செருந்திமரத்தின்பெயர்=செங்கோடு, பஞ்சரம். ௨
அழிஞ்சிலின்பெயர்=அங்கோலம், சே, சேமரம். ௩
குங்குமமரத்தின்பெயர்=துருக்கம், மரவம். ௨
அனிச்சமரத்தின்பெயர்=அருப்பலம், நறவம், சுள்ளி. ௩

அலரியின்பெயர்=கரவீரம், கவீரம், கணவீரம். ௩
மருக்கொழுந்தின்பெயர்=தமனகம். ௧
இருவேலியின்பெயர்=மூலகந்தம், வேரி, பீதகம். ௩
இருவாட்சியின்பெயர்=மயிலை, அனங்கம். ௨

தாழையின்பெயர்=முண்டகம், முடங்கல், கைதை, முசலி, மடி,
கண்டல், கேதகை. எ. பட்டிகையின்பெயர்=பறிவை. ௧
நந்தியாவர்த்தத்தின்பெயர்=வலம்புரி. ௧
செவ்வரத்தத்தின்பெயர்=மந்தாரம். ௧

பனையின்பெயர்=தாலம், பெண்ணை, புல், தாளி, புற்பதி. ௫
கூந்தற்பூகத்தின்பெயர்=தாலம். ௧
கமுகின்பெயர்=கந்தி, பூகம், பூக்கம். ௩
பாக்கின்பெயர்=துவர்க்காய், பாகு, கோலம். ௩

பனசமேவருக்கைபாகல்பலவிவைபலாவின்பேரே
அனையவீரப்பலாவேயாசினியென்பதாகும்
வினவியமாந்திசூதமேவுமாமிரமேகொக்கே
சினைபடுமாழைமாவாஞ்சேதாரந்தேமாவின்பேர். (௧௧)

தாழைதென்னளிகேரமிலாங்கலிதாந்தெங்கின்பேர்
சூழுநெய்யரிபன்னாடைசொல்லியநாரியும்பேர்
வாழையேகதலியாகுமற்றரம்பையுமதன்பேர்
வேழமேகன்னலிக்குமென்கழைகரும்புநாற்பேர். (௧௨)

காம்புபாதிரிமுடங்கல்கழைபணைவிண்டுநேமி
தூம்புவேய்தட்டைமுந்தூழ்துளைகிளைமுளையேவேணு
ஆம்பல்கீசகம்வேல்வேரலரியமைதிகிரிவேழம்
மேம்படுவரைமூவெட்டுமூங்கிலாம்வெதிருமப்பேர். (௧௩)

வடமுடனியக்குரோதம்பூதங்கான்மரம்வானோங்கிப்
படருந்தொன்மரமேகோளிபழுமரமாலின்பேரே
குடகம்வெட்பாலையென்பகிரிமல்லிகையுமேகூறும்
உடையென்பகுடைவேலாகுமுறுகரஞ்சகமேபுன்கு. (௧௪)

விரைசெறிசெயலைபிண்டிமேவுகாகோளிமூன்றும்
அருகனெம்மானிருந்தேயறம்பகரசோகின்பேராம்
அரசின்பேர்சுவலைகுஞ்சராசனமச்சுவத்தம்
திருமரம்பணையேபோதிகணவம்பிப்பலமும்செப்பும். (௧௫)

சிந்தகமாமிலஞ்சிந்தூரமேயெகின்புளிப்பேர்
திந்திடீகமுமப்பேரேதேக்கின்பேர்சாகஞ்சாதி
வந்தெழுமிதழிதாமமதலையேகடுக்கைகொன்றை
முந்துகிஞ்சுகத்தினோடுகவிருமுண்முருக்கினாமம். (௧௬)

சம்புநேரேடுநாவல்சாதேவங்குழிநாவற்பேர்
நிம்பமேவேம்பினாமநீள்பிசுமர்த்தமும்பேர்
சம்பீரமுருகினோடுசதாபலமெலுமிச்சைப்பேர்
அம்புவியிலிகுசத்தோடருணஞ்சம்பளமுநாட்டும். (௧௭)

அதவுடனுதும்பரங்கள்கோளியேயதமேயத்தி
இதமுறுமாழைசிஞ்சமெகின்மூன்றும்புளிமாவின்பேர்
வதரிகோற்கொடியிலந்தைவளர்கோலிகுவலியும்பேர்
விதமுறுகோலங்கோண்டைவினவிலக்கனியின்பேரே. (௧௮)



பலாமரத்தின்பெயர்=பனசம், வருக்கை, பாகல், பலவு. ௪
ஈரப்பலாவின்பெயர்=ஆசினி. ௧
மாமரத்தின்பெயர்=மாந்தி, சூதம், ஆமிரம், கொக்கு, மாழை. ௫
தேமாவின்பெயர்=சேதாரம், [சககாரம்] ௧

தெங்கின்பெயர்=தாழை, தென், நாளிகேரம், இலாங்கலி. ௪
பன்னாடையின்பெயர்=நெய்யரி, நாரி. ௨
வாழையின்பெயர்=கதலி, அரம்பை. ௨
கரும்பின்பெயர்=வேழம், கன்னல், இக்கு, கழை ௪

மூங்கிலின்பெயர்=காம்பு, பாதிரி, முடங்கல், கழை, பணை, விண்டு, நேமி, தூம்பு, வேய், தட்டை, முந்தூழ், துளை, கிளை, முளை, வேணு, ஆம்பல், கீசகம், வேல், வேரல், அரி, அமை, திகிரி, வேழம், வரை, வெதிர். ௨௫

ஆலமரத்தின்பெயர்=வடம், நியக்குரோதம், பூதம், கான்மரம், தொன்மரம், கோளி, பழுமரம். ௭
வெட்பாலையின்பெயர்=குடசம், கிரிமல்லிகை. ௨
குடைவேலின்பெயர்=உடை. ௧
புன்கமரத்தின்பெயர்=கரஞ்சகம். ௧

அசோகமரத்தின்பெயர்=செயலை, பிண்டி, காகோளி. ௩
அரசமரத்தின்பெயர்=சுவலை, குஞ்சராசனம், அச்சுவத்தம், திருமரம், பணை, போதி, கணவம், பிப்பலம். ௮

புளியமரத்தின்பெயர்=சிந்தகம், ஆமிலம், சிந்தூரம், எகின், திந்திடீகம். ௫. தேக்கின்பெயர்=சாகம், சாதி. ௨
கொன்றையின்பெயர்=இதழி, தாமம், மதலை, கடுக்கை. ௪
முண்முருக்கின்பெயர்=கிஞ்சுகம், கவிர். ௨

நாவலின்பெயர்=சம்பு, நேரேடு. ௨
குழிநாவலின்பெயர்=சாதேவம். ௧
வேம்பின்பெயர்=நிம்பம், பிசுமர்த்தம். ௨
எலுமிச்சையின்பெயர்=சம்பீரம், முருகு, சதாபலம், இலிகுசம், அருணம், சம்பளம். ௬

அத்திமரத்தின்பெயர்=அதவு, உதும்பரம், கோளி, அதம். ௪
புளிமாவின்பெயர்=மாழை, சிஞ்சம், எகின். ௩
இலந்தையின்பெயர்=வதரி, கோற்கொடி, கோலி, குவலி. ௪
இலந்தைக்கனியின்பெயர்=கோலம், கோண்டை. ௨

மாதுளமாதுளுங்கங்கழுமுளேமாதுளைப்பேர்
தாதுமாதுளையினுமந் தாடிமமென்றேசாற்றும்
சாதிவேத்திரமேசூரல்சாற்றியபிரம்புமுப்பேர்
தாதகியாத்தியாரேசல்லகியெல்லாமொன்றும். (ககூ)

சில்லமேயில்லந்தேற்றூஞ்சீரீடமேபாண்டில்வாகை
வில்லமாலூரமேகூவிளமிவைவில்வப்பேரே
புல்லியபசுநாவிட்டில்புக்கிவைபராயின்பேரே
பல்லிணர்க்கிலுகிலுப்பைபகன்றையாமுலவையோடை (உ௦)

குரவகமென்பவாடாக்குறிஞ்சியாங்குரண்டகந்தான்
பெருகியகுறிஞ்சியாகும்பேரீந்தின்பேர்கர்ச்சூரங்
குரவமேகோட்டமென்பமழைவண்ணக்குறிஞ்சிபாணம்
தருகரமஞ்சரிப்பேர்சாற்றுநாயுருவியாமே. (உக)

தளவுமாகதியேமௌவல்யூதிகைமுல்லைசாற்றும்
களவென்பகளாவினுமங்கதிரமேகருங்காலிப்பேர்
விளவொடுகபித்தம்வெள்ளில்விளாக்கடிப்பகையினேடு
விளையுமையவிசித்தார்த்தம்வெண்சிறுகடுகிம்முப்பேர். (உஉ)

மருதுபூதவத்திேனடுமற்றருச்சுனமுமேமற்கும்
பெருகியகணியும்பீதசாலமுந்திமிசும்வேங்கை
திருமிகுமதுரசங்கோத்தனியேமுந்திரிகையாகும்
வருமதிமதுரம்யட்டிமதுகமேயதிங்கமென்ப. (உங)

காந்தள்செங்காந்தள்பற்றையிலாங்கலிதோன்றியும்பேர்
காந்துகங்கோடல்கோடைகருதுவெண்காந்தளாகும்
பூந்துணர்ப்பலாசுதானேபுனமுருக்கின்பேரென்ப
சாய்ந்தெழுசமியேவன்னிநுணவின்பேர்தணக்குத்தானே. (உச)

குந்தமேகுருந்தமென்பகுமிழ்கூம்பல்குஞ்சங்குன்றி
இந்துளமராகதம்பமியைந்தநீபங்கடம்பாம்
சிந்துவாரந்நிர்க்குண்டிசெப்பில்வெண்ணொச்சியாகும்
தந்தசத்திக்கொடிப்பேர்தாடிமஞ்சந்தானுமே. (உரு)

அரிதகிபத்தியங்கள்கடுவேயாமலகநெல்லி
கருதியதான்றிதானேகலித்துருமந்தானும்
பரவுமாகதிகாமன்றிப்பலியென்பகலினியும்பேர்
உருளரிசிப்பேர்கொத்துமலியெனவுரைக்கலாமே. (உசு)



மாதுளையின்பெயர் = மாதுளம், மாதுளுங்கம், கழுமுள். ங
தாதுமாதுளையின்பெயர் = தாடிமம். க
பிரம்பின்பெயர் = சாதி, வேத்திரம், சூரல். ங
ஆத்தியின்பெயர் = தாதகி, ஆர், சல்லகி. ங
தேற்றுமரத்தின்பெயர் = சில்லம், இல்லம். உ
வாகைமரத்தின்பெயர் = சீரீடம், பாண்டில். உ
வில்வமரத்தின்பெயர் = வில்லம், மாலூரம், கூவிளம். ங
பராய்மரத்தின்பெயர் = பசுநா, விட்டில், புக்கு. ங
கிலுகிலுப்பையின்பெயர் = பகன்றை. க
ஓடையின்பெயர் = உலவை. க
வாடாக்குறிஞ்சியின்பெயர் = குரவகம். க. குறிஞ்சியின்பெயர் = குரண்டகம். க. பேரீந்தின்பெயர் = கர்ச்சூரம். க. கோட்டத்தின்பெயர் = குரவம். க. மழைவண்ணக்குறிஞ்சியின்பெயர் = பாணம். க. நாயுருவியின்பெயர் = கரமஞ்சரி. க

முல்லையின்பெயர் = தளவு, மாகதி, மௌவல், யூதிகை. ச
களாவின்பெயர் = களவு க. கருங்காலியின்பெயர் = கதிரம். க
விளாவின்பெயர் = விளவு, கபித்தம், வெள்ளில். ங
வெண்கடுகின்பெயர் = கடிப்பகை, ஐயவி, சித்தார்த்தம். ங

மருதமரத்தின்பெயர் = பூதவம், அருச்சுனம். உ
வேங்கைமரத்தின்பெயர் = கணி, பீதசாலம், திமிசு. ங
முந்திரிகையின்பெயர் = மதுரசம், கோத்தனி. உ
அதிமதுரத்தின்பெயர் = யட்டி, மதுகம், அதிங்கம். ங
செங்காந்தளின்பெயர் = காந்தள், பற்றை, இலாங்கலி, தோன்றி. ச
வெண்காந்தளின்பெயர் = காந்துகம், கோடல், கோடை. ங
புனமுருக்கின்பெயர் = பலாசு. க
வன்னியின்பெயர் = சமி. க. நுணவின்பெயர் = தணக்கு. க

குருந்தமரத்தின்பெயர் = குந்தம். க
குமிழின்பெயர் = கூம்பல். க. குன்றியின்பெயர் = குஞ்சம். க
கடம்பின்பெயர் = இந்துளம், மரா, கதம்பம், நீபம். ச
வெண்ணொச்சியின்பெயர் = சிந்துவாரம், நிர்க்குண்டி. உ
சத்திக்கொடியின்பெயர் = தாடிமஞ்சம். க

கடுமரத்தின்பெயர் = அரிதகி, பத்தியம். உ
நெல்லியின்பெயர் = ஆமலகம். க
தான்றியின்பெயர் = கலித்துருமம். க
திப்பலியின்பெயர் = மாகதி, காமன், கலினி. ங
கொத்துமலியின்பெயர் = உருளரிசி. க

கன்னிகாக்கணமிரண்டுங்கருவிளைகிகிணியும்பேர்
முன்னமேதுரிஞ்சிலின்பேர்மொழிந்தசீக்கிரியுமாகும்
மன்னியவாடாதோடைவாசையென்றறையலாமே
பன்னல்கார்ப்பாசமின்னபருத்தியின்பெருத்தநாமம். (உஎ)

இத்தியேசுவியிரத்தியிரத்திரியிறலியாகும்
சித்திரகம்மேரண்டஞ்சிறந்தவாமணக்கினுமம்
வைத்திடுமிருப்பைதானேமதுகமாங்குலிகமும்பேர்
கைத்தகோடரமேகாளங்காஞ்சிரைமுட்டியெட்டி. (உஅ)

செங்கருங்காலிநாமஞ்சிறுமாரோடந்தானுகும்
தங்கியசாலஞ்சுள்ளிமராமரமாவேயாச்சா
பொங்கர்சான்மலியினேடுபூரணியிலவமும்பேர்
வங்கமேவழுதலைப்பேர்வழுதுணையென்றுமாமே. (உ௯)

கழலினுமங்கர்ச்சூரங்கழற்காயேகழங்குமற்று
முழலுமாங்கற்றாழைப்பேர்முதிர்விலாக்குமரிகன்னி
இழைவுறுபுலிதொடக்கியிண்டுவாமீகையீங்கை
உழிஞையேசிறுபூளைப்பேருன்மத்தமூமத்தைப்பேர். (௩௦)

அச்சமேமுனிகரீரமகத்தியாமெருக்கருக்கம்
பச்சிலைமரந்தமாலம்பசும்பிடியென்றும்பேரே
சுச்சுவேசுண்டியென்பசமங்கையேவறட்சுண்டிப்பேர்
வச்சிராங்கங்கண்டீர்வம்வச்சிரஞ்சதுரக்கள்ளி. (௩க)

பல்லிணர்க்குளவிதானேமலைப்பச்சைபலினிஞாழல்
சில்லியேமேகநாதஞ்சாகினிசிறுகீரைப்பேர்
சொல்லியசகுடஞ்சேம்பாஞ்சூழ்ந்தநாளிகமேவள்ளை
நல்லநந்தைப்பேர்கொத்தானறுவிலியலியென்றுமே. (௩உ)

திரிபுரிசாறடைப்பேர்சிறந்தகூதளங்கூதாளி
விரவியவுருவாரந்தான்வெள்ளரிவிளங்குநாமம்
கருதுகக்கரிவாலுங்கிகண்டூதிகாஞ்சொறிப்பேர்
பரவுமஞ்சிகமேதாளிபகன்றையாஞ்சிவேதைதானே. (௩௩)

ஏலமாந்துடியோடாஞ்சியிரண்டுமேயிசங்கினுக்குக்
கோலுமுத்தாபலம்பேர்குண்டலியென்றுமாகும்
கூலமேகாரவல்லிகூறியபாகலின்பேர்
பாலையின்பேர்சீவந்திசீவனியென்றும்பன்னும். (௩௪)



கருவிளையின்பெயர்=கன்னி, காக்கணம், கிகிணி. ௩
துரிஞ்சிலின்பெயர்=முன்னம், சீக்கிரி. உ
ஆடாதோடையின் பெயர்=வாசை. க
பருத்தியின்பெயர்=பன்னல், கார்ப்பாசம். உ

இத்தியின்பெயர்=சுவி, இரத்தி, இரத்திரி, இறலி. ௪
ஆமணக்கின்பெயர்=சித்திரகம், ஏரண்டம். உ
இருப்பையின்பெயர்=மதுகம், குலிகம். உ
எட்டியின்பெயர்=கோடரம், காளம், காஞ்சிரை, முட்டி. ௪

செங்கருங்காலியின்பெயர்=சிறுமாரோடம். க
ஆச்சாமரத்தின்பெயர்=சாலம், சுள்ளி, மராமரம், ஆ. ௪
இலவமரத்தின்பெயர்=பொங்கர், சான்மலி, பூரணி. ௩
வழுதலையின்பெயர்=வங்கம், வழுதுணை. உ

கழற்கொடியின்பெயர்=கர்ச்சூரம். க. கழற்காயின்பெயர்=கழங்கு, முழல். உ. கற்றாழையின்பெயர்=குமரி, கன்னி. உ. புலிதொடக்கியின்பெயர்=இண்டு. க. ஈகையின்பெயர்=ஈங்கை. க. சிறுபூளையின்பெயர்=உழிஞை. க. ஊமத்தையின் பெயர்=உன்மத்தம். க

அகத்தியின்பெயர்=அச்சம்,முனி, கரீரம். ௩. எருக்கின்பெயர்=அருக்கம். க. பச்சிலைமரத்தின்பெயர்=தமாலம், பசும்பிடி. உ
சுண்டியின்பெயர்=சுச்சு.க. வறட்சுண்டியின்பெயர்=சமங்கை. க
சதுரக்கள்ளியின்பெயர்=வச்சிராங்கம், கண்டீர்வம், வச்சிரம். ௩

மலைப்பச்சையின்பெயர்=குளவி. க. ஞாழலின்பெயர்=பலினி. க
சிறுகீரையின்பெயர்=சில்லி, மேகநாதம், சாகினி. ௩
சேம்பின்பெயர்=சகுடம். க. வள்ளையின்பெயர்=நாளிகம். க
கொத்தான்பெயர்=நந்தை. க. நறுவிலியின்பெயர்=அலி. க

சாறடையின்பெயர்=திரிபுரி. க. கூதாளியின்பெயர்=கூதளம். க
வெள்ளரியின்பெயர்=உருவாரம். க. கக்கரியின்பெயர்=வாலுங்கி. க. காஞ்சொறியின்பெயர்=கண்டூதி. க. தாளியின் பெயர்=மஞ்சிகம். க. சிவேதையின்பெயர்=பகன்றை. க

ஏலத்தின்பெயர்=துடி, ஆஞ்சி. உ
இசங்கின்பெயர்=முத்தாபலம், குண்டலி. உ
பாகலின்பெயர்=கூலம், காரவல்லி. உ
பாலைமரத்தின்பெயர்=சீவந்தி, சீவனி உ

விம்பமேதொண்டைகொவ்வைபசிரிபாவிரிதுரோணம்
தும்பையேயலாபுமற்றைச்சுரைநூழில்கொடிக்கொத்தானும்
கொம்பர்சேர்முருங்கையேசிக்குருவடகிலைக்கறிப்பேர்
பம்பியபீரம்பீர்க்காம்படலிகைபெரும்பீர்க்காமே. (௩௫)

பரவுபாற்சொற்றிநாமம்பாயசமென்றுகூறும்
விரவியவமுதவல்லிமேயசீவந்திசீந்தி
மருவியவிலதைவள்ளிவல்லிவண்கொடிமுப்பேராம்
சரமொடுகாசைகாசஞ்சாற்றிடுநாணலின்பேர். (௩௬)

நறியதாம்பூலவல்லிதாம்பூலிநாகவல்லி
செறிதருமிலைக்கொடிப்பேர்திரையன்மெல்லிலையுமாகும்
கறியொடுமரீசங்காயங்கலினைகோளகந்திரங்கல்
செறிதருமிளகினுமமிரியலுஞ்செப்பலாமே. (௩௭)

வரிசொல்லுவிரீகிசாலிவளர்நெல்லாம்யவமுமாகும்
தெரியுநன்னெல்லினோடுசெஞ்சாலிசெந்நெல்லின்பேர்
பரியும்பைங்கூழ்பசும்புல்பயிர்கதிர்குரலோடேனல்
பெருகியவிளஞ்சூல்பீட்டைபீளிளங்கதிரின்பேரே. (௩௮)

பழுதறபதரின்பேரேபதடியாம்போரேசும்மை
பொழியத்தூற்றுதநெல்லின்பொலியேபொங்கழியென்றாகும்
தழுவுகோதுமையேகோதிதண்டுலமரிசிதானே
வழுதுவைபலாலம்வைக்கோன்மலைநெல்லைவனமேவைக்கும். ()

தந்தவேயரிசிதோரைகுளநெல்லுத்தானீவாரம்
செந்தினைகவலைகம்பாந்தினையின்பேரேனலென்ப
பைந்தினைதானுமேனல்பகர்ந்திடுங்கருந்தினைப்பேர்
அந்தமாமிறடிகங்கேயருவியுமிருவியுந்தாள். (௪௦)

துவரையாடகமேயாமஞ்சூரமேகடலையின்பேர்
அவரைசிக்கடியேசிம்பையழுந்தியவுழுந்துமாடம்
கவர்தருபயறுமுற்கங்காணமேகுலத்தங்கொள்ளாம்
இவையெலாமுதிரைகூலமிதைகாராமணியினாமம். (௪௧)



கொவ்வையின்பெயர்=விம்பம், தொண்டை. ௨. பசிரியின்பெயர்=பாவிரி. ௧. தும்பையின்பெயர்=துரோணம். ௧. சுரையின்பெயர்=அலாபு. ௧. கொடிக்கொத்தான்பெயர்=நூழில். ௧. முருங்கையின்பெயர்=சிக்குரு. ௧. இலைக்கறியின்பெயர்=அடகு. ௧. பீர்க்கின்பெயர்=பீரம். ௧. பெரும்பீர்க்கின்பெயர்=படலிகை. ௧.

பாற்சொற்றியின்பெயர்=பாயசம். ௧
சீந்திக்கொடியின்பெயர்=அமுதவல்லி, சீவந்தி. ௨
கொடியின்பெயர்=இலதை, வள்ளி, வல்லி, ௩
நாணலின்பெயர்=சரம், காசை, காசம். ௩

வெற்றிலைக்கொடியின்பெயர்=தாம்பூலவல்லி, தாம்பூலி, நாகவல்லி, திரையல், மெல்லிலை. ௫
மிளகின்பெயர்=கறி, மரீசம், காயம், கலினை, கோளகம், திரங்கல், மிரியல். ௭
நெல்லின்பெயர்=வரி, சொல், விரீகி, சாலி, யவம். ௫
செந்நெல்லின்பெயர்=நன்னெல், செஞ்சாலி. ௨
பயிரின்பெயர்=பைங்கூழ், பசும்புல். ௨
கதிரின்பெயர்=குரல், ஏனல். ௨
இளஞ்சூலின்பெயர்=பீட்டை. ௧
இளங்கதிரின்பெயர்=பீள். ௧

பதரின்பெயர்=பதடி. ௧. நெற்போரின்பெயர்=சும்மை. ௧
தூற்றுதநெற்பொலியின்பெயர்=பொங்கழி. ௧
கோதுமையின்பெயர்=கோதி. ௧. அரிசியின்பெயர்=தண்டுலம். ௧
வைக்கோலின்பெயர்=வழுது, வை, பலாலம். ௩
மலைநெல்லின்பெயர்=ஐவனம். ௧
வேயரிசியின்பெயர்=தோரை. ௧
குளநெல்லின்பெயர்=நீவாரம். ௧
கம்பின்பெயர்=செந்தினை, கவலை. ௨
தினையின்பெயர்=ஏனல். ௧. பைந்தினையின்பெயர்=ஏனல். ௧
கருந்தினையின்பெயர்=இறடி, கங்கு. ௨
தினைத்தாளின்பெயர்=அருவி, இருவி. ௨

துவரையின்பெயர்=ஆடகம். ௧. கடலையின்பெயர்=மஞ்சூரம். ௧. அவரையின்பெயர்=சிக்கடி, சிம்பை. ௨. உழுந்தின்பெயர்=மாடம். ௧. பயற்றின்பெயர்=முற்கம். ௧. கொள்ளின்பெயர்=காணம், குலத்தம் ௨. துவரைகடலைமுதலியவற்றின்பெயர்=முதிரை, கூலம். ௨. காராமணியின்பெயர்=இதை. ௧

நண்ணியசொன்னல்சோளநாட்டியலிறுங்குமாமே
எண்ணொடுதிலமுநாவுமெட்கவ்வையிளங்காயின்பேர்
பண்ணியகுமிகைதானேபயனுறுமிளையெள்ளாகும்
மண்ணியவரகினுமமருவுகோத்திரவமாமே. (சஉ)

குசையொடுகுமுதங்கூர்ச்சங்குசந்தர்ப்பையென்றுகூறும்
பசையுறுபதமேதூர்வைபச்சறுகிளம்புல்சட்பம்
நிசியரிசனமேபீதநிகரில்காஞ்சனியேமஞ்சள்
நசையுறுமிஞ்சியல்லநறுமருப்பென்றுமாமே. (சங)

கருணையினுமங்கந்தஞ்சூரணமென்றுங்காட்டும்
தருவகலியம்விருக்கந்தாவரம்விடபிதாருத்
துருமமேகுசமென்றெட்டுஞ்சொல்லியமரப்பொதுப்பேர்
பரவுபூருகமேசாகிபாதபமென்றும்பன்னும். (சச)

மூலமேசகுனங்கந்தமூலகங்கிழங்கினுமம்
காலொடங்குரமுளைப்பேர்கருதுதூர்சிவையேவேராம்
கோலிபம்விடபங்கொம்பர்கோடரம்பொங்கர்சாகை
பாலமர்கவடுதாருப்பணைசினையுலவைகொம்பாம். (சரு)

கலையொடாசினியேசேகுகாழ்ப்புக்காழ்வயிரமாகும்
தலமடைதகடுபன்னஞ்சதனம்பத்திரம்பலாசம்
இலைதமாலமுமாமற்றுமிதிற்றழையுலவையென்ப
புலனுறுகுழவிபிள்ளைபோதகம்போத்துக்கன்றும். (சசு)

மெல்லியலிளங்கொம்பின்பேர்மேவியகவரேகப்பாம்
வல்லரிகிசலயம்பூமஞ்சரிமுறியலங்கல்
பல்லவங்குழைதளிர்ப்பேர்பகர்குருத்தேமுருந்து
சொல்லுங்காற்குழைத்தலோடேயிலிர்த்தலுந்தளிர்த்தலின்பேர். ()

முகைநனைகலிகைபோகின்முகுளமேமொக்குண்மொட்டு
மகிழ்வுறுகோரகங்கண்மற்றைச்சாலகமரும்பாம்
தகைபெறுகுசுமம்போதுதாரலர்சுமனசந்தான்
மிகுமணமலரேதாமம்வீயிணர்துணர்பூவின்பேர். (சஅ)

தொத்துமஞ்சரியினோடுதுணரிணர்குலையைந்தும்பூங்
கொத்தின்பேர்மகரஞ்செய்யகொங்குகேசரம்பூந்தாதாம்
வைத்திடுந்துணருமாகுமகரந்தம்பூந்தேனென்ப
பைத்தெழுந்தாதிற்றூளேபராகமாம்பிரசமும்பேர். (சகூ)



சோளத்தின்பெயர் = சொன்னல், இறுங்கு. உ
எள்ளின்பெயர் = எண், திலம், நா. ங
எள்ளிளங்காயின்பெயர் = கவ்வை. க
இளையெள்ளின்பெயர் = குமிகை. க
வரகின்பெயர் = கோத்திரவம். க

தருப்பையின்பெயர் = குசை, குமுதம், கூர்ச்சம், குசம். ச
அறுகின்பெயர் = பதம், தூர்வை. உ
இளம்புல்லின்பெயர் = சட்பம். க
மஞ்சளின்பெயர் = நிசி, அரிசனம், பீதம், காஞ்சனி. ச
இஞ்சியின்பெயர் = அல்லம், நறுமருப்பு. உ

கருணைக்கிழங்கின்பெயர் = கந்தம், சூரணம். உ
மரப்பொதுவின்பெயர் = தரு, அகலியம், விருக்கம், தாவரம், விடபி, தாரு, துருமம், குசம், பூருகம், சாகி, பாதபம். கக

கிழங்கின்பெயர் = மூலம், சகுனம், கந்தம், மூலகம். ச
முளையின்பெயர் = கால், அங்குரம். உ
வேரின்பெயர் = தூர், சிவை. உ
மரக்கொம்பின்பெயர் = கோல், இபம், விடபம், கொம்பர், கோடரம், பொங்கர், சாகை, கவடு, தாரு, பணை, சினை, உலவை. கஉ

மரவயிரத்தின்பெயர் = கலை, ஆசினி, சேகு, காழ்ப்பு, காழ். ரு
இலையின்பெயர் = தலம், அடை, தகடு, பன்னம், சதனம், பத்திரம், பலாசம், தமாலம். அ. தழையின்பெயர் = உலவை. க
மரக்கன்றின்பெயர் = குழவி, பிள்ளை, போதகம், போத்து. ச

இளங்கொம்பின்பெயர் = மெல்லியல். க. கப்பின்பெயர் = கவர். க
தளிரின்பெயர் = வல்லரி, கிசலயம், மஞ்சரி, முறி, அலங்கல், பல்லவம், குழை. எ. குருத்தின்பெயர் = முருந்து. க
தளிர்த்தலின்பெயர் = குழைத்தல், இலிர்த்தல். உ

அரும்பின்பெயர் = முகை, நனை, கலிகை, போகில், முகுளம், மொக்குள், மொட்டு, கோரகம், சாலகம். கூ
பூவின்பெயர் = குசுமம், போது, தார், அலர், சுமனசம், மலர், தாமம், வீ, இணர், துணர். க0

பூங்கொத்தின்பெயர் = தொத்து, மஞ்சரி, துணர், இணர், குலை. ரு
பூந்தாதின்பெயர் = மகரம், கொங்கு, கேசரம், துணர். ச
பூந்தேனின்பெயர் = மகரந்தம். க
தாதிற்றூளின்பெயர் = பராகம், பிரசம். உ

அலர்தலையவிழ்தல்விள்ளன்மலர்தலாநெகிழ்தலும்பேர்
இலகியவிரிமலர்ப்பேரிகமலர்வெதிர்தொடர்ப்பூப்
பலமறுசாம்பல்செம்மல்பழம்பூவாந்தேம்பலும்பேர்
புலனுறுமேடுதோடுதளமடல்பூவிதழ்ப்பேர். (௫௰)

அல்லியேயகவிதழ்ப்பேரறைந்திடும்புறவிதழ்ப்பேர்
புல்லியேவடுவும்பிஞ்சும்போற்றுந்தீவிளியுங்காயாம்
பல்லியர்கவிஞர்சொற்றபழங்கனிபலமுமாகும்
மெல்லியபாலுங்காழும்பீசமும்விதைவித்தும்பேர். (௫௧)

குலைகுச்சந்தாறுசாறுகுடும்பொடுபடுவுங்கொத்தாம்
மலரவகேசிதானேவருபலமிலாமரப்பேர்
பலினங்காய்த்திருந்ததாருப்பகருலர்மரமேவானம்
புலர்விலாக்கோளியோடுவனபதிபூவாக்காய்க்கும். (௫௨)

இந்தனமுருடுகட்டையிடுகறல்சமிதைகாட்டம்
வெந்திடுஞெகிழியேழும்விறகென்பமுளரியும்பேர்
வந்தகோடரம்பொதும்பர்மரச்செறிவாகும்பொந்து
முந்துபேர்பொள்ளலாகுமுட்கடுகண்டகம்மே. (௫௩)

துடவைநந்தனவனம்பூந்தோட்டமேயரியுய்யானம்
கடிபொழிலுத்தியானங்காமரச்செறிவாராமம்
நெடியதண்டலையினோடுநீளுபவனமேசோலை
வடிவுடையூர்சூழ்சோலைவனமெனவைக்கலாமே. (௫௪)

அடவிகான்புறவம்பொச்சையாரணியங்காந்தாரம்
கடம்வனமுளரிதில்லங்ககனங்கண்டகமேதாவம்
விடர்சுரம்பழுவங்கானல்விபினமேகட்சிகானம்
கடறுகானனமேயத்தங்களரிகாடிருபானாற்பேர். (௫௫)

நிறைதருதூறுகுன்மநீள்பஞ்சிவிடபமும்பேர்
அறலிறல்பதுக்கையும்பேரறியலாஞ்சிறியதூறு
குறியகாடிறும்பென்றுகுக்கூறியபெருங்கான்வல்லை
மறையரணிளையிரண்டும்வைத்தகாவற்காட்டின்பேர். (௫௬)



மலர்தலின்பெயர்=அலர்தல், அவிழ்தல், விள்ளல், நெகிழ்தல். ௪
விரிமலரின்பெயர்=இகமலர், வெதிர், தொடர்ப்பூ. ௩
பழம்பூவின்பெயர்=சாம்பல், செம்மல், தேம்பல். ௩
பூவிதழின்பெயர்=ஏடு, தோடு, தளம், மடல். ௪

அகவிதழின்பெயர்=அல்லி. ௧. புறவிதழின்பெயர்=புல்லி. ௧
காயின்பெயர்=வடு, பிஞ்சு, தீவிளி. ௩
பழத்தின்பெயர்=கனி, பலம். ௨
விதையின்பெயர்=பரல், காழ், பீசம், வித்து. ௪

கொத்தின்பெயர்=குலை, குச்சம், தாறு, சாறு, குடும்பு, படு. ௬
பலமிலாமரத்தின்பெயர்=அவகேசி. ௧
காய்த்திருந்தமரத்தின்பெயர்=பலினம். ௧
உலர்ந்தமரத்தின்பெயர்=வானம். ௧
பூவாதுகாய்க்குமரத்தின்பெயர்=கோளி, வனபதி. ௨

விறகின்பெயர்=இந்தனம், முருடு, கட்டை, கறல், சமிதை, காட்டம், ஞெகிழி, முளரி. ௮
மரச்செறிவின்பெயர்=கோடரம், பொதும்பர். ௨
மரப்பொந்தின்பெயர்=பொள்ளல். ௧
முள்ளின்பெயர்=கடு, கண்டகம். ௨

சோலையின்பெயர்=துடவை, நந்தனவனம், பூந்தோட்டம், அரி, உய்யானம், பொழில், உத்தியானம், கா, மரச்செறிவு, ஆராமம், தண்டலை, உபவனம். ௧௨
ஊர்சூழ்சோலையின்பெயர்=வனம். ௧

காட்டின்பெயர்=அடவி, கான், புறவம், பொச்சை, ஆரணியம், காந்தாரம், கடம், வனம், முளரி, தில்லம், ககனம், கண்டகம், தாவம், விடர், சுரம், பழுவம், கானல், விபினம், கட்சி, தானம், கடறு, கானனம், அத்தம், களரி. ௨௪

பெருந்தூற்றின்பெயர்=குன்மம், பஞ்சி, விடபம். ௩
சிறுதூற்றின்பெயர்=அறல், இறல், பதுக்கை. ௩
குறுங்காட்டின்பெயர்=இறம்பு. ௧
பெருங்காட்டின்பெயர்=வல்லை. ௧
காவற்காட்டின்பெயர்=அரண், இளை. ௨

---

* பூத்துக்காய்க்குமரத்தின்பெயர்=வானபத்தியம். ௧.

முதையலேயிலையுதிர்ந்தமுதிர்காட்டினுமமாகும்
பொதிகரிகாடுபொச்சைபொருந்துமேயிளைவேலிப்பேர்
அதிகமற்றகங்காழ்த்திட்டதாண்மரம்புறக்காழ்பெண்ணும்
விதியுளிவ்விரண்டுமில்லாவெளிறலியாகுமென்ப. (௫௭)

புண்டரீகத்திேனாடம்போருகங்குசேசயம்பூ
முண்டகமரவிந்தம்மேமுளரிபங்கயம்வாரீசம்
இண்டையம்புயஞ்சரோசமெழிற்சதபத்திரிசூழ்ந்து
வண்டுளர்நளினங்கஞ்சம்வனசந்தாமரையினமம். (௫௮)

சலசமேகமலமற்றுஞ்சார்ந்தகோகனகத்தோடு
தலமுணுந்திருமாலுந்திசரோருகம்பதுமமும்பேர்
மலரின்பேரிறம்புவாகுமற்றிராசீவமும்பேர் [ம்.
புலர்வில்பொன்னிறத்தகொட்டைபொகுட்டேகன்னிகையுமாகு

விரித்திடுஞ்சுருளினுமம்விசியொடுவளையமாகும்
மருக்கிளர்தாமரைக்காய்வராடகமென்பநூலோர்
அரத்தவுற்பலமேவாசமடர்ந்தசெங்குவளைகோலத்
திருக்கிளர்கல்லாரங்கள்செங்கழுநீரின்பேரே. (௬௦)

கோலமார்பானல்காவிகுவலயமணத்தைமொண்டு
காலத்தேனுலவுகின்றகருங்குவளைக்குநாமம்
நீலமிந்தீவரந்தானிகழ்கருநெய்தலென்ப
கோலவுற்பலமுமாகுங்குமுதம்வெண்ணெய்தற்பேரே. (௬௧)

செங்குமுதஞ்செவ்வல்லிசேதாம்பலரக்காம்பற்பேர்
வெங்கள்ளுநாறுமல்லிகைரவம்வெள்ளாம்பற்பேர்
தங்கியதிரள்கோரைப்பேர்சாய்பஞ்சாய்க்கோரையென்ப
அங்குளசெருந்திதானேயடர்ந்தவாட்கோரையாமே. (௬௨)

ஒள்ளியகண்டன்முள்ளியுரைத்தமுண்டகமேயன்றி
முள்ளுடைமூலம்யாவும்முண்டகமென்றேசாற்றும்
தள்ளியநாரம்பாசிசைவலஞ்சடைச்சியும்பேர்
வள்ளியகல்லாரந்தான்மற்றைநீர்க்குளிரியாமே. (௬௩)

வல்லியும்புல்லும்பூடுமொமுதன்மருந்தென்றாகும்
சல்லியகரணிகூர்வேறைத்தபுண்மாற்றுந்துண்டம்
புல்லியசெய்வதானேசந்தானகரணிபோலும்
மெல்லியவிரணந்தீர்க்குஞ்சமனியகரணிவேறே. (௬௪)



முதிர்காட்டின்பெயர் = முதையல். ௧
கரிகாட்டின்பெயர் = பொதி, பொச்சை. ௨
வேலியின்பெயர் = இளை. ௧
* ஆண்மரமென்பது — அகக்காழ். பெண்மரமென்பது — புறக்காழ்.
அலிமரமென்பது — வெளிறு.

தாமரையின்பெயர் = புண்டரீகம், அம்போருகம், குசேசயம், முண்டகம், அரவிந்தம், முளரி, பங்கயம், வாரீசம், இண்டை, அம்புயம், சரோசம், சதபத்திரி, நளினம், கஞ்சம், வனசம். கரு
சலசம், கமலம், கோகனதம், திருமாலுந்தி, சரோருகம், பதுமம். ௬. (ஆ. உக.)
தாமரைமலரின்பெயர் = இறம்பு, இராசீவம். ௨
தாமரைக்கொட்டையின்பெயர் = பொகுட்டு, கன்னிகை. ௨

தாமரைச்சுருளின்பெயர் = விசி, வளையம். ௨
தாமரைக்காயின்பெயர் = வராடகம். ௧
செங்கழுநீரின்பெயர் = அரத்தவுற்பலம், செங்குவளை, கல்லாரம். ௩

கருங்குவளையின்பெயர் = பானல், காவி, குவலயம். ௩
கருநெய்தலின்பெயர் = நீலம், இந்தீவரம், உற்பலம். ௩
வெண்ணெய்தலின்பெயர் = குமுதம். ௧

அரக்காம்பலின்பெயர் = செங்குமுதம், செவ்வல்லி, சேதாம்பல். ௩
வெள்ளாம்பலின்பெயர் = அல்லி, கைரவம். ௨
திரள்கோரையின்பெயர் = சாய், பஞ்சாய்க்கோரை. ௨
வாட்கோரையின்பெயர் = செருந்தி. ௧

முள்ளியின்பெயர் = கண்டல், முண்டகம். ௨
முள்ளுடைமூலமெல்லாவற்றிற்கும்பெயர் = முண்டகம். ௧
பாசியின்பெயர் = நாரம், சைவலம், சடைச்சி. ௩
நீர்க்குளிரியின்பெயர் = கல்லாரம். ௧

மருந்தென்பன = வல்லி, புல், பூடு, மரமுதலிய.
வேல் தைத்த புண் மாற்று மருந்தின்பெயர் = சல்லியகரணி.
துணிபட்டஉறுப்பைப்பொருத்துமருந்தின்பெயர் = சந்தானகரணி.
விரணந்தீர்க்குமருந்தின்பெயர் = சமனியகரணி.

---

* ஆண்மரத்துக்கு வன்மரமென்றும் பெயர்: அவை கருங்காலி முதலியன. பெண்மரத்துக்கு வன்புல்லென்றும் பெயர்: அவை பனை, கமுகு, தெங்கு, மூங்கில். அலிமரம்: முருக்கும் நாரும் பாலுமுள்ள மரமுதலாயினவுமாம்.

மறைவிலாமிருதசஞ்சீவனியுடனமுதிரண்டும்
குறைவறமூர்ச்சைதீர்த்தேகுற்றுயிர்தருமருந்தாம்
உறையொடுகுளியம்யோகமுறுமருந்தின்பொதுப்பேர்
அறையுங்காலந்தப்பேரேயதகமுமாகுமென்ப. (௬௫)

அலங்கலேபிணையலாரஞ்சிகழிகையணிசுருக்கை
இலம்பகந்தெரியல்சுக்கையேற்றகத்திகையேதாமம்
துலங்கியபடலைகண்ணிதொடைதொங்கலொலியல்கோதை
மலர்ந்ததாரிவைமூவாறுமாலைமஞ்சரியுமப்பேர். (௬௬)

சூட்டுடனிலம்பகங்கள்சூழ்நுதலணியென்றாகும்
நீட்டுவாசிகையின்பேரேசிகழிகைபடலையென்ப
ஈட்டியகல்விகேள்வியிருங்குடிகொடைபடைக்குள்
வாட்டமில்லவரைவென்றுமௌலிசூட்டுவதுவாகை. (௬௭)

பரப்புநீருலகுதன்னிற்பாவலர்கிளைஞருற்ற
நிரப்படுங்குணபத்திரன்றாணித்தலும்போற்றிசெய்து
விருப்புறுவிரதசீலன்வீரைமண்டலவன்செய்தான்
மரப்பெயர்க்கறுபத்தெட்டுமென்னியகவிதைதானே. (௬௮)

மரப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம் - ௩௫௩.

ஐந்தாவது

# இடப்பெயர்த்தொகுதி.

## காப்பு.

கடலெழுமிரவிகோடிகால்சீத்துப்பொடித்ததென்ன
மடலவிழ்கமலவூர்திவந்தவாமனையேபோற்றி
அடைவுளதிணைதேமூர்வானகம்புறமாதியாய
இடனுடைத்தாகவைத்தவிடப்பெயர்த்தொகுதிசொல்வாம். (௧)

கேடிலாவபவருக்கங்கேவலத்தோடுசித்தி
வீடுகைவல்லியம்மேமீளாதகதியேநூலோர்
பாடுநிர்வாணத்தோடுபரகதிசிவமேமுத்தி
நீடுமீரைந்துமோக்கமமுதமுநிகழ்த்தலாமே. (௨)



மூர்ச்சைதீர்த்துக்குற்றுயிர் தருமருந்தின்பெயர்=மிருதசஞ்சீவனி, அமுது. ௨
மருந்தின்பொதுப்பெயர்=உறை, குளியம், யோகம், அதகம். ௪

மாலையின்பெயர்=அலங்கல், பிணையல், ஆரம், சிகழிகை, அணி, சுருக்கை, இலம்பகம், தெரியல், சுக்கை, கத்திகை, தாமம், படலை, கண்ணி, தொடை, தொங்கல், ஒலியல், கோதை, தார், மஞ்சரி. ௧௯

நுதலணியின்பெயர்=சூட்டு, இலம்பகம். ௨
வாசிகையின்பெயர்=சிகழிகை, படலை. ௨
வாகையாவது=கல்வி, கேள்வி, குடி, கொடை, படைகட்குள் வாட்டமில்லவரைவென்று மௌலி சூட்டுவது.

# பெயர்ப்பிரிவு.

இ - ள். கடல் எழும் இரவி கோடி கால் சீத்துப் பொடித்தது என்ன - சமுத்திரத்தினின்றும் எழுகின்ற கோடிசூரியர் இருளை நீக்கி உதித்தாற்போல,—மடல் அவிழ் கமலவூர்தி வந்த வாமனையே போற்றி - இதழ் விரியப் பெற்ற தாமரைமலராகிய வாகனத்தின்மேற் சென்ற அருகக்கடவுளையே துதித்து,—அடைவு உள திணை - முறைமையுள்ள ஐவகைநிலங்களும்,—தேம் - தேசங்களும்,—ஊர் - ஊர்களும்,—வான் - வானமும்,—அகம் - உள்ளிடமும்,—புறம் - வெளியிடமும்,—ஆதி ஆய இடன் உடைத்து ஆகவைத்த - முதலாகிய இடங்களின் பெயர்களை உடையதாக வைக்கப்பட்ட,—இடப்பெயர்த்தொகுதி சொல்வாம் - இடப்பெயர்த்தொகுதியை (யாம்) கூறுவாம், எ - று.

அருகக்கடவுள் தாமரைமலரை வாகனமாகக் கொண்டு அதனை யூர்ந்து சென்றமை திருநூற்றந்தாதியில் "நாயகத் தேவர்த நம்முதற் றேவரை நாண்மலர்வான்—மீயகத் தேவர மேற்கொள்ளுந் தேவரை மெய்யடியார்—வாயகத் தேவரும் வண்புகழ்த் தேவரை மாற்றி நெஞ்சே—நீயகத் தேவரை யித்தனை நாளு நினைத்தனையே." என்னும் (௮௪)ம் பாட்டாலறிக.

மோக்கத்தின்பெயர்=அபவருக்கம், கேவலம், சித்தி, வீடு, கைவல்லியம், மீளாதகதி, நிர்வாணம், பரகதி, சிவம், முத்தி, அமுதம். ௧௧

உயர்நிலையுவணைபுத்தேளுலகுபொன்னுலகுதானம்
வியனுலகந்துறக்கமேலுலகம்விமானம்
நயனுறுசுவர்க்கங்கற்பநாகம்விண்ணுலகோடும்பர்
செயமுறுதேவலோகஞ்சிறந்திடுமீரேழ்பேரே. (௩)

பரவியநாகலோகம்பவனமாஞ்சேடிசேணி
விரவுவிஞ்சையரூர்மற்றும்வீழதோகதிபாதாளம்
நிரயமேயளறேதீயேநீள்சுவப்பிரமேயூழல்
நரகிருள்பவர்க்கம்பத்துநரகமாம்பூதியும்பேர். (௪)

அரிதமாதிரம்விசும்போடம்பரமுலகுகாட்டை
கருதியதிசைகோவாசைககுபமுந்திகையுந்திக்காம்
பெருகுபூருவங்குணக்கேபிராசியைந்திரிகிழக்காம்
தெரியும்யாமியமவாசிதக்கிணஞ்சிவேதைதெற்கே. (௫)

குடக்குவாருணமேமேக்குக்குறித்தபச்சிமமேமேற்காம்
நடத்தியபிரத்தியக்குமற்றதன்பேரேநாட்டும்
வடக்குதக்குதீசியென்பமற்றையுத்தரமுமாகும்
விடப்படாத்திணையேமாவேவேலிபூநிலநாற்பேரே. (௬)

அவனிகாசினிசகத்தோடகலிடமகிலம்பாரி
குவலயம்விபுலைமற்றைக்கோத்திரைகோவேகுவ்வே
புவனிமண்டலந்தலம்பூப்பொழில்வசுந்தரையுடன்பார்
பவனந்தாரணியினோடுபடிபுவிதரணிவையம். (௭)

தாலமேயசலைநேமிவசுமதிதரைதரித்திரி
ஞாலந்தாத்திரியளக்கர்நாபூதலங்கிடக்கை
பாலமேபூதிகங்கள்பார்த்திவம்பொறையனந்தை
வேலைசூழ்மகியாறேழுமேதினியுலகும்பூமி. (௮)

பாடிமண்டலமேசும்மைபைதிரமுலகுதேயம்
நீடியவகலுளேணிநீவரங்கோட்டங்கண்டம்
பீடுறுசனபதங்கள்பெரும்பொழிலிவைபன்மூன்றும்
நாடுதண்ணடையுமாகுமழுவமுநாட்டுமப்பேர். (௯)

விலங்கலேபொறைவேதண்டம்விண்டுமாதிரமேவெற்புச்
சிலம்புகோத்திரமடுக்கல்சிலோச்சயஞ்சிமயம்பொங்கர்
நலங்கொள்குத்திரம்பறம்புநகங்குறும்பொறையேநாகம்
இலங்கியவரையேபொச்சையிறம்புகல்லகமேயோங்கல். (௧௦)



தேவலோகத்தின்பெயர்=உயர்நிலை, உவணை, புத்தேளுலகு, பொன்னுலகு, தானம், வியனுலகம், துறக்கம், மேலுலகம், விமானம், சுவர்க்கம், கற்பம், நாகம், விண்ணுலகு, உம்பர். ௧௪

நாகலோகத்தின்பெயர்=பவனம். ௧
விஞ்சையரூரின்பெயர்=சேடி, சேணி. ௨
நரகத்தின்பெயர்=அதோகதி, பாதாளம், நிரயம், அளறு, தீ, சுவப்பிரம், ஊழல், நரகு, இருள், பவர்க்கம், பூதி. ௧௧

திக்கின்பெயர்=அரிதம், மாதிரம், விசும்பு, அம்பரம், உலகு, காட்டை, திசை, கோ, ஆசை, ககுபம், திகை. ௧௧
கிழக்கின்பெயர்=பூருவம், குணக்கு, பிராசி, ஐந்திரி. ௪
தெற்கின்பெயர்=யாமியம், அவாசி, தக்கிணம், சிவேதை. ௪

மேற்கின்பெயர்=குடக்கு, வாருணம், மேக்கு, பச்சிமம், பிரத்தியக்கு. ௫
வடக்கின்பெயர்=உதக்கு, உதீசி, உத்தரம். ௩
நிலத்தின்பெயர்=திணை, மா, வேலி, பூ. ௪

பூமியின்பெயர்=அவனி, காசினி, சகம், அகலிடம், அகிலம், பாரி, குவலயம், விபுலை, கோத்திரை, கோ, கு, புவனி, மண்டலம், தலம், பூ, பொழில், வசுந்தரை, பார், பவனம், தாரணி, படி, புவி, தரணி, வையம். ௨௪

தாலம், அசலை, நேமி, வசுமதி, தரை, தரித்திரி, ஞாலம், தாத்திரி, அளக்கர், நாடு, பூதலம், கிடக்கை, பாலம், பூதிகம், பார்த்திவம், பொறை, அனந்தை, மகி, மேதினி, உலகு. ௨௦. (ஆக ௪௪)

நாட்டின்பெயர்=பாடி, மண்டலம், சும்மை, பைதிரம், உலகு, தேயம், அகலுள், ஏணி, நீவரம், கோட்டம், கண்டம், சனபதம், பொழில், தண்ணடை, அழுவம். ௧௫

மலையின்பெயர்=விலங்கல், பொறை, வேதண்டம், விண்டு, மாதிரம், வெற்பு, சிலம்பு, கோத்திரம், அடுக்கல், சிலோச்சயம், சிமயம், பொங்கர், குத்திரம், பறம்பு, நகம், குறும்பொறை, நாகம், வரை, பொச்சை, இறம்பு, கல்லகம், ஓங்கல். ௨௨

பொருப்பொடுகுவடுகல்லுப்பொகுட்டோதிதிகிரிகுன்று
பருப்பதஞ்சைலஞ்சாரல்பாதவம்பதலைதாணுப்
பெருத்தபூதரமேசையம்பிறங்கலத்திரியேபீலி
உருத்திகழ்கிரிமலைப்பேரொன்றுடனெண்ணைந்தென்ப. (கக)

புடைபடுமிறும்புகுன்றுபொற்றையேசிறுமலைப்பேர்
படுகுறும்பொறையேபொச்சைபதலையுமதன்பேர்வாரந்
தடமொடுசாரல்சானுதகுமலைப்பக்கங்கோடு
கொடுமுடிசிகரங்கூடங்குவடிவைமலையினுச்சி. (கஉ)

நிலைபெறும்பொன்மலைப்பேர்நீள்சுராலயமேமேரு
விலையில்வெண்மலைவேதண்டம்விசயார்த்தம்வெள்ளிவெற்பாம்
மலயந்தென்மலையேதென்றல்வருமலைசிமயநான்கும்
புலமைசேர்கும்பயோனிபொதியமாமலையினுமம். (கந)

பொறைதுறுகல்லென்றாகும்புகலுங்கற்பாழிகாண்டை
முறைமையாம்விவரத்தோடுமுடுக்கர்கந்தரமுழைப்பேர்
அறைமுரஞ்சாம்பிலங்கீழறையென்பகுகைநிகுஞ்சம்
சிறுகியதிடர்பதுக்கைதிட்டையுமிட்டநாமம். (கச)

சிலையொடுகன்னேசையஞ்சிராவணமுபலங்கல்லாம்
உலமென்பதிரண்டகற்பேருறும்பரல்பருக்கையென்ப
துலைபெறுதிடறுதிட்டைசுவன்மெட்டுக்குவாலேகுப்பை
குலவியதிடரேமேடுகுவையென்றுமிவையேகூறும். (கரு)

பரவைதெண்டிரையேசிந்துபௌவமேபாராவாரம்
நரலையார்கலியேயுந்திநதிபதியம்புராசி
குரவையேசக்கரங்கார்கோள்வேலாவலயமுந்நீர்
அரிமகராலயந்நீராழியம்பரமேவேலை. (கசா)

வாரிதியளக்கர்நீண்டவாரியேயுததியோதம்
வீரையன்னவமேயத்திவெள்ளஞ்சாகரமேயாழி
சாருறுசலதியுப்புச்சலநிதிசமுத்திரஞ்சூழ்
வாரணமிவையாறாறுமறிகடலுவரியும்பேர். (கஎ)

பாரியபாராவாரம்பகர்வேலைகடற்கரைப்பேர்
ஆருஞ்சீகரங்கல்லோலமறறரங்கந்திரைப்பேர்
வாரமேபாரங்கோடுவரையணைதடமேகூலம்
தீரமேநீர்க்கரைப்பேர்செறிவரம்பிற்கும்பேரே. (கஅ)



பொருப்பு, குவடு, கல், பொகுட்டு, ஓதி, திகிரி, குன்று, பருப்பதம், சைலம், சாரல், பாதவம், பதலை, தாணு, பூதரம், சையம், பிறங்கல், அத்திரி, பீலி, கிரி. ககூ. (ஆ சக)

சிறுமலையின்பெயர்=இறும்பு, குன்று, பொற்றை, குறும்பொறை, பொச்சை, பதலை. சா
மலைப்பக்கத்தின்பெயர்=வாரம், தடம், சாரல், சானு. ச
மலையினுச்சியின்பெயர்=கோடு, கொடுமுடி, சிகரம், கூடம், குவடு. ரு

பொன்மலையின்பெயர்=சுராலயம், மேரு. உ. வெள்ளிமலையின் பெயர்=வெண்மலை, வேதண்டம், விசயார்த்தம். ந. பொதியமலையின்பெயர்=மலயம், தென்மலை, தென்றல்வருமலை, சிமயம். ச

துறுகல்லின்பெயர்=பொறை. க. * கற்பாழியின்பெயர்=காண்டை. க. மலைமுழையின்பெயர்=விவரம், முடுக்கர், கந்தரம். ந. † அறையின்பெயர்=முரஞ்சு. க. கீழறையின் பெயர்=பிலம். க. குகையின்பெயர்=நிகுஞ்சம். க. சிறுதிடரின் பெயர்=பதுக்கை, திட்டை. உ

கல்லின்பெயர்=சிலை, கன், சையம், சிராவணம், உபலம். ரு. திரண்டகல்லின்பெயர்=உலம், க. பருக்கைக்கல்லின்பெயர்=பரல். க. மேட்டின்பெயர்=திடறு, திட்டை, சுவல், மெட்டு, குவால், குப்பை, திடர், குவை. அ

கடலின்பெயர்=பரவை, தெண்டிரை, சிந்து, பௌவம், பாராவாரம், நரலை, ஆர்கலி, உந்தி, நதிபதி, அம்புராசி, குரவை, சக்கரம், கார்கோள், வேலாவலயம், முந்நீர், அரி, மகராலயம், நீராழி, அம்பரம், வேலை. உ0

வாரிதி, அளக்கர், வாரி, உததி, ஓதம், வீரை, அன்னவம், அத்தி, வெள்ளம், சாகரம், ஆழி, சலதி, உப்பு, சலநிதி, சமுத்திரம், வாரணம், உவரி. கஎ. (ஆ நஎ)

கடற்கரையின்பெயர்=பாராவாரம், வேலை. உ.
திரையின்பெயர்=சீகரம், கல்லோலம், அறல், தரங்கம். ச
நீர்க்கரையின்பெயர்=வாரம், பாரம், கோடு, வரை, அணை, தடம், கூலம், தீரம். அ. இவை, வரம்பிற்கும்பெயர்.

* கற்பாழி - கற்புழை. † அறை - பாறை.

அருவியேகழிமுகம்பேருவிப்பேருவதையாகும்
அருவியேமலையின்சாரலாற்றபிதானமென்ப
உரைசெயிலுவர்நீர்தானேயுறையென்பகுரம்புதான்செய்
கரையின்பேர்குலையுஞ்சேதுங்காட்டுபமீட்டதற்கே. (௧௯)

உந்தியேதுறையேமற்றையொலியலேகுடிஞையோணம்
சிந்துவேநதியேவீசுந்திரைவருபுனலேயாறும்
கந்தமார்கலுழிமுல்லைக்கான்யாறுங்கழிமுகப்பேர்
முந்தியகயவாயென்புகாரதோமுகமுமாமே. (௨௦)

கழியின்பேர்முரம்புகாயல்கானலுப்பளமென்றாகும்
கழிநிலமுப்பளப்பேர்காட்டுமுப்பளமேகாயல்
அழிவிலாவுவளகத்தோடளக்கராம்புளினமென்ப
ஒழிவிலாமணற்குன்றின்பேருவர்த்தரையிரிணமாமே. (௨௧)

பொன்னிகாவிரியிரண்டும்பொருந்துகாவேரியின்பேர்
பன்னியபொருநையின்பேர்பகர்ந்ததண்பொருந்தந்தானே
கன்னியேகுமரியென்பகௌதமையின்பேர்கோதை
மின்னியவிருத்தகங்கைவிமலைகோதாவரிப்பேர். (௨௨)

படுகரேதாங்கல்கேணிபல்வலம்படுவேபட்டம்
மடுவுவளகமேபண்ணைவாவியேசுனையேவட்டம்
தடமொடுகயம்பயம்பூந்தடாகமேகுளமேகுட்டம்
அடைவுளகிடங்குசூழியலந்தையேகுண்டம்பங்கம். (௨௩)

இலஞ்சிகோட்டகமேபொய்கையேல்வையேயோடையேரி
நிலந்தனீற்குளிர்ந்தநீரினிலையாறைந்தொன்றுநீங்கத்
தலந்தனிற்றெளிந்தநீரைச்சற்சலமென்றிசைப்பர்
இலங்கையேதுருத்தியாற்றினிடைக்குறையரங்கமும்பேர். (௨௪)

நுரைமொக்குள்பௌவத்தோடுநொவ்வியபுற்புதங்கள்
குரைகொணீர்க்குமிழியைந்தாங்கொப்புளுமப்பேர்தாமே
நுரையின்பேர்பேனமாகுநொய்யநீர்ச்சுழியேயுந்தி
பிரளயம்வாரிநீத்தம்பெருக்கோதமோகம்வெள்ளம். (௨௫)

மண்டியநிறைபுனற்பேர்வழாறொடுபிராறுமாகும்
மிண்டியவகாதநீந்தும்வெம்புனலென்பநூலோர்
கண்டிடுங்கலங்கனீரேகலுழியாவிலமுமாகும்
குண்டமுந்தொடுகயங்கள்கூறுகம்பீரமாழம். (௨௬)



அருவியின்பெயர் = கழிமுகம். ௧. பேருவியின்பெயர் = உவதை. ௧
மலைச்சாரலாற்றின்பெயர் = அருவி. ௧
உவர்நீரின்பெயர் = உறை. ௧
செய்கரையின்பெயர் = குரம்பு, குலை, சேது. ௩

யாற்றின்பெயர் = உந்தி, துறை, ஒலியல், குடிஞை, ஓணம், சிந்து, நதி, வருபுனல். ௮
முல்லைக்கான்யாற்றின்பெயர் = கலுழி. ௧
கழிமுகத்தின்பெயர் = கயவாய், புகார், அதோமுகம். ௩

கழியின்பெயர் = முரம்பு, காயல், கானல், உப்பளம். ௪
கழிநிலம் = இதற்கு உப்பளப்பெயர்கள் யாவும் வரும்.
உப்பளத்தின்பெயர் = காயல், உவளகம், அளக்கர். ௩. மணற்குன்றின்பெயர் = புளினம். ௧. உவர்த்தரையின்பெயர் = இரிணம். ௧

காவேரியின்பெயர் = பொன்னி, காவிரி. ௨
* பொருநையின்பெயர் = பொருந்தம். ௧
கன்னியின்பெயர் = குமரி. ௧. கௌதமையின்பெயர் = கோதை. ௧
கோதாவரியின்பெயர் = விருத்தகங்கை, விமலை. ௨

நீர்நிலையின்பெயர் = படுகர், தாங்கல், கேணி, பல்வலம், படு, பட்டம், மடு, உவளகம், பண்ணை, வாவி, சுனை, வட்டம், தடம், கயம், பயம், தடாகம், குளம், குட்டம், கிடங்கு, சூழி, அலந்தை, குண்டம், பங்கம். ௨௩

இலஞ்சி, கோட்டகம், பொய்கை, ஏல்வை, ஓடை, ஏரி. ௯. (ஆ. ௨௧)
தெளிந்தநீரின்பெயர் = சற்சலம். ௧
யாற்றிடைக்குறையின்பெயர் = இலங்கை, துருத்தி, அரங்கம். ௩

நீர்க்குமிழியின்பெயர் = நுரை, மொக்குள், பௌவம், புற்புதம், கொப்புள். ௫
நுரையின்பெயர் = பேனம். ௧. நீர்ச்சுழியின்பெயர் = உந்தி. ௧
வெள்ளத்தின்பெயர் = பிரளயம், வாரி, நீத்தம், பெருக்கு, ஓதம், ஓகம். ௬

நிறைபுனலின்பெயர் = வழாறு, பிராறு. ௨
நீந்துபுனலின்பெயர் = அகாதம். ௧
கலங்கனீரின்பெயர் = கலுழி, ஆவிலம். ௨
ஆழத்தின்பெயர் = குண்டு, அழுந்து, கயம், கம்பீரம். ௪

* பொருநை - தாமிரபர்ணிநதி.

கோலமேபெருகின்றகொழுந்துநீரோட்டமென்ப
கோலியகிணறுகூபங்கூவலேயசும்புங்கூறும்
மேலிடாவஃகியூறும்வெம்புனலுறவியூற்றாம்
ஓலமிட்டேரிலுள்ளாருண்பதூருணியென்றோதும். (உஎ)

அள்ளல்சேதகமேதோணியளறுடனளக்கர்தொய்யல்
கொள்ளமேசெதும்புபங்கங்குழையொடுகுழம்புகாலாழ்
தெள்ளியவசறுசெய்யலீரேழுஞ்சேறுஞ்சேற்றிற்
புள்ளியேகுமிழ்பொகுட்டாநொதியருவருத்தசேறு. (உஅ)

பரவுசாட்டுவலமென்பபசும்புல்லுத்தரையின்பேரே
விரவியகரம்புபாழாம்வாலுகம்வெண்மணற்பேர்
மருவியவதரிஞெடேயயிருநுண்மணலாமாற்றிற்
கரைதனிற்கொழித்தநுண்மைக்கருமணலறலென்றோதும். (உகூ)

கோடுசூழ்மலையின்சாரல்குறிஞ்சியாம்வனஞ்சார்முல்லை
நாடுசார்மருதமாகுநற்கடற்சார்வுநெய்தல்
நீடியகொடுங்கோன்மன்னர்நெடுங்குடைக்கீழ்வாழ்கின்ற
பாடிலாக்குடிகள்போலப்படுநிலம்பாலையாமே. (ஙo)

பழனமேசெறுவரம்புள்பணைபானல்கைதைபண்ணை
கழனியேயாலவாலங்காட்டியதடிபுலஞ்செய்
விழைவுறுவயலேமாவேவிளைநிலமீரேழ்பேராம்
குழைவுறுபாத்தியோடுகுண்டிலுஞ்சிறுசெய்கூறும். (ஙக)

செந்நெலேவிளைவதானசிறப்புடைநிலஞ்சாலேயம்
இன்னதென்னுமலுண்டாமுருவரையென்பதானே
மன்னியவகணிபானல்வயல்பணைமருதநாற்பேர்
அந்நிலவரம்புதானேகுரம்பதனருகுகங்கு. (ஙஉ)

புறவொடுபுறம்பணைப்பேர்புணர்முல்லைகுறிஞ்சிக்கும்பேர்
பறையும்வன்பால்குறிஞ்சிபாலையாமருதந்தானே
நிறையுமென்பாலாம்வெற்பினீரினில்வெவ்வனத்திற்
கறைபடுமிகுதிதானேகருநிலமாகுமென்ப. (ஙங)



நீரோட்டத்தின்பெயர் = கோலம். க
கிணற்றின்பெயர் = கூபம், கூவல், அசும்பு. ங
ஊறுபுனலின்பெயர் = அஃகி, உறவி, ஊற்று. ங
ஊரிலுள்ளாருண்ணுநீரின்பெயர் = ஊருணி. க

சேற்றின்பெயர் = அள்ளல், சேதகம், தோணி, அளறு, அளக்கர், தொய்யல், கொள்ளம், செதும்பு, பங்கம், குழை, குழம்பு, காலாழ், அசறு, செய்யல். கச
சேற்றிற்புள்ளியின்பெயர் = குமிழ், பொகுட்டு. உ
அருவருத்தசேற்றின்பெயர் = நொதி. க

பசும்புல்லுத்தரையின்பெயர் = சாட்டுவலம். க
பாழ்நிலத்தின்பெயர் = கரம்பு. க
வெண்மணலின்பெயர் = வாலுகம். க
நுண்மணலின்பெயர் = அதர், அயிர். உ
கருமணலின்பெயர் = அறல். க

மலைசார்ந்தநிலம் = குறிஞ்சி. வனஞ்சார்ந்தநிலம் = முல்லை.
நாடுசார்ந்தநிலம் = மருதம். கடல்சார்ந்தநிலம் = நெய்தல்.
கொடுங்கோன்மன்னர் குடைக்கீழ் வாழ்கின்ற குடிகள்போலப் படுநிலம் = பாலை.

விளைநிலத்தின்பெயர் = பழனம், செறு, வரம்புள், பணை, பானல், கைதை, பண்ணை, கழனி, ஆலவாலம், தடி, புலம், செய், வயல், மா. கச
சிறுசெய்யின்பெயர் = பாத்தி, குண்டில். உ

செந்நெல்விளைநிலத்தின்பெயர் = சாலேயம். க
அனைத்துமுண்டாகுநிலத்தின்பெயர் = உருவரை. க
மருதநிலத்தின்பெயர் = அகணி, பானல், வயல், பணை. ச
வரம்பின்பெயர் = குரம்பு. க. வரம்பருகின்பெயர் = கங்கு. க

முல்லைக்குங்குறிஞ்சிக்கும்பெயர் = புறவு, புறம்பணை. உ
வன்பாலென்பது = குறிஞ்சியும் பாலையும்.
* மென்பாலென்பது = மருதம்.
கருநிலமென்பது = வெற்பினும்நீரினும்வனத்தினுங்கறைபடுமிகுதி.

* சமப்பாலென்பது முல்லையும் நெய்தலும். அது "முல்லையுநெய் தலு மொழிசமப் பாலே" என்னுந் திவாகரச்சூத்திரத்தாலறிக.

கo

பாக்கமேயிருக்கைபாழிபட்டினம்பள்ளிமுட்டம்
பூக்கஞ்சம்வாகநொச்சிபூரியம்பாடிபூண்டி
மாக்கிளர்கோட்டம்வாழ்க்கைமடப்பமேகுடிகுடிக்கா
டாக்கமாங்குறிச்சிகுப்பமருப்பமேநத்தஞ்சும்மை. (௩௪)

அகரமேபுரமேசேரியகலுள்வைப்புறையுள்வேலி
நகரம்பக்கணங்கிராமநவில்கருவடங்குறும்பு
நிகரில்வேசனமேதாமநிவேசனம்பதியேபேடு
பகர்புரியெண்ணெந்தூர்நீர்பண்ணைசூழூர்கிராமம். (௩௫)

குடிநூறுபடவிருந்தாற்குறைவுளகிராமமாகும்
நெடியதுகுடியைஞ்ஞூறுநிறைந்ததுபெருங்கிராமம்
வடிவுடையிராசதானிமணிமதிற்கோபுரங்கள்
புடைபடுமகழாற்சூழ்ந்தபுரம்புரிநகரமும்பேர். (௩௬)

மலைசெறிவதுவேகேடமலையுடனாறுசூழூர்
அலைவறுகருவடங்களைஞ்ஞூறுகிராமத்திற்கே
தலைமைபெற்றதுமடப்பந்தாழ்கடற்றீரந்தன்னிற்
பலபலதீவிற்பண்டம்பகர்வபட்டனமென்றாமே. (௩௭)

மட்டறுநெல்லும்புல்லுமத்தகந்தன்னிலேற்றுத்
தட்டறுமலையினூரேசம்வாகமென்றுசாற்றும்
தொட்டதோணமுகந்தான்சூழ்கழியிருக்கையென்ப
பட்டுநொச்சியுமேசிற்றூர்புள்ளியுமதன்பேர்பன்னும். (௩௮)

குறிச்சிசிற்றூரேசீறூர்குறிஞ்சிநன்னிலத்தூர்ப்பேராம்
பறித்திடுமுல்லையூரேபாடிபட்டினமேநெய்தல்
குறித்தெழுகுறும்பரூரேகுறும்புபாலைக்கேகூற்றாம்
பறித்தபாசறையேதெவ்வர்முனைப்பதிபாடிவீடு. (௩௯)

புரிகுடநகரம்பூக்கம்புரங்குடிநிகாயம்பள்ளி
சரணமாவாசம்பாக்கந்தாவளநிகமந்தாமம்
பரவியநிலயங்கோட்டம்பதிவாழ்க்கைசேர்வுபாழி
மருதநன்னிலத்தூரீரைந்திரட்டியாம்வசதியும்பேர். (௪௦)

காழகங்கடாரமாம்வாரணசிகாசியென்ப
ஈழமேசிங்களம்வீறெய்தியகருவூர்வஞ்சி
கோழியேயுறையூர்மாறன்கூடலேமதுரையாகும்
தாழ்விலாக்காஞ்சிகச்சிசாற்றிடிலவந்தியுஞ்சை. (௪௧)



ஊரின்பெயர் = பாக்கம், இருக்கை, பாழி, பட்டினம், பள்ளி, முட்டம், பூக்கம், சம்வாகம், நொச்சி, பூரியம், பாடி, பூண்டி, கோட்டம், வாழ்க்கை, மடப்பம், குடி, குடிக்காடு, குறிச்சி, குப்பம், அருப்பம், நத்தம், சும்மை. ௨௨

**அகரம்**, புரம், சேரி, அகலுள், வைப்பு, உறையுள், வேலி, **நகரம், பக்கணம்**, [பத்தணம்] கிராமம், கருவடம், குறும்பு, வேசனம், தாமம், நிவேசனம், பதி, பேடு, புரி. ௧௮. (ஆ ௪௦)
நீரும்வயலுஞ்சூழ்ந்தவூர் = கிராமம்.

சிறுகிராமமென்பது = நூறுகுடிநிறைந்தவூர்.
பெருங்கிராமமென்பது = ஐஞ்ஞூறுகுடிநிறைந்தவூர்.
இராசதானியின்பெயர் = புரம், புரி, நகரம். ௩

மலைசெறிந்தவூரின்பெயர் = கேடம். ௧
மலையும்யாறுஞ்சூழ்ந்தவூரின்பெயர் = கருவடம். ௧
ஐஞ்ஞூறு கிராமத்திற்குத் தலைமைபெற்றகிராமத்தின் பெயர் = மடப்பம். ௧
பலபலதீவிற்பண்டம்விற்குமூரின்பெயர் = பட்டணம். ௧

நெல்லும்புல்லும் நிறைந்தமலையினூரின்பெயர் = சம்வாகம். ௧
கழியிருக்கையின்பெயர் = தோணமுகம். ௧
சிற்றூரின்பெயர் = பட்டு, நொச்சி, பள்ளி. ௩

குறிஞ்சிநிலத்தூரின்பெயர் = குறிச்சி, சிற்றூர், சீறூர். ௩
முல்லைநிலத்தூரின்பெயர் = பாடி. ௧
நெய்தனிலத்தூரின்பெயர் = பட்டினம் ௧
பாலைநிலத்தூரின்பெயர் = குறும்பு. ௧
* பாசறையின்பெயர் = தெவ்வர்முனைப்பதி, பாடிவீடு. ௨

மருதநிலத்தூரின்பெயர் = புரி, குடம், நகரம், பூக்கம், புரம், குடி, நிகாயம், பள்ளி, சரணம், ஆவாசம், பாக்கம், தாவளம், நிகமம், தாமம், நிலயம், கோட்டம், பதி, வாழ்க்கை, சேர்வு, பாழி, வசதி. ௨௧

கடாரமென்னுமூரின்பெயர் = காழகம். ௧
காசியின்பெயர் = வாரணசி. ௧
சிங்களத்தின்பெயர் = ஈழம். ௧. கருவூரின்பெயர் = வஞ்சி. ௧
உறையூரின்பெயர் = கோழி. ௧. மதுரையின்பெயர் = கூடல். ௧
காஞ்சியின்பெயர் = கச்சி. ௧. அவந்திநகரின்பெயர் = உஞ்சை. ௧

---

* பாசறை - பகைமேற்சென்றோருறைவிடம்.

மிதிலையேவிதேகையாங்காவிரிப்பூம்பட்டினம்புகாராம்
விதமுறுவினிதைகோலமிக்ககோசலைசாகேதம்
நிதிவளரயோத்திநாமநிமலமாம்புலியூர்தில்லை
கதிதருசிதம்பரப்பேர்கமலையேதிருவாரூராம். (௪௨)

பெருகியகடகங்காப்புப்பிராகாரநொச்சியாரல்
புரிசைவேணகையேவாரிபுகழுவளகமேயிஞ்சி
அரணமேயெயிலேயோதையருஞ்சிறைவேதிசாலம்
மருவியவகப்பாவேலியறுமூன்றுமதிலினாமம். (௪௩)

பரிகமேகிடங்குகேணிபாம்புரியுடுவேயோடை
விரவியவகழாறேபேர்மேவுமெந்திரமேகோசம்
மருவியநாஞ்சிலேதோணிஞாயிலம்மதிலுறுப்பாம்
பரிகமேயகப்பாவோடுபதணமுள்ளுயர்ந்தமேடை. (௪௪)

விரிந்தகோபுரமேகோட்டிமிகும்புரவாயிலின்பேர்
பொருந்துமக்கதவில்விட்டுப்புகுவழிபுதவுதானே
திருந்துமவ்வழிச்சார்திண்ணையளிந்தமாஞ்சிறந்தவாயிற்
பரந்திடும்படிச்சுருட்குப்பகரத்தினகமேநாமம். (௪௫)

கோதிலாவணமங்காடிகூலம்பீடிகையுமப்பேர்
தீதில்வையாளிவீதிதிகழ்செண்டுவெளியேயென்ப
சாதியாம்புரவிவட்டந்திருமுற்றந்தானுமப்பேர்
வீதியின்பேரேஞெள்ளல்பூரியமரசர்வீதி. (௪௬)

நெடுந்தெருமன்றமார்க்கநிகமமிம்முப்பேர்செப்பும்
ஒடுங்கியகுறுந்தெருக்களோதியமறுகுதானே
முடங்கியகோணந்தன்னைமுடுக்கெனலடுக்குமிப்பால்
அடங்கியமுச்சந்திப்பேரந்தியென்றறையலாமே. (௪௭)

தக்கசந்தாஞ்சதுக்கந்தருஞ்சிருங்காடகந்தான்
ஒக்குநாற்சந்தியாகுமோதியசதுக்கமும்பேர்
திக்குறும்வாடைசேடிசிரேணியாமாயர்வீதி
மிக்கவாபீனமாமாவேசனஞ்சிற்பர்வீதி. (௪௮)

பற்றியவேடர்வீதிபக்கணமாகுமென்ப
மற்றையம்பலமேமன்றம்பொதிபொதுச்சபையுமாகும்
தெற்றியம்பலந்தானென்றேசித்திரகூடநாமம்
வெற்றியத்தாணியோடுவேத்தவையரசிருக்கை. (௪௯)



மிதிலையின்பெயர் = விதேகை. ௧. காவிரிப்பூம்பட்டினத்தின்பெயர் = புகார். ௧. அயோத்தியின்பெயர் = வினிதை, கோசலை, சாகேதம். ௩. சிதம்பரத்தின்பெயர் = புலியூர், தில்லை. ௨. திருவாரூரின்பெயர் = கமலை. ௧

மதிலின்பெயர் = கடகம், காப்பு, பிராகாரம், நொச்சி, ஆரல், புரிசை, வேணகை, வாரி, உவளகம், இஞ்சி, அரணம், எயில், ஓதை, சிறை, வேதி, சாலம், அகப்பா, வேலி. ௧௮

அகழின்பெயர் = பரிகம், கிடங்கு, கேணி, பாம்புரி, உடு, ஓடை. ௬
மதிலுறுப்பின்பெயர் = எந்திரம், கோசம், நாஞ்சில், தோணி, ஞாயில். ௫
மதிலுள்ளுயர்ந்தமேடையின்பெயர் = பரிகம், அகப்பா, பதணம். ௩

நகரவாயிலின்பெயர் = கோபுரம், கோட்டி. ௨
நகரவாயிற்கதவில்விட்டுப்புகும்வழியின்பெயர் = புதவு. ௧
நகரவாயிற்றிண்ணையின்பெயர் = அளிந்தம். ௧
நகரவாயிற்படிச்சுருளின்பெயர் = அத்தினகம். ௧

* அங்காடியின்பெயர் = ஆவணம், கூலம், பீடிகை. ௩
குதிரைவையாளிவீதியின்பெயர் = செண்டுவெளி, புரவிவட்டம், திருமுற்றம். ௩
வீதியின்பெயர் = ஞெள்ளல். ௧. அரசர்வீதியின்பெயர் = பூரியம். ௧

நெடுந்தெருவின்பெயர் = மன்றம், மார்க்கம், நிகமம். ௩
குறுந்தெருவின்பெயர் = மறுகு. ௧
கோணத்தெருவின்பெயர் = முடுக்கு. ௧
முச்சந்தியின்பெயர் = அந்தி. ௧

சந்தின்பெயர் = சதுக்கம். ௧. நாற்சந்தியின்பெயர் = சிருங்காடகம், சதுக்கம். ௨. சிரேணியின்பெயர் = வாடை, சேடி. ௨. ஆயர்வீதியின்பெயர் = ஆபீனம். ௧. சிற்பர்வீதியின்பெயர் = ஆவேசனம். ௧

வேடர்வீதியின்பெயர் = பக்கணம். ௧
அம்பலத்தின்பெயர் = மன்றம், பொதி, பொது, சபை. ௪
சித்திரகூடத்தின்பெயர் = தெற்றியம்பலம். ௧
அரசிருக்கையின்பெயர் = அத்தாணி, வேத்தவை. ௨

* அங்காடி - கடைவீதி.

சாலைமாளிகைகுலங்கள்சாற்றியபவனங்கோயில்
மாலைவேலரசிற்பேர்மந்திரநிலயங்கோட்டம்
ஆலயஞ்சினகரஞ்சேதிமந்தளிதேவர்கோயில்
சாலைமற்றறத்தின்சாலையறப்புறமோதும்பள்ளி. (௫௦)

வனைதருசமித்தமோமமண்டபமன்னன்றேவி
புனையில்லங்கந்தவாரம்போற்றுமந்தப்புரப்பேர்
மனையில்லம்புக்கின்மாடமந்திரம்வசதிவீடாம்
புனைகலனிருக்கைதானேபோற்றியபண்டசாலை. (௫௧)

விரவிறைவீட்டிறப்பேவளவியுமாம்விடங்கம்
தருமுகட்டின்பேர்வேயுள்வேய்தலாந்தகுமண்ணீடு
மருவியவேயாமாடமங்கணமுன்றின்முற்றம்
கருதுகல்விக்களப்பேர்கழகங்கல்லூரியாமே. (௫௨)

ஆயுதஞ்சூதுகூத்துப்பயில்களமரங்கமென்ப
வாயிலேகடைதுவாரம்வாரியாஞ்சோபானம்மே
தூயதாழ்வாரமென்பவங்கணந்தூம்புவாயாம்
ஆயபித்திகைசுவர்க்காமரமியநிலாமுற்றப்பேர். (௫௩)

ஆலயமோளிவாரியானையின்கூடமாமே
சாலைமந்துரையிரண்டும்வாசியின்பந்திதானே
சாலகஞ்சாளரம்வாதாயனங்குறுங்கண்சாலம்
காலதர்பலகணிப்பேர்கரந்தகற்படைசுருங்கை. (௫௪)

குட்டிமம்படுத்தபூமிகுறடுவேதிகைமண்ணீடு
திட்டையேதிண்ணைசிற்றில்கூரையாங்குடில்குரம்பை
தட்டுறுவடிச்சேரிப்பேர்தானடிக்குடிலென்றுமே
அட்டிலேபாகசாலையடுக்களைமடைப்பள்ளிப்பேர். (௫௫)

காழுறுகுமுதஞ்சுல்லிகாமரமடுப்புமுப்பேர்
தாழுமுத்தானமும்பேர்தடவொடுவேள்விக்குண்டம்
வேள்வியேயோமகுண்டநித்தமும்வேதியும்பேர்
பாழிதாபதங்கரண்டைபள்ளியேமுனிவர்வாசம். (௫௬)



அரசிரில்லின்பெயர் = சாலை, மாளிகை, குலம், பவனம், கோயில். ௫
தேவர்கோயிலின்பெயர் = மந்திரம், நிலயம், கோட்டம், ஆலயம்,
சினகரம், சேதிமம், தளி. ௭
அறச்சாலையின்பெயர் = சாலை. ௧
ஓதும்பள்ளியின்பெயர் = அறப்புறம். ௧

ஓமமண்டபத்தின்பெயர் = சமித்தம். ௧
மன்னன்றேவியில்லத்தின்பெயர் = கந்தவாரம், அந்தப்புரம். ௨
வீட்டின்பெயர் = மனை, இல்லம், புக்கில், மாடம், மந்திரம். வசதி. ௬
பண்டசாலையின்பெயர் = கலனிருக்கை. ௧

வீட்டிறப்பின்பெயர் = இறை, வளவி. ௨
முகட்டின்பெயர் = விடங்கம். ௧. * வேயுளின்பெயர் = வேய்தல். ௧
வேயாமாடத்தின்பெயர் = மண்ணீடு. ௧
முற்றத்தின்பெயர் = அங்கணம், முன்றில். ௨
கல்விபயில்களத்தின்பெயர் = கழகம், கல்லூரி. ௨

ஆயுதஞ்சூதுகூத்துப்பயில்களத்தின்பெயர் = அரங்கம். ௧
வாயிலின்பெயர் = கடை, துவாரம், வாரி. ௩. தாழ்வாரத்தின்
பெயர் = சோபானம். ௧. † தூம்புவாயின்பெயர் = அங்கணம். ௧
சுவரின்பெயர் = பித்திகை. ௧
நிலாமுற்றத்தின்பெயர் = அரமியம். ௧

யானைக்கூடத்தின்பெயர் = ஆலயம், ஓளி, வாரி. ௩
குதிரைப்பந்தியின்பெயர் = சாலை, மந்துரை, [மந்திரை.] ௨
பலகணியின்பெயர் = சாலகம், சாளரம், வாதாயனம், குறுங்கண்,
சாலம், காலதர். ௬. ‡ கரந்தகற்படையின்பெயர் = சுருங்கை. ௧

கற்படுத்தநிலத்தின்பெயர் = குட்டிமம். ௧
திண்ணையின்பெயர் = குறடு, வேதிகை, மண்ணீடு, திட்டை. ௪
சிற்றிலின்பெயர் = கூரை. ௧. குடிலின்பெயர் = குரம்பை. ௧
அடிச்சேரியின்பெயர் = அடிக்குடில். ௧
மடைப்பள்ளியின்பெயர் = அட்டில், பாகசாலை, அடுக்களை. ௩

அடுப்பின்பெயர் = குமுதம், சுல்லி, காமரம், உத்தானம். ௪
ஓமகுண்டத்தின்பெயர் = தடவு, வேள்விக்குண்டம், வேள்வி,
நித்தம், வேதி. ௫
முனிவர்வாசத்தின்பெயர் = பாழி, தாபதம், கரண்டை, பள்ளி. ௪

* வேயுள் - வேயப்படுமாடம். † தூம்புவாய் - சலதாரை.
‡ கற்படை - கோட்டையிற்கள்ளவழி.

மஞ்செனப்புகைசூழ்சுள்ளைமட்கலஞ்சுடுசூளைப்பேர்
பஞ்சரம்பண்ணுங்கூடாம்பகர்குலாயனமுமப்பேர்
குஞ்சுறைகட்சிகூண்டுகுடம்பையேகூட்டின்பேராம்
விஞ்சுநென்முதலாம்பண்டம்வீழ்குதிர்புகலென்றோதும். (௫௭)

சட்டகம்பாயல்பள்ளிசயனமேயுறையுள்பாழி
கட்சியேயமளிசேக்கைகண்படைமனிதர்பாலாம்
பட்டமேபோத்துச்சேக்கைபண்ணையும்விலங்கின்பாலாம்
இட்டசேவகமேதண்டம்யானையின்றுயிலிடப்பேர். (௫௮)

சுடுகாடுபுறங்காட்டோடுதொடர்காளவனம்பிணக்கா
டிடுகாடுபிதிர்வனத்தோடீமமேவனமயானம்
படுகாடுசுடுநிலங்கள்பன்னொன்றுஞ்சுடலையின்பேர்
கடிதாஞ்செம்புலம்பிணம்வீழ்களம்பறந்தலையுமாமே. (௫௯)

வெற்றிகொள்களரியேயாகவபூமிவிளாகமேமொய்
செற்றிடும்போர்க்களம்வெஞ்செருக்களம்பொருகளப்பேர்
புற்றுவன்மீகமென்பபுகுமொதுக்கிடமேதுச்சில்
உற்றவேறிடமேகாந்தமொருவந்தமென்றும்பேரே. (௬௦)

இழிவுகீழ்பயம்புதாழ்வேயேற்றிடும்படுகர்ஞெள்ளல்
குழியுவளகங்கிழக்குக்கூறவல்பள்ளம்பத்தாம்
பழையதாங்கொல்லைப்பேரேபகர்முதைப்புனமாமென்ப
விழைவுறுபுதியகொல்லையிதைப்புனமுழவுதொய்யல். (௬௧)

வதிசுரம்வட்டைநீண்டவகுந்தொடுவயவைவாரி
அதர்நெறிசெலவுதாரியயனமேயிடைவைமார்க்கம்
பதவையேயத்தஞ்செப்பம்பட்டமேயியவைபாதை
உதவியசரியேதாரையொழுக்கமேநடவையாறு. (௬௨)

தெருவகிர்கிறிமூவொன்பான்செப்பியவழியின்பேரே
அருநெறிப்பேர்சுரத்தோடத்தமுங்கடமுமாகும்
கருதியகவலைதானேகவர்ந்திடுவழிப்பேரென்ப
பெருமதயானைசெல்லும்பிறவழிதண்டமாமே. (௬௩)

சிறுவழிவிடங்கராகுஞ்சிறந்தகற்படியினாமம்
மறுவில்சோபானமேயாரோகணந்தானுமற்றும்
நெறிபடுமளக்கரென்பநீள்வழிநாமந்தானே
உறுதியாம்புதுவரம்பினுறுவழிமரிசியென்ப. (௬௪)



மட்கலஞ்சுடுசூளையின்பெயர் = சுள்ளை. ௧
பண்ணுங்கூட்டின்பெயர் = பஞ்சரம், குலாயனம். ௨
கூட்டின்பெயர் = கட்சி, கூண்டு, குடம்பை. ௩
குதிரின்பெயர் = புகல். ௧

மனிதர்துயிலிடத்தின்பெயர் = சட்டகம், பாயல், பள்ளி, சயனம், உறையுள், பாழி, கட்சி, அமளி, சேக்கை, கண்படை. ௧௦
விலங்குதுயிலிடத்தின்பெயர் = பட்டம், போத்து, சேக்கை, பண்ணை. ௪. யானைதுயிலிடத்தின்பெயர் = சேவகம், தண்டம். ௨

சுடலையின்பெயர் = சுடுகாடு, புறங்காடு, காளவனம், பிணக்காடு, இடுகாடு, பிதிர்வனம், ஈமம், வனம், மயானம், படுகாடு, சுடுநிலம். ௧௧
பிணம்வீழ்களத்தின்பெயர் = செம்புலம், பறந்தலை. ௨

பொருகளத்தின்பெயர் = களரி, ஆகவபூமி, விளாகம், மொய், போர்க்களம், செருக்களம். ௬
புற்றின்பெயர் = வன்மீகம். ௧. ஒதுக்கிடத்தின்பெயர் = துச்சில். ௧.
ஏகாந்தத்தின்பெயர் = வேறிடம், ஒருவந்தம். ௨

பள்ளத்தின்பெயர் = இழிவு, கீழ், பயம்பு, தாழ்வு, படுகர், ஞெள்ளல், குழி, உவளகம், கிழக்கு, அவல். ௧௦
பழங்கொல்லையின்பெயர் = முதைப்புனம். ௧
புதுக்கொல்லையின்பெயர் = இதைப்புனம். ௧
உழவின்பெயர் = தொய்யல். ௧

வழியின்பெயர் = வதி, சுரம், வட்டை, வகுந்து, வயவை, வாரி, அதர், நெறி, செலவு, தாரி, அயனம், இடைவை, மார்க்கம், பதவை, அத்தம், செப்பம், பட்டம், இயவை, பாதை, சரி, தாரை, ஒழுக்கம், நடவை, ஆறு. ௨௪

தெரு, வகிர், கிறி. ௩. (ஆ ௨௭.)
அருநெறியின்பெயர் = சுரம், அத்தம், கடம். ௩
கவர்வழியின்பெயர் = கவலை. ௧
யானைசெல்லும்வழியின்பெயர் = தண்டம். ௧

சிறுவழியின்பெயர் = விடங்கர். ௧
கற்படியின்பெயர் = சோபானம், ஆரோகணம். ௨
நீள்வழியின்பெயர் = அளக்கர். ௧
புதுவரம்பின்வழியின்பெயர் = மரிசி. ௧

இடையுழிவழிநிலம்பாலில்லுழையுளிகண்பக்கம்
புடைதலைமுதல்வளாகம்புலம்வலஞ்சூழல்பாங்கர்
கடைவயின்பட்டிவைப்புக்கால்களந்தேயம்பாடே
இடமென்பமுன்பின்சார்வாய்கீழ்மேலுமதுவேயென்ப. (௬௫)

பாங்கர்பாரிசமருங்குபால்புடைபுறமேபக்கம்
ஞாங்கருஞ்சிறையுமாடுநாட்டுபவதுவேமீட்டும்
நாங்கிளர்நள்ளுநாப்பணனந்தலைபிரமமையம்
ஆங்குறுமத்தியத்தோடாகுநாநடுவேழ்பேரே. (௬௬)

ஈண்டேயிவ்விடமென்பேராமிம்பரேயிவணெனுஞ்சொல்
யாண்டேயெவ்விடமென்பேராம்யாங்கென்பவெவணெனுஞ்சொல்
ஆண்டேயவ்விடமென்பேர்தாகுங்கூப்பிடுகுரோசம்
காண்டும்யோசனைபுகைப்பேர்காவதங்காதமாமே. (௬௭

முன்னெடுமேலுமற்றுமொழியுமஞ்ஞாங்கர்தானே
முன்னரேதலைத்தாளாகுமுதலொடுபுரமுமப்பேர்
அன்னதிவ்விடப்பேர்க்கெட்டோடாறுபதுவிருத்தஞ்செய்தான்
மன்னுசீர்க்குணபத்திரன்றாள்வணங்குமண்டலவன்றானே. (௬௮,

இடப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆ விருத்தம்—௩௨௧.

## ஆறவது

## பல்பொருட்பெயர்த்தொகுதி.

### காப்பு.

உலகெலாமிறைஞ்சியேத்தவுலகெலாமுணர்ந்தமூர்த்தி
அலகிலாஞானவாரியாறிருகணங்களோடும்
இலகுமூவெயிலுள்யாளியெழிலணையிருந்தோன்பாதம்
பலமுறைவணங்கியேத்திப்பல்பொருட்பெயருஞ்சொல்வாம். (௧)

மாசைபீதகமேபீதமாடையேமாடுவேங்கை
ஆசையேசுவணங்காரமருத்தங்காஞ்சனமேகாணம்
தேசிகங்கனகங்கைத்துச்செந்தாதுபொலமேயத்தம்
பேசியசாமிவித்தம்பெருந்தனமுடலேபண்டம். (௨)



இடத்தின்பெயர்=இடை, உழி, வழி, நிலம், பால், இல், உழை, உளி, கண், பக்கம், புடை, தலை, முதல், வளாகம், புலம், வலம், சூழல், பாங்கர், கடை, வயின், பட்டி, வைப்பு, கால், களம், தேயம், பாடு, முன், பின், சார், வாய், கீழ், மேல். ௩௨

பக்கத்தின்பெயர்=பாங்கர், பாரிசம், மருங்கு, பால், புடை, புறம், ஞாங்கர், சிறை மாடு. ௯

நடுவின்பெயர்=நள், நாப்பண், நனந்தலை, பிரமம், மையம், மத்தியம், நா. ௭

இவ்விடத்தின்பெயர்=ஈண்டு. க. இம்பரென்பது=இவண். ௧
எவ்விடத்தின்பெயர்=யாண்டு. க. யாங்கென்பது=எவண். ௧
அவ்விடத்தின்பெயர்=ஆண்டு. ௧
கூப்பிடுதூரத்தின்பெயர்=குரோசம். ௧
யோசனைதூரத்தின்பெயர்=புகை. ௧
காதத்தின்பெயர்=காவதம். ௧

ஞாங்கரென்பது=முன், மேலுக்கும்பெயர்.
முன்னரின்பெயர்=தலைத்தாள், முதல், புரம். ௩

## பெயர்ப்பிரிவு.

இ-ள். உலகு எலாம் இறைஞ்சி ஏத்த உலகு எலாம் உணர்ந்த மூர்த்தி - உலகத்தவர்கள் யாவரும் வணங்கித் துதிக்க உலகமுழுதையும் அறிந்த கடவுளும்,—அலகு இலா ஞான வாரி - அளவில்லாத ஞானக்கடலும்,—ஆறிருகணங்களோடும் இலகு மூவெயிலுள் எழில் யாளி அணை இருந்தோன் பாதம் - பன்னிரண்டு கணங்களோடும் விளங்குகின்ற மும்மதிலையுடைய சமவசரணத்தினுள்ளே அழகினையுடைய சிங்காசனத்தில் வீற்றிருந்தவரும் ஆகிய அருகக்கடவுளுடைய பாதத்தை,—பலமுறை வணங்கி ஏத்தி - பலதரம் வணங்கித் துதித்து,—பல்பொருட்பெயரும் சொல்வாம் - பல்பொருட் பெயர்த்தொகுதியும் (யாம்) கூறுவாம், எ-று.

பொன்னின்பெயர்=மாசை, பீதகம், பீதம், மாடை, மாடு, வேங்கை, ஆசை, சுவணம், காரம், அருத்தம், காஞ்சனம், காணம், தேசிகம், கனகம், கைத்து, செந்தாது, பொலம், அத்தம், சாமி, வித்தம், தனம், உடல், பண்டம். ௨௩

இரணியநிதிவெறுக்கையீகைகல்யாணமேமம்
பொருளுரைசந்திரஞ்சாம்பூனதம்பூரியீழம்
திரவியஞ்சாதரூபஞ்செங்கொல்லுநிதானமாழை
அரிதபனியமாறேழுஞ்செம்பொனாடகமுமாமே. (௩)

எதிரில்பொன்வெள்ளிசெம்போடிரும்பீயம்பஞ்சலோகம்
பொதிகஞ்சந்தராவுங்கூட்டிப்புகன்றிடினேழுலோகம்
கதிர்நவமணியின்பேருங்கடவுண்மாமணியின்பேரும்
நிதிநிதானங்களென்பநீண்டபொற்காசுகாணம். (௪)

கருதியமணிப்பொதுப்பேர்காசொடுமனவுமாகும்
அரதனஞ்சலாகைதெய்வகன்மணிப்பொதுப்பேர்தானே
மருவுசெம்மணியேமற்றைமாமணிமாணிக்கப்பேர்
பரவியபதுமராகங்கௌத்துபமென்றுபன்னும். (௫)

வரைவறுவாலவாயம்வைடூரியத்தினாமம்
நிரைபெறுமணியெனும்பேர்நீலமாமணியின்பேரே
மரகதமரியேபச்சைவச்சிரம்வைரமாரம்
தரளநித்திலமேமுத்துமௌத்திகந்தானுமப்பேர். (௬)

துப்புடன்றுவரரத்தந்துகிர்பிரவாளமைந்தும்
மெய்ப்படுபவளமென்பவித்துருமந்தானும்பேர்
கைப்படுதகணைமாழைகாட்டும்வங்காரமும்பேர்
ஒப்பவேயுருக்கிக்கூட்டுமுலோகத்தின்கட்டியாமே. (௭)

சங்கநீணிதியத்தோடுதாமரைநிதியந்தானே
அங்கண்மாஞாலத்தேயவ்விருவுருவாகுமென்ப
பொங்கியகோசந்தண்டம்போற்றுபண்டாரமாகும்
தங்கிடுமுருக்கினாமமெஃகெனச்சாற்றலாமே. (௮)

கருதியசுல்லுத்தாரங்களதௌதம்வெண்பொன்னோடும்
இரசதம்வெள்ளியின்பேரேற்றகாரீயநாகம்
எருவையேயுதும்பரந்தாமிரமொடுவடுவேசெம்பாம்
பொருவறுசீருள்சிக்கமிவைகளின்பொதுப்பேராமே. (௯)

திருந்தியவீயம்வங்கஞ்சீருளேசீசமும்பேர்
புரிந்தபித்தளையேமாயாபுரியாரகூடமும்பேர்
கருங்கஞ்சமுறைகளேவெண்கலமதுகந்தராவாம்
கருங்கொல்லேயயமேசொன்னகரும்பொன்னுமிரும்பினாமம். ()



இரணியம், நிதி, வெறுக்கை, ஈகை, கல்யாணம், ஏமம், பொருள், உரை, சந்திரம், சாம்பூனதம், பூரி, ஈழம், திரவியம், சாதரூபம், செங்கொல், நிதானம், மாழை, அரி, தபனியம், ஆடகம். ௨௦. (ஆ. ௪௩.)

பஞ்சலோகமாவன = பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம். ௫
ஏழுலோகமாவன = பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், கஞ்சம், தரா. ௭
நவமணியின்பெயர் = நிதி. ௧
கடவுண்மணியின்பெயர் = நிதானம். ௧
பொற்காசின்பெயர் = காணம். ௧

மணிப்பொதுப்பெயர் = காசு, மனவு. ௨
தெய்வமணிப்பொதுப்பெயர் = அரதனம், சலாகை. ௨
மாணிக்கத்தின்பெயர் = செம்மணி, மாமணி. ௨
பதுமராகத்தின்பெயர் = கௌத்துபம். ௧

வைடூரியத்தின்பெயர் = வாலவாயம். ௧
நீலமணியின்பெயர் = மணி. ௧
மரகதத்தின்பெயர் = அரி, பச்சை. ௨
வைரத்தின்பெயர் = வச்சிரம். ௧
முத்தின்பெயர் = ஆரம், தரளம், நித்திலம், மௌத்திகம். ௪

பவளத்தின்பெயர் = துப்பு, துவர், அரத்தம், துகிர், பிரவாளம், வித்துருமம். ௬
உலோகக்கட்டியின்பெயர் = தகணை, மாழை, வங்காரம். ௩

சங்கநிதியென்பது = சங்கின்வடிவினது.
பதுமநிதியென்பது = தாமரைவடிவினது.
பண்டாரத்தின்பெயர் = கோசம், தண்டம். ௨
உருக்கின்பெயர் = எஃகு. ௧

வெள்ளியின்பெயர் = சுல்லு, தாரம், கலதௌதம், வெண்பொன், இரசதம். ௫. காரீயத்தின்பெயர் = நாகம். ௧
செம்பின்பெயர் = எருவை, உதும்பரம், தாமிரம், வடு. ௪
இவைகளின்பொதுப்பெயர் = சீருள், சிக்கம். ௨

ஈயத்தின்பெயர் = வங்கம், சீருள், சீசம். ௩
பித்தளையின்பெயர் = மாயாபுரி, ஆரகூடம். ௨
வெண்கலத்தின்பெயர் = கஞ்சம், உறை. ௨
தராவின்பெயர் = மதுகம். ௧
இரும்பின்பெயர் = கருங்கொல், அயம், கரும்பொன். ௩

தொந்தமாயிரும்புள்வாங்குஞ்சலாகைசும்பகமேயென்ப
சந்திரகிரணநீர்கால்சலாகையேசந்திரகாந்தம்
வந்தசூரியகாந்தந்தான்மற்றதனொளிதீக்காலும்
நந்துகைரிகமேதாதுநற்செங்கல்காவிக்கல்லே. (௧௧)

கண்ணியபளிங்கினமங்காழ்படிகம்பருக்கை
மண்ணியகவுடிசோகிவராடியேபலகறைப்பேர்
பண்ணியம்வளமேகூலம்பண்டாரம்பண்ணிகாரம்
நண்ணியபலபண்டப்பேர்நடைப்பரிகாரமும்பேர். (௧௨)

விருப்பமாமரும்பண்டப்பேர்மேவியதாரமாகும்
கருப்பூரம்பளிதத்தோடுகனசாரஞ்சசிமுப்பேரே
பிரித்தமான்மதங்கத்தூரிபீதமேகலவையோடு
பொருத்தும்வட்டிகையுமற்றைப்புலியுநால்வகையிற்சாந்து. (௧௩)

கலவைச்சேறேகாலேகவண்ணமேகளபமேமெய்
குலவியவிரையேசாந்தங்குங்குமப்பேர்செஞ்சாந்தாம்
இலகியதகரமேலங்காசறைமயிர்ச்சாந்தின்பேர்
கலவையேகளபமென்பகலம்பகங்கண்டபேரே. (௧௪)

உலப்பிலாத்தேய்வைசெச்சைசெறிகுழம்புற்றபேர்கைத்
தலத்தினிற்கொட்டலப்பல்சாத்துதல்சதுர்த்தலும்பேர்
புலர்த்தலேவரித்தலென்பபூசுதலின்பேர்தானே
அலைத்துமெய்ப்பூசும்பூச்சினபிதானமங்கராகம். (௧௫)

இலகியவெழுதுகோலாவிளையவர்முலையுந்தோளும்
நலமிகவெழுதுகோலநவின்றிடுந்தொய்யிலென்ப
திலகமேசுடிகைசுட்டிதிலதமுமதன்பேர்செப்பும்
திலகம்புண்டரங்களென்பசெறிநெற்றிக்குறிகளாமே. (௧௬)

இங்குலிகந்தான்சாதிலிங்கமாங்குலிகமும்பேர்
குங்குலியந்தானேகுங்குலுவாங்குக்குலுவுமப்பேர்
செங்கதிர்க்கிரணம்போலுஞ்சிந்தூரப்பேர்சேலேகம்
இங்குவேபெருங்காயப்பேரெழிலலத்தகஞ்செம்பஞ்சு. (௧௭)

பறையரக்கரத்தந்துப்பாம்பழுப்பென்பதரிதாரப்பேர்
அறுகுவெள்ளரிசிகூட்டியணிவ * தக்கதமென்றாகும்
குறுணியொவ்வொன்றதாகக்கொள்கலம்பல்லுணக்கள்
பெறுமுறைபரப்பிவைப்பபிரப்பெனப்பேசலாமே. (௧௮)

* அக்கதத்தை அச்சுதமென்று வழங்குவர்.



* இரும்புள்வாங்குஞ்சலாகையின்பெயர் = சும்பகம். ௧
சந்திரகிரணத்தினீர்கால்சலாகையின்பெயர் = சந்திரகாந்தம். ௧
சூரியனொளியிற்றீக்கால்சலாகையின்பெயர் = சூரியகாந்தம். ௧
காவிக்கல்லின்பெயர் = கைரிகம், தாது, செங்கல். ௩

பளிங்கின்பெயர் = காழ், படிகம், பருக்கை. ௩
பலகறையின்பெயர் = கவுடி, சோகி, வராடி. ௩
பலபண்டத்தின்பெயர் = பண்ணியம், வளம், கூலம், பண்டாரம்,
பண்ணிகாரம், நடைப்பரிகாரம். ௬

அரும்பண்டத்தின்பெயர் = தாரம். ௧
கருப்பூரத்தின்பெயர் = பளிதம், கனசாரம், சசி. ௩
கத்தூரியின்பெயர் = மான்மதம். ௧
நால்வகைச்சாந்தாவன = பீதம், கலவை, வட்டிகை, புலி. ௪

சாந்தின்பெயர் = கலவைச்சேறு, காலேகவண்ணம், களபம்,
விரை. ௪. குங்குமத்தின்பெயர் = செஞ்சாந்து ௧
மயிர்ச்சாந்தின்பெயர் = தகரம், ஏலம், காசறை. ௩
கலவையின்பெயர் = களபம், கலம்பகம். ௨

செறிகுழம்பின்பெயர் = தேய்வை, செச்சை. ௨
அப்பலின்பெயர் = கொட்டல், சாத்துதல், சதுர்த்தல். ௩
பூசுதலின்பெயர் = புலர்த்தல், வரித்தல். ௨
மெய்ப்பூச்சின்பெயர் = அங்கராகம். ௧

முலையினுந்தோளினுமெழுதுங்கோலத்தின்பெயர் = தொய்யில். ௧
திலகத்தின்பெயர் = சுடிகை, சுட்டி, திலதம். ௩
நெற்றிக்குறியின்பெயர் = திலகம், புண்டரம். ௨

சாதிலிங்கத்தின்பெயர் = இங்குலிகம், குலிகம். ௨
குங்குலியத்தின்பெயர் = குங்குலு, குக்குலு. ௨
சிந்தூரத்தின்பெயர் = சேலேகம். ௧
பெருங்காயத்தின்பெயர் = இங்கு. ௧
செம்பஞ்சின்பெயர் = அலத்தகம். ௧

அரக்கின்பெயர் = அரத்தம், துப்பு. ௨
அரிதாரத்தின்பெயர் = பழுப்பு. ௧
அக்கதமென்பது = அறுகுவெள்ளரிசிகூட்டியணிவது.
பிரப்பென்பன = குறுணியொவ்வொன்றதாகக் கொள்கலத்துட்
பல்லுணக்கள் பரப்பிவைப்பனவாம்.

* இரும்புள்வாங்குஞ்சலாகை - ஊசிக்காந்தம்.

வெந்திடுஞ்சமிதையோமவிறகெனவறையலாகும்
நிந்தைசெய்ஞெகிழிகொள்ளிநெருப்புறுவிறகின்பேரே
கந்துளேயிருந்தைநல்லங்கரியென்பகடைக்கொள்ளிக்கு
முந்துபேரலாதமுற்கமுளரியோடிராதமாமே. (௧௯)

அடலைவெண்பலிசாம்பர்ப்பேராந்திருநீறேபற்பம்
பொடியொடுவிபூதிகாப்பாம்புண்ணியசாந்தஞ்சாணி
பொடிதுகள்சுண்ணந்தூளிபூழியேபுழுதியாகும்
சுடுசுண்ணச்சாந்துமண்ணுஞ்சுதையொடுகளபமும்பேர். (௨௦)

நொய்யதோரிலவின்பஞ்சுநுவன்றபேர்பூளைதானே
பையெனும்பருத்திபன்னல்பரியுமாந்தூலம்பஞ்சாம்
ஐயநுண்ணிடையார்நூற்குமப்பஞ்சிற்றொடர்நுனிப்பேர்
துய்யெனுநாமமாகுந்தொடர்பிசின்பயினென்றேபேர். (௨௧)

அடிசில்போனகமேமூரலமலையேயயினிபொம்மல்
மடைமிசையுணாப்புழுக்கல்வல்சிபாளிதமேயன்னம்
தொடுபதமிதவைபாத்துத்துற்றுண்டிசொன்றிபுன்க
மொடுசருவசனமூண்கூழோதனம்புகாவேசோறும். (௨௨)

மெச்சமிழ்தவியினோடுபலிசருவிண்ணோருணும்
அச்சமில்பொதிசோறென்பதாற்றுணாத்தோட்கோப்பும்பேர்
மிச்சிலோடெச்சஞ்சேடமிகுபொருளென்பமுப்பேர்
உச்சிட்டமொன்றேயெச்சில்பிரப்புப்பேருண்டியாமே. (௨௩)

நிறையநெய்பொதிபாற்சோறுநிகழ்த்துபாயசமென்றாகும்
நறையிடுங்கருனைதானேநாட்டியபொரியலின்பேர்
அறைதருவெந்தைபிட்டாமஃகுல்லியுக்காரிப்பேர்
வறையலின்பேரேயோச்சைமலாவகம்பிண்ணாக்கின்பேர். (௨௪)

கொடிதரிலருப்பம்பிட்டநுவணையேபிண்டிமாப்பேர்
இடியுமாமிலட்டுகத்தோடேற்றமோதகமேதோசை
அடைநொலையபூபங்கஞ்சமண்டகையப்பவர்க்கம்
இடையறநுகர்வோர்தங்கட்கிவைகள்சிற்றுண்டியாமே. (௨௫)

கூடியதுவையெனுஞ்சொற்புளிங்கறிகூட்டமைத்து
நீடியேசமைப்பதாகுநீடாணங்கறிகளின்பேர்
காடியேயவாகுமோழைகஞ்சிபாகேகுழம்பாம்
பாடிலாவமிழ்துக்ஷீரம்பயசுதுத்தம்பயம்பால். (௨௬)



ஓமவிறகின்பெயர் = சமிதை. ௧
நெருப்புறுவிறகின்பெயர் = ஞெகிழி, கொள்ளி. ௨
கரியின்பெயர் = கந்துள், இருந்தை, நல்லம். ௩
கடைக்கொள்ளியின்பெயர் = அலாதம், உற்கம், முளரி, இராதம். ௪

சாம்பரின்பெயர் = அடலை, வெண்பலி. ௨
திருநீற்றின்பெயர் = பற்பம், பொடி, விபூதி, காப்பு. ௪
சாணியின்பெயர் = புண்ணியசாந்தம். ௧
புழுதியின்பெயர் = பொடி, துகள், சுண்ணம், தூளி, பூழி. ௫
சுண்ணச்சாந்தின்பெயர் = மண், சுதை, களபம். ௩

இலவின்பஞ்சின்பெயர் = பூளை. ௧
பருத்திப்பஞ்சின்பெயர் = பன்னல், பரி. ௨
பஞ்சின்பெயர் = தூலம். ௧
நூற்கும்பஞ்சிற்றொடர் நுனியின்பெயர் = துய். ௧
பிசினின்பெயர் = பயின். ௧

சோற்றின்பெயர் = அடிசில், போனகம், மூரல், அமலை, அயினி, பொம்மல், மடை, மிசை, உணா, புழுக்கல், வல்சி, பாளிதம், அன்னம், பதம், மிதவை, பாத்து, துற்று, உண்டி, சொன்றி, புன்கம், சரு, அசனம், ஊண், கூழ், ஓதனம், புகா. ௨௬

விண்ணோருணின்பெயர் = அமிழ்து, அவி, பலி, சரு. ௪
* பொதிசோற்றின்பெயர் = ஆற்றுணா, தோட்கோப்பு. ௨
மிகுபொருளின்பெயர் = மிச்சில், எச்சம், சேடம். ௩
எச்சிலின்பெயர் = உச்சிட்டம். ௧. பேருண்டியின்பெயர் = பிரப்பு. ௧

பாற்சோற்றின்பெயர் = பாயசம். ௧. பொரியலின்பெயர் = கருனை. ௧
பிட்டின்பெயர் = வெந்தை. ௧. உக்காரியின்பெயர் = அஃகுல்லி ௧.
வறையலின்பெயர் = ஓச்சை. ௧
பிண்ணாக்கின்பெயர் = மலாவகம். ௧

மாவின்பெயர் = அருப்பம், பிட்டம், நுவணை, பிண்டி, இடி. ௫
அப்பவர்க்கமாவன = இலட்டுகம், மோதகம், தோசை, அடை, நொலை, அபூபம், கஞ்சம், அண்டகை. இவைகள் சிற்றுண்டியாம்.

புளிங்கறியின்பெயர் = துவை. ௧. கறியின்பெயர் = நீடாணம். ௧
கஞ்சியின்பெயர் = காடி, யவாகு, மோழை. ௩
குழம்பின்பெயர் = பாகு. ௧
பாலின்பெயர் = அமிழ்து, க்ஷீரம், பயசு, துத்தம், பயம். ௫

* பொதிசோறு - கட்டுச்சோறு.

ததிதயிர்பெருகுமாகுந்தக்கிரங்காலசேயம்
மதிதமோடளையருப்பமச்சிகைமுசரேமோர்ப்பேர்
விதமுறையங்கவீனநவநீதம்வெண்ணெயாநெய்
இதமுறுகிருதநேயமிழுதாச்சியந்துப்பாமே. (௨௭)

கண்டம்பாளிதங்களென்பகண்டசர்க்கரையினாமம்
கண்டதேயயிரும்புல்லகண்டமுமதற்கேகூற்றும்
விண்டெழுகட்டிகன்னல்விசயமேகுளமக்காரம்
பிண்டசர்க்கரையைந்தேபேர்பிரசந்தேன்மதுவுமப்பேர். (௨௮)

அரியல்பாடலிதேன்மட்டேயரிட்டமேசுண்டைதொண்டி
முருகுசாயனமேகௌவைமுண்டகஞ்சாதிசாலி
பிரசமாதவமேமேதைபிழிசேறுதணியன்மாரி
சுரைமதுசுமாலிமாலிசுலோகியேசொல்விளம்பி. (௨௯)

நறவொடாசவமேதொப்பிநனையிக்குஞாளிகுந்தி
வெறிவெடிசாறுபானம்விகுணியேசோபம்வேரி
மறவிதேஞ்சுவிகைதேறன்மகரந்தமதிரையாம்பல்
அறிவழிபடுவாறெட்டுங்கள்ளினுக்கமைத்தபேரே. (௩௦)

அரியதோரமிழ்துதானேயமரியேசுதைமருந்தாம்
கரளமேயாலங்காரிகடுவுடன்காளஞ்சிங்கி
விரவியவாலகாலம்விடமெட்டுநஞ்சின்பேரே
பருகுதறுவையேபானம்பகர்நேயந்தைலமெண்ணெய். (௩௧)

அலைவறுதுற்றியுண்பவாந்திற்றிதின்பவாகும்
இலைநுகர்விலங்குணவேகுளகெனவியம்பலாகும்
நலனுறுபறவையோடுநாட்டொருசார்விலங்கின்
உலகினாணுண்டியூட்டியுணவிரையுறையுமாமே. (௩௨)

துப்புடனேதுவென்னுஞ்சொற்றுணைக்காரணப்பேர்
ஒப்பவேசாதனத்தோடுபகரணமுமாமப்பேர்
செப்பியயுகளத்தோடுசேர்ந்திடுமுபயமென்ப
அப்படியிரண்டிலக்கத்தபிதானமாகுந்தானே. (௩௩)

பணிவுறுகானல்வெண்டேர்பாழ்த்தபேய்த்தேருமாகும்
துணியறைதூக்குத்தானேசல்லியாஞ்சொல்லுநெல்லின்
மணிபலகறையினோடுமகிழ்விதையலகென்றாகும்
அணியொழுங்கோளிபந்திநிரைநிரல்வரிசையாமே. (௩௪)



தயிரின்பெயர் = ததி, பெருகு. ௨
மோரின்பெயர் = தக்கிரம், காலசேயம், மதிதம், அளை, அருப்பம், மச்சிகை, முசர். ௭
வெண்ணெயின்பெயர் = ஐயங்கவீனம், நவநீதம். ௨
நெய்யின்பெயர் = கிருதம், நேயம், இழுது, ஆச்சியம், துப்பு. ௫

கண்டசர்க்கரையின்பெயர் = கண்டம், பாளிதம், அயிர், புல்லகண்டம். ௪
சர்க்கரையின்பெயர் = கட்டி, கன்னல், விசயம், குளம், அக்காரம். ௫
தேனின்பெயர் = பிரசம், மது. ௨

கள்ளின்பெயர் = அரியல், பாடலி, தேன், மட்டு, அரிட்டம், சுண்டை, தொண்டி, முருகு, சாயனம், கௌவை, முண்டகம், சாதி, சாலி, பிரசம், மாதவம், மேதை, பிழி, சேறு, தணியல், மாரி, சுரை, மது, சுமாலி, மாலி, சுலோகி, சொல்விளம்பி. ௨௬

நறவு, ஆசவம், தொப்பி, நனை, இக்கு, ஞாளி, குந்தி, வெறி, வெடி, சாறு, பானம், விகுணி, சோபம், வேரி, மறவி, தேம், சுவிகை, தேறல், மகரந்தம், மதிரை, ஆம்பல், படு. ௨௨. (ஆ. ௪௮)

அமிழ்தின்பெயர் = அமரி, சுதை, மருந்து ௩
நஞ்சின்பெயர் = கரளம், ஆலம், காரி, கடு, காளம், சிங்கி, ஆலகாலம், விடம். ௮
பானத்தின்பெயர் = பருகுதல், துவை. ௨
எண்ணெயின்பெயர் = நேயம், தைலம். ௨

உண்பவற்றின்பெயர் = துற்றி. ௧. தின்பவற்றின்பெயர் = திற்றி. ௧
இலைநுகர்விலங்குணவின்பெயர் = குளகு. ௧
பறவையொருசார்விலங்குகளினாணின்பெயர் = உண்டி, ஊட்டி, உணவு, இரை, உறை. ௫

துணைக்காரணத்தின்பெயர் = துப்பு, ஏது, சாதனம், உபகரணம் ௪
இரண்டென்னுமிலக்கத்தின்பெயர் = யுகளம், உபயம். ௨

கானலின்பெயர் = வெண்டேர், பேய்த்தேர். ௨
சல்லியின்பெயர் = துணி, அறை, தூக்கு. ௩
நென்மணிபலகறைமகிழ்விதையென்பவற்றின்பெயர் = அலகு. ௧
வரிசையின்பெயர் = அணி, ஒழுங்கு, ஒளி, பந்தி, நிரை, நிரல். ௬

மகரகேதனனைவென்றவாமற்கேதொழும்புசெய்வோன்
இகலிலாக்குணபத்திரன்றனிருசரணிதயம்வைத்தோன்
மிகுபுகழ்புனையாசின்றவீரைமண்டலவன்செய்தான்
பகர்தருமுப்பத்தைந்துபல்பொருட்பெயர்க்குச்செய்யுள். (௩௫)

பல்பொருட்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆ விருத்தம் - ௪௫௬.

ஏழாவது

## செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

### காப்பு.

முழுமதிமுக்குடைக்கீழ்மூர்த்திதாள்போற்றல்செய்தே
எழுவகையுலோகந்தன்னிலேற்றமண்மரங்கடம்மிற்
பழுதறுதோலினூலிற்பற்பலவிதங்களாக
வழுவுறாதிடுஞ்செயற்கைவடிவப்பேர்த்தொகுதிசொல்வாம். (௧)

பரசொடுநவியந்தண்ணம்பாலமேகணிச்சியென்ப
விரவியமழுப்படைப்பேர்மேவுசக்கரப்பேர்நேமி
பரிதியேவலயமெஃகம்பகர்சுதரிசனமாழி
திருமிகுமொளிவட்டம்மேதிகிரியாம்வளையுமப்பேர். (௨)

தனுவொடுசிந்துவாரந்தடிசராசனங்கோதண்டம்
குனிசிலைதுரோணஞ்சாபங்கொடுமரத்தோடுவேணு
முனிதவர்சராரோபங்கார்முகமீரேழிவைவில்லின்பேர்
இனியதோர்சார்ங்கமால்வில்லீசன்விற்பிநாகமாமே. (௩)

பூரியேதொடையேயாவம்பூட்டேசிஞ்சினிநரம்பு
நாரியேவடங்குணந்தாநுணியொன்பானேநாமம்
கூரியசரமேவாளிகொடுங்கணைபகழிவண்டு
பாரியகதிரங்கங்கபத்திரமத்திரங்கோல். (௪)

பாணமாசுகமேபூதைபத்திரிவிசிகம்புங்கம்
தோணிசாயகமேபல்லந்தொடைசிலீமுகமேவம்பாம்
பூணுறுமம்புக்கட்டுப்புதைபுழுகாகுங்குப்பி
கோணிலாக்குலையேபுங்கங்குதையுதண்மொட்டம்பாமே. (௫)

## பெயர்ப்பிரிவு.

இ - ள். முழுமதி முக்குடைக்கீழ் மூர்த்திதாள் போற்றல் செய்து-பூரணசந்திரன்போலும் மூன்றுகுடையின்கீழ் வீற்றிருந்த அருகக்கடவுளுடைய பாதத்தைத் துதிசெய்து,—எழுவகை உலோகந்தன்னில் - எழுவகைப்பட்ட உலோகத்தினுலும்,—ஏற்ற மண் மரங்கள் தம்மில் - இயைந்த மண்ணினுலும் மரங்களினுலும்,—பழுது அறு தோலின் - குற்றமற்றதோளினுலும்,—நூலின் - நூலினுலும்,—பற்பலவிதங்கள் ஆக வழு உறாது இடும் - பலபலவிதங்களாகக் குற்றம் பொருந்தாமற் செயப்படுகின்ற,—செயற்கை வடிவப் பேர்த் தொகுதி சொல்வாம் - செயற்கைவடிவப்பெயர்த் தொகுதியை (யாம்) கூறுவாம், எ - று. இடுமென்னும் பெயரெச்சம் வடிவமென்னும் பெயரோடு முடிந்தது.

மழுப்படையின்பெயர்=பரசு, நவியம், தண்ணம், பாலம், கணிச்சி. ௫
சக்கரத்தின்பெயர்=நேமி, பரிதி, வலயம், எஃகம், சுதரிசனம், ஆழி, ஒளிவட்டம், திகிரி, வளை. ௯

வில்லின்பெயர்=தனு, சிந்துவாரம், தடி, சராசனம், கோதண்டம், சிலை, துரோணம், சாபம், கொடுமரம், வேணு, முனி, தவர், சராரோபம், கார்முகம். ௧௪
மால்வில்லின்பெயர்=சார்ங்கம். ௧
ஈசன்வில்லின்பெயர்=பிநாகம். ௧

நாணியின்பெயர்=பூரி, தொடை, ஆவம், பூட்டு, சிஞ்சினி, நரம்பு, நாரி, வடம், குணம், ௯
அம்பின்பெயர்=சரம், வாளி, கணை, பகழி, வண்டு, கதிரம், கங்கபத்திரம், அத்திரம், கோல். ௯

பாணம், ஆசுகம், பூதை, பத்திரி, விசிகம், புங்கம், தோணி, சாயகம், பல்லம், தொடை, சிலீமுகம், ஏ. ௧௨. (ஆ ௨௧)
அம்புக்கட்டின்பெயர்=புதை. ௧. அம்புகுப்பியின்பெயர்=புழுகு. ௧
அம்புக்குதையின்பெயர்=குலை, புங்கம். ௨
மொட்டம்பின்பெயர்=உதண். ௧

ஆவமேதூணியாவநாழிகையம்புக்கூடாம்
கோவைசெய்வில்லிலிட்டகுதைதானுங்குலையென்றோதும்
மேவியவுடுவேயீர்க்கில்விரவியசிறகாமம்பு
பாவகமாகக்கட்டும்பாசம்பற்றுக்கையாமே. (சா)

அயில்சத்தியெஃகஞாங்கருடம்பிடியைந்தும்வேலாம்
வயிரமேகுலிசஞ்சம்பம்வச்சிராயுதத்தின்பேரே
சயமுறுமசனியென்றுஞ்சதகோடியென்றுஞ்சாற்றும்
குயமொடுபுள்ளமற்றைக்கொடுவாளேயரிவாளின்பேர். (எ)

கழுமுளேகழுக்கடைப்பேர்கைப்பிடிவாளேகண்டம்
கழுமுண்மூவிலைவேல்காளங்கழுவொடுசத்திசூலம்
சுழல்படைவட்டம்பாராவளையெனச்சொல்லுமிப்பால்
எழுவென்பகணையத்தோடேபரிகமுமென்னலாமே. (அ)

அசிநவிரேதிநாட்டமானநாந்தகமேகட்கம்
வசிமட்டாயுதந்தூவத்திவஞ்சமேயுவணிகோணம்
இசையுங்கண்டகம்வாள்வேணுகரவாளமென்றுமேற்கும்
நசையுறுகோணமென்பநாட்டியகூன்வாளாமே. (கூ)

கொண்டெழுமுடைவாளின்பேர்குறும்பிடிசுரிகையாகும்
பிண்டிபாலத்தினும்பீலித்தண்டெஃகமும்பேர்
விண்டவரிட்டியீட்டிவிட்டேற்றின்பேரேகோலாம்
தண்டிற்றாறிருப்புமுள்ளாஞ்சலாகைநாராசமாமே. (க௦)

குந்தமேபடையைவெல்லுங்கொடுஞ்சிறுசவளமென்ப
குந்தந்தோமரமிரண்டுங்கொடும்பெருஞ்சவளமாகும்
வந்தவேதினமேயீரும்வாள்கரபத்திரமும்பேர்
உந்தியதறிகைதானேகணிச்சியாமுளிக்கும்பேரே. (கக)

கவிபுகழ்கைவேலின்பேர்கப்பணந்தோமரந்தான்
நவியமேமழுக்கோடாலிநாட்டியகுடாரமும்பேர்
குவியிலைமூக்கரிந்தகத்தியேகுளிரென்றோதும்
சுவரகழ்கருவிநாமஞ்சொன்னபேர்கன்னமாமே. (கஉ)

தடிகதையெறுழேதண்டாந்தட்டையுந்தழலுங்கிள்ளை
கடிகருவிப்பேராகுங்குணில்குறுந்தடிப்பேர்காட்டும்
கொடியதோர்கவணினமங்குணிலொடுகவணேயோடே
ஒடிசிலுங்குளிருமென்றேயுரைத்திடலாகுமென்ப. (கங)



அம்புக்கூட்டின்பெயர் = ஆவம், தூணி, ஆவநாழிகை. ங
விற்குதையின்பெயர் = குலை. க
அம்புச்சிறகின்பெயர் = உடு, ஈர்க்கில். உ
அம்புகட்டும்பாசத்தின்பெயர் = பற்றுக்கை. க

வேலாயுதத்தின்பெயர் = அயில், சத்தி, எஃகம், ஞாங்கர், உடம்பிடி. ரு. வச்சிராயுதத்தின்பெயர் = வயிரம், குலிசம், சம்பம், அசனி, சதகோடி. ரு. அரிவாளின்பெயர் = குயம், புள்ளம், கொடுவாள். ங

கழுக்கடையின்பெயர் = கழுமுள். க
கைவாளின்பெயர் = கண்டம். க
சூலத்தின்பெயர் = கழுமுள், மூவிலைவேல், காளம், கழு, சத்தி. ரு
சுழல்படையின்பெயர் = வட்டம், பாராவளை. உ
எழுவின்பெயர் = கணையம், பரிகம். உ

வாளின்பெயர் = அசி, நவிர், ஏதி, நாட்டம், நாந்தகம், கட்கம், வசி, மட்டாயுதம், தூவத்தி, வஞ்சம், உவணி, கோணம், கண்டகம், வேணு, கரவாளம். கசா
கூன்வாளின்பெயர் = கோணம். க

உடைவாளின்பெயர் = குறும்பிடி, சுரிகை. உ
பிண்டிபாலத்தின்பெயர் = பீலித்தண்டு, எஃகம். உ
ஈட்டியின்பெயர் = இட்டி. க. விட்டேற்றின்பெயர் = கோல். க
இருப்புமுள்ளின்பெயர் = தாறு. க
நாராசத்தின்பெயர் = சலாகை. க

சிறுசவளத்தின்பெயர் = குந்தம். க
பெருஞ்சவளத்தின்பெயர் = குந்தம், தோமரம். உ
ஈர்வாளின்பெயர் = வேதினம், கரபத்திரம். உ
தறிகையின்பெயர் = கணிச்சி. க. உளியின்பெயர் = கணிச்சி. க

கைவேலின்பெயர் = கப்பணம், தோமரம். உ
கோடாலியின்பெயர் = நவியம், மழு, குடாரம். ங
இலைமூக்கரிகத்தியின்பெயர் = குளிர். க
சுவரகழ்கருவியின்பெயர் = கன்னம். க

தண்டின்பெயர் = தடி, கதை, எறுழ். ங
கிளிகடிகருவியின்பெயர் = தட்டை, தழல். உ
குறுந்தடியின்பெயர் = குணில் க
கவணின்பெயர் = குணில், கவணை, ஒடிசில், குளிர். ச

ஏசிலஞ்சனக்கோல்கோலாந்தூலிகையெழுதுகோலே
சூசியேயூசியென்பசொற்றவூசித்துளைப்பேர்
பாசமாமோலைதீட்டும்படைகண்டத்துடனேயாணி
ஊசியேயெழுத்தாணிப்பேரிலேகனியென்றமோதும். (கச)

தைத்திடுந்தொடர்துவக்கேயிடங்கணிசங்கிலிப்பேர்
வைத்தகற்பொறியேயள்ளுவலிபெறப்பற்றிரும்பாம்
அத்திரமென்பதம்பேயாதியாவிடுபடைப்பேர்
சத்திரமென்பசெங்கைத்தலம்விடாப்படையினாமம். (கரு)

படைதானைகழுமுளேவேல்படைக்கலஞ்சுதனந்துப்புக்
கடுமேதிகருவியெஃகங்கடியுமாயுதப்பொதுப்பேர்
அடைவாம்வைநிசிதம்பூவள்ளயில்வசியாறுங்கூர்மை
தடறொடுகருவிப்புட்டில்படையுறைநுதிநுனிப்பேர். (கசா)

கருதியகோதையேகைக்கட்டிகைப்புடையுமாகும்
சிரகங்கீசகமிரண்டுஞ்செப்பியதலைத்திராணம்
அரணஞ்சாலிகைசடாரியாசுகந்தளமேகண்டம்
பருமமெய்யுறையேகச்சைபரம்பத்துங்கவசப்பல்பேர். (கஎ)

சேடகங்கடகந்தட்டிசேரும்வேதிகையேவட்டம்
கேடகந்தோலினோடுகிடுகெட்டும்பலகையின்பேர்
சூடுந்தோற்பலகைதட்டுத்தோற்பரந்தோலுமாகும்
நீடியபரிசையேமாவட்டணநெடியவட்டம். (கஅ)

நிலைபெறுபிரம்பின்வட்டநீள்வள்ளித்தண்டையாகும்
மலைவின்மந்தனமேசூழிமதயானைமுகபடாப்பேர்
கலைவிலாப்புரைசைதூசாங்கழுத்திடுகயிறேகச்சை
இலகடம்பலகாரங்கள்யானைமேற்றவிசினாமம். (கசு)

பரியிணிற்கலணையின்பேர்பகர்ந்திடிற்பரமும்பண்ணும்
பருமமும்படையும்பன்னும்பல்லணந்தானுமாகும்
பரவியகச்சமோடுபடியங்கவடியின்பேரே
மருவுசம்மட்டியேகோல்வாய்த்தமத்திகையுமப்பேர். (உ௦)

மறுவறுகுதிரைவாயின்வடம்வடிகயிறுவற்கம்
கறுழொடுகலியங்கௌவும்கடிவாளங்கலினமும்பேர்
நிறுவிமற்றதற்கணிந்தநெடுமயிருளையென்றோதும்
செறிபுனைதளைவிலங்காஞ்சிருங்கலைநிகளமும்பேர். (உக)



அஞ்சனக்கோலின்பெயர் = கோல். க
எழுதுகோலின்பெயர் = தூலிகை. க
ஊசியின்பெயர் = சூசி. க. ஊசித்துளையின்பெயர் = பாசம். க
எழுத்தாணியின்பெயர் = ஓலைதீட்டும்படை, கண்டம், ஆணி, ஊசி, இலேகனி. ரு
சங்கிலியின்பெயர் = தொடர், துவக்கு, இடங்கணி. ங
பற்றிரும்பின்பெயர் = கற்பொறி, அள். உ
கைவிடுபடையின்பெயர் = அத்திரம். க
கைவிடாப்படையின்பெயர் = சத்திரம் க

ஆயுதப்பொதுப்பெயர் = படை, தானை, கழுமுள், வேல், படைக்கலம், சுதனம், துப்பு, எதி, கருவி, எஃகம். க௦
கூர்மையின்பெயர் = வை, நிசிதம், பூ, வள், அயில், வசி. சா
படையுறையின்பெயர் = தடறு, கருவிப்புட்டில். உ
நுனியின்பெயர் = நுதி. க
கைக்கட்டியின்பெயர் = கோதை, கைப்புடை. உ
* தலைத்திராணத்தின்பெயர் = சிரகம், கீசகம். உ
கவசத்தின்பெயர் = அரணம், சாலிகை, சடாரி, ஆசி, கந்தளம், கண்டம், பருமம், மெய்யுறை, கச்சை, பரம். க௦

பலகையின்பெயர் = சேடகம், கடகம், தட்டி, வேதிகை, வட்டம், கேடகம், தோல், கிடுகு. அ
தோற்பலகையின்பெயர் = தட்டு, தோற்பரம், தோல். ங
பரிசையின்பெயர் = மாவட்டணம், நெடியவட்டம். உ

பிரம்பின்வட்டத்தின்பெயர் = வள்ளித்தண்டை. க
யானைமுகபடாத்தின்பெயர் = மந்தனம், சூழி. உ
யானைப்புரசையின்பெயர் = தூசு. க. யானைக்கழுத்திடுகயிற்றின்பெயர் = கச்சை. க
யானைமேற்றவிசின்பெயர் = இலகடம், பலகாரம். உ

குதிரைக்கலணையின்பெயர் = பரம், பண், பருமம், படை, பல்லணம். ரு
குதிரையங்கவடியின்பெயர் = கச்சம், படி. உ
குதிரைச்சம்மட்டியின்பெயர் = கோல், மத்திகை. உ

குதிரைவாயின்வடத்தின்பெயர் = வடிகயிறு, வற்கம். உ
குதிரைக்கடிவாளத்தின்பெயர் = கறுழ், கலியம், கலினம். ங
குதிரைக்கணிமயிரின்பெயர் = உளை. க
விலங்கின்பெயர் = புனை, தளை, சிருங்கலை, நிகளம். ச

* தலைத்திராணம் - தலைச்சீரா.

சுடிகைசேகரங்கிரீடஞ்சூடிகைமகுடமௌலி
முடியின்பேரோராறாகுமுடிமாலையேகரோடி
முடியுறுப்பைந்தாந்தாமமுகுடமேபதுமத்தோடு
நெடியகோடகமேமற்றுநேர்ந்தகிம்புரியென்றாமே. (௨௨)

அம்பொனாரம்பதக்கங்கண்டிகைமதாணியும்பேர்
செம்பொனங்கதங்கேயூரந்திகழ்வாகுவலயத்தின்பேர்
பம்புதாடங்கந்தோடாம்பகர்குழைகுண்டலப்பேர்
கம்பிவல்லிகைகுணுக்குக்கடிப்பிணைகாதணிப்பேர். (௨௩)

கருதுகங்கணத்தினாமங்கடகமேதொடியுமாகும்
சரிதொடிகுருகுவண்டுசங்குசூடகமேகன்று
பெருகுகைவளையாம்பிள்ளைக்கைவளைபிடகமென்ப
விரவியசுடிகைசுட்டிவிட்டொளிரோடைபட்டம். (௨௪)

பரிபுரமென்பதானேபாதகிங்கிணியினாமம்
பெரியநூபுரஞ்சிலம்பிற்பேதமேவேறொன்றில்லை
பரியகங்காற்சரிப்பேர்பகர்ந்தகைச்சரிக்கும்பேரே
அரவமேசிலம்பினாமமாஞ்சிறுமணிசதங்கை. (௨௫)

நீடுபாடகத்தினாமநெடும்பாதகடகமென்ப
தேடியகுடச்சூலோசைசெய்தளைநெகிழமும்பேர்
பாடுறுபாதசாலம்பதத்தணிப்பொதுப்பேராகும்
ஆடவர்கொடைவீரத்தாலணிவதுகழலென்றாமே. (௨௬)

ஏழுகோவைகளாற்சூழ்ந்தவெழின்மணிமேகலைப்பேர்
காழிருநான்கேகாஞ்சிகலாபமீரெட்டுத்தாமம்
தாழுமூவாறுகோவைசாற்றியபருமமென்ப
வீழுமெண்ணான்குகோவைவிரிசிகையென்பதாமே. (௨௭)

சரிமணிநாமந்தானேசாற்றியகலாபந்தோரை
அரையினிற்பட்டிகைப்பேரத்தொடுமனாவுமென்பர்
இரதனமரைநாணின்பேரேற்றிடுந்தொங்கலுத்தி
மருவியசெவிமலர்ப்பூமன்னுகன்னாவதஞ்சம். (௨௮)



முடியின்பெயர்=சுடிகை, சேகரம், கிரீடம், சூடிகை, மகுடம், மௌலி. ௬. முடிமாலையின்பெயர்=கரோடி. ௧
முடியுறுப்பைந்தாவன=தாமம், முகுடம், பதுமம், கோடகம், கிம்புரி. ௫

பதக்கத்தின்பெயர்=ஆரம், கண்டிகை, மதாணி. ௩
வாகுவலயத்தின்பெயர்=அங்கதம், கேயூரம். ௨
தோட்டின்பெயர்=தாடங்கம். ௧ குண்டலத்தின்பெயர்=குழை. ௧
காதணியின்பெயர்=கம்பி, வல்லிகை, குணுக்கு, கடிப்பிணை. ௪

கங்கணத்தின்பெயர்=கடகம், தொடி. ௨
கைவளையின்பெயர்=சரி, தொடி, குருகு, வண்டு, சங்கு, சூடகம், கன்று. ௭. பிள்ளைக்கைவளையின்பெயர்=பிடகம். ௧
சுட்டியின்பெயர்=சுடிகை. ௧. பட்டத்தின்பெயர்=ஓடை. ௧

பாதகிங்கிணியின்பெயர்=பரிபுரம். ௧
நூபுரமாவது=சிலம்பின்பேதம்.
காற்சரியின்பெயர்=பரியகம். ௧
கைச்சரியின்பெயர்=பரியகம். ௧
சிலம்பின்பெயர்=அரவம். ௧. சதங்கையின்பெயர்=சிறுமணி. ௧

பாடகத்தின்பெயர்=பாதகடகம். ௧
ஓசைசெய்தளையின்பெயர்=குடச்சூல், நெகிழம். ௨
பதத்தணிப்பொதுவின்பெயர்=பாதசாலம். ௧
ஆடவர்கொடையினாலும்வீரத்தினாலுமணிவதின்பெயர்=கழல். ௧

ஏழுகோவைமணியின்பெயர்=மேகலை. ௧
எட்டுக்கோவைமணியின்பெயர்=காஞ்சி. ௧
பதினாறுகோவைமணியின்பெயர்=கலாபம் ௧
பதினெட்டுக்கோவைமணியின்பெயர்=பருமம். ௧
முப்பத்திரண்டுகோவைமணியின்பெயர்=விரிசிகை. ௧

சரிமணியின்பெயர்=கலாபம், தோரை. ௨
அரைப்பட்டிகையின்பெயர்=அத்து, மனா. ௨
அரைநாணின்பெயர்=இரதனம். ௧
ஆபரணத்தொங்கலின்பெயர்=உத்தி. ௧
செவிமலர்ப்பூவின்பெயர்=கன்னாவதஞ்சம். ௧

விரலணியாழிவீகமிலச்சினைமோதிரப்பேர்
சரமொடுகாழேயாரந்தாமமேமணிவடப்பேர்
மருவுசங்கிலியேயென்பவயிரச்சங்கிலியினுமம்
உருவியன்மார்பிலிட்டவுபவீதம்பூணுநூலே. (௨௯)

இலம்பகம்புல்லகஞ்சூட்டிவைநுதலணிமுப்பேரே
பொலம்புனை திருவேதெய்வவுத்தியாம்பிஞ்ஞகந்தான்
துலங்கியதலைக்கோலப்பேர்தொய்யகந்தலைப்பாளைப்பேர்
குலம்பெறுகல்லழுத்துங்குழிவட்டங்கேவணந்தான். (௩௦)

அணிகளின்கடைப்புணர்ப்பேயதுகடைகயிலுமாகும்
புணருங்கோளகையேதாங்கிவயிரங்கிம்புரிபூணற்பேர்
அணிகலன்வள்ளிபூணேயணியொடுகலமேமஞ்சு
பணியிழைபூடணங்கள்பகரிலாபரணமாமே. (௩௧)

தட்டம்பாசனமேதாலந்தளிகையுண்கலத்தின்பேரே
வட்டிலேசடகங்கோரம்வள்ளமாஞ்சிறுவட்டிற்பேர்
கிட்டியகிண்ணங்கன்னல்கிளந்தநாழிகைவட்டிற்பேர்
சட்டுவஞ்சிலகமென்பதவ்வியுந்தருவியும்பேர். (௩௨)

விஞ்சுதர்ப்பணமேயாடிமிகுமொளிவட்டம்வேறு
வஞ்சியருருவங்காட்டவரும்படிமக்கலம்பொற்
கஞ்சனமுகுரமத்தம்புளகமெண்பேர்கண்ணாடி
கஞ்சனைகலசப்பானைபடியகம்படிக்கங்காட்டும். (௩௩)

தொட்டநெய்த்துடுப்பினுக்குச்சுருக்கொடுசுருவமாம்பேர்
இட்டமாந்தூபமுட்டியிந்தளந்தடவுமேற்கும்
மட்டமர்கின்றதூபமணியேகைம்மணியென்றாகும்
கிட்டியேபாண்டில்கஞ்சங்கிணிஎனன்னுந்தாளமுப்பேர். (௩௪)

அடிபடுபெருமணிப்பேரறைந்திடுங்கண்டையாகும்
படலிகைபரந்தவட்டங்கைம்மணிபகர்ந்தபேரே
திடுதிடென்றிடத்தெழித்தசேகண்டியெறிமணிப்பேர்
கடுகியபீலிசின்னங்காகளங்காளமாமே. (௩௫)

கோடுடனிரலையாம்பல்கொம்பின்பேர்வயிருங்கூறும்
பீடிகைதுமானங்காண்டம்பேணுங்கண்டிகைகடிப்பம்
கோடிகமிருமுப்பேர்பூண்கொள்கலம்பரணிகோயே
நீடுமஞ்சிகமேபெட்டிநெடியமஞ்சிகையேபேழை. (௩௬)



மோதிரத்தின்பெயர்=விரலணி, ஆழி, வீகம், இலச்சினை. ௪
மணிவடத்தின்பெயர்=சரம், காழ், ஆரம், தாமம். ௪
வயிரச்சங்கிலியின்பெயர்=சங்கிலி. ௧
பூணுநூலின்பெயர்=உபவீதம் ௧

நுதலணியின்பெயர்=இலம்பகம், புல்லகம், சூட்டு. ௩
தெய்வவுத்தியின்பெயர்=திரு. ௧
தலைக்கோலத்தின்பெயர்=பிஞ்ஞகம். ௧
தலைப்பாளையின்பெயர்=தொய்யகம். ௧
கல்லழுத்துங்குழிவட்டத்தின்பெயர்=கேவணம். ௧

அணிகளின்கடைப்புணர்வின்பெயர்=கடை, கயில். ௨
பூணின்பெயர்=கோளகை, தாங்கி, வைரம், கிம்புரி. ௪
ஆபரணத்தின்பெயர்=அணிகலன், வள்ளி, பூண், அணி, கலம், மஞ்சு, பணி, இழை, பூடணம். ௯

உண்கலத்தின்பெயர்=தட்டம், பாசனம், தாலம், தளிகை. ௪
வட்டிலின்பெயர்=சடகம், கோரம், வள்ளம். ௩
சிறுவட்டிலின்பெயர்=கிண்ணம். ௧
நாழிகைவட்டிலின்பெயர்=கன்னல். ௧
சட்டுவத்தின்பெயர்=சிலகம், தவ்வி, தருவி. ௩

கண்ணாடியின்பெயர்=தர்ப்பணம், ஆடி, ஒளிவட்டம், படிமக்கலம், கஞ்சனம், முகுரம், அத்தம், புளகம். ௮
கலசப்பானையின்பெயர்=கஞ்சனை. ௧
படிக்கத்தின்பெயர்=படியகம். ௧

நெய்த்துடுப்பின்பெயர்=சுருக்கு, சுருவம். ௨
தூபமுட்டியின்பெயர்=இந்தளம், தடவு ௨
தூபமணியின்பெயர்=கைம்மணி. ௧
தாளத்தின்பெயர்=கிட்டி, பாண்டில், கஞ்சம். ௩

பெருமணியின்பெயர்=கண்டை. ௧
கைம்மணியின்பெயர்=படலிகை, பரந்தவட்டம். ௨
எறிமணியின்பெயர்=சேகண்டி. ௧
சின்னத்தின்பெயர்=பீலி. ௧. காளத்தின்பெயர்=காகளம். ௧

கொம்பின்பெயர்=கோடு, இரலை, ஆம்பல், வயிர். ௪
பூண்கொள்கலத்தின்பெயர்=பீடிகை, துமானம், காண்டம், கண்டிகை, கடிப்பம், கோடிகம். ௬. பரணியின்பெயர்=கோய். ௧
பெட்டியின்பெயர் =மஞ்சிகம். ௧. பேழையின்பெயர்=மஞ்சிகை. ௧

குண்டிகைகரகநீர்பெய்கோலமார்காண்டகங்கள்
கண்டாகமண்டலப்பேர்கடிப்பங்கோடிகமேகெண்டி
கொண்டவெண்குடையினமங்குளிர்தொங்கல்கவிப்புப்பிச்சம்
தண்டுசேர்கவிகையாதபத்திரஞ்சத்திசத்திரம். (௩௭)

ஆலவட்டத்திைேடுமடுத்திடுங்கால்செய்வட்டம்
மேலிடுமுக்கந்தாலவிருந்தம்பேராலவட்டம்
பீலிவீசனஞ்சாந்தாற்றிபெருகியவிசிறிநான்கும்
சீலமாங்காற்றுவீசுஞ்சிற்றாலவட்டந்தானே. (௩௮)

இடக்கையின்பேரேயாமந்திரிகையாங்குளிர்முழாவாம்
படித்தெழுபணவந்திண்டியானகம்படகமுப்பேர்
கடிப்பின்பேர்குணிலாமொந்தைதானொருகட்பறைப்பேர்
அடித்தபேரிகைப்பேர்நந்தியாகுளிசிறுபறைப்பேர். (௩௯)

சல்லரிதிமிலையென்பதண்ணுமைநிசாளமாகும்
பல்லுளகொடியபன்றிப்பறைகுடப்பறையென்றாமே
கல்லெனும்பகுவாயாமோர்கட்பறைபதலைதானே
ஒல்லெனுங்கரடிநாமமுறுபறைதட்டையாமே. (௪௦)

தொண்டகமுருகியம்போர்த்துடிகுறிஞ்சிப்பறைப்பேர்
மிண்டியதுடியேபாலைவேடர்தம்பறையினமம்
கொண்டெழுபம்பையேறங்கோட்பறைமுல்லைக்காகும்
கிண்டியமருதமுற்றகிளர்பறைகிணையென்றாமே. (௪௧)

நிறுவுசாப்பறையேயென்பநெய்தலிற்பறையினமம்
பெறுமுவகைப்பறைக்குப்பேரேதூரியமென்றேதும்
உறுமியதண்ணுமைப்பேருடுக்கையாமிடைசுருங்கு
பறையின்பேர்துடிமருங்கின்மார்ச்சனைபகரின்மண்ணும். (௪௨)

தூரியமுழவுதிண்டிதுந்துபிமுருடுதக்கை
பேரியேதருணிச்சம்போர்ப்பீலியேதடாரிபம்மை
வீரியமுரசுதண்ணமேவுகோடணையியங்கள்
வாரியினதிர்சகண்டைவாச்சியப்பொதுவீரெண்பேர். (௪௩)

இரதமேகொடிஞ்சியோடுமியந்திரங்குயவுவையம்
அரியொடுகூவிரந்தேராஞ்சயந்தனமுமப்பேர்
பரிதியேசில்லியாழிபாரியகாலேநேமி
உருளுடனுருளிதேரினுருளென்பவுந்தியும்பேர். (௪௪)



கமண்டலத்தின்பெயர்=குண்டிகை, கரகம், காண்டகம். ௩
கெண்டியின்பெயர்=கடிப்பம், கோடிகம். ௨.
வெண்குடையின்பெயர்=குளிர், தொங்கல், கவிப்பு, பிச்சம், கவிகை, ஆதபத்திரம், சத்தி, சத்திரம். ௮

பேராலவட்டத்தின்பெயர்=ஆலவட்டம், கால்செய்வட்டம், உக்கம், தாலவிருந்தம். ௪
சிற்றாலவட்டத்தின்பெயர்=பீலி, வீசனம், சாந்தாற்றி, விசிறி. ௪

இடக்கையின்பெயர்=ஆமந்திரிகை. ௧. முழவின்பெயர்=குளிர். ௧
படகத்தின்பெயர்=பணவம், திண்டி, ஆனகம், ௩
கடிப்பின்பெயர்=குணில். ௧
ஒருகட்பறையின்பெயர்=மொந்தை. ௧
பேரிகையின்பெயர்=நந்தி. ௧. சிறுபறையின்பெயர்=ஆகுளி. ௧

திமிலையின்பெயர்=சல்லரி. ௧
நிசாளத்தின்பெயர்=தண்ணுமை. ௧
பன்றிப்பறையின்பெயர்=குடப்பறை ௧
ஒருகட்பகுவாய்ப்பறையின்பெயர்=பதலை. ௧
கரடிப்பறையின்பெயர்=தட்டை. ௧

குறிஞ்சிப்பறையின்பெயர்=தொண்டகம், முருகியம், துடி. ௩
பாலைப்பறையின்பெயர்=துடி. ௧
முல்லைப்பறையின்பெயர்=பம்பை, ஏறங்கோட்பறை. ௨
மருதப்பறையின்பெயர்=கிணை. ௧

நெய்தற்பறையின்பெயர்=சாப்பறை. ௧
உவகைப்பறையின்பெயர்=தூரியம். ௧
தண்ணுமையின்பெயர்=உடுக்கை. ௧
இடைசுருங்குபறையின்பெயர்=துடி. ௧
மார்ச்சனையின்பெயர்=மண். ௧

வாச்சியப்பொதுவின்பெயர்=தூரியம், முடிவு, திண்டி, துந்துபி, முருடு, தக்கை, பேரி, தருணிச்சம், பீலி, தடாரி, பம்பை, முரசு, தண்ணம், கோடணை, இயம், சகண்டை. ௧௬

தேரின்பெயர்=இரதம், கொடிஞ்சி, இயந்திரம், குயவு, வையம், அரி, கூவிரம், சயந்தனம். ௮
தேருருளின்பெயர்=பரிதி, சில்லி, ஆழி, கால், நேமி, உருள், உருளி, உந்தி. ௮

ஆரெனுநாமந்தேரினகத்தினுட்செறிகதிர்ப்பேர்
தேர்நடுப்பேரேதட்டுச்செப்பியநாப்பணும்பேர்
சார்பலகைப்பாப்பாராஞ்சார்ந்தகூவிரங்கொடிஞ்சி
தேர்மொட்டுக்கூம்புதேரின்மரச்சுற்றுக்கிடுகுதானே. (௪௫)

பாண்டில்கஞ்சிகைவையம்போர்ப்பரிகள்பூண்டேர்க்குமூர்தி
தாண்டியசகடுவையஞ்சாகாடேயொழுகைசாடு
தூண்டியவுருளினோடுசகடமுஞ்சொல்லும்பண்டி
ஈண்டியபண்டியுள்ளினிரும்புகந்திருசுமாமே. (௪௬)

விஞ்சியமுத்தினூர்திவெண்முத்தின்சிவிகைதானே
தஞ்சமாஞ்சிவிகைவையந்தண்டிகையனிகம்யானம்
கஞ்சிகைமணிக்காற்பள்ளியென்பனகதிர்வேன்மன்னர்
எஞ்சலில்சிறப்பினேறுமிராசவாகனமதாமே. (௪௭)

அலமுழுபடைதொடுப்போடாலமேபடைவாணாஞ்சில்
கலனையேகலப்பையேழ்பேர்கந்தெழுமதலைதம்பம்
நிலைபெறுதறிகாறாணுநெடுந்தூணும்வெளில்யானைத்தூண்
புலையில்வேள்வித்தூண்யூபம்போதிகைகுறுந்தறிப்பேர். (௪௮)

கதவின்பேரரிவாரிகாப்பொடுகவாடந்தோட்டி
புதவுமாங்காழுஞ்சீப்பும்போற்றியகடிகையுந்தாழ்
மதமுறும்யானைதன்னைவணக்குமங்குசமேதோட்டி
விதமுறுகோணமென்றும்விளம்புவரளந்தநூலோர். (௪௯)

பட்டடையடைகுறட்டின்பாலதாமுலையாணிக்கோல்
சுட்டுக்கோலென்றநாமஞ்சொல்லுபநல்லநூலோர்
முட்டியபருங்குறட்டைமுருடெனமொழிபவோங்கிக்
கொட்டுஞ்சம்மட்டிகூடங்கோள்கொழுவென்றகூறும். (௫௦)

பாதையேவங்கந்தோணிபாரதிபஃறியம்பி
போதமேமதலையானம்புணைசதாநௌவேநாவாய்
பேதமில்பாறுதொள்ளைபேணுறுமரக்கலப்பேர்
வாதைதீர்மரக்கலப்பாயிதையெனவழங்கலாமே. (௫௧)

பகடம்பிபஃறியோடம்பகர்பெயர்திமிலேதோணி
பகடுபட்டிகையேயம்பிபடுவையேபுணையேதெப்பம்
மிகைபடுமிதவையும்பேர்விசியின்பேரரியென்றாகும்
பகர்தருபாரிமஞ்சம்பரியங்கம்பாண்டில்கட்டில். (௫௨)



தேரினகத்திற்செறிகதிரின்பெயர் = ஆர். ௧
தேர்நடுவின்பெயர் = தட்டு, நாப்பண். ௨
தேர்ப்பலகைப்பாவின்பெயர் = பார். ௧
தேர்க்கொடிஞ்சியின்பெயர் = கூவிரம். ௧
தேர்மொட்டின்பெயர் = கூம்பு. ௧
தேர்மரச்சுற்றின்பெயர் = கிடுகு. ௧

பரிகள்பூண்டேர்க்கு மூர்தியின் பெயர் = பாண்டில், கஞ்சிகை, வையம். ௩
பண்டியின்பெயர் = சகடு, வையம், சாகாடு, ஒழுகை, சாடு, உருள், சகடம். ௭. பண்டியுள்ளிரும்பின்பெயர் = கந்து, இருசு. ௨

முத்துச்சிவிகையின்பெயர் = முத்தினூர்தி. ௧
சிவிகையின்பெயர் = வையம், தண்டிகை, அனிகம், யானம். ௪
இராசவாகனத்தின்பெயர் = கஞ்சிகை, மணிக்காற்பள்ளி. ௨

கலப்பையின்பெயர் = அலம், உழுபடை, தொடுப்பு, ஆலம், படைவாள், நாஞ்சில், கலனை. ௭
தூணின்பெயர் = கந்து, மதலை, தம்பம், தறி, கால், தாணு. ௬
யானைத்தூணின்பெயர் = வெளில். ௧
வேள்வித்தூணின்பெயர் = யூபம். ௧
குறுந்தறியின்பெயர் = போதிகை. ௧

கதவின்பெயர் = அரி, வாரி, காப்பு, * கவாடம், தோட்டி, புதவு. ௬
தாழின்பெயர் = காழ், சீப்பு, கடிகை. ௩
யானைத்தோட்டியின்பெயர் = அங்குசம், கோணம். ௨

அடைகுறட்டின்பெயர் = பட்டடை. ௧
உலையாணிக்கோலின்பெயர் = சுட்டுக்கோல். ௧
பருங்குறட்டின்பெயர் = முருடு. ௧
சம்மட்டியின்பெயர் = கூடம். ௧. கொழுவின்பெயர் = கோள். ௧

மரக்கலத்தின்பெயர் = பாதை, வங்கம், தோணி, பாரதி, பஃறி, அம்பி, போதம், மதலை, யானம், புணை, சதா, நௌ, நாவாய், பாறு, தொள்ளை. ௧௫
மரக்கலப்பாயின்பெயர் = இதை. ௧

ஓடத்தின்பெயர் = பகடு, அம்பி, பஃறி. ௩. தோணியின்பெயர் = திமில். ௧. தெப்பத்தின்பெயர் = பகடு, பட்டிகை, அம்பி, படுவை, புணை, மிதவை. ௬. விசியின்பெயர் = அரி. ௧
கட்டிலின்பெயர் = பாரி, மஞ்சம், பரியங்கம், பாண்டில். ௪

---

* கபாடமெனினுமொக்கும்.

விட்டரந்தவத்தோர்பீடம்விளங்கும்பீடிகையுமப்பேர்
இட்டசிங்காதனம்பத்திராசனமென்பதாமே
திட்டையேகறையேமற்றுச்செப்பியவுலூகலந்தான்
முட்டியவுரலின்முப்பேர்முசலமேதடியுலக்கை. (௫௩)

உறிசிதர்சிக்கந்தூக்கோடோதியசிமிலிநாற்பேர்
சிறுவியவுஞ்சலூசனீண்டவிண்டாண்டுமப்பேர்
இறைவையேசேணியேணிமால்புகண்ணேணியின்பேர்
குறைவிலம்பணந்தூம்போடுகுளகங்கச்சமுமரக்கால். (௫௪)

விரவியகுஞ்சநாழிவிரித்தகொத்தளிப்பாயாரை
பெருகியசாப்பைபுற்பாய்பிரப்பம்பாய்சாதிப்பாயாம்
சருமந்தோற்பாய்தடுக்கேதவிசாகுங்குழாயேதண்டாம்
பெருகுகோடிகம்பூந்தட்டேபெட்டியேமூழிவாயாம். (௫௫)

சட்டமேகிடுகாமென்பசாற்றியகம்பந்தம்பம்
விட்டொளிர்கௌசிகங்கண்மத்திகைவிளக்குத்தண்டாம்
தட்டொடுசின்னஞ்சேட்டைதருமுறமுற்றிலும்பேர்
புட்டிலேயிறைவையென்பவட்டிகைகூடையாமே. (௫௬)

சுளகின்பேர்சூர்ப்பமென்பதுடைப்பஞ்சோதனிமாறும்பேர்
வளமுறுமூழிமூழையகப்பையாமத்துமத்தம்
வெளிறயிர்கடைதறிப்பேர்மெச்சும்பாவாற்றிகுச்சாம்
அளவில்காருகர்நாடாநூனாழியேயாகுமென்ப. (௫௭)

கிழார்பூட்டைகாம்பியம்பிகிளந்தகாராம்பியாகும்
பிழாரிடாரிறைகூடைப்பேர்பெருந்தூம்பம்பணநீர்ப்பத்தர்
தழாவியகாசுவல்லுச்சூதின்பேர்கழங்குமாகும்
தழாதருள்கவற்றிற்றாயமாயமாஞ்சாரிநாயாம். (௫௮)

கடிகையேதுணியேதுண்டங்காட்டியவகிர்வார்வள்ளாம்
சுடுவொடுசுமடுதாங்குஞ்சுமையடைசும்மாட்டின்பேர்
வடிவுறுவலையேசாலமற்றதிற்கயிறுமாமே
தொடருறுநூலேதந்துசூத்திரம்பனுவலும்பேர். (௫௯)



தவத்தோர்பீடத்தின்பெயர் = விட்டரம், பீடிகை. ௨
சிங்காதனத்தின்பெயர் = பத்திராசனம். ௧
உரலின்பெயர் = திட்டை, கறை, உலூகலம். ௩
உலக்கையின்பெயர் = முசலம், தடி. ௨

உறியின்பெயர் = சிதர், சிக்கம், தூக்கு, சிமிலி. ௪
உஞ்சலின்பெயர் = ஊசல், விண்டாண்டு ௨
ஏணியின்பெயர் = இறைவை, சேணி. ௨
கண்ணேணியின்பெயர் = மால்பு. ௧
மரக்காலின்பெயர் = அம்பணம், தூம்பு, குளகம், கச்சம். ௪

நாழியின்பெயர் = குஞ்சம். ௧, கொத்தளிப்பாயின்பெயர் = ஆரை. ௧
புற்பாயின்பெயர் = சாப்பை. ௧
பிரப்பம்பாயின்பெயர் = சாதிப்பாய். ௧
தோற்பாயின்பெயர் = சருமம். ௧. தடுக்கின்பெயர் = தவிசு. ௧
குழாயின்பெயர் = தண்டு. ௧. பூந்தட்டின்பெயர் = கோடிகம். ௧
பூப்பெட்டியின்பெயர் = மூழிவாய். ௧

சட்டத்தின்பெயர் = கிடுகு. ௧
விளக்குத்தண்டின்பெயர் = கம்பம், தம்பம், கௌசிகம், மத்திகை. ௪
முறத்தின்பெயர் = கட்டு, சின்னம், சேட்டை, முற்றில். ௪
புட்டிலின்பெயர் = இறைவை. ௧. கூடையின்பெயர் = வட்டிகை. ௧

சுளகின்பெயர் = சூர்ப்பம். ௧
துடைப்பத்தின்பெயர் = சோதனி, மாறு. ௨
அகப்பையின்பெயர் = மூழி, மூழை. ௨
மத்தின்பெயர் = மத்தம். ௧. தயிர்கடைதறியின்பெயர் = வெளில். ௧
பாவாற்றியின்பெயர் = குச்சு. ௧. நூனாழியின்பெயர் = நாடா. ௧

ஆம்பியின்பெயர் = * கிழார், பூட்டை, காம்பி, அம்பி. ௪
இறைகூடையின்பெயர் = பிழார், இடார். ௨
நீர்ப்பத்தரின்பெயர் = தூம்பு, அம்பணம். ௨
சூதின்பெயர் = காசு, வல்லு, கழங்கு. ௩
கவற்றிற்றாயத்தின்பெயர் = ஆயம். ௧. சாரியின்பெயர் = நாய். ௧

துண்டத்தின்பெயர் = கடிகை, துணி. ௨
வகிரின்பெயர் = வார், வள். ௨
சும்மாட்டின்பெயர் = சுடுவு, சுமடு, சுமையடை. ௩
வலையின்பெயர் = சாலம். ௧. வலைக்கயிற்றின்பெயர் = சாலம். ௧
நூலின்பெயர் = தந்து. சூத்திரம், பனுவல். ௩

---

* காராம்பி என்பாருமுளர்.

பழுதையேதாமங்கச்சைபாசமேயிரச்சேநாணே
வழுவிலாத்தாம்பேயக்கம்வடம்புரிகயிறதாமே
தழுவுதாமணியேதாம்புபசுக்கட்டுங்கயிறுதானும்
சுழல்கறங்கேகாற்றூடிசொல்லியகதலியும்பேர் (௬௦)

பந்துமட்டத்துருத்திபகர்பெருந்துருத்திநீரைச்
சிந்தியசிவிறியாகுஞ்சீப்புக்கங்கதமேசிக்கம்
பைந்தொடிமகளிராடப்படுங்களமோரையென்ப
தொந்தமாம்பாதங்காப்புக்கழறொடுதோல்செருப்பாம். (௬௧)

இட்டபாதுகையேபாவன்மிதியடியிதன்மேலிட்ட
கொட்டையாங்குடைபற்சீவுங்கோன்மெல்கோல்வளிசந்தூண்டில்
பட்டவம்மனையம்மானைபந்துகந்துகமென்றோதும்
முட்டையேதவிட்டினுமம்முடையுமாநொறுங்குநொய்யே. (௬௨)

ஊதியவுலைத்துருத்தியுதியுமத்திரியுமாகும்
கோதிலாச்சிவையினோடுகுருகுகொல்லுலைமூக்கின்பேர்
சோதனிசீக்குங்காடுதுரானரன்மயலேசெத்தை
சாதுயர்ப்பாடைவெள்ளில்சிலாவட்டஞ்சாணைக்கல்லே. (௬௩)

தடம்படுபதலைதாழிதளஞ்சாடியகளமும்பேர்
இடங்கரேநிறையேவட்டமேற்றநீர்ச்சாலிம்மூப்பேர்
இடந்தகர்ப்பரைதசும்புகடாகமாங்குடத்தினுமம்
குடங்கரேயிடங்கர்தாழிகுணங்கடங்கலசங்கும்பம். (௬௪)

தடாவொடுகரீரநீரைத்தருமுகைகுழிசிநான்கும்
மிடாவென்பபானையின்பேர்மேவியகுண்டத்தோடு
மிடாவுமாம்விரும்புநல்லார்வெண்டயிர்கடையுந்தாழி
விடாதமந்தினியினோடுகர்க்கரிவிளம்பலாமே. (௬௫)

சிரகங்கர்க்கரியேகன்னல்சீகரநான்குபேரும்
கரகத்தினுமமாகுங்கருதுவற்கரியுமென்ப
திருவறஞ்செய்யாரேற்குந்தீயமட்கலத்தினுமம்
பரவியகடினையையம்பாத்திரமென்றுமேற்கும். (௬௬)

இருஞ்சிலேபாண்டிலென்பவெரிசுடர்த்தகழிநாமம்
ஒடுங்கியகுடுவைகுண்டமொளிபெறவிசளைசட்டி
அடங்குசுத்திகையினோடுசராவமேயகலின்பேர்தான்
இடுங்கலம்பாண்டமேற்குங்கொள்கலமெவற்றிற்கும்பேர். (௬௭)



கயிற்றின்பெயர்=பழுதை, தாமம், கச்சை, பாசம், இரச்சு, நாண், தாம்பு, அக்கம், வடம், புரி. ௧௦
பசுக்கட்டுங்கயிற்றின்பெயர்=தாமணி, தாம்பு. ௨
காற்றூடியின்பெயர்=சுழல், கறங்கு, கதலி. ௩

மட்டத்துருத்தியின்பெயர்=பந்து. ௧. பெருந்துருத்தியின் பெயர்=சிவிறி. ௧. சீப்பின்பெயர்=கங்கதம், சிக்கம். ௨
மகளிராடுங்களத்தின்பெயர்=ஓரை. ௧
செருப்பின்பெயர்=பாதங்காப்பு, கழல், தொடுதோல். ௩
மிதியடியின்பெயர்=பாதுகை, பாவல். ௨

மிதியடியின்மேலிட்டகொட்டையின்பெயர்=குடை. ௧. பற்சீவுங் கோலின்பெயர்=மெல்கோல். ௧. தூண்டிலின்பெயர்=வளிசம். ௧.
அம்மானையின்பெயர்=அம்மனை. ௧. பந்தின்பெயர்=கந்துகம். ௧.
தவிட்டின்பெயர்=முட்டை, முடை. ௨
நொய்யின்பெயர்=நொறுங்கு. ௧

உலைத்துருத்தியின்பெயர்=உதி, அத்திரி. ௨
கொல்லுலைமூக்கின்பெயர்=சிவை, குருகு. ௨
செத்தையின்பெயர்=காடு, துரால், நரல், மயல். ௪
பாடையின்பெயர்=வெள்ளில். ௧
சாணைக்கல்லின்பெயர்=சிலாவட்டம். ௧

சாடியின்பெயர்=பதலை, தாழி, தளம், அகளம். ௪
நீர்ச்சாலின்பெயர்=இடங்கர், நிறை, வட்டம். ௩
கர்ப்பரையின்பெயர்=தசும்பு, கடாகம். ௨
குடத்தின்பெயர்=குடங்கர், இடங்கர், தாழி, குணம், கடம், கலசம், கும்பம். ௭

மிடாவின்பெயர்=தடா, கரீரம், முகை, குழிசி. ௪
பானையின்பெயர்=குண்டம், மிடா. ௨
தயிர்கடைதாழியின்பெயர்=மந்தினி, கர்க்கரி. ௨

கரகத்தின்பெயர்=சிரகம், கர்க்கரி, கன்னல், சீகரம், வற்கரி. ௫
ஏற்குமட்கலத்தின்பெயர்=கடினை, ஐயம், பாத்திரம். ௩

தகழியின்பெயர்=இடிஞ்சில், பாண்டில். ௨
குடுவையின்பெயர்=குண்டம். ௧. சட்டியின்பெயர்=விசளை. ௧
அகலின்பெயர்=சுத்திகை, சராவம். ௨
கொள்கலம்யாவற்றிற்கும்பெயர்=இடுங்கலம், பாண்டம். ௨

கோடிகோடிகம்படாமேகோசிகங்கூறைபஞ்சி
சாடிநீவியமேசீரைசம்படங்கலைகலிங்கம்
சூடிகாடிகமேபுட்டந்தூசுகாழகமேவட்டம்
ஆடையாவரணந்தானையறுவையம்பரமாசாரம். (௬௮)

மடிபரிவட்டஞ்சேலைவத்திரமுடுக்கைவாசம்
இடையறுபுடைவையாறைந்திலக்காரமென்றும்பேராம்
இடையல்வேதகமேபட்டேயேடகமிவைதுகிற்பேர்
நடைபெறுநாகம்பாரிநல்லாடையிருபேராமே. (௬௯)

பட்டுவர்க்கத்தினும்பாளிதங்கோசிகம்பேர்
பட்டுநேத்திரமாங்காம்புபடுமதன்விகற்பநாமம்
இட்டநற்பணித்தூசின்பேரேற்றிடுந்தேவாங்கந்தான்
மட்டமாமூரிகஞ்சூழுமயிரகமயிர்ப்படாமே. (௭௦)

அத்தவாளந்தானேயுல்லாசமாம்வடகமும்பேர்
புத்தகமென்பசித்திரப்படாமாகும்போர்வைமீக்கோள்
வைத்தமுன்றானைதோகைமாதர்கொய்சகமேநீவி
உத்தரீயம்மேகாசமுத்தராசங்கமும்பேர். (௭௧)

கம்பலங்கம்பளங்கள்கம்பளிப்படாத்தின்வர்க்கம்
வம்புவார்விசிகைகச்சாம்வைத்தபட்டிகையுமாகும்
விம்புவட்டுடையுமப்பேர்விரிகஞ்சம்விடுந்தலைப்பாம்
கம்பலம்படங்குவாணிவிதானமேற்கட்டியாமே. (௭௨)

கஞ்சுளியங்கிமற்றைக்காஞ்சுகமொடுகுப்பாயம்
விஞ்சுகஞ்சுகமேமெய்ப்பைமிளிரும்வாரணமேசட்டை
கஞ்சிகையவிடியோடுகாண்டமேயெழினிகண்டம்
தஞ்சமாம்படாம்படங்கள்சடிதியிலிடுதிரைப்பேர். (௭௩)

தவிசணைதளிமமெத்தையுபதானந்தலையணைப்பேர்
துவசமேசத்திவாணிதோகைகேதனம்பதாகை
தவழ்விலோதனம்படங்குதரும்படாம்பெருங்கொடிப்பேர்
நுவலுங்கால்வீதிக்கட்டிநுடங்கியகொடிவிடங்கம். (௭௪)



புடவையின்பெயர்=கோடி, கோடிகம், படாம், கோசிகம், கூறை, பஞ்சி, சாடி, நீவியம், சீரை, சம்படம், கலை, கலிங்கம், சூடி, காடிகம், புட்டம், தூசு, காழகம், வட்டம், ஆடை, ஆவரணம், தானை, அறுவை, அம்பரம், ஆசாரம். ௨௪

மடி, பரிவட்டம், சேலை, வத்திரம், உடுக்கை, வாசம், இலக்காரம். ௭. (ஆ. ௩௧)
துகிலின்பெயர்=இடையல், வேதகம், பட்டு, ஏடகம். ௪
நல்லாடையின்பெயர்=நாகம், பாரி. ௨

பட்டுவர்க்கத்தின்பெயர்=பாளிதம், கோசிகம். ௨
பட்டின்பெயர்=நேத்திரம். ௧
பட்டுவிகற்பத்தின்பெயர்=காம்பு. ௧
நற்பணித்தூசின்பெயர்=தேவாங்கம். ௧
மயிர்ப்படாத்தின்பெயர்=மூரிகம், மயிரகம். ௨

அத்தவாளத்தின்பெயர்=உல்லாசம், வடகம். ௨
சித்திரப்படாத்தின்பெயர்=புத்தகம். ௧
போர்வையின்பெயர்=மீக்கோள். ௧
முன்றானையின்பெயர்=தோகை. ௧
மாதர்கொய்சகத்தின்பெயர்=நீவி. ௧
உத்தரீயத்தின்பெயர்=ஏகாசம், உத்தராசங்கம். ௨

கம்பளிப்படாத்தின்வர்க்கப்பெயர்=கம்பலம், கம்பளம். ௨
கச்சின்பெயர்=வம்பு, வார், விசிகை, பட்டிகை, வட்டுடை. ௫
விடுந்தலைப்பின்பெயர்=கஞ்சம். ௧
மேற்கட்டியின்பெயர்=கம்பலம், படங்கு, வாணி, விதானம். ௪

சட்டையின்பெயர்=கஞ்சுளி, அங்கி, காஞ்சுகம், குப்பாயம், கஞ்சுகம், மெய்ப்பை, வாரணம். ௭
இடுதிரையின்பெயர்=கஞ்சிகை, அவிடி, காண்டம், எழினி, கண்டம், படாம், படம். ௭

மெத்தையின்பெயர்=தவிசு, அணை, தளிமம். ௩
தலையணையின்பெயர்=உபதானம். ௧
பெருங்கொடியின்பெயர்=துவசம், சத்தி, வாணி, தோகை, கேதனம், பதாகை, விலோதனம், படங்கு, படாம். ௯
வீதியிற்கட்டியகொடியின்பெயர்=விடங்கம். ௧

கத்திகைசிறுகொடிப்பேர்கருதுகூவிரந்தேர்க்கட்டும்
சத்தியாந்துணிசிதாரஞ்சாற்றியசிதவலும்பேர்
சித்திரமோவியஞ்சீர்தீட்டும்வட்டிகையாமென்ன
வைத்தனர்பொறித்தறீட்டல்வரைதலுமெழுதலாமே. (எரு)

மற்றவற்கலையிறைஞ்சிமரவுரிசீரையும்பேர்
சுற்றலேயுடுத்தலென்பதற்றலேயிறுக்கலாகும்
குற்றமிலெழுபத்தாறுதொடர்செய்தான்குணபத்திரன்றாள்
நிற்றலும்வணங்கிநீதிநிறுத்தமண்டலவன்றானே. (எசு)

செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம் - ருகூஉ.

எட்டாவது

## பண்புபற்றியபெயர்த்தொகுதி.

### காப்பு.

கடிமலர்ப்பிண்டிநீழற்காவலன்சரணம்போற்றி
வடிவினிலளவுதன்னில்வண்ணத்திற்காட்சியாகும்
நெடியதோர்பொருளின்மற்றுநீளுணர்வாலேகாணப்
படுபொருளின்குணப்பேர்ப்பண்பதாந்தொகுதிசொல்வாம். (க)

நல்லகோளகையேகொம்மைநாட்டியவலயந்தட்டுச்
சொல்லியபரிதிபாண்டில்சூழ்ந்திடுகடகநேமி
சில்லிமண்டலமேயாழிதிகிரிபாலிகைவிருத்தம்
வல்லைசக்கரமீரெட்டும்வட்டமென்றிட்டநாமம். (உ)

உண்டையேகுவவுகொம்மையொடுபந்தம்புஞ்சஞ்சேடு
முண்டமேகணையேவட்டுமுத்தையேதுறுமல்சோகம்
கொண்டசேர்வுடனேமாழைகுவிதலேதொழுதிபூகம்
பிண்டமூவாறுபேருந்திரட்சியாம்பிழம்புமாமே. (ந)

தொழுதியேகுவவுதோடுதொகைசமுதாயஞ்சங்கம்
தழுவியகுழூவேகோட்டிசமவாயநிகாயங்குப்பை
குழுமலேகுவாலிராசிகுவிதன்மூவைந்துங்கூட்டம்
அழகியதகட்டினமமரியடரைம்மையாமே. (ச)



சிறுகொடியின்பெயர் = கத்திகை. க
தேரிற்கட்டுங்கொடியின்பெயர் = கூவிரம். க
துணியின்பெயர் = சிதார், சிதவல். உ
சித்திரத்தின்பெயர் = ஓவியம், வட்டிகை. உ
எழுதலின்பெயர் = பொறித்தல், தீட்டல், வரைதல். ந

மரவுரியின்பெயர் = வற்கலை, இறைஞ்சி, சீரை. ந
உடுத்தலின்பெயர் = சுற்றல். க
இறுக்கலின்பெயர் = தற்றல். க

## பெயர்ப்பிரிவு.

இ - ள். கடி மலர்ப் பிண்டி நீழற் காவலன் சரணம் போற்றி - மணம் பொருந்திய பூக்களையுடைய அசோகமரத்தினது நிழலின்கண்ணே வீற்றிருந்த அருகக்கடவுளுடைய திருவடிகளைத் துதித்து,—வடிவினில் - வடிவினாலும்,—அளவுதன்னில் - அளவினாலும்,—வண்ணத்தில் - வண்ணத்தினாலும்,—காட்சி ஆகும் நெடியது பொருளின் - கண்ணுக்குப் புலப்படும் பெரிதாகிய பொருளினிடத்தும்,—மற்று - அஃதன்றி,—நீள் உணர்வால் காணப்படு பொருளின் - உயர்ந்த அறிவினாற் காணப்படும் பொருளினிடத்தும் பொருந்திய,—குணப்பேர்ப் பண்பதாந் தொகுதி சொல்வாம் - பண்புகளின்பெயர்களைத் தெரிவிக்கின்ற பண்புப்பெயர்த் தொகுதியை (யாம்) கூறுவாம், எ - று. ஓர், ஏ அசை.

வட்டத்தின்பெயர் = கோளகை, கொம்மை, வலயம், தட்டு, பரிதி, பாண்டில், கடகம், நேமி, சில்லி, மண்டலம், ஆழி, திகிரி, பாலிகை, விருத்தம், வல்லை, சக்கரம். கசு

திரட்சியின்பெயர் = உண்டை, குவவு, கொம்மை, பந்தம், புஞ்சம், சேடு, முண்டம், கணை, வட்டு, முத்தை, துறுமல், சோகம், சேர்வு, மாழை, குவிதல், தொழுதி, பூகம், பிண்டம், பிழம்பு கஅ

கூட்டத்தின்பெயர் = தொழுதி, குவவு, தோடு, தொகை, சமுதாயம், சங்கம், குழூ, கோட்டி, சமவாயம், நிகாயம், குப்பை, குழுமல், குவால், இராசி, குவிதல். கரு
தகட்டின்பெயர் = அரி, அடர், ஐம்மை. ந

குடிலமேகுலாவல்கோணல்கோட்டங்கூன்கோண்வளாவல்
வடிவுளதட்டுவாங்கல்வணர்பத்தும்வளைவின்பேரே
படலையேபடர்ச்சிபம்பல்பரந்திடும்வடிவினுமம்
புடைபடுகுமிழ்ப்புத்தானேபுளகமாமொக்குள்கொப்புள். (௫)

குழல்சுகிர்தூம்புநாழிகூறியபுரைவேய்வேணு
ஒழுகியசுரைநாளத்தோடொன்பதுமுட்டுளைப்பேர்
புழைகுழறுளையுடைத்தாம்பொருள்பிணர்சர்ச்சரைப்பேர்
செழுமயிர்கதிர்கள்போலச்சேர்ந்திடுந்தொகுதிகற்றை. (௬)

மதநனிபெருகலூக்கன்மற்றையவிதப்புச்சால
அதிகமேசிறப்பிறப்போடலைதவவமலையான்றல்
கதழ்வொடுபிறங்கல்கூரேகழுமல்பூரிப்பேயூங்கு
புதுமையேயுருத்தன்மூவேழ்மிகுதியாம்பொங்கலும்பேர். (௭)

மன்னுமோடூக்கமோங்கல்வார்தல்சேணொழுக்கம்பொங்கல்
பன்னியநிமிர்தல்புங்கம்பரிபுரையுச்சந்துங்கம்
மின்னியநிவப்புகப்புமிசைமேடுபிறங்கலேந்தல்
உன்னதஞ்சிகரமூவேழுயர்ச்சியுத்துங்கமும்பேர். (௮)

விரிவின்பேர்விசாலமாகும்விபுலமுமாம்பரப்புப்
பரவைபப்பழுவந்தாவல்பாய்தலாஞெமிர்தலும்பேர்
மருவியபயினிசங்கமற்றிவையிரண்டுங்கூடல்
பருமையினுமம்பீனம்பனம்பரூஉவென்றும்பேரே. (௯)

பாடுமாண்பாழிமீளிபணைபொழில்பகடுமூரி
மோடுமாறடவேவீறுமுடலைகொன்கருமையண்ணல்
ஈடுமாநளியேமானமிருமையேகயவோடேந்தல்
பீடுவான்குவவுசெம்மைபெருமைப்பேரிருபத்தேழே. (௧௦)

அணுநுழைமுளரிநுட்பமாய்தன்முள்ளயிர்நுணங்கு
நுணுகொடுநுவணைநூழைநொசிவீராறிவைநுண்மைப்பேர்
கணமிறைவறிதுசின்னங்கன்றாசுதன்னமொட்டே
அணைதருகிலமேதோகமற்பமிட்டிடையுமாமே. (௧௧)

அகறல்கண்ணறையேபாழியாய்வொடுபடர்தலான்றல்
அகலுளேவியலிடங்களகலமிவ்வெட்டுமாகும்
திகழ்செம்மையிருசுசெப்பஞ்செவ்வனேர்செவ்வையைந்தாம்
நிகழுஞ்சேண்சேய்மைதூரநீளிடைதானுமப்பேர். (௧௨)



வளைவின்பெயர்=குடிலம், குலாவல், கோணல், கோட்டம், கூன், கோண், வளாவல், தட்டு, வாங்கல், வணர். ௧௦
பரந்தவடிவின்பெயர்=படலை, படர்ச்சி, பம்பல். ௩
குமிழ்ப்புவடிவின்பெயர்=புளகம். ௧
மொக்குள்வடிவின்பெயர்=கொப்புள். ௧

உட்டுளையின்பெயர்=குழல், சுகிர், தூம்பு, நாழி, புரை, வேய், வேணு, சுரை, நாளம். ௯. துளையுடைப்பொருளின்பெயர்=புழை, குழல். ௨. சர்ச்சரையின்பெயர்=பிணர். ௧
மயிர்த்தொகுதி கதிர்த்தொகுதி போல்வனவற்றின் பெயர்=கற்றை. ௧

மிகுதியின்பெயர்=மதம், நனி, பெருகல், ஊக்கல், விதப்பு, சால, அதிகம், சிறப்பு, இறப்பு, அலை, தவ, அமலை, ஆன்றல், கதழ்வு, பிறங்கல், கூர், கழுமல், பூரிப்பு, ஊங்கு, புதுமை, உருத்தல், பொங்கல். ௨௨

உயர்ச்சியின்பெயர்=மோடு, ஊக்கம், ஓங்கல், வார்தல், சேண், ஒழுக்கம், பொங்கல், நிமிர்தல், புங்கம், பரி, புரை, உச்சம், துங்கம், நிவப்பு, உகப்பு, மிசை மேடு, பிறங்கல், ஏந்தல், உன்னதம், சிகரம் உத்துங்கம். ௨௨

விரிவின்பெயர்=விசாலம், விபுலம். ௨
பரப்பின்பெயர்=பரவை, பப்பு, அழுவம், தாவல், பாய்தல், ஞெமிர்தல். ௬
கூடலின்பெயர்=பயினி, சங்கம். ௨
பருமையின்பெயர்=பீனம், பனம், பரூஉ. ௩

பெருமையின்பெயர்=பாடு, மாண், பாழி, மீளி, பணை, பொழில், பகடு, மூரி, மோடு, மால், தடவு, வீறு, முடலை, கொன், கருமை, அண்ணல், ஈடு, மா, நளி, மானம், இருமை, கயவு, ஏந்தல், பீடு, வான், குவவு, செம்மை. ௨௭

நுண்மையின்பெயர்=அணு, நுழை, முளரி, நுட்பம், ஆய்தல், முள், அயிர், நுணங்கு, நுணுகு, நுவணை, நூழை, நொசிவு. ௧௨
அற்பத்தின்பெயர்=கணம், இறை, வறிது, சின்னம், கன்று, ஆசு, தன்னம், ஒட்டு, கிலம், தோகம், இட்டிடை. ௧௨

அகலத்தின்பெயர்=அகறல், கண்ணறை, பாழி, ஆய்வு, படர்தல், ஆன்றல், அகலுள், வியலிடம். ௮
செவ்வையின்பெயர்=செம்மை, இருசு, செப்பம், செவ்வன், நேர். ௫
தூரத்தின்பெயர்=சேண், சேய்மை, நீளிடை. ௩

வடிதலேயொழுகல்போகல்வரியுறைவார்தறீர்தல்
நெடிலொடாயதமேநேர்புநெடுமைசேண்கொடிநீளப்பேர்
அடையவெல்லாஞ்சமத்தமடங்கலேயகிலம்யாவும்
முடியவேயனைத்தகண்டமுழுவதாமுற்றுமப்பேர். (௧௩)

குறைதலின்பேர்நிரப்பேகுன்றலேயருகலஃகல்
சிறுகலேயீனமூனஞ்சிங்கலேயெஞ்சறேய்வாம்
துறுமலேசடிலத்தோடுதுன்னலேகஞறல்வீங்கல்
செறிநளிபொதுளல்செற்றுத்திணுங்கல்பத்துநெருங்கல். (௧௪)

பிறங்குதறிளைத்தலார்தல்பெருகுதல்கழுமன்மல்கல்
நிறைந்திடலாந்துவன்றல்பூரணங்கமமுநேரும்
பறைந்தபால்பயலருத்தம்பாகங்கூறைந்தும்பாதி
அறைந்தசீர்குருக்கனஞ்ஞாட்பதிபாரம்பொறையுமாமே. (௧௫)

மிருதுவேசுகுமாரங்கோமளஞ்சாயல்கயவுமென்மை
மருவியவிலகுநொவ்வோடிலேசிவைவகுக்குநொய்மை
துருவமேதுவமேசற்றுஞ்சலியாதுதோன்றிநிற்றல்
கருதுபற்றுக்கோடூற்றங்கந்துதூத்தஞ்சமும்பேர். (௧௬)

அளவையேகடனேகச்சமளத்தலினுமுப்பேர்
அளவின்மையமானமற்றையபாரமேயநந்தமும்பேர்
வெளிபடாத்துதைதலோடுததைதலுமிடைதலென்ப
ஒளிபெறுகழிவுங்கூர்ப்புமுள்ளதுசிறத்தலின்பேர். (௧௭)

அடிமுதலெழுவாய்மோனையாதிபூருவந்தலைத்தாள்
இடைசமன்பகலேநாப்பணெய்துமத்தியநள்ளும்பேர்
கடையின்பேரிறுதியந்தங்காட்டியபின்னேமுற்று
முடிவுடனெல்லையாகுமொழிந்திடுமீறுமப்பேர். (௧௮)

தாறொடுவரையேமானந்தனைதுணையவதிமட்டே
காறொடுபரிமாணங்களளவின்பேர்கருதிலொன்பான்
கூறியவெல்லையின்பேர்கொற்றமேவரைப்புக்காட்டை
எறியபரியந்தத்தோடேணியிவ்வைந்துமென்ப. (௧௯)

குருகுபாறவளம்வெள்ளைகுருத்துவால்சுவேதம்பாண்டு
நரைவிளர்பத்தும்வெண்மைசிதமுஞ்சுக்கிலமுநாட்டும்
குருதிகிஞ்சுகமிராகங்குறித்திடுஞ்சேதுப்பூவல்
அருணஞ்சேய்சோணஞ்செக்கராத்தஞ்சேப்பிவைசிவப்பாம். (௨௦)



நீளத்தின்பெயர்=வடிதல், ஒழுகல், போகல், வரி, உறை, வார்தல், தீர்தல், நெடில், ஆயதம், நேர்பு, நெடுமை, சேண், கொடி. ௧௩
முழுவதின்பெயர்=அடைய, எல்லாம், சமத்தம், அடங்கல், அகிலம், யாவும், முடிய, அனைத்து, அகண்டம், முற்றும். ௧௦

குறைதலின்பெயர்=நிரப்பு, குன்றல், அருகல், அஃகல், சிறுகல், ஈனம், ஊனம், சிங்கல், எஞ்சல், தேய்வு. ௧௦
நெருங்கலின்பெயர்=துறுமல், சடிலம், துன்னல், கஞறல், வீங்கல், செறி, நளி, பொதுளல், செற்று, திணுங்கல். ௧௦

நிறைந்திடலின்பெயர்=பிறங்குதல், திளைத்தல், ஆர்தல், பெருகுதல், கழுமல், மல்கல், துவன்றல், பூரணம், கமம். ௯
பாதியின்பெயர்=பால், பயல், அருத்தம், பாகம், கூறு. ௫
பாரத்தின்பெயர்=சீர், குரு, கனம், ஞாட்பு, பொறை. ௫

மென்மையின்பெயர்=மிருது, சுகுமாரம், கோமளம், சாயல், கயவு. ௫
நொய்மையின்பெயர்=இலகு, நொவ்வு, இலேசு. ௩
சலியாதுநிற்றலின்பெயர்=துருவம், துவம். ௨
பற்றுக்கோட்டின்பெயர்=ஊற்றம், கந்து, தூ, தஞ்சம். ௪

அளத்தலின்பெயர்=அளவை, கடன், கச்சம். ௩
அளவின்மையின்பெயர்=அமானம், அபாரம், அநந்தம். ௩
மிடைதலின்பெயர்=துதைதல், ததைதல். ௨
உள்ளதுசிறத்தலின்பெயர்=கழிவு, கூர்ப்பு. ௨

அடியின்பெயர்=முதல், எழுவாய், மோனை, ஆதி, பூருவம், தலைத்தாள். ௬
இடையின்பெயர்=சமன், பகல், நாப்பண், மத்தியம், நள். ௫
கடையின்பெயர்=இறுதி, அந்தம், பின், முற்று, முடிவு, எல்லை, ஈறு. ௭

அளவின்பெயர்=தாறு, வரை, மானம், தனை, துணை, அவதி, மட்டு, காறு, பரிமாணம். ௯
எல்லையின்பெயர்=கொற்றம், வரைப்பு, காட்டை, பரியந்தம், ஏணி. ௫

வெண்மையின்பெயர்=குருகு, பால், தவளம், வெள்ளை, குருத்து, வால், சுவேதம், பாண்டு, நரை, விளர், சிதம், சுக்கிலம். ௧௨
சிவப்பின்பெயர்=குருதி, கிஞ்சுகம், இராகம், சேது, பூவல், அருணம், சேய், சோணம், செக்கர், அரத்தம், சேப்பு. ௧௧

பாசுபையரிதஞ்சாமம்பசுமைசாமளமேபச்சை
பேசுபிங்கலம்பசப்புப்பீதகம்பீதம்பொன்மை
பூசியகுரால்புற்கோடுபுகர்கபிலமுமாமென்ப
மாசின்பேர்கறைகளங்கமலினமாங்கசடுமப்பேர். (௨௧)

இருண்மணிநீலநல்லமேற்றகாழகமேகாளம்
கருள்களங்காரிகார்மால்கறைமாயங்கறுப்பின்பேரே
விரியன்மின்னிலவுவில்வாள்வெயினிழல்வாமநீமம்
அரிநகைகிரணங்காந்தியாஞ்சோதியொளியீரேழ்பேர். (௨௨)

அலங்குதனகல்விளங்கலவிர்தலினொடுவயங்கல்
இலங்குதன்மிளிர்தன்மின்னலிலகுதலுடனிமைத்தல்
துலங்குதலொளிர்தலெங்குஞ்சுடருதல்பிறழ்தலீரேழ்
நலங்கொளவொளிசெயற்பேர்தயங்கலுநாட்டலாமே. (௨௩)

எழில்வண்ணம்யாணர்மாமையிராமமேர்நவ்விநோக்குச்
செழுமையேசேடுசெவ்விசித்திரநலமேமாதர்
குழகொடுபொற்புநன்குகோலமேமணிவனப்புப்
பழிபடாவிடங்கமாழைபத்திரந்தோட்டிபாங்கு. (௨௪)

சுந்தரமணங்குமஞ்சுசொக்குத்தேசிகமம்பொன்னே
சந்தங்காரிகைகவின்பூத்தளிமமேவாமங்காமர்
அந்தமேமயமேயொண்மையாய்ந்தவாறேழுந்தானே
வந்திடுமழகன்பேராம்வட்கல்புல்லெனன்மழுங்கல். (௨௫)

வரிபுகர்சாயல்சந்தமாமைகேழ்பசப்புவண்ணம்
குருவுருவருணமேனியீராறுநிறப்பேர்கூறும்
கருதுகட்டழகுகாமர்கருதலங்காரமும்பேர்
பெருகியவிசித்திரந்தான்பேரழகாகுமென்ப. (௨௬)

குருளையேமழவுவெண்மைகுழவுகோமளமேகொம்மை
புருவையெளவனமேநாகுபோதகந்தருணநவ்வி
முருகிளையிளமையீரேழ்முற்றலேவிருத்தமூப்பாம்
மருவியவண்ணஞ்சந்தம்வடிவின்பேர்செண்ணமாமே. (௨௭)

மிடல்வயந்திண்மைமைந்துமெய்ந்நலந்தீரமும்பல்
முடலைகொன்வாய்மைகூளிமூரியேயூக்கமீளி
அடல்விறலீடேயேணேயாண்மையேதிறலேநோன்மை
முடுகலேமல்லல்பாழிமொய்ம்புரன்முரணேதுப்பு. (௨௮)



பச்சையின்பெயர்=பாசு, பை, அரிதம், சாமம், பசுமை, சாமளம். ௬
பொன்மையின்பெயர்=பிங்கலம், பசப்பு, பீதகம், பீதம். ௪
புகர்நிறத்தின்பெயர்=குரால், புற்கு, கபிலம். ௩
மாசின்பெயர்=கறை, களங்கம், மலினம், கசடு. ௪

கறுப்பின்பெயர்=இருள், மணி, நீலம், நல்லம், காழகம், காளம், கருள், களம், காரி, கார், மால், கறை, மாயம். ௧௩
ஒளியின்பெயர்=விரியல், மின், நிலவு, வில், வாள், வெயில், நிழல், வாமம், நீமம், அரி, நகை, கிரணம், காந்தி, சோதி. ௧௪

ஒளிசெயலின்பெயர்=அலங்குதல், நகல், விளங்கல், அவிர்தல், வயங்கல், இலங்குதல், மிளிர்தல், மின்னல், இலகுதல், இமைத்தல், துலங்குதல், ஒளிர்தல், சுடருதல், பிறழ்தல், தயங்கல். ௧௫

அழகின்பெயர்=எழில், வண்ணம், யாணர், மாமை, இராமம், ஏர், நவ்வி, நோக்கு, செழுமை, சேடு, செவ்வி, சித்திரம், நலம், மாதர், குழகு, பொற்பு, நன்கு, கோலம், மணி, வனப்பு, விடங்கம், மாழை, பத்திரம், தோட்டி, பாங்கு. ௨௫

சுந்தரம், அணங்கு, மஞ்சு, சொக்கு, தேசிகம், அம், பொன், சந்தம், காரிகை, கவின், பூ, தளிமம, வாமம், காமர், அந்தம், மயம், ஒண்மை. ௧௭. (ஆ ௪௨)
மழுங்கலின்பெயர்=வட்கல், புல்லெனல். ௨

நிறத்தின்பெயர்=வரி, புகர், சாயல், சந்தம், மாமை, கேழ், பசப்பு, வண்ணம், குரு, உரு, வருணம், மேனி. ௧௨
கட்டழகின்பெயர்=காமர், அலங்காரம். ௨
பேரழகின்பெயர்=விசித்திரம். ௧

இளமையின்பெயர்=குருளை, மழவு, வெண்மை, குழவு, கோமளம், கொம்மை, புருவை, யௌவனம், நாகு, போதகம், தருணம், நவ்வி, முருகு, இளை. ௧௪
மூப்பின்பெயர்=முற்றல், விருத்தம். ௨
வண்ணத்தின்பெயர்=சந்தம். ௧. வடிவின்பெயர்=செண்ணம். ௧.

வலியின்பெயர்=மிடல், வயம், திண்மை, மைந்து, மெய்ந்நலம், தீரம், உம்பல், முடலை, கொன், வாய்மை, கூளி, மூரி, ஊக்கம், மீளி, அடல், விறல், ஈடு, ஏண், ஆண்மை, திறல், நோன்மை, முடுகல், மல்லல், பாழி, மொய்ம்பு, உரன், முரண், துப்பு. ௨௮

தானமேமதமேதோற்றஞ்சத்துவந்தாவேயாற்றல்
மானமல்லுரமேமுன்புமதுகையேயெறுழெண்ணைந்தும்
ஊனமில்வலிவீரப்பேருறுபராக்கிரமஞ்சூரம்
ஈனமில்சௌரியம்வீரியமேசேவகமுமாமே. (௨௧)

தளவிலாவமைதியான்றல்சால்பொடுசெழுமைவாய்த்தல்
வளநிறைமாண்புமாண்டன்மாண்பத்துமாட்சிமைப்பேர்
நளிர்பனியளிசீதந்தண்ணன்மழைசாந்தமேழும்
குளிர்வளப்பங்கொழுப்பாங்கொழுமையேசெழுமையென்ப. (௩௦)

மேதைஞாபகந்தெருட்சிமிகுமதியுணர்வுஞானம்
போதமேதெளிவுபுந்திபுலனுரனறிவின்பேராம்
மேதகுபுனிதந்தூவேமேத்தியஞ்சௌசந்தூய்மை
தூய்துபாவனமேசுத்தஞ்சுசிபவித்திரந்துப்பும்பேர். (௩௧)

குறைவிலாவலனேவென்றிகொற்றமேவெற்றமுல்லை
விறல்சயம்வாகையாடுவிசயம்பத்திவைவெற்றிப்பேர்
மறுவில்சீர்விபவமாடுவாழ்க்கையேவிருத்தியாக்கம்
பொறியிடந்திருப்பெருக்கம்போற்றியவெறுக்கைசெல்வம். (௩௨)

பரிவுநார்வாரமீரம்பற்றளிபாசமன்பாம்
புரிவாணநேயமும்பேர்போற்றியதயையிரக்கம்
கருணையேகிருபைமற்றுக்கருதியதகவிவ்வைந்தும்
அருளின்பேருழுவலென்பதெழுமையுந்தொடர்ந்தவன்பு. (௩௩)

உன்னமேயகமேசித்தமுள்ளமேயிதயநெஞ்சு
முன்னமேழ்மனத்தின்பேராமுதிர்சிந்தைநினைவுசேத்துச்
சொன்னவிங்கிதங்கருத்துச்சூழலெண்ணங்குறிப்பாம்
வண்மைநாட்டியந்தியானமதம்வினையேடலும்பேர். (௩௪)

கண்ணலேகருதல்பேணல்காணலேநுதலல்சுட்டல்
எண்ணலேபுகறலெட்டுங்குறித்திடலென்னலாகும்
நண்ணியகணித்தலோடுநாட்டியகுணித்தலெல்லாம்
மண்ணுளோர்வரையறுத்தற்பெயரென்பமதித்தலும்பேர். (௩௫)

உன்னலேபடர்தலூழ்த்தலுள்ளுதலொடுசிந்தித்தல்
முன்னலேவலித்தலூகமொழிபவேநினைத்தலெண்பேர்
மன்னுசெம்மாப்பேமாப்புமற்றையேக்கழுத்தமும்பேர்
இன்னவையிறுமாப்பாகுமிவையேவீற்றிருத்தலென்ப. (௩௬)



தானம், மதம், தோற்றம், சத்துவம், தா, ஆற்றல், மானம், மல், உரம், முன்பு, மதுகை, எறுழ். ௧௨. (ஆ. ௪௦)
வீரத்தின்பெயர்=பராக்கிரமம், சூரம், சௌரியம், வீரியம், சேவகம். ௫

மாட்சிமையின்பெயர்=அமைதி, ஆன்றல், சால்பு, செழுமை, வாய்த்தல், வளம், நிறை, மாண்பு, மாண்டல், மாண். ௧௦
குளிரின்பெயர்=நளிர், பனி, அளி, சீதம், தண், மழை, சாந்தம். ௭
வளப்பத்தின்பெயர்=கொழுப்பு. ௧
கொழுமையின்பெயர்=செழுமை. ௧

அறிவின்பெயர்=மேதை, ஞாபகம், தெருட்சி, மதி, உணர்வு, ஞானம், போதம், தெளிவு, புந்தி, புலன், உரன். ௧௧
சுத்தத்தின்பெயர்=புனிதம், தூ, மேத்தியம், சௌசம், தூய்மை, தூய்து, பாவனம், சுசி, பவித்திரம், துப்பு. ௧௦

வெற்றியின்பெயர்=வலன், வென்றி, கொற்றம், வெற்றம், முல்லை, விறல், சயம், வாகை, ஆடு, விசயம். ௧௦
செல்வத்தின்பெயர்=சீர், விபவம், மாடு, வாழ்க்கை, விருத்தி, ஆக்கம், பொறி, இடம், திரு, பெருக்கம், வெறுக்கை. ௧௧

அன்பின்பெயர்=பரிவு, நார், வாரம், ஈரம், பற்று, அளி, பாசம், புரிவு, ஆணம், நேயம். ௧௦
அருளின்பெயர்=தயை, இரக்கம், கருணை, கிருபை, தகவு. ௫
எழுமையுந்தொடர்ந்தவன்பின்பெயர்=உழுவல். ௧

மனத்தின்பெயர்=உன்னம், அகம், சித்தம், உள்ளம், இதயம், நெஞ்சு, முன்னம். ௭
குறிப்பின்பெயர்=சிந்தை, நினைவு, சேத்து, இங்கிதம், கருத்து, சூழல், எண்ணம், வண்மை, நாட்டியம், தியானம், மதம், வினை, ஏடல். ௧௩

குறித்தலின்பெயர்=கண்ணல், கருதல், பேணல், காணல், நுதலல், சுட்டல், எண்ணல், புகறல். ௮
வரையறுத்தலின்பெயர்=கணித்தல், குணித்தல், மதித்தல். ௩

நினைத்தலின்பெயர்=உன்னல், படர்தல், ஊழ்த்தல், உள்ளுதல், சிந்தித்தல், முன்னல், வலித்தல், ஊகம். ௮
ஏமாப்பின்பெயர்=செம்மாப்பு, ஏக்கழுத்தம். ௨
இவ்விரண்டும் இறுமாப்பிற்கும்பெயராம்; இவையே வீற்றிருத்தற்கும் பெயராம்.

தருக்கொடுமலர்ச்சிமத்தந்தன்குபாடவங்களிப்புச்
செருக்கபிமானமேமந்திகழ்பெருமிதமதர்ப்புப்
பொருத்திடுமதர்வீராறும்புகலுமுள்ளக்களிப்பாம்
உருத்திடுஞானஞ்சீலமோதுநல்லுணர்விரும்ம். (௩௭)

நகைகடிமகிழ்ச்சியேமநயஞ்சுகந்தொய்யலின்பம்
மகிழுமானந்தமொன்றேமன்னுபேரின்பமென்ப
திகழ்நனவுணர்வுதேறறேற்றநற்றெளிவுநாற்பேர்
புகழ்பெறுகமித்தனோன்றல்சகித்திடல்பொறைமுப்பேரே. (௩௮)

நறுமையேவிழுமஞ்சேடுநயநன்றியாணர்நன்னர்
உறுதியாங்கடவுளொண்மையுத்தமம்பத்துநன்றாம்
அறமென்பதருமந்தானேயாகுமூழின்பேர்தெய்வம்
நிறுவியவிதியேயுண்மைவரன்முறைநியதியும்பேர். (௩௯)

தவமென்பவிரதநோன்பாமுவவொடுதவசுமாகும்
உவகைமாராயமற்றையோகையேபிரியமும்பேர்
நவமதாங்கேண்மைகண்ணேநாகரிகங்கண்ணோட்டம்
இவைநயப்புணர்வுமாமேயெணிலையுடைமையென்ப. (௪௦)

தூக்கியகேண்மையேகேடொடர்பென்பநட்புமுப்பேர்
ஊக்கமேயுரனிரண்டுமுள்ளத்தின்மிகுதியென்ப
நீக்கிலாவகைதிறங்கணிகரிலாக்கூறுபாடே
ஆக்கமேபலன்பயம்பேறதிகமூதியமிலாபம். (௪௧)

வெறுப்பொடுமுனைவொல்லாமைவேண்டாமையுவர்ப்பேமாவே
அறுத்திடலவாவின்மைப்பேரலமென்பதமையுமென்றல்
துறத்தல்சார்பறுத்தலோடுதுறவியேவிரத்திமுப்பேர்
மறுத்தனாண்சமழ்ப்புவெள்கல்வட்கலுட்கிலச்சைவெட்கம். (௪௨)

ஒருமைதொட்டிமைகுறிப்போடொற்றுமையென்முப்பேர்
தருபெருந்துணையேதுப்புச்சகாயமேயிணையும்பேராம்
பெருகியமன்னறுஞ்சறிதிநிலைபெறுதன்முப்பேர்
விரவியதாணுவும்பேர்மேவியவாணையேவல். (௪௩)

செயன்முறைநடையாசாரஞ்செய்திகையறையேகையே
இயல்புமஞ்சரியேசீர்சாரித்திரமொழுக்கம்பத்தாம்
மயலறுநெறிநியாயமரியாதைநீதிமுப்பேர்
வியனுறுமழுக்கின்மைக்குவிமலமுமமலமும்பேர். (௪௪)



உள்ளக்களிப்பின்பெயர் = தருக்கு, மலர்ச்சி, மத்தம், தன்கு, பாடவம், களிப்பு, செருக்கு, அபிமானம், ஏமம், பெருமிதம், மதர்ப்பு, மதர்வு. ௧௨. நல்லுணர்வின்பெயர் = ஞானம், சீலம். ௨

இன்பத்தின்பெயர் = நகை, கடி, மகிழ்ச்சி, ஏமம், நயம், சுகம், தொய்யல். ௭. பேரின்பத்தின்பெயர் = ஆனந்தம். ௧
தெளிவின்பெயர் = நனவு, உணர்வு, தேறல், தேற்றம். ௪
பொறையின்பெயர் = கமித்தல், நோன்றல், சகித்திடல். ௩

நன்றின்பெயர் = நறுமை, விழுமம், சேடு, நயம், நன்றி, யாணர், நன்னர், கடவுள், ஒண்மை, உத்தமம். ௧௦
தருமத்தின்பெயர் = அறம். ௧
ஊழின்பெயர் = தெய்வம், விதி, உண்மை, வரன்முறை, நியதி. ௫

தவத்தின்பெயர் = விரதம், நோன்பு, உவவு, தவசு. ௪
உவகையின்பெயர் = மாராயம், ஓகை, பிரியம். ௩
கண்ணோட்டத்தின்பெயர் = கேண்மை, கண், நாகரிகம், நயப்புணர்வு. ௪
நிலையுடைமையின்பெயர் = எண். ௧

நட்பின்பெயர் = கேண்மை, கேள், தொடர்பு. ௩
உள்ளத்தின்மிகுதியின்பெயர் = ஊக்கம், உரன். ௨
கூறுபாட்டின்பெயர் = வகை, திறம். ௨
இலாபத்தின்பெயர் = ஆக்கம், பலன், பயன், பேறு, அதிகம், ஊதியம். ௬

அவாவின்மையின்பெயர் = வெறுப்பு, முனைவு, ஒல்லாமை, வேண்டாமை, உவர்ப்பு, மா, அறுத்திடல். ௭. அமையுமென்றலின் பெயர் = அலம். ௧. துறத்தலின்பெயர் = சார்பறுத்தல், துறவி, விரத்தி. ௩. வெட்கத்தின்பெயர் = மறுத்தல், நாண், சமழ்ப்பு, வெள்கல், வட்கல், உட்கு, இலச்சை. ௭

ஒற்றுமையின்பெயர் = ஒருமை, தொட்டிமை, குறிப்பு. ௩
சகாயத்தின்பெயர் = துணை, துப்பு, இணை. ௩
நிலைபெறுதலின்பெயர் = மன்னல், துஞ்சல், திதி, தாணு. ௪
ஏவலின்பெயர் = ஆணை. ௧

ஒழுக்கத்தின்பெயர் = செயல், முறை, நடை, ஆசாரம், செய்தி, கையறை, கை, இயல்பு, மஞ்சரி, சாரித்திரம். ௧௦
நீதியின்பெயர் = நெறி, நியாயம், மரியாதை. ௩
அழுக்கின்மையின்பெயர் = விமலம், அமலம். ௨

தொல்லைமுன்பண்டுமுந்தைதொன்றுபூருவம்புராணம்
ஒல்லையேபுராதனத்தோடுற்றவூழ்பழமைபத்தாம்
நல்லநூதனம்விருந்துநவங்கடிபுத்தேள்கோடி
புல்லியயாணர்வம்புபுனிறென்பான்புதுமையின்பேர். (௪௫)

நீக்கிலாத்துப்புமல்லனெடியமங்கலமேபூவே
போக்கமேமலர்ச்சிபொம்மல்பொற்பிவைபொலிவெண்பேரா
தீர்க்கமேதரிப்புமன்றதேறிவைநிச்சயப்பேர்
ஆக்கமேநந்தலென்பவபிதானநாமம்பேராம். (௪௬)

பாங்கொடுகாணிதாயம்பால்கெழுதகைமையாட்சி
ஈங்கிவையுரித்தினுமமெண்ணமேகணிதமென்ப
நீங்கருநிலைதண்டாமைநிகரிலாவுனுமையும்பேர்
பாங்குறுமரபுபாரம்பரியமேமுறைமையாகும். (௪௭)

வியப்புவிம்மிதத்தினோடுவிசித்திரமிறும்பூதின்ன
மயக்கிலாவதிசயப்பேர்மற்றையற்புதமுமாகும்
செயத்தகுகாரணப்பேர்திறமேதுப்பொருட்டுவாயில்
நயத்தகுநிமித்தமும்பேர்நாடுங்கால்வழியேபின்னும். (௪௮)

மல்லொடுவளமேவாரிபகுதியும்வருவாயின்பேர்
புல்லுதல்கெழுமலென்பபொருந்தலேயமைவுமப்பேர்
பல்பலமுறையின்பேரேபரியாயந்திணைகுடிப்பேர்
நல்லதாம்வெகுவிதந்நாநாவிதம்விவிதமாமே. (௪௯)

அறிந்திடும்பொருட்பேர்சித்துச்சேதனமென்பராய்ந்தோர்
அறிந்திடாப்பொருளசித்தோடசேதனஞ்சடமுமாகும்
சிறந்திடவுயிர்களீசன்செய்திடுஞ்சீலநூலை
அறிந்துமஃதறியாதாரைப்போறலேயறிமடந்தான். (௫0)

அறிவின்மைமடமெய்யாமைமருட்சிபேதைமையென்றாகும்
பெறுமுதுக்குறைவுதானேபேரறிவென்றுகூறும்
குறைவிலாக்கோணைகன்னிகுமரியேயழிவின்மைப்பேர்
உறவியேயுறவின்பேராநிறைவேறல்சபலமாமே. (௫௧)

உம்மையேகழிபிறப்பாமொழிந்திடுவருபிறப்பிற்
கம்மையுமறுமையும்பேரானவிப்பிறப்பினுமம்
இம்மையாமொருபிறப்பேயியம்பிடிலொருமைதானே
எம்மையெப்பிறப்புமென்பவேழ்பவமெழுபிறப்பாம். (௫௨)



பழமையின்பெயர்=தொல்லை, முன், பண்டு, முந்தை, தொன்று, பூருவம், புராணம், ஒல்லை, புராதனம், ஊழ். ௧0
புதுமையின்பெயர்=நூதனம், விருந்து, நவம், கடி, புத்தேள், கோடி, யாணர், வம்பு, புனிறு. ௯

பொலிவின்பெயர்=துப்பு, மல்லல், மங்கலம், பூ, போக்கம், மலர்ச்சி, பொம்மல், பொற்பு. ௮
நிச்சயத்தின்பெயர்=தீர்க்கம், தரிப்பு, மன்ற, தேறு. ௪
ஆக்கத்தின்பெயர்=நந்தல். ௧
பேரின்பெயர்=அபிதானம், நாமம். ௨

உரித்தின்பெயர்=பாங்கு, காணி, தாயம், பால், கெழுதகைமை, ஆட்சி. ௬. கணிதத்தின்பெயர்=எண்ணம். ௧
நிலைநீங்காமையின்பெயர்=தண்டாமை, ஆனுமை. ௨
முறைமையின்பெயர்=மரபு, பாரம்பரியம். ௨

அதிசயத்தின்பெயர்=வியப்பு, விம்மிதம், விசித்திரம், இறும்பூது, அற்புதம். ௫
காரணத்தின்பெயர்=திறம், ஏது, பொருட்டு, வாயில், நிமித்தம். ௫
பின்னின்பெயர்=வழி. ௧

வருவாயின்பெயர்=மல் வளம், வாரி, பகுதி. ௪
பொருந்தலின்பெயர்=புல்லுதல், கெழுமல், அமைவு. ௩
பல்பலமுறையின்பெயர் = பரியாயம். ௧. குடியின்பெயர் = திணை. ௧
வெகுவிதத்தின்பெயர்=நாநாவிதம், விவிதம். ௨

அறிவுடைப்பொருளின்பெயர்=சித்து, சேதனம். ௨
அறிவில்பொருளின்பெயர்=அசித்து, அசேதனம், சடம். ௩
அறிந்துமறியார்போறல்=அறிமடம். ௧

அறிவின்மையின்பெயர்=மடம், எய்யாமை, மருட்சி, பேதைமை. ௪
பேரறிவின்பெயர்=முதுக்குறைவு. ௧
அழிவின்மையின்பெயர்=கோணை, கன்னி, குமரி. ௩
உறவின்பெயர்=உறவி. ௧. நிறைவேறலின்பெயர்=சபலம். ௧

கழிபிறப்பின்பெயர்=உம்மை. ௧
வருபிறப்பின்பெயர்=அம்மை, மறுமை. ௨
இப்பிறப்பின்பெயர்=இம்மை. ௧. ஒருபிறப்பின்பெயர்=ஒருமை. ௧
எப்பிறப்பிற்கும்பெயர்=எம்மை. ௧
எழுபிறப்பின்பெயர்=ஏழ்பவம். ௧

முருகுதேன்கடியாமோதமோதவங்கந்தம்வேரி
விரைநறைமன்றல்வம்புவெறிமருமணம்பன்முப்பேர்
பரிமளமிகுமணப்பேர்பரவிநாறுதல்கந்தித்தல்
விரவியகமழ்தலும்பேர்மேவுதுர்க்கந்தம்பூதி. (ருங)

தூயசேறமுதுசாரஞ்சுவைதீந்தேமினிமையின்பேர்
தீயதேங்கனிதித்திப்பாமதுரமுமாகுந்தித்தம்
ஆயதுகைத்தலின்பேராமிலம்புளிப்பதாகும்
காயமேகடுகெங்காழ்ப்புக்கரில்காரங்கடுக்கார்ப்பாமே. (ருச)

வெருவுசூர்பீர்வெறுப்புவெறிவெடிகவலைபீதி
உருவுபேம்விறப்புக்கொன்னேயுட்குநாம்பனிப்பணங்கு
தருபுலம்பதிர்ப்படுப்புத்தரம்பயமுருமச்சப்பேர்
துரிதமேபிரமம்வந்தசூழ்கதனங்கலக்கம். (ருரு)

நிலைபெறுதோடறேங்கன்ஞெரேலெனல்கூசறிட்கல்
உலமரலளுக்கன்ஞொள்கலொடுதுடுக்கெனலேதுட்கல்
குலைதல்வெய்துறலேயச்சக்குறிப்புத்துண்ணெனலுங்கூறும்
தலையிழிபுடனேசாய்ப்புத்தஞ்சமேதண்மைதாழ்வு. (ருசு)

விதிர்ப்பொடுவிதப்புக்கம்பம்விதலைகம்பிதம்பனிப்புப்
பொதிர்ப்புலைவிவைநடுக்கம்பொருந்திடுமெளிமையெண்மை
மதிப்பிலாப்பரிபவங்கண்மற்றிழிதகவுமாகும்
பிதற்றுசிற்றறிவுவெண்மைவெளிறுபுல்லறிவின்பேரே. (ருஎ)

ஆசுதோம்பிழையேபோக்கேயரில்கரில்பழியரிப்புக்
காசுமைதவறேமானங்கறைகுறைமிறைகழிப்பு
மாசொடுதுகளேதப்புமறுநவைவசைகொழிப்பே
ஏசொடுபுரையேகோதேயேதமுமொன்பான்குற்றம். (ருஅ)

வழுக்கொடுமறவிபுன்மைமறலொடுபொல்லாங்கேகீழ்
இழுக்கொடுசோர்வுபொச்சாப்பிகழ்ச்சியுமறத்தலின்பேர்
பழித்திடுந்துவ்வுமன்னும்பகர்ந்திடுமிழிவுதானே
இழைத்திடுந்தளர்ச்சியேட்டையசாவுமாமினைவிரக்கம். (ருகூ)

கடுகியவெம்மைகோரங்கருமையேயுருமம்வெப்பம்
உடனழலழனந்தாபமுருப்பமுட்டணப்பேரொன்பான்
கொடுமையின்பேரேசண்டங்கோடணேகடினங்கோரம்
கடுமையுக்கிரமுறைப்புக்கலாஞ்சடம்வஞ்சம்பூதி. (சுo)



மணத்தின்பெயர்=முருகு, தேன், கடி, ஆமோதம், மோதவம், கந்தம், வேரி, விரை, நறை, மன்றல், வம்பு, வெறி, மரு. கங
மிகுமணத்தின்பெயர்=பரிமளம். க. நாறுதலின்பெயர்=கந்தித்தல், கமழ்தல். உ. துர்க்கந்தத்தின்பெயர்=பூதி. க

இனிமையின்பெயர்=சேறு, அமுது, சாரம், சுவை, தீம், தேம். சு
தித்திப்பின்பெயர்=தேம், கனி, மதுரம். ங
கைத்தலின்பெயர்=தித்தம் க. புளிப்பின்பெயர்=ஆமிலம். க
கார்ப்பின்பெயர்=காயம், கடுகம், காழ்ப்பு, கரில், காரம், கடு. சு

அச்சத்தின்பெயர்=வெருவு, சூர், பீர், வெறுப்பு, வெறி, வெடி, கவலை, பீதி, உருவு, பேம், விறப்பு, கொன், உட்கு, நாம், பனிப்பு, அணங்கு, புலம்பு, அதிர்ப்பு, அடுப்பு, தரம், பயம், உரும். உஉ
கலக்கத்தின்பெயர்=துரிதம், பிரமம், கதனம். ங

அச்சக்குறிப்பின்பெயர்=ஓடல், தேங்கல், ஞெரேலெனல், கூசல், திட்கல், உலமரல், அளுக்கல், ஞொள்கல், துடுக்கெனல், துட்கல், குலைதல், வெய்துறல், துண்ணெனல். கங
தாழ்வின்பெயர்=தலையிழிபு, சாய்ப்பு, தஞ்சம், தண்மை. ச

நடுக்கத்தின்பெயர்=விதிர்ப்பு, விதப்பு, கம்பம், விதலை, கம்பிதம், பனிப்பு, பொதிர்ப்பு, உலைவு. அ
எளிமையின்பெயர்=எண்மை, பரிபவம், இழிதகவு. ங
புல்லறிவின்பெயர்=சிற்றறிவு, வெண்மை, வெளிறு. ங

குற்றத்தின்பெயர்=ஆசு, தோம், பிழை, போக்கு, அரில், கரில், பழி, அரிப்பு, காசு, மை, தவறு, மானம், கறை, குறை, மிறை, கழிப்பு, மாசு, துகள், தப்பு, மறு, நவை, வசை, கொழிப்பு, ஏசு, புரை, கோது, ஏதம். உஎ

மறத்தலின்பெயர்=வழுக்கு, மறவி, புன்மை, மறல், பொல்லாங்கு, கீழ், இழுக்கு, சோர்வு, பொச்சாப்பு, இகழ்ச்சி. கo
இழிவின்பெயர்=துவ்வு, மன். உ. தளர்ச்சியின்பெயர்=ஏட்டை, அசா. உ. இரக்கத்தின்பெயர்=இனைவு. க

உட்டணத்தின்பெயர்=வெம்மை, கோரம், கருமை, உருமம், வெப்பம், அழல், அழனம், தாபம், உருப்பம். கூ
கொடுமையின்பெயர்=சண்டம், கோடணை, கடினம், கோரம், கடுமை, உக்கிரம், உறைப்பு, கலாம், சடம், வஞ்சம், பூதி. கக

குறையிலம்பாடுமிச்சைகுறுவாழ்க்கைமிடிநிரப்புச்
சிறுமையேயொற்கமின்மைநீயநல்குரவேயல்கல்
வறுமையின்பெயர்பன்னொன்றும்வருதரித்திரமுமாகும்
மறலிகன்முனைமுரண்டாமடிதெவ்வோடரிபகைப்பேர். (சுக)

வெறுத்தலேசினங்குரோதம்வெகுளிமற்றரிப்புச்சீற்றம்
செறித்திடுங்கலாங்கதங்கள்செயிரொன்பான்கோபத்தின்பேர்
கறுப்பொடுசிவப்பேபோதக்கன்றலேபுழுங்கல்சீறிக்
குறித்திடும்புகைதல்பொங்கிக்கொதித்தல்கோபக்குறிப்பாம். (சுஉ)

குருத்தமுன்கோபம்வெம்பல்கொந்தலேகனிதல்கோம்பல்
பெருத்தகோபம்விடைத்தல்பெருகியமுனைதல்சீறல்
உருத்தலேயுலறல்காய்தலுடற்றறீவிரமுமாகும்
தரித்திடும்வயிரஞ்செற்றஞ்சலம்பவந்தொந்தம்வேரம். (சுங)

உயவனுக்கங்கவற்சியுயங்குதல்கசிவணங்கே
அயர் * வொடுநொசிவேநோவேயாய்வொடுமிறைசமழ்த்தல்
வயாவொடாகுலமழுங்கல்வருத்தமூவைந்தும்வைக்கும்
வியன்மிகுமேற்றஞெள்ளல்சாலூரமேதைமேன்மை. (சுச)

வீற்றெறுவிகிர்தம்பின்னம்விபரீதம்விரூபம்விள்ளல்
வேற்றுமைதிரிபுபேதம்விகடமீரைந்துந்தானே
ஏற்றியவேறுபாட்டுக்கியம்பியநாமமாகும்
போற்றியதனிமையேகம்புலம்புகேவலமுமாமே. (சுரு)

இருளுணராமைமத்தமிளமைமாழாத்தல்பித்தம்
வெருள்களிகழுமன்மோகமேவுமுன்மத்தமாழ்கல்
கருதியவனந்தரேமங்களன்பேதுமையன்மைந்து
மருண்மறன்மான்றன்மூவேழ்மயக்கமாமயர்வுமப்பேர். (சுசு)

தீங்குகோளந்தராயஞ்செப்புவிக்கினமுட்டுப்பா
டோங்கியவலாபந்தட்டேயூறெயந்தரமுந்தீதாம்
ஆங்குளவலைசலாஞ்சியழுங்கலேமடியேஞொள்கல்
தூங்கலேயசைவேமந்தஞ்சோகமாலசியஞ்சோம்பாம். (சுஎ)

குடிலம்புள்ளுவமேகூடங்குத்திரமாயைகுய்யம்
படிறுசாட்டியமேவஞ்சம்பட்டிமைதானுமப்பேர்
செடிசீத்தைசிதம்பிரேணுடுசீரணங்குணமின்மைப்பேர்
மிடிதருந்தாமதப்பேர்விளம்பனம்விளம்பந்தாமே. (சுஅ)

* அயா என்றும் கூறுவர்.



வறுமையின்பெயர்=குறை, இலம்பாடு, மிச்சை, குறுவாழ்க்கை, மிடி, நிரப்பு, சிறுமை, ஒற்கம், இன்மை, நல்குரவு, அல்கல், தரித்திரம். கஉ. பகையின்பெயர்=மறல், இகல், முனை, முரண், தா, மடி, தெவ், அரி. அ

கோபத்தின்பெயர்=வெறுத்தல், சினம், குரோதம், வெகுளி, அரிப்பு, சீற்றம், கலாம், கதம், செயிர். கூ
கோபக்குறிப்பின்பெயர்=கறுப்பு, சிவப்பு, கன்றல், புழுங்கல், புகைதல், கொதித்தல். சு

முன் கோபத்தின்பெயர்=வெம்பல், கொந்தல், கனிதல், கோம்பல். ச. பெருங்கோபத்தின்பெயர்=விடைத்தல், முனைதல், சீறல், உருத்தல், உலறல், காய்தல், உடற்றல், தீவிரம். அ
* வைரத்தின்பெயர்=செற்றம், சலம், பவம், தொந்தம், வேரம். ரு

வருத்தத்தின்பெயர்=உயவு, அணுக்கம், கவற்சி, உயங்குதல், கசிவு, அணங்கு, அயர்வு, நொசிவு, நோ, ஆய்வு, மிறை, சமழ்த்தல், வயாவு, ஆகுலம், அழுங்கல். கரு
மேன்மையின்பெயர்=ஏற்றம், ஞெள்ளல், சாலூரம், மேதை. ச

வேறுபாட்டின்பெயர்=வீற்று, விகிர்தம், பின்னம், விபரீதம், விரூபம், விள்ளல், வேற்றுமை, திரிபு, பேதம், விகடம். க0
தனிமையின்பெயர்=ஏகம், புலம்பு, கேவலம். ங

மயக்கத்தின்பெயர்=இருள், உணராமை, மத்தம், இளமை, மாழாத்தல், பித்தம், வெருள், களி, கழுமல், மோகம், உன்மத்தம், மாழ்கல், அனந்தர், ஏமம், களன், பேது, மையல், மைந்து, மருள், மறல், மான்றல், மயர்வு. உஉ

தீதின்பெயர்=தீங்கு, கோள், அந்தராயம், விக்கினம், முட்டுப்பாடு, அலாபம், தட்டு, ஊறு, அந்தரம். கூ
சோம்பின்பெயர்=அலைசல், ஆஞ்சி, அழுங்கல், மடி, ஞொள்கல், தூங்கல், அசைவு, மந்தம், சோகம், ஆலசியம். க0

வஞ்சத்தின்பெயர்=குடிலம், புள்ளுவம், கூடம், குத்திரம், மாயை, குய்யம், படிறு, சாட்டியம், பட்டிமை. கூ
குணமின்மையின்பெயர்=செடி, சீத்தை, சிதம்பு, சீரணம். ச
தாமதத்தின்பெயர்=விளம்பனம், விளம்பம். உ

* வைரம் - நெடுங்காலமாக நிகழுங்கோபம்.

இழிவொடுதிரிதனந்தலிறுதலேமுறிதல்கந்தல்
வழுகயஞ்சிதைவழுங்கன்மடிசுதங்கேடாநிந்தை
இழிவெள்ளனகலொல்லாமையிகழ்ச்சியாமுவர்ப்புமப்பேர்
குழைவுறுவருவருப்புக்குற்சிதம்பயிர்ப்புமாமே. (சுகூ)

மறமகங்கலுடம்பங்கம்வருஞ்செடிதுரிதம்பாவம்
வறிதுகொன்வீண்விருதாமன்னியபயனிலாமை
அறைதருசந்தேகப்பேரயிர்ப்பையங்கடுத்தல்சங்கை
கறையிலோர்தலைக்காமப்பேர்கைக்கிளையாகுமென்ப. (எ௦)

சிறந்திடுஞ்சன்மந்தோற்றஞ்செனனமேபவஞ்சனிப்புப்
பிறந்தையுற்பவமென்றேழும்பிறப்பாமுற்பத்தியும்பேர்
அறைந்தசூதகமாசௌசம்புனிறேயீன்றணிமையின்பேர்
துறந்தவாலாமைபூப்புத்தோகைமார்தொடாப்பொருட்டே. (எக)

அன்றோவோடந்தோவாவோவத்தோவோடச்சோவையோ
என்னேயெற்றெவனெனுஞ்சொலதிசயமுறவிரங்கல்
மன்னுமௌவியமேயென்பமனக்கோட்டமழுக்காற்றின்பேர்
சொன்னநோனமைகூரஞ்சூழ்ந்திடும்பொறாமையும்பேர். (எஉ)

அல்லலேயலக்கண்மம்மராரந்தைகோட்டாலைபீழை
செல்லல்கேதங்கலக்கஞ்சிறுமைசூருறுகண்புன்கண்
சொல்லுமிட்டளமின்னாவே துனிபருவரலே துக்கம்
ஒல்லுநோவழுங்கல்பீடையுலமரலல்லகண்டம். (எங)

கவ்வையாதனைபழங்கண்கையாறுநடலைபையுள்
எவ்வமேதம்வெறுப்பேயிடும்பையேயிடுக்கணின்னல்
வவ்வியபடர்பணித்தல்வறுமைவெய்துறலேபைதல்
வெவ்வியகவலைதீயவிழுமமாறேழுந்துன்பம். (எச)

மாதர்நச்சிச்சையேடைவயாநம்புநசைநயப்புக்
காதல்வெப்பம்விருப்பங்காமமேயிராகம்பற்றே
ஆதரம்பெட்புவேட்கையார்வமேமேவல்வெஃகல்
ஓதியவிழைவுமூவேழுறுபெயராசையாமே. (எரு)

சூழ்தருமோகநம்பல்சொற்றிடுமிரதிவெஃகல்
தாழ்தலேகவர்தல்பெட்டல்சார்புடனிவறல்வேண்டல்
வீழ்தல்வேணவாவீராறும்வேட்கையின்பெருக்கமென்ப
மாழ்கியவிரகங்காமமதனமேகாமநோயாம். (எசு)



கேட்டின்பெயர்=இழிவு, திரிதல், நந்தல், இறுதல், முறிதல், கந்தல், வழு, கயம், சிதைவு, அழுங்கல், மடி, சுதம். கஉ
இகழ்ச்சியின்பெயர்=நிந்தை, இழிவு, எள்ளல், நகல், ஒல்லாமை, உவர்ப்பு. சு. அருவருப்பின்பெயர்=குற்சிதம், பயிர்ப்பு. உ

பாவத்தின்பெயர்=மறம், அகம், கலுடம், பங்கம், செடி, துரிதம். சு
பயனிலாமையின்பெயர்=வறிது, கொன், வீண், விருதா. ச
சந்தேகத்தின்பெயர்=அயிர்ப்பு, ஐயம், கடுத்தல், சங்கை. ச
ஒருதலைக்காமத்தின்பெயர்=கைக்கிளை. க

பிறப்பின்பெயர்=சன்மம், தோற்றம், செனனம், பவம், சனிப்பு, பிறந்தை, உற்பவம், உற்பத்தி. அ
சூதகத்தின்பெயர்=ஆசௌசம். க
ஈன்றணிமையின்பெயர்=புனிறு. க
தோகைமார்தொடாப்பொருட்டின்பெயர்=வாலாமை, பூப்பு. உ

அதிசயமுறவிரங்கலின்பெயர்=அன்றோ, அந்தோ, ஆ, ஓ, அத்தோ, அச்சோ, ஐயோ, என்னே, எற்று, எவன். க௦
மனக்கோட்டத்தின்பெயர்=ஔவியம். க
அழுக்காற்றின்பெயர்=நோனமை, கூரம், பொறாமை. ங

துன்பத்தின்பெயர்=அல்லல், அலக்கண், மம்மர், அரந்தை, கோட்டாலை, பீழை, செல்லல், கேதம், கலக்கம், சிறுமை, சூர், உறுகண், புன்கண், இட்டளம், இன்னா, துனி, பருவரல், துக்கம், நோ, அழுங்கல், பீடை, உலமரல், அல்லகண்டம். உங

கவ்வை, யாதனை, பழங்கண், கையாறு, நடலை, பையுள், எவ்வம், ஏதம், வெறுப்பு, இடும்பை, இடுக்கண், இன்னல், படர், பணித்தல், வறுமை, வெய்துறல், பைதல், கவலை, விழுமம். ககூ. (ஆக சஉ.)

ஆசையின்பெயர்=மாதர், நச்சு, இச்சை, ஏடை, வயா, நம்பு, நசை நயப்பு, காதல், வெப்பம், விரும்பம், காமம், இராகம், பற்று, ஆதரம், பெட்பு, வேட்கை, ஆர்வம், மேவல், வெஃகல், விழைவு. உக

வேட்கைப்பெருக்கத்தின்பெயர்=மோகம், நம்பல், இரதி, வெஃகல் தாழ்தல், கவர்தல், பெட்டல், சார்பு, இவறல், வேண்டல், வீழ்தல், வேணவா. கஉ
காமநோயின்பெயர்=விரகம், காமம், மதனம். ங

மாரியாமயமேபுன்கண்மடிநிழன்மடங்கல்பையுள்
சூர்பிணியுரோகங்குந்தஞ்சூழணங்கீராறுந்நோய்
பாரியவாதைபீதிவேதனைபண்ணுநோயாம்
ஒரும்யாதனைகொல்லாநோன்புறூருறுநரகநோயே. (எஎ)

அன்னவேயனையசேத்தேயாங்கொப்பப்புரையப்போல
என்னவேபொருவவெள்ளவிகலவேகடுப்பமானச்
சொன்னகேழ்தகவுதூக்குத்துணையிணைநிகரநேர
மன்னும்வீழ்வுறழவற்றேமலைவெண்மூன்றுவமைப்பேரே. (எஅ)

மாலைநீர்தகவுபெற்றிமரபொடுகிழமைவண்மை
சால்பொடுதகுதிபான்மைதகைமையேயியல்புதன்மை
பால்விதிகொள்கைபண்புபடிமுறைபரிசிவ்வெல்லாம்
கோலமார்குணநாலைந்தாங்குணநிறமிரண்டும்பண்பாம். (எகூ)

கையொழியாமைகைதூவாமையாங்கையொழுக்கம்
கையறல்செயலறற்பேர்கையடையடைக்கலப்பேர்
மையிலாவுரிமையின்பேர்வருகெழுதகைமையோடு
பொய்யிலாக்கிழமைமற்றையுரித்தெனப்புகலலாமே. (அ0)

தொடியொருபலமாங்கஃசுசொற்றகாற்பலமாந்தூக்கு
நெடியகாத்துலாங்களென்பநிறைநூறுபலமேயாகும்
படியிலொன்றேகமென்பபத்தென்பதசமாநூறு
நொடிதரிச்சதமென்றூகுமாயிரநூற்றுப்பத்தே. (அக)

தேங்கியபுகழான்குன்றைக்குணபத்திரன்றிருத்தாள்போற்றி
வீங்குநீர்ப்பழனஞ்சூழ்ந்தவீரைமண்டலவன்செய்தான்
பாங்கினுல்விளங்குபண்புபற்றியபெயரினீட்டம்
ஓங்கியகவிதையெண்ணிலொன்பதிற்றென்பதொன்றே. (அஉ)

பண்புபற்றியபெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆ விருத்தம் - சுகச.



நோயின்பெயர்=மாரி, ஆமயம், புன்கண், மடி. நிழல், மடங்கல், பையுள், சூர், பிணி, உரோகம், குந்தம், அணங்கு. கஉ
வேதனைபண்ணுநோயின்பெயர்=வாதை, பீதி. உ
நரகநோயின்பெயர்=யாதனை. க

உவமையின்பெயர்=அன்ன, அனைய, சேத்து, ஆங்கு, ஒப்ப, புரைய, போல, என்ன, பொருவ, எள்ள, இகல, கடுப்ப, மான, கேழ், தகவு, தூக்கு, துணை, இணை, நிகர, நேர, வீழ்வு, உறழ, அற்று, மலைவு. உச

குணத்தின்பெயர்=மாலை, நீர், தகவு, பெற்றி, மரபு, கிழமை, வண்மை, சால்பு, தகுதி, பான்மை, தகைமை, இயல்பு, தன்மை, பால், விதி, கொள்கை, பண்பு, படி, முறை, பரிசு. உ0
பண்பின்பெயர்=குணம், நிறம். உ

கையொழியாமையின்பெயர்=கைதூவாமை. க
ஒழுக்கத்தின்பெயர்=கை. க. செயலறலின்பெயர்=கையறல். க
அடைக்கலத்தின்பெயர்=கையடை. க
உரிமையின்பெயர்=கெழுதகைமை, கிழமை, உரித்து. ங

ஒருபலத்தின்பெயர்=தொடி. க. காற்பலத்தின்பெயர்=கஃசு. க
தூக்கின்பெயர்=கா, துலாம். உ
நூறுபலத்தின்பெயர்=நிறை. க. ஒன்றன்பெயர்=ஏகம். க
பத்தின்பெயர்=தசம். க. நூற்றின்பெயர்=சதம். [illegible]
ஆயிரத்தின்பெயர்=நூற்றுப்பத்து. [illegible]

ஒன்பதாவது

# செயல்பற்றிய பெயர்த்தொகுதி.

## காப்பு.

வியன்மிக்கவைரத்தால்வேர்வீழ்த்துப்பொற்கவடுகொண்டு
மயமிக்கமரகதத்தால்வண்டழைபொதுளிப்பூந்தொத்
தியலுற்றபதுமராகமெதிர்பிண்டியிறைதாள்போற்றிச்
செயல்பற்றும்பெயர்க்கூட்டத்தைச்செப்புவமிப்பாற்கேண்மின். ()

செயல்விதிகருமங்கன்மஞ்செய்தொழில்வினையுமப்பேர்
அயர்தலேவனைதலாற்றல்குயிறலோடிழைத்தல்செய்தல்
நியமித்தல்விதித்தன்மற்றுநிருமித்தலொடுசிட்டித்தல்
பயனுறப்படைத்தலோடுபாரித்தல்பிறப்பித்தற்பேர். (உ)

தொடலையுண்டாட்டுப்பொய்தல்சூழ்விலாசனையேவண்டல்
கெடவரல்பண்ணையுப்புக்கிரீடையேகேளியோரை
புடைமுலையாராடற்பேர்பொழுதுபோக்கேவிநோதம்
படிபாராட்டுதல்குலாவல்பரிந்துகொண்டாடன்மெச்சல். (ங)

வதுவைகைப்பற்றலேதீவலஞ்செய்தன்மணங்கல்யாணம்
விதியுளிவேட்டன்மன்றல்விவாகமெண்பேர்விளங்கும்
புதுவிழாமுருகுசாறுபுத்தேளுற்சவமாஞ்சேறு
துதைமலர்கொண்டுபோற்றுந்துணங்கறலிரண்டுமப்பேர். (ச)

புனைதல்கைசெய்தல்வேய்தல்பொற்புடனலங்கரித்தல்
வனைதலேயணிதல்பூசன்மண்ணலொப்பனையொன்பானும்
வனமலர்மிலைதல்வேய்தன்மலைதல்சூடுதலிம்முப்பேர்
சினைமலரடைச்சலோடுசெருகுதல்சொருகுதற்பேர். (ரு)

அருந்திடறுய்த்தன்மாந்தலயிறலேயமுதுசெய்தல்
பொருந்தவேதாங்கைதொட்டல்புசித்தல்போசனமேயார்தல்
பரிந்தனர்நுகர்தறின்றல்பாரணமிசைதறுற்றல்
இருந்துணற்பேர்விழுங்கலிசைதருநொண்டனுங்கல். (சு)

## பெயர்ப்பிரிவு.

இ - ள். வியன் மிக்க வைரத்தால் வேர் வீழ்த்து - அதிசயம் மிகுந்த வச்சிரத்தினால் வேரோட்டி,—பொற்கவடு கொண்டு - பொன்னாலாகிய கொம்புகளைப் பொருந்தி,—மயம் மிக்க மரகதத்தால் வண் தழை பொதுளி - அழகு மிகுந்த மரகதத்தினால் அழகிய இலைகள் தழைக்கப்பெற்று,—இயல் உற்ற பதுமராகப் பூந்தொத்து எதிர் பிண்டி இறை தாள் போற்றி - குணம் பொருந்திய பதுமராகத்தாலாகிய மலர்த்திரள்கள் தோன்றப்பெறுகின்ற அசோகமரத்தினிழலின்கண் வீற்றிருந்த கடவுளுடைய பாதங்களைத் துதித்து,—இப்பால் செயல் பற்றும் பெயர்க்கூட்டத்தைச் செப்புவம் - இனிச் செயல்பற்றிய பெயர்த்தொகுதியை (யாம்) கூறுவோம்,—கேண்மின் - கேளுங்கள், எ - று.

செய்தொழிலின்பெயர் = செயல், விதி, கருமம், கன்மம், வினை. ரு
செய்தலின்பெயர் = அயர்தல், வனைதல், ஆற்றல், குயிறல், இழைத்தல். ரு
பிறப்பித்தலின்பெயர் = நியமித்தல், விதித்தல், நிருமித்தல், சிட்டித்தல், படைத்தல், பாரித்தல். சு

மகளிர்விளையாட்டின்பெயர் = தொடலை, உண்டாட்டு, பொய்தல், விலாசனை, வண்டல், கெடவரல், பண்ணை, உப்பு, கிரீடை, கேளி, ஓரை. கக
பொழுதுபோக்கலின்பெயர் = விநோதம். க
மெச்சலின்பெயர் = பாராட்டுதல், குலாவல், கொண்டாடல். ங

விவாகத்தின்பெயர் = வதுவை, கைப்பற்றல், தீவலஞ்செய்தல், மணம், கல்யாணம், விதியுளி, வேட்டல், மன்றல். அ
உற்சவத்தின்பெயர் = விழா, முருகு, சாறு, சேறு, துணங்கறல். ரு

ஒப்பனையின்பெயர் = புனைதல், கைசெய்தல், வேய்தல், பொற்பு, அலங்கரித்தல், வனைதல், அணிதல், பூசல், மண்ணல். கூ
சூடுதலின்பெயர் = மிலைதல், வேய்தல், மலைதல். ங
சொருகுதலின்பெயர் = அடைச்சல், செருகுதல். உ

உண்ணலின்பெயர் = அருந்திடல், துய்த்தல், மாந்தல், அயிறல், அமுதுசெய்தல், கைதொட்டல், புசித்தல், போசனம், ஆர்தல், நுகர்தல், தின்றல், பாரணம், மிசைதல், துற்றல். கச
விழுங்கலின்பெயர் = நொண்டல், நுங்கல். உ

துயிலல்கண்வளர்தல்பள்ளிதுயிறலேயுறங்கறுஞ்சல்
பயிலுங்கண்படையனந்தர்படைகனவோடுபத்தும்
இயலுநித்திரையாந்தூங்கலென்பதுநிரம்பாத்தூக்கம்
அயலவரெடுத்தலெற்றலாங்கவையெழுப்பலாமே. (௭)

விரவியவழுதலின்பேர்விம்மலேகலுழ்கலக்கம்
பொருமுதல்கசிவேயேங்கலுரோதனமிரங்கலெட்டாம்
தெரிசனம்பார்வைநோக்கஞ்சிறப்பிற்கண்ணுறல்காண்டற்பேர்
அருமையிற்சிறக்கணித்தலபாங்கமேகடைக்கணித்தல். (௮)

புரவுதானம்பகுத்தல்பொழிதலேயுதவனீட்டல்
விரவுபகாரம்வேள்விவிதரணங்கவிகைவண்மை
அருளல்வேளாண்மையீகையளித்தலேயுதாரம்வீசல்
தருதலிஞெடுதியாகம்கொடைகடப்பாடுஞ்சாற்றும். (௯)

படைமயக்குற்றபோதும்படைமடமொன்றிலாதான்
மடைசெறிகடகத்தோளான்மதிக்குடைமன்னர்மன்னன்
கெடிமன்னர்வணங்குந்தாளான்கிருட்டிணராயன்கைபோற்
கொடைமடமென்றுசொல்பவரையாதுகொடுத்தலாமே. (௧௦)

போற்றியபயிக்கம்பாகம்பொருந்தியபலியேபிண்டம்
சாற்றியபிடிதமையஞ்சரிதையேழ்பிச்சையின்பேர்
ஏற்றலேகுறைகோள்பின்சென்றிரததலேவேண்டலும்பேர்
மாற்றலேகரத்தலாகுமறுத்தலுநிறுத்தலும்பேர். (௧௧)

தெரித்தலேவரைதலோடுதீட்டுதல்பொறித்தல்கீறல்
வரித்தலேயெழுதுதற்பேர்வரிபொறிகணக்கிரேகை
விரித்தவர்க்கரமெழுத்தாம்விரகொடுசிதைத்தறேய்த்தல்
அரக்குதல்கீழ்தலும்பேரடைவேதூய்தாக்கல்சீத்தல். (௧௨)

அர்ச்சனைவழிபாடேயாராதனைமூன்றும்பூசை
எச்சமேகிரதுவேள்வியிட்டியேயசனமோமம்
மெச்சியமகமேயூபம்விதியுளியாகமாகும்
நிச்சயமீதூரற்பேரிடங்கழிநெருங்கலும்பேர். (௧௩)

வியர்த்தலேசுவேதம்வேர்வாங்கசிவுமாமயாவுயிர்த்தல் *
மயக்கறவருத்தந்தீர்தல்வடுப்படல்கதுவாயாமே
உயிர்த்தலேவிடுதலென்பவொருங்கென்பவடங்கருனே
கயக்குச்சோர்வாம்பிறக்குக்காட்டியவழுவின்பேரே. (௧௪)

* அயர்வுயிர்த்தல் என்றும் கூறுவர்.



நித்திரையின்பெயர் = துயிலல், கண்வளர்தல், பள்ளி, துயிறல், உறங்கல், துஞ்சல், கண்படை, * அனந்தர், படை, கனவு. ௧௦
நிரம்பாத்தூக்கத்தின்பெயர் = தூங்கல். ௧
எழுப்பலின்பெயர் = எடுத்தல், எற்றல். ௨

அழுதலின்பெயர் = விம்மல், கலுழ், கலக்கம், பொருமுதல், கசிவு, ஏங்கல், உரோதனம், இரங்கல். ௮
காண்டலின்பெயர் = தெரிசனம், பார்வை, நோக்கம், கண்ணுறல். ௪
கடைக்கணித்தலின்பெயர் = சிறக்கணித்தல், அபாங்கம். ௨

கொடையின்பெயர் = புரவு, தானம், பகுத்தல், பொழிதல், உதவல், நீட்டல், உபகாரம், வேள்வி, விதரணம், கவிகை, வண்மை, அருளல், வேளாண்மை, ஈகை, அளித்தல், உதாரம், வீசல், தருதல், தியாகம், கடப்பாடு. ௨௦

வரையாதுகொடுத்தலின்பெயர் = கொடைமடம். ௧

பிச்சையின்பெயர் = பயிக்கம், பாகம், பலி, பிண்டம், பிடிதம், ஐயம், சரிதை. ௭
இரத்தலின்பெயர் = ஏற்றல், குறைகோள், வேண்டல். ௩
கரத்தலின்பெயர் = மாற்றல், மறுத்தல், நிறுத்தல். ௩

எழுதுதலின்பெயர் = தெரித்தல், வரைதல், தீட்டுதல், பொறித்தல், கீறல், வரித்தல். ௬
எழுத்தின்பெயர் = வரி, பொறி, கணக்கு, இரேகை, அக்கரம். ௫
அரக்குதலின்பெயர் = சிதைத்தல், தேய்த்தல், கீழ்தல். ௩
தூய்தாக்கலின்பெயர் = சீத்தல். ௧

பூசையின்பெயர் = அர்ச்சனை, வழிபாடு, ஆராதனை. ௩
யாகத்தின்பெயர் = எச்சம், கிரது, வேள்வி, இட்டி, யசனம், ஓமம், மகம், யூபம், விதியுளி. ௯
மீதூரலின்பெயர் = இடங்கழி, நெருங்கல். ௨

வேர்வின்பெயர் = வியர்த்தல், சுவேதம், கசிவு. ௩. வருத்தந்தீர்தலின் பெயர் = அயாவுயிர்த்தல். ௧. வடுப்படலின்பெயர் = கதுவாய். ௧
விடுதலின்பெயர் = உயிர்த்தல். ௧. அடங்கலின்பெயர் = ஒருங்கு. ௧
சோர்வின்பெயர் = கயக்கு. ௧. வழுவின்பெயர் = பிறக்கு. ௧

* அனந்தலெனினுமமையும்.

மூடுதல்கவித்தன்மூய்தன் முடியவேபரத்தலூர்தல்
நீடியநானமென்பநிகழ்த்துமஞ்சனத்திஞமம்
ஆடலேபடிதறோய்தலாமிவைகுளித்தலென்ப
பீடறப்பிறகிடற்பேர்பிறக்கிடல்பின்றலாமே. (கரு)

முடக்கமேமடங்கல்குத்திமுணங்கொடுநொறிலொடுக்கம்
அடக்கமாம்வதிதல்வைகலல்கலேயிறுத்தறாழ்தல்
விடுத்தலாறுந்தங்கற்பேர்வசித்தலோடிறையுமப்பேர்
ஒடுக்கமேபதுங்கல்பாந்தலுரைத்தலேயுரிஞ்சறேய்த்தல். (கசு)

மெலிவின்மைதுனம்புணர்ச்சிவிழைச்சொடுவிழைவுதல்லே
கலவியேகிரீடையாடல்காதலோர்கூட்டமெண்பேர்
புலவியேபுலத்தலென்பவூடலுமதன்பொருட்டே
நலமிகுதுனியெனுஞ்சொனுட்டியபுலவிநீட்டம். (கஎ)

கூடியுங்கூட்டமின்மைகுலவியபுலவியென்ப
ஊடலேநணுகாராகியுரைமறுத்திருத்தலாகும்
ஆடவர்நீங்கவுள்ளேயடைத்துறறுனியேயென்பர்
ஊடலைத்தீர்த்தலின்பேருணர்த்தலேயொல்லலாகும். (கஅ)

வந்தனம்பணிதல்காணல்வழிபடல்பணிவிறைஞ்சல்
தந்தலைவணங்கல்பார்த்தறாழ்தலொன்பானுந்தண்டன்
முந்தியதழுவல்விள்ளன்முயங்கலாலிங்கனப்பேர்
அந்தமாத்தொழல்கைகூப்பலஞ்சலிகும்பிடற்பேர். (ககூ)

துஞ்சலேவீடன்மாளல்சொற்றிடும்விளிவுவீவு
முஞ்சலேயுலத்தல்பொன்றன்முடிதலேதுவன்றன்மாய்தல்
எஞ்சியமரணம்வியோகமில்லெனல்கழிவிறத்தல்
அஞ்சியதபுதல்சாவினபிதானம்பன்னேழாமே. (உ௦)

பரிதலேஞெமிர்தல்பற்றுதொடிதலேயிடிதல்சால
முரிதலேயிறுதலாறுமுறிதலேயொசிதலும்பேர்
இரிதலேநெரிதல்சோரலிடைதலேயுடைதலோடு
சரிதலேகெடுதலேழுஞ்சாய்தலினுமமாமே. (உக)

ஒசித்தலேயசைத்தல்கோடலொடித்தலேமுறித்தலின்பேர்
இசித்தலேஞெமிர்த்தலோடேயிறுத்தலுமதன்பேரென்ப
ஒசிந்திடலசைதல்சாய்ந்தேயுவளலுந்துவளலாமே
இசைப்பின்பேர்புணர்ச்சிமற்றையிசைவுமாமியைபுமாமே. (உஉ)



மூடுதலின்பெயர் = கவித்தல், மூய்தல். உ
பரத்தலின்பெயர் = ஊர்தல். க. மஞ்சனத்தின்பெயர் = நானம். க
குளித்தலின்பெயர் = ஆடல், படிதல், தோய்தல். ங
பிறகிடலின்பெயர் = பிறக்கிடல், பின்றல். உ

அடக்கத்தின்பெயர் = முடக்கம், மடங்கல், குத்தி, முணங்கு, நொறில், ஒடுக்கம். சு
தங்கலின்பெயர் = வதிதல், வைகல், அல்கல், இறுத்தல், தாழ்தல், விடுத்தல், வசித்தல், இறை. அ. பாந்தலின்பெயர் = ஒடுக்கம், பதுங்கல். உ. தேய்த்தலின்பெயர் = உரைத்தல், உரிஞ்சல். உ

காதலோர்கூட்டத்தின்பெயர் = மைதுனம், புணர்ச்சி, விழைச்சு, விழைவு, தல், கலவி, கிரீடை, ஆடல். அ
புலத்தலின்பெயர் = புலவி, ஊடல். உ
புலவிநீட்டத்தின்பெயர் = துனி. க

கூடியுங்கூட்டமின்மையின்பெயர் = புலவி. க
நணுகாராகியுரைமறுத்திருத்தலின்பெயர் = ஊடல். க
ஆடவர்நீங்கவுள்ளேயடைத்திருத்தலின்பெயர் = துனி. க
ஊடலைத்தீர்த்தலின்பெயர் = உணர்த்தல், ஒல்லல். உ

தண்டனிடலின்பெயர் = வந்தனம், பணிதல், காணல், வழிபடல், பணிவு, இறைஞ்சல், வணங்கல், பார்த்தல், தாழ்தல். கூ
ஆலிங்கனத்தின்பெயர் = தழுவல், விள்ளல், முயங்கல். ங
கும்பிடலின்பெயர் = தொழல், கைகூப்பல், அஞ்சலி. ங

சாவின்பெயர் = துஞ்சல், வீடல், மாளல், விளிவு, வீவு, முஞ்சல், உலத்தல், பொன்றல், முடிதல், துவன்றல், மாய்தல், மரணம், வியோகம், இல்லெனல், கழிவு, இறத்தல், தபுதல். கஎ

முறிதலின்பெயர் = பரிதல், ஞெமிர்தல், ஒடிதல், இடிதல், முரிதல், இறுதல், ஒசிதல். எ
சாய்தலின்பெயர் = இரிதல், நெரிதல், சோரல், இடைதல், உடைதல், சரிதல், கெடுதல். எ

முறித்தலின்பெயர் = ஒசித்தல், அசைத்தல், கோடல், ஒடித்தல், இசித்தல், ஞெமிர்த்தல், இறுத்தல். எ
துவளலின்பெயர் = ஒசிந்திடல், அசைதல், உவளல், ங
இசைப்பின்பெயர் = புணர்ச்சி, இசைவு, இயைபு. ங

வசப்படவலித்தல்சூழ்தல்வளாகமும்வளைத்தன்மூப்பேர்
இசைத்திடிற்பிடித்தலின்பேர்தொடல்பற்றலிருபேராகும்
விசித்தலேதொடுத்தல்பந்தம்வீக்குதல்சிமிழ்த்தல்யாப்பே
அசைத்தலேபிணித்தலார்த்தலொன்பதுங்கட்டலாமே. (௨௩)

அரிதலின்பேர்சேதித்தலறுத்திடல்விடுவாய்செய்தல்
விரிவுறச்சூலல்கொய்தல்விதியுளியீர்தலாறும்
பரிதல்கண்டித்தலோடுபகுத்திடறடிதலெற்றல்
தரமுறத்துமித்தலாறும்வெட்டலாந்தறித்தலும்பேர். (௨௪)

கீறலேகீளல்கீண்டல்கிழித்திடல்கீன்றல்கீழ்தல்
பீறலாறும்பேர்மற்றுப்பிளிறலேஞெண்டல்கிண்டல்
மாறிடக்கிளைத்தன்மூப்பேர்வரன்றறெள்ளுதல்கொழித்தல்
ஆறலைவழிப்பறித்தலதர்கோளுமப்பேராமே. (௨௫)

கட்டலேகளைதல்குற்றல்பறித்தல்கத்தரித்தல்கொய்தல்
குட்டலேதகர்த்தலாகுமுடைத்தலுங்கூறுமப்பேர்
தொட்டலேயகழ்தலோடுதொடுதலேதோண்டுதலின்பேராம்
தட்டல்வாரித்தலாணைதகைதலேதடுத்தலின்பேர். (௨௬)

அடுத்ததுப்புரவுந்துவ்வுமைம்பொறிநுகர்வவாகும்
விடுத்தன்மோசனமேமோக்கம்வீதமாந்தீர்தலும்பேர்
அடுக்குதற்பேரேயேற்றலாமோவலொழிதலென்ப
நடுக்குறத்தாழ்தலின்பேர்குரங்குதல்குனிவுநாட்டும். (௨௭)

வலத்தலேநிணத்தலென்பமுடைதலாமாற்றலின்பேர்
விலக்கலாமிசையின்பேரேமீமிசையாந்தாபித்தல்
நிலைப்படச்செய்தலின்பேர்நிறுத்தலேநோன்றலென்ப
சொலித்திடலிடத்தலாகுந்துவர்தலேவகிர்தலென்ப. (௨௮)

சிதர்த்தலேயுகுத்தலூவல்சிந்தலேயுளர்தலும்பேர்
எதிர்த்துவீசுதலேயோச்சல்செலவிடலெறிதன்மூப்பேர்
இதத்தொடுபொருத்தன்மாட்டலிருபெயர்மூட்டலென்ப
நதுத்தலேநொதுத்தலோடுநவித்தலுமவித்தற்பேரே. (௨௯)

புடைத்தலேயெறிதலெற்றல்பொத்தெனக்குத்தன்மூப்பேர்
அடித்தலேகொட்டன்மொத்தலறைதலேயகைத்தலெற்றல்
பிடித்தனரதுக்கன்மோதல்பேசியவழுக்கலென்ப
வடித்தலேவசமாக்கற்பேர்மழித்தன்முண்டிதமேயாக்கல். (௩௦)



வளைத்தலின்பெயர்=வலித்தல், சூழ்தல், வளாகம். ௩
பிடித்தலின்பெயர்=தொடல், பற்றல். ௨
கட்டலின்பெயர்=விசித்தல், தொடுத்தல், பந்தம், வீக்குதல், சிமிழ்த்தல், யாப்பு, அசைத்தல், பிணித்தல், ஆர்த்தல். ௯

அரிதலின்பெயர்=சேதித்தல், அறுத்திடல், விடுவாய்செய்தல், சூலல், கொய்தல், ஈர்தல். ௬
வெட்டலின்பெயர்=பரிதல், கண்டித்தல், பகுத்திடல், தடிதல், எற்றல், துமித்தல், தறித்தல். ௭

கீறலின்பெயர்=கீளல், கீண்டல், கிழித்திடல், கீன்றல், கீழ்தல், பீறல். ௬
கிளைத்தலின்பெயர்=பிளிறல், ஞெண்டல், கிண்டல். ௩
கொழித்தலின்பெயர்=வரன்றல், தெள்ளுதல். ௨
வழிப்பறித்தலின்பெயர்=ஆறலை, அதர்கோள். ௨

பறித்தலின்பெயர்=கட்டல், களைதல், குற்றல். ௩. கத்தரித்தலின்பெயர்=கொய்தல். ௧. குட்டலின்பெயர்=தகர்த்தல், உடைத்தல். ௨
தோண்டுதலின்பெயர்=தொட்டல், அகழ்தல், தொடுதல். ௩
தடுத்தலின்பெயர்=தட்டல், வாரித்தல், ஆணை, தகைதல் ௪

ஐம்பொறிநுகர்வின்பெயர்=துப்புரவு, துவ்வு. ௨
விடுத்தலின்பெயர்=மோசனம், மோக்கம், வீதம், தீர்தல். ௪
அடுக்குதலின்பெயர்=ஏற்றல். ௧. ஒழிதலின்பெயர்=ஓவல். ௧
தாழ்தலின்பெயர்=குரங்குதல், குனிவு. ௨

முடைதலின்பெயர்=வலத்தல், நிணத்தல். ௨. மாற்றலின்பெயர்=விலக்கல். ௧. மிசையின்பெயர்=மீமிசை. ௧. நிலைப்படச்செய்தலின்பெயர்=தாபித்தல். ௧. நிறுத்தலின்பெயர்=நோன்றல். ௧
சொலித்திடலின்பெயர்=இடத்தல். ௧. வகிர்தலின்பெயர்=துவர்தல். ௧

சிந்தலின்பெயர்=சிதர்த்தல், உகுத்தல், தூவல், உளர்தல். ௪
வீசுதலின்பெயர்=ஓச்சல், செலவிடல், எறிதல். ௩
மூட்டலின்பெயர்=பொருத்தல், மாட்டல். ௨
அவித்தலின்பெயர்=நதுத்தல், நொதுத்தல், நவித்தல். ௩

குத்தலின்பெயர்=புடைத்தல், எறிதல், எற்றல். ௩
அடித்தலின்பெயர்=கொட்டல், மொத்தல், அறைதல், அகைத்தல், எற்றல், அதுக்கல், மோதல், வழுக்கல். ௮. வசமாக்கலின்பெயர்=வடித்தல். ௧. முண்டிதமாக்கலின்பெயர்=மழித்தல். ௧

அளித்தல்பாதீடுபெய்தலாமுப்பேர்செறித்தலென்ப
துளைத்தலின்பேர்திளைத்தல்குயிறலாந்தொள்ளலும்பேர்
வளைத்தலேகவர்தல்வெளவல்வாருதல்கொளலுமாகும்
கிளத்துங்காற்சூறைகொண்டிகேடுறுங்கொள்ளையாமே. (௩௧)

வருடறைவரலேநீவல்வருமுப்பேர்தடவலாகும்
விரியலேபரத்தலென்பவிளம்புபாரித்தலும்பேர்
தெரியவேதோண்டனோண்டல்சேரவேமுகத்தலின்பேர்
சொரிதலேபொழிதறூவறுயல்வரலசைதலின்பேர். (௩௨)

திதிநிலைபெறுத்தனோக்கல்சிறப்பொடுபுரத்தலென்கும்
விதமுடன்காத்தலின்பேர்வேலியேயமஞ்சேமம்
கதவரண்காப்புத்தட்டிகடியெட்டுங்காவற்பேரே
பதமுறவோம்பல்போற்றல்பாதுகாத்தற்பேராகும். (௩௩)

பகுத்தலேபாத்துப்பாகம்பங்கீடுபாதியும்பேர்
இகுத்தலேவிரித்தலின்பேரேற்றிடும்பொதிதல்வீக்கம்
மிகைப்படப்புதைத்தலின்பேர்தணித்தல்சேமித்தலென்ப
திகைக்கவேயவைத்தல்குற்றறெறுதலென்பதுநெரித்தல். (௩௪)

எருக்கல்காதுதல்சவட்டலெற்றுதலொழித்தல்கோறல்
முருக்கல்வீட்டுதல்படுத்தன்முதிர்கொலைசெய்தலொன்பான்
உரைத்தமாரணமுமப்பேரூறுகோளணங்குவேட்டம்
விரித்திடிற்கொலையினற்பேர்வேட்டைபாபத்தியென்ப. (௩௫)

குடமேமெய்கோட்டிக்கையைக்குவித்தலினமர்தானே
ஈடுகியநாடனேடல்கையரிக்கொளலேதேடல்
தொடர்புறுதுருவுமாகுந்துவட்டலேநுடக்கலென்ப
தொடுதலேதிவளலூறுபரிசனந்துவளலும்பேர். (௩௬)

கடத்தலேபடர்தல்சேறல்கழிதலேயிவறலேகல்
விடுத்திடலிறத்தல்போகன்மெல்லெனவழங்கனீங்கல்
தடத்தினிற்செலவேயில்லறணத்தலேயியங்கறீர்தல்
நடத்தலின்பேரீரெட்டாமொதுங்கலுநாட்டுமப்பேர். (௩௭)

மிதித்திடலுகளல்பாய்தல்விரைவுடனேயுறுக்கல்
குதித்தலின்பேரோநான்காங்குப்புறலிதுவுமப்பேர்
கதித்தலேயகைத்தல்பம்பல்கஞறலேபொலிவுபாய்ச்சல்
இதத்துடனொதுக்கலேர்பென்றெட்டுமேயெழுச்சியின்பேர். (௩௮)



செறித்தலின்பெயர் = அளித்தல், பாதீடு, பெய்தல். ௩
துளைத்தலின்பெயர் = திளைத்தல், குயிறல், தொள்ளல். ௩
வாருதலின்பெயர் = வளைத்தல், கவர்தல், வெளவல், கொளல். ௪
கொள்ளையின்பெயர் = சூறை, கொண்டி. ௨

தடவலின்பெயர் = வருடல், தைவரல், நீவல். ௩
பரத்தலின்பெயர் = விரியல், பாரித்தல். ௨
முகத்தலின்பெயர் = தோண்டல், நோண்டல். ௨
தூவலின்பெயர் = சொரிதல், பொழிதல். ௨
அசைதலின்பெயர் = துயல்வரல். ௧

காத்தலின்பெயர் = திதி, நிலைபெறுத்தல், நோக்கல், புரத்தல். ௪
காவலின்பெயர் = வேலி, ஏமம், சேமம், கதவு, அரண், காப்பு, தட்டி, கடி. ௮
பாதுகாத்தலின்பெயர் = ஓம்பல், போற்றல். ௨

பகுத்தலின்பெயர் = பாத்து, பாகம், பங்கீடு, பாதி. ௪
விரித்தலின்பெயர் = இகுத்தல். ௧ பொதிதலின்பெயர் = வீக்கம். ௧
புதைத்தலின்பெயர் = தணித்தல், சேமித்தல். ௨
குற்றலின்பெயர் = அவைத்தல். ௧
நெரித்தலின்பெயர் = தெறுதல். ௧

கொலைசெய்தலின்பெயர் = எருக்கல், காதுதல், சவட்டல், எற்றுதல், ஒழித்தல், கோறல், முருக்கல், வீட்டுதல், படுத்தல், மாரணம். ௧௦
கொலையின்பெயர் = ஊறு, கோள், அணங்கு, வேட்டம். ௪
வேட்டையின்பெயர் = பாபத்தி. ௧

மெய்கோட்டிக்கைகுவித்தலின்பெயர் = குடம். ௧
தேடலின்பெயர் = நாடல், நேடல், கையரிக்கொளல், துருவு. ௪
துவட்டலின்பெயர் = நுடக்கல். ௧
தொடுதலின்பெயர் = திவளல், ஊறு, பரிசனம், துவளல். ௪

நடத்தலின்பெயர் = கடத்தல், படர்தல், சேறல், கழிதல், இவறல், ஏகல், விடுத்திடல், இறத்தல், போகல், வழங்கல், நீங்கல், செலவு, இல்லல், தணத்தல், இயங்கல், தீர்தல், ஒதுங்கல். ௧௭

குதித்தலின்பெயர் = மிதித்திடல், உகளல், பாய்தல், உறுக்கல், குப்புறல். ௫
எழுச்சியின்பெயர் = கதித்தல், அகைத்தல், பம்பல், கஞறல், பொலிவு, பாய்ச்சல், ஒதுக்கல், ஏர்பு. ௮

கடுமையேகதழ்வுவல்லைகதனமேதுரிதமொல்லை
அடைவுளநொறிலென்றேழுங்கடுப்பெனவறையலாகும்
முடுகலேவிசையேதாரைமுந்தியகவனம்வேகம்
சடிதிசீக்கிரமேயீண்டேவிரைவின்பேர்விதுப்புஞ்சாற்றும். (௩௯)

ஐயெனலொடுபொள்ளென்றலானகுத்திரமேசண்டம்
நொய்தென்றல்கதுமென்றிட்டஞொடியினிற்பொருக்கென்றிட்டல்
வெய்தென்றன்ஞெள்ளல்கோரம்விரைவினிற்குறிப்புப்பத்தாம்
மொய்யெனலொடுமெல்லென்றல்பையெனறாழ்த்தன்மந்தம். (௪௦)

தெருமரன்மறுகலோடேயலமரறிரிதல்கொட்கல்
சொரிதலேசூர்த்தலோடுபிரமரிசுழலலெட்டாம்
பரிகரிதாவல்சேறல்பாறுதலோவன்மீளல்
வரிசையிற்றாண்டறத்தல்வாவறாவுதல்கடத்தல். (௪௧)

நீதியிற்பாறலோடனிமிர்தனீளுதலுமப்பேர்
ஆதியேவீதியென்பவிருபெயரிவைநேரோடல்
மாதிசாரிகையேசுற்றுவாளிமண்டலமாவோடல்
ஓதியபவனியொன்றேயுலாப்போதலாகுமென்ப. (௪௨)

மருவுதனண்ணல்சார்தன்மற்றையவணுகல்புல்லல்
அருகுறல்சிவணறுன்னலண்ணலொன்பான்பேர்கிட்டல்
ஒருவுதறுறத்தல்வல்லியுணர்வொடுதணப்புநீங்கல்
வருமுறையுலாவலின்பேர்வழங்கலோடசைதலாமே. (௪௩)

நடவலேயுகைத்தலொய்தனலமொடுதூண்டலூர்தல்
கடவலேயகைத்தலுய்த்தல்கடிதோட்டல்செலுத்தலொன்பான்
உடனுராய்ப்போதலின்பேருரிஞ்சலோடுரோஞ்சலாகும்
படியவேநெகிழ்த்தலொல்கலிருபெயர்குழைவின்பாலாம். (௪௪)

ஆற்றறுத்திடுதறானேயாம்வலியழித்தலின்பேர்
ஆற்றியவழிப்படுத்தற்பெயராற்றுப்படையென்றாகும்
ஏற்றல்போதரலெனுஞ்சொல்லெதிர்கொடுபோதலென்ப
மாற்றியவுழுதலோடுமடித்தலேயுழக்கலாகும். (௪௫)

முரண்வினைசமரேயார்ப்புமொய்தும்பைஞாட்புத்தாக்குச்
செருமறல்காளபங்கள்சினவலேயமர்மலைப்போ
டிரணமாகவநிகர்த்தலிகலேவெஞ்சமமுடன்றல்
பொருதல்சங்கிராமந்தெவ்வுப்பூசலாயோதனம்போர். (௪௬)



கடுப்பின்பெயர் = கடுமை, கதழ்வு, வல்லை, கதனம், துரிதம், ஒல்லை, நொறில். ௭
விரைவின்பெயர் = முடுகல், விசை, தாரை, கவனம், வேகம், சடிதி, சீக்கிரம், ஈண்டு, விதுப்பு. ௯

விரைவுக்குறிப்பின்பெயர் = ஐயெனல், பொள்ளென்றல், குத்திரம். சண்டம், நொய்தென்றல், கதுமென்றிட்டல், பொருக்கென்றிட்டல், வெய்தென்றல், ஞெள்ளல், கோரம். ௧௦
மந்தத்தின்பெயர் = மொய்யெனல், மெல்லென்றல், பையெனல், தாழ்த்தல். ௪

சுழலலின்பெயர் = தெருமரல், மறுகல், அலமரல், திரிதல், கொட்கல், சொரிதல், சூர்த்தல், பிரமரி. ௮
கடத்தலின்பெயர் = பரிகரி, தாவல், சேறல், பாறுதல், ஓவல், தாண்டல், தத்தல், வாவல், தாவுதல். ௧௦

ஓடலின்பெயர் = பாறல், நிமிர்தல், நீளுதல். ௩
நேரோடலின்பெயர் = ஆதி, வீதி. ௨
மண்டலமாவோடலின்பெயர் = மாதி, சாரிகை, சுற்று, வாளி. ௪
உலாப்போதலின்பெயர் = பவனி. ௧

கிட்டலின்பெயர் = மருவுதல், நண்ணல், சார்தல், அணுகல், புல்லல், அருகுறல், சிவணல், துன்னல், அண்ணல். ௯
நீங்கலின்பெயர் = ஒருவுதல், துறத்தல், வல்லி, உணர்வு, தணப்பு. ௫
உலாவலின்பெயர் = வழங்கல், அசைதல். ௨

செலுத்தலின்பெயர் = நடவல், உகைத்தல், ஒய்தல், தூண்டல், ஊர்தல், கடவல், அகைத்தல், உய்த்தல், ஓட்டல். ௯
உராய்ப்போதலின்பெயர் = உரிஞ்சல், உரோஞ்சல். ௨
குழைவின்பெயர் = நெகிழ்தல், ஒல்கல். ௨

வலியழித்தலின்பெயர் = ஆற்றறுத்தல். ௧
வழிப்படுத்தலின்பெயர் = ஆற்றுப்படை. ௧
எதிர்கொடுபோதலின்பெயர் = ஏற்றல், போதரல். ௨
உழக்கலின்பெயர் = உழுதல், மடித்தல். ௨

போரின்பெயர் = முரண், வினை, சமர், ஆர்ப்பு, மொய், தும்பை, ஞாட்பு, தாக்கு, செரு, மறல், காளபம், சினவல், அமர், மலைப்பு, இரணம், ஆகவம், நிகர்த்தல், இகல், சமம், உடன்றல், பொருதல், சங்கிராமம், தெவ்வு, பூசல், ஆயோதனம். ௨௫

முட்டுதலுடனே தாக்கறலைப்படன்முடுகலேற்றல்
இட்டலேயெதிர்தலாகுங்கிடைத்தலுமதன்பேர்தானே
ஒட்டலர்நாடழித்தலுற்றபேர்கொற்றவள்ளை
ஒட்டுநர்மேற்சாராமையுரைத்தபேர்தழிஞ்சியாமே. (௪௭)

நடநட்டநடனம்வாணிநாடகநிருத்தந்தூக்குப்
படிதநாட்டியமேகண்ணுள்பத்துந்தாண்டவமுங்கூத்தாம்
நடையுநட்டணமுமப்பேர்நடித்திடல்பெயர்தலாலல்
அடைவிலேயகவறூங்கலசைவொடாறிவவயாடற்பேர். (௪௮)

பிரமரிவீரட்டானம்பேசிலுப்பிதமலைப்புப்
புரியமேயிலயமற்றும்போற்றுமுள்ளாளனம்மே
காரணமேபாரதமொன்பான்கருதுகூத்தின்விகற்பம்
பருமித்தல்சிரமஞ்செய்தல்பழகலேயுழத்தலென்ப. (௪௯)

கொடுகொட்டிபாண்டரங்கங்கூறுகாபாலமூன்றும்
பொடியணிசிவனிருத்தம்போற்றியபாவைசெய்யாள்
குடமல்லோடல்லியந்தான்கொண்டல்வண்ணன்றன்கூத்தாம்
குடையொடுதுடியிரண்டுங்குமானதாடலாமே (௫௦)

துடியென்பதெழுவர்மாதர்தூங்கலினுமமாகும்
கடையமேயயிராணிக்குகாட்டியநாட்டியப்பேர்
வடிவமைதுர்க்கைதூக்குமற்றதுமரக்காலென்ப
நெடியகாமன்கொண்டாடுநிருத்தமேவிதித்தபேடாம். (௫௧)

அடுத்திடும்வெறிகழங்கோடணங்கிவைவெறியாட்டின்பேர்
தொடுத்தகைகோத்தாடற்பேர்சொல்லியகுரவையென்ப
முடக்கியவிருகைதானும்பழுப்புடைமுறையேயொற்றித்
துடக்கியநடையினுமந்துணங்கையென்றியம்பலாமே. (௫௨)

குடந்தங்கைகூப்பிமெய்யைக்கோப்பொடுகோட்டிநிற்றல் [ம்
குடங்கையைக்குவித்துக்கொட்டல்கொம்மைகொட்டுதலென்றுகு
அடர்ந்துவாய்கையாற்கொட்டலாவலங்கொட்டலென்ப
படங்குந்திநிற்றலின்பேர்பகரிற்குஞ்சித்தலாமே. (௫௩)

வட்டித்தலொற்றறுத்தலவட்டணையுடனேமற்றும்
தட்டலென்றிந்நான்குந்தாளம்போடுதலின்பேரே
இட்டியதாளவொற்றுக்கிளந்தபேர்சதியேசீரென்
றிட்டபேரிரண்டுமாமென்றியம்பினர்வியத்தநூலோர். (௫௪)



எதிர்தலின்பெயர் = முட்டுதல், தாக்கல், தலைப்படல், முடுகல், ஏற்றல், இட்டல், கிடைத்தல். ௭
ஒட்டலர்நாடழித்தலின்பெயர் = கொற்றவள்ளை. ௧
ஒட்டுநர்மேற்சாராமையின்பெயர் = தழிஞ்சி. ௧

கூத்தின்பெயர் = நடம், நட்டம், நடனம், வாணி, நாடகம், நிருத்தம், தூக்கு, படிதம், நாட்டியம், கண்ணுள், தாண்டவம், நடை, நட்டணம். ௧௩. ஆடலின்பெயர் = நடித்திடல், பெயர்தல், ஆலல், அகவல், தூங்கல், அசைவு. ௬

கூத்தின்விகற்பத்தின்பெயர் = பிரமரி, வீரட்டானம், உப்பிதம், மலைப்பு, புரியம், இலயம், உள்ளாளனம், காரணம், பாரதம். ௯
சிரமஞ்செய்தலின்பெயர் = பருமித்தல். ௧
பழகலின்பெயர் = உழத்தல். ௧

சிவனிருத்தத்தின்பெயர் = கொடிகொட்டி, பாண்டரங்கம், காபாலம். ௩. திருமகளாடலின்பெயர் = பாவை. ௧
கொண்டல்வண்ணன் கூத்தின்பெயர் = குடம், மல், அல்லியம். ௩
குமரனாடலின்பெயர் = குடை, துடி. ௨

எழுவகைமாதராடலின்பெயர் = துடி. ௧
அயிராணியாடலின்பெயர் = கடையம். ௧
துர்க்கையாடலின்பெயர் = மரக்கால். ௧
காமனாடலின்பெயர் = பேடு. ௧

வெறியாட்டின்பெயர் = வெறி, கழங்கு, அணங்கு. ௩
கைகோத்தாடலின்பெயர் = குரவை. ௧
முடக்கியவிருகைபழுப்புடையொற்றியாடலின்பெயர் = துணங்கை. ௧

கைகூப்பிமெய்கோட்டிநிற்றலின்பெயர் = *குடந்தம். ௧
குடங்கையைக்குவித்துக்கொட்டலின்பெயர் = கொம்மை, கொட்டுதல். ௨.
வாய்கையாற்கொட்டலின்பெயர் = ஆவலங்கொட்டல். ௧
குந்திநிற்றலின்பெயர் = குஞ்சித்தல். ௧

தாளம்போடலின்பெயர் = வட்டித்தல், ஒற்றறுத்தல், வட்டணை, தட்டல். ௪
தாளவொற்றின்பெயர் = சதி, சீர். ௨

---

* குடந்தம் நால்விரல்முடக்கிப் பெருவிரனிறுத்தி நெஞ்சிடை வைத்து மெய்கோட்டிநிற்றல்.

உவளித்தறூய்மைசெய்தலுபதாளனம்மூமப்பேர்
இவர்தலேமீக்கோளென்பவிரண்டுமேறுதலினமம்
அவாமற்றுமிறங்குதற்பேர்சுதமவதாரமாகும்
மவுனப்பேர்மூகமோனம்வாளாகேளாவென்றுமே. (ருரு)

திறைமிறைகப்பமேபாகுடமரசிறைப்பேர்செப்பும்
கறைகடன்வரியிறுப்புக்கரங்குடியிறையைத்தேபேர்
துறைபடுமுல்கேயாயஞ்சுங்கஞ்சாரிகையுமாகும்
நெறியொடுவலித்தலொட்டனேரலேயுடன்பாடென்ப. (ருசா)

முயற்சிதாளாண்மையூக்கமுந்தாளுத்தியோகம்
இயற்றலேயுஞற்றுழப்போடாள்வினையிவையுற்சாகம்
வியக்குமூராண்மையொன்றேமிகவோங்கிச்சேறலாகும்
நயக்கும்பேராண்மையொன்றேநாட்டியவருமைசெய்தல். (ருஎ)

கரப்பொடுகட்டல்பட்டிகரவடங்கரவுகள்ளம்
திருட்டொடுபடிறுசோரந்தேயமுங்களவீரைந்தாம்
விரித்திடுந்தேனுவோடுசௌரியமீண்டுமப்பேர்
தரித்தசம்பிரதமென்பதக்கதாஞ்சித்தின்பேரே. (ருஅ)

தரித்தலேபொறுத்தலோடுதாங்குதல்சுமத்தலின்பேர்
பரித்தலுமாகுமென்பபருவரலருவலின்பேர்
தெரித்தொன்றைவரைவேநீக்கதெற்றலேமாறுபாடாம்
விரித்திடுந்தைத்தலத்துமேவியபொல்லந்துன்னம். (ருகூ)

சுறுக்கெனச்சுடல்சந்தாபந்தூபிதமிருபேர்சொல்லும்
மறைப்பேயாவரணமாகுமாய்த்தலுமப்பேர்தானே
நெறிப்படவழுந்துதற்பேரழுங்குதலென்றுகூறும்
மிறைத்தலேயகைத்தல்சாலவேதனையுலைப்புமுப்பேர். (சா0)

நாம்பலேபழங்கணேநொட்டியமெலிவுஞொள்கல்
தேம்பலேகிருசம்போதச்சிக்கலேழிளைத்தலின்பேர்
சாம்பலேகூம்பலென்பவிருபெயரொடுங்கல்சாற்றும்
மேம்படச்சொல்லுகின்றமேற்கோளேபூட்கையென்ப. (சாக)

வருட்டலேதெருட்டலின்னவற்புறுத்தற்பேர்தானே
உருத்தலேநாறலேதோற்றன்முளைத்தலாம்பொடித்தலும்பேர்
விரித்திடலெதிர்தல்விள்ளலவிழ்தலேயலர்தலாகும்
தரிப்பறநூக்கலூன்றனோன்றலுந்தள்ளன்முப்பேர். (சாஉ)



தூய்மைசெய்தலின்பெயர் = உவளித்தல், உபலாளனம். உ
ஏறுதலின்பெயர் = இவர்தல், மீக்கோள். உ
இறங்குதலின்பெயர் = அவா, சுதம், அவதாரம். ங
மௌனத்தின்பெயர் = மூகம், மோனம், வாளா, கேளா. ச

அரசிறையின்பெயர் = திறை, மிறை, கப்பம், பாகுடம். ச
குடியிறையின்பெயர் = கறை, கடன், வரி, இறுப்பு, கரம். ரு
சுங்கவிறையின்பெயர் = உல்கு, ஆயம், சாரிகை. ங
உடன்பாட்டின்பெயர் = வலித்தல், ஒட்டல், நேரல். ங

உற்சாகத்தின்பெயர் = முயற்சி, தாளாண்மை, ஊக்கம், தாள், உத்தியோகம், இயற்றல், உஞற்று, உழப்பு, ஆள்வினை. கூ
மிக்கசெயலின்பெயர் = ஊராண்மை. க
அருமைசெய்தலின்பெயர் = பேராண்மை. க

களவின்பெயர் = கரப்பு, கட்டல், பட்டி, கரவடம், கரவு, கள்ளம், திருட்டு, படிறு, சோரம், தேயம், தேனு, சௌரியம். கஉ
சித்தின்பெயர் = சம்பிரதம். க

சுமத்தலின்பெயர் = தரித்தல், பொறுத்தல், தாங்குதல், பரித்தல், ச
அருவலின்பெயர் = பருவரல். க
நீக்கலின்பெயர் = வரைவு. க. மாறுபாட்டின்பெயர் = தெற்றல். க
தைத்தலின்பெயர் = அத்து, பொல்லம், துன்னம். ங

சுடலின்பெயர் = சந்தாபம், தூபிதம். உ
மறைப்பின்பெயர் = ஆவரணம், மாய்த்தல். உ
அழுந்துதலின்பெயர் = ஒழுங்குதல் க
உலைப்பின்பெயர் = மிறைத்தல், அகைத்தல், வேதனை. ங

இளைத்தலின்பெயர் = நாம்பல், பழங்கண், மெலிவு, ஞொள்கல், தேம்பல், கிருசம், சிக்கல். எ
ஒடுங்கலின்பெயர் = சாம்பல், கூம்பல். உ
மேற்கோளின்பெயர் = பூட்கை. க

வற்புறுத்தலின்பெயர் = வருட்டல், தெருட்டல். உ
முளைத்தலின்பெயர் = உருத்தல், நாறல், தோற்றல், பொடித்தல். ச
அலர்தலின்பெயர் = விரித்திடல், எதிர்தல், விள்ளல், அவிழ்தல். ச
தள்ளலின்பெயர் = நூக்கல், ஊன்றல், நோன்றல். ங

முறுவலேநகையேயார்ப்புமூரலேயிளியேயாசம்
அறிவொடுசிரித்தலாறேயசியவமதிச்சிரிப்பாம்
குறியொடுவிடல்வியோகங்கூடலேயோகமென்ப
மறலரிலபரமோடுவருந்துவக்கிவைபிணக்காம். (௬௩)

விற்றற்பேர்பகர்தல்கூறல்விலைநொடைமாறலேந்தாம்
ஒற்றுமைகுறிக்கோளென்பவொற்றுவேய்சொற்றபேரே
இற்றிவைநிற்கமற்றையிளை தலைக்காவற்பேரே
பெற்றிடல்பயத்தல்வாய்த்தல்கிடைத்தலாம்பேசுமுப்பேர். (௬௪)

முளிதலேவறத்தலோடுமுதிர்ந்திடலுலரல்காய்தல்
பிளிற்றலேபில்கல்காலலுமிழ்தல்கொப்பளித்தற்பேரே
தளர்ச்சியாமறைபுகற்பேர்சரண்புகலாகுமென்ப
விளக்கியவியங்கோளேவல்வீதலேவறுமையெய்தல். (௬௫)

அலைசலேஞெகிழ்தன்ஞொள்கலலையலேயாஞ்சியும்பேர்
உலைவுறுசொறிகண்டூதிதினவெனவிருபேரோதும்
கலவலேயளாவலோடுகலம்பகமேகலாவல்
துலைபெறுகின்றசங்கீரணமைந்துந்துழாவலின்பேர். (௬௬)

விம்மியேயுமிழ்தல்கான்றன்மேவுமுற்காரஞ்சத்தி
தும்மலேசுவாசமூச்சாங்கொட்டாவியேயாவித்தல்
அம்மவிச்செயல்பற்றும்பேர்க்கறுபத்தேழ்விருத்தஞ்செய்தான்
மைம்முகிற்குணபத்திரன்றாள்வணங்குமண்டலவன்றானே. (௬௭)

செயல்பற்றியபெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம் - ௬௮௧.

பத்தாவது

## ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

### காப்பு.

வலியுற்றவெவ்வினைப்பேர்மாற்றியேயநந்தஞானம்
பொலிவுற்றகேவலப்பெண்புணர்ந்துவீற்றிருந்தபோதன்
மலருற்றுநடந்தவாமன்மரைபுரைபாதம்போற்றி
ஒலிபற்றும்பெயர்க்கூட்டத்தையுணர்த்துவமிப்பாற்கேண்மின். ()



சிரித்தலின்பெயர்=முறுவல், நகை, ஆர்ப்பு, மூரல், இளி, ஆசம். ௬
அவமதிச்சிரிப்பின்பெயர்=அசி. ௧
விடலின்பெயர்=வியோகம். ௧. கூடலின்பெயர்=யோகம். ௧
பிணக்கின்பெயர்=மறல், அரில், அபரம், துவக்கு. ௪

விற்றலின்பெயர்=பகர்தல், கூறல், விலை, நொடை, மாறல். ௫
ஒற்றுமையின்பெயர்=குறிக்கோள். ௧. ஒற்றின்பெயர்=வேய். ௧
தலைக்காவலின்பெயர்=இளை. ௧
கிடைத்தலின்பெயர்=பெற்றிடல், பயத்தல், வாய்த்தல். ௩

காய்தலின்பெயர்=முளிதல், வறத்தல், முதிர்ந்திடல், உலரல். ௪
கொப்பளித்தலின்பெயர்=பிளிற்றல், பில்கல், காலல், உமிழ்தல். ௪
மறைபுகலின்பெயர்=சரண்புகல். ௧
ஏவலின்பெயர்=வியங்கோள். ௧.
வறுமையெய்தலின்பெயர்=வீதல். ௧

அலையலின்பெயர்=அலைசல், ஞெகிழ்தல், ஞொள்கல், ஆஞ்சி. ௪
சொறியின்பெயர்=கண்டூதி, தினவு. ௨
துழாவலின்பெயர்=கலவல், அளாவல், கலம்பகம், கலாவல், சங்கீரணம். ௫

சத்திசெய்தலின்பெயர்=உமிழ்தல், கான்றல், உற்காரம். ௩
மூச்சின்பெயர்=தும்மல், சுவாசம். ௨
கொட்டாவின்பெயர்=ஆவித்தல். ௧

## பெயர்ப்பிரிவு.

இ-ள். வலி உற்ற வெவ்வினைப் பேர் மாற்றி - வலிமை பொருந்திய கடிய வினைகளின் பெயரை ஒழித்து,—அநந்தஞானம் பொலிவு உற்ற கேவலப்பெண் புணர்ந்து வீற்றிருந்த போதன் - அனந்தஞானமானது பொலியப்பெற்ற கைவல்லியமாகிய பெண்ணைச் சேர்ந்து வீற்றிருந்தருளிய ஞானியும்,—மலர் உற்று நடந்த வாமன் - தாமரைமலரிலேபொருந்தி நடந்தருளிய அழகினையுடையவருமாகிய அருகக்கடவுளுடைய,—மரை புரை பாதம்போற்றி - தாமரைப்பூவைப்போலும் பாதங்களைத் துதித்து,—இப்பால் ஒலி பற்றும் பெயர்க்கூட்டத்தை உணர்த்துவம் - இனி ஒலிபற்றிய பெயர்த்தொகுதியை (யாம்) அறிவிப்போம்,—கேண்மின் - கேளுங்கள், எ-று, ஏ அசை.

மாற்றமேமொழியேகீரேவாணியேகதையெதிர்ப்புக்
கூற்றுரைபனுவல்செப்புக்குயில்வினாக்கிளவிகாதை
ஏற்றிடுநொடியியத்தோடிசைபறைவாக்குப்பாணி
தோற்றமாநுவலினோடுமூவேழுஞ்சொல்லின்பேரே. (௨)

வசித்தல்பாசுரமேவார்த்தைவாசகம்வசனமும்பேர்
திசைப்படுமுரையேபாழிசிதைவிலாப்பதமென்றோதும்
இசைத்தலேபிதற்றல்பேசலியம்புதலிறுத்தலும்பேர்
விசைப்பின்மீதுரையேபல்கால்விளம்புதலாகுமென்ப. (௩)

பழிச்சலேத்துதறுதித்தல்பரசுதல்பரவல்போற்றல்
வழுத்தறோத்திரமேமெச்சல்வாழ்த்தலாந்துதியுமேற்கும்
அழிப்பிலாவாசிவாழ்த்தேயாசிடையென்றுங்கூறும்
பழிச்சொலேசிறுசொறீச்சொற்பரிவாதம்பழித்தலென்ப. (௪)

விரித்தலேகதைத்தலோடுமிழற்றுதல்விளம்பல்கூறல்
உரைத்தலேநொடித்தல்சாற்றலோதுதல்குயிறல்சொற்றல்
தெரித்தலேநவிலலோடுவலித்திடல்செப்பலாடல்
பரப்புடன்மொழிதலோடுபணித்தல்பன்னெட்டுஞ்சொல்லல். (௫)

சாதம்வாய்வாய்மையாணைசத்தியந்திடம்வேளாண்மை
நீதியாநிலைமையுண்மைநிச்சயஞ்சரதமெய்ப்பேர்
வாதையாமிச்சைதள்ளல்வலக்காரம்வழுதுபெட்டுச்
சாதனைமாயம்வஞ்சஞ்சடம்பிசிபடிறுபொய்ப்பேர். (௬)

படித்தல்வாசித்தலோதல்பாடலத்தியயனமும்பேர்
பிடித்தொன்றைவிடாதுபேசல்பிதற்றுதலென்றுபேரே
இடக்கரேமறைத்தசொற்பேரென்பகூகனமுமாமே
இடித்தலேகழறலென்பவிருபெயருறுதிச்சொல்லே. (௭)

அம்பலேகௌவையேசலலர்பழிமொழிநாற்பேரே
அம்பலேசிலரறிந்திட்டதுபுறங்கூறலாகும்
அம்புவிப்பலருந்தூற்றுமம்மொழியலரேயென்ப
வெம்பியபெருஞ்சொல்லென்பமிகப்பலரறிசொல்லாமே. (௮)

மிழலையேகுதலைகொஞ்சல்வினவுமுல்லாபமுற்ற
மழலையேயொற்றுநீங்கிவழுப்படநிரம்பாமென்சொல்
பிழைபடுங்கொடுவாய்குஞ்சம்பிசுனங்கொண்டியந்தொடுப்பு
விழைவிலாக்குறளையாறும்வெறும்புறங்கூற்றின்பேரே. (௯)



சொல்லின்பெயர் = மாற்றம், மொழி, கீர், வாணி, கதை, எதிர்ப்பு, கூற்று, உரை, பனுவல், செப்பு, குயில், வினா, கிளவி, காதை, நொடி, இயம், இசை, பறை, வாக்கு, பாணி, நுவல். ௨௧

வாசகத்தின்பெயர் = வசித்தல், பாசுரம், வார்த்தை, வசனம். ௪
பதத்தின்பெயர் = உரை, பாழி. ௨
இயம்புதலின்பெயர் = இசைத்தல், பிதற்றல், பேசல், இறுத்தல். ௪
பல்கால்விளம்புதலின்பெயர் = மீதுரை. ௧

வாழ்த்தலின்பெயர் = பழிச்சல், ஏத்துதல், துதித்தல், பரசுதல், பரவல், போற்றல், வழுத்தல், தோத்திரம், மெச்சல், துதி. ௧௦
வாழ்த்தின்பெயர் = ஆசி, ஆசிடை. ௨
பழித்தலின்பெயர் = பழிச்சொல், சிறுசொல், தீச்சொல், பரிவாதம். ௪

சொல்லலின்பெயர் = விரித்தல், கதைத்தல், மிழற்றுதல், விளம்பல், கூறல், உரைத்தல், நொடித்தல், சாற்றல், ஓதுதல், குயிறல், சொற்றல், தெரித்தல், நவிலல், வலித்திடல், செப்பல், ஆடல், மொழிதல், பணித்தல். ௧௮

மெய்யின்பெயர் = சாதம், வாய், வாய்மை, ஆணை, சத்தியம், திடம், வேளாண்மை, நிலைமை, உண்மை, நிச்சயம், சரதம். ௧௧
பொய்யின்பெயர் = மிச்சை, தள்ளல், வலக்காரம், வழுது, பெட்டு, சாதனை, மாயம், வஞ்சம், சடம், பிசி, படிறு. ௧௧

படித்தலின்பெயர் = வாசித்தல், ஓதல், பாடல், அத்தியயனம். ௪
விடாதுபேசலின்பெயர் = பிதற்றுதல். ௧
மறைத்தசொல்லின்பெயர் = இடக்கர், கூகனம். ௨
உறுதிச்சொல்லின்பெயர் = இடித்தல், கழறல். ௨

பழிமொழியின்பெயர் = அம்பல், கௌவை, ஏசல், அலர். ௪
சிலரறிந்துபுறங்கூறலின்பெயர் = அம்பல். ௧
பலருந்தூற்றலின்பெயர் = அலர். ௧
பலரறிசொல்லின்பெயர் = பெருஞ்சொல். ௧

நிரம்பாமென்சொல்லின்பெயர் = மிழலை, குதலை, கொஞ்சல், உல்லாபம், மழலை. ௫
புறங்கூறலின்பெயர் — கொடுவாய், குஞ்சம், பிசுனம், கொண்டியம், தொடுப்பு, குறளை. ௬

வழுவிலாச்சபதமாணைவஞ்சினமொடுவட்டித்தல்
தழுவியபிரமாணஞ்சூள்சத்தியம்விரதமும்பேர் [பேர்
மொழிமைமூதுரைமுன்சொல்லுமுதுசொல்லும்பழஞ்சொல்லும்
பழமொழிமுதுமையாகும்படுங்கதைகாரணச்சொல். (௧௦)

தரித்திடுந்திசைச்சொலென்பசாருந்தேசிகமென்றாகும்
விரிச்சியேவாய்ப்புளென்பமிக்கநற்சொன்னிமித்தம்
அரிப்புறப்பொரவழைத்தலறைகூதலாகுமென்ப
உரைத்திடுமுகமனின்பேருபசாரநயஞ்சம்மானம். (௧௧)

வினவலேகடாவலாகும்விடையதற்கெதிர்மொழிப்பேர்
வினவொடுவிடையுங்கூடிவிரும்பியபொருள்சல்லாபம்
தனதுமேம்பாட்டுரைப்பேர்தானெடுமொழியென்றாமே
இனநகைநயச்சொலென்பவெய்துமேயசதியாடல். (௧௨)

கடைப்பிடியோர்ப்புவேறுகாட்டியகுறிக்கோடேற்றம்
அடுத்தநற்பொருளிலாமையநர்த்தமேயாகுமென்ப
எடுத்தவாளாவெனுஞ்சொலிதுகேளாவாகுமென்ப
கொடுத்திடும்புனருத்திப்பேர்கூறியகூறலாமே. (௧௩)

கூவலேயுளைத்தலோடுகுறுகவேயிகுத்தல்கேதல்
வாவெனல்கரைதலேயாகருடணமொடுவிளித்தல்
மேவுமற்றகவலொன்பான்வினவியேயழைத்தற்பேரே
ஆவலார்கீழறுத்தலறைபோதலாகுமென்ப. (௧௪)

தோற்றஞ்சீர்சுலோகமெய்ப்பேசொன்மாலைநாற்பேர்சொல்லும்
ஏற்றமேகியாதியென்பவியன்றமேம்பாட்டினாமம்
ஊற்றமாஞ்சீர்த்திகீர்த்தியொளிபுகழ்மீக்கூற்றும்பேர்
மேற்றிகழ்சீர்த்திகீர்த்திமிகுபுகழிருபேராமே. (௧௫)

இகமியாமதிமோவாழியிகுஞ்சின்முன்னிலையசைச்சொல்
இகமியாவரோபோமாதோடிருந்தோருமேழசைச்சொல்
புகலுங்காலொப்பிலாதபோலுமப்பொருட்டேயாகும்
நிகரிலாவொடுவுமோடுநேருமேயுடனிகழ்ச்சி. (௧௬)

அம்மோடாந்தந்நும்மேயல்லால்வான்பாக்குத்தில்லே
எம்மோடேமன்னேபானேயும்மீரெட்டிடைச்சொல்லென்ப
அம்மோடிற்றற்றேயத்தேயல்லில்லன்னானையையே
தம்நும்மேயவ்வேகுவ்வேசாரியைபன்மூன்றென்ப. (௧௭)



சத்தியத்தின்பெயர் = சபதம், ஆணை. வஞ்சினம், வட்டித்தல், பிரமாணம், சூள், விரதம். எ. மூதுரையின்பெயர் = மொழிமை, முன்சொல், முதுசொல், பழஞ்சொல். ௭
பழமொழியின்பெயர் = முதுமை. ௧
கதையின்பெயர் = காரணச்சொல். ௧

திசைச்சொல்லின்பெயர் = தேசிகம். ௧
நன்னிமித்தத்தின்பெயர் = விரிச்சி, வாய்ப்புள். ௨
பொரவழைத்தலின்பெயர் = அறைகூவல். ௧
முகமனின்பெயர் = உபசாரம், நயம், சம்மானம். ௩

வினவலின்பெயர் = கடாவல். ௧
எதிர்மொழியின்பெயர் = விடை. ௧
வினவும்விடையுங்கூடியபொருளின்பெயர் = சல்லாபம். ௧
தனது மேம்பாட்டைத் தானெடுத்துரைத்தலின்பெயர் = நெடுமொழி. ௧
அசதியாடலின்பெயர் = நகை, நயச்சொல். ௨

தேற்றத்தின்பெயர் = கடைப்பிடி, ஓர்ப்பு, குறிக்கோள். ௩
பொருளின்மையின்பெயர் = அநர்த்தம். ௧
கேளாவென்பதின்பெயர் = வாளா. ௧
கூறியதுகூறலின்பெயர் = புனருத்தி. ௧

